







இசைமுரசு

# நாகூர் இ.எம். ஹனீபா

நூற்றாண்டு நினைவு மலர்


இசைமுரசு
நாகூர் இ.எம்.ஹனீபா
தோற்றம் : 25.12.1925
மறைவு : 08.04.2015

# தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055

கார்த்திகை - மார்கழி

டிசம்பர் 2025


## இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர்

### சிறப்பு மலர்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் - வெளியிடுபவர் | : | **மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,**<br>இயக்குநர்,<br>செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்<br>அலுவலால் அரசு இணைச் செயலாளர் |
| நிருவாக ஆசிரியர் | : | **மு. சத்தியசீலன்**<br>இணை இயக்குநர் (வெளியீடுகள்) |
| முதன்மைப் பொறுப்பாசிரியர் | : | **எஸ். உதயா கதிரவன்**<br>உதவி இயக்குநர் |
| பொறுப்பாசிரியர்கள் | : | **ப. கருணாகரன்**<br>**ச. மஞ்சுளா**<br>**மு. மணிமேகலை**<br>செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் |
| உதவி ஆசிரியர் | : | **கு. சுபாஷ்** |
| நிருபர்கள் | : | **எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்**<br>**ஜெ. ஜெயசிம்ஹன்** |
| முதுநிலை ஓவியர் | : | **ரா. சாமுண்டீஸ்வரி** |
| ஓவியர் | : | **இரா. உமாமகேஸ்வரி** |
| இதழ் உதவியாளர் | : | **நி. ஷீலா** |
| கணினிவழி வடிவமைப்பாளர்கள் | : | **தி. ஜெய்சங்கர்**<br>**க.இரா. உமாமகேஸ்வரி** |
| பிழைத்திருத்தம் மேற்கொள்பவர் | : | **த. பிரியா** |



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

**தமிழரசு அலுவலகம்**

எண். 5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.

தொலைபேசி : 044 – 2254 2221 / 22542224

மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com

இணையதளம் : www.tndipr.gov.in

# பொருளடக்கம்


✴ நாகூர் தைக்கால் தெருவிற்கு இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா தெரு என்று பெயர் சூட்டப்படும்.......................................................................... 20
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

✴ தந்தை பெரியார் அவர்களுடன் இசைமுரசு..........................................23

✴ பேரறிஞர் அண்ணா அவர்களுடன் இசைமுரசு ....................................25

✴ கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களுடன் இசைமுரசு......29

✴ நானும் ஹனீபாவும் இணைந்து நடத்தும் இலட்சியப் பயணம்............32
முத்தமிழறிஞர் கலைஞர்

✴ எழுச்சியூட்டும் அரிமா முழக்கம்.......................................................35
பேராசிரியர் க.அன்பழகன்

**இயற்கை நமக்களித்த இசைமுரசு**

✴ மக்கத்து மலரே, மாணிக்கச் சுடரே....................................................39
இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் வாழ்க்கைப் பயணம்

✴ இசைமுரசு இ.எம்.ஹனீபா இயற்கையின் அதிசயம் இறைவனின் அருட்கொடை .....................................................................63
அ.மா.சாமி

✴ நல்லவர்கள் போற்றும் வல்லவர்கள் இவர்கள்.....................................76

* அன்பின் மிகுதியால் அணைத்துக்கொண்டேன்....................................81
  ப.திருமாவேலன்

## நீங்காத நினைவலைகள்

* வாழ்க ஹனீபா அவர்களுடைய புகழ்..................................................85
  முத்தமிழறிஞர் கலைஞர்
* ஆதிக்ககாரர்களின் செவிப்பறையை கிழிக்கும்
  இடியோசைக் குரலோன் .................................................................87
  முத்தமிழறிஞர் கலைஞர்
* மங்காத குரல்வளம், சிதையாத தமிழ் உச்சரிப்பு....................................88
  பேராசிரியர் க.அன்பழகன்
* இயக்கத்தை எட்டுத்திசைக்கும் கொண்டு சேர்த்த
  தனி மனித வானொலி......................................................................89
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்
* மனித நேயத்தை வளர்க்கும் பாலமாக விளங்கும்
  ஹனீபா பாடல்கள் ..........................................................................94
  ஜி.கே.மூப்பனார்
* தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் சிறப்பான சேவை செய்தவர்.................95
  அ.க.ஆ.அப்துல் சமது சாஹிப்
* இசைமுரசு தமிழர்களின் பொதுச்சொத்து .........................................96
  எம்.ஏ.லத்தீப் சாஹிப்
* நல்ல பண்பாளர் பழகுதலுக்கினிய பெரியவர் .......................................97
  தவத்திரு குன்றக்குடி அடிகளார்
* காலத்தை வென்று நிற்கும் இசைமுரசின் பாடல்கள்.............................98
  வைகோ

✳ இசைமுரசு அவர்களின் பாடல்களில்
மயங்காதவர்கள் எவரும் இல்லை ........................................99
மதுரை ஆதினம்

✳ இசையில் கம்பீரக் குரல் ........................................100
கவிக்கோ அப்துல் ரஹ்மான்

✳ அய்யாவின் குரல் தனித்துவமானது ........................................101
தொல். திருமாவளவன்

✳ வினோதமான கொடை அவரது குரல் ........................................102
கவிஞர் மனுஷ்யபுத்திரன்

✳ கடைசி நிமிடத்திற்காக புன்னகையுடன் காத்திருந்தார் ........................107
நௌஷாத் அலி

## நிலைத்து நிற்கும் நிழற் படங்கள்

✳ பல்வேறு நிகழ்ச்சிகளில்
இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள்
கலந்து கொண்ட புகைப்படங்கள் ........................................115

## கட்டுரைகள்

✳ நூற்றாண்டு நாயகர் ஹனீபா இசைமுரசு மட்டுமல்ல
முத்தமிழ் முரசும் கூட ........................................131
ஆசிரியர் கி.வீரமணி

✳ காலமெல்லாம் இசையாக ஒலிக்கும் இசைமுரசு ........................................134
பேராசிரியர் காதர் மொகிதீன்

✳ சமத்துவமும் சமூகநீதியுமே ஹனீபாவின் இலக்கு ........................................139
ஆளூர் ஷா நவாஸ்

❋ இசைவானில் பறந்த தனித்த பறவை ........ 141
இமையம்

❋ காலத்தால் அழியாத வரலாறு ........ 146
செ.திவான்

❋ மதங்களைத் தாண்டி மனங்களில் நிறைந்தவர் ........ 150
இறையன்பன் குத்தூஸ்

❋ பாட்டுக் கட்டியவரும், பாட்டுப் பாடியவரும் ........ 154
நா.மம்மது

❋ இசை அதிசயம் இசைமுரசு இ.எம்.ஹனீபா ........ 157
சாரு நிவேதிதா

❋ கலந்து விடாத கரைந்து விடாத பேரிசைக்குரல் ........ 161
கவிஞர் யுகபாரதி

❋ இதயங்களை வருடிய இசைமுரசு ........ 174
நாகூர் ரூமி

❋ பெருவெள்ளத்தின் பேராற்றல் ........ 177
களந்தை பீர்முகம்மது

❋ திராவிடத்தின் இசைமுரசு ........ 183
கோம்பை எஸ்.அன்வர்

❋ நெகிழ்வும் கம்பீரமும் நாகூர் ஹனீபா........ 189
கவின் மலர்

❋ திராவிடம் பாடிய தமிழ்ப்பாணன் ........ 196
எச்.ஹாமீம் முஸ்தபா

❋ உலக மக்கள் யாவருக்கும் உரிமையானவர் ........ 200
ப.கவிதா குமார்

* நாகூர் ஹனீபா இஸ்லாமிய பெரும் பாணன் ........................................ 205
  நிழல் திருநாவுக்கரசு
* நாகூர் ஹனீபா ஓர் இசைநதியின் சலனம் ........................................ 211
  எச்.பீர்முகம்மது
* திராவிடம் பாடிய இசை முரசு ........................................ 215
  மானசீகன்
* அண்ணாவின் மனம் நிறைந்த ஹனீபா ........................................ 222
  காதர்ஒலி
* இசைமுரசுவின் பாடல்களில் மரபிசை ........................................ 226
  ஷேக் ஷால் ஹமீது என்ற ராஜபார்ட் ராஜா முகமது


## காலத்தால் அழியாத கந்தர்வ குரல்


* அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா ........................................ 235
* காயிதே மில்லத் விரும்பிக்கேட்ட பாடல் ........................................ 237
* கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே ........................................ 238
* திராவிட நாட்டுப் பண் ........................................ 240
* இறைவனிடம் கையேந்துங்கள் ........................................ 242
* பொறுமை போதித்த ஐந்து கடமை ........................................ 243
* மக்கத்து மலரே ........................................ 244
* எல்லோரும் கொண்டாடுவோம் ........................................ 245
* நல்லவங்க எம்மதமோ ஆண்டவன் அந்த மதம் ........................................ 246

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

10.12.2025

## எந்நாளும் ஒலிக்கட்டும் இசைமுரசு !

காற்றில் இசை கலந்திருப்பதைப் போல – எல்லாக் காலத்திலும் கலந்திருக்கும் கணீர் குரல்தான் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள்.

உடலால் அவர் மறைந்தாலும், குரலால் நம் அனைவர் உள்ளம் முழுவதும் நிறைந்து வாழ்ந்து வருபவர் அண்ணன் ஹனீபா அவர்கள்.

" 'ஹனி' என்றால் தேன். 'பா' என்றால் பாட்டு. தேனாக இனிக்கும் பாட்டை பாடும் அவருக்கு ஹனீபா என்ற பெயர் பொருத்தமானது" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர்.

பாடகர் என்ற நிலையைத் தாண்டி இசைக் கலைஞராய் உயர்ந்தவர் நாகூரார் அவர்கள். இசையுலகில் சில காலம் வந்து கோலோச்சியவர்கள் உண்டு. ஆனால் தான் வாழ்ந்த காலம் முழுவதும் கோலோச்சியவர் அவர். அதே போல் அரசியல் மேடைகளில் மட்டுமல்ல, திரையுலகிலும், இறை மேடைகளிலும் அவரது குரலை வெல்லும் குரல் இல்லை என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்தவர் அவர். 'ஹனீபாவுக்கு ஒலிபெருக்கி தேவையில்லை' என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். அத்தகைய குரல் வளம் கொண்டிருந்தார். அந்தக் குரல் இறுதிவரை உறுதியாக இருந்தது அவரது சிறப்பு ஆகும்.

'அழைக்கின்றார் அண்ணா' என்று குரல் எழும்போது, பேரறிஞர் அண்ணாவே எழுந்து வருவார். 'எங்கே சென்றாய் எங்களை ஏங்க விட்டு எங்கே சென்றாய்?' என்பதைக் கேட்கும் போது கலங்காத உள்ளம் இல்லை. 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்க' என்று வாழ்த்திய குரலில் பல்லாண்டுகள் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்தார்கள். 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்ற பாடலைக் கேட்டு உருகாதார் எவரும் இல்லை. 'எல்லோரும் கொண்டாடுவோம்' என்பது எல்லோரையும் கொண்டாட வைத்த பாடலாக அமைந்தது. 'நல்லவங்க எம் மதமோ ஆண்டவன் அந்த மதம்' என்ற பாடலை உச்சரிக்காதவர் யாரும் இல்லை. இப்படி அவரது அனைத்துப் பாடல்களும் மனதில் எந்நாளும் உச்சரிக்கும் பாடலாக அமைந்துள்ளது.

இசைமுரசு அவர்கள் தொடக்கம் முதல் இறுதி வரை திராவிட இயக்கத்தில் பங்கெடுத்து, கலையை வளர்த்து இயக்கத்தையும் கொள்கையையும் வளர்த்தார். மறைந்தும் அவரது குரலும், பாடல்களும் அந்தக் கடமையைச் செய்து வருகிறது.

இத்தகைய பெருமைமிகு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்கள். தமிழ்நாடு வஃக்ப் வாரியத் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள். அவர்களின் நூற்றாண்டு விழாவை திராவிட முன்னேற்றக் கழக அரசு மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

ஹனீபா அவர்கள் பிறந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு விழா கொண்டாடப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர் தைக்கால் தெருவுக்கு 'இசைமுரசு நாகூர் ஈ.எம். ஹனீபா தெரு' என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்பட்ட பூங்காவுக்கு 'இசை முரசு நாகூர் ஈ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா' என்று பெயர் சூட்டப்படும் என்றும் அறிவித்தேன். ஹனீபா குடும்பத்தினர் கோட்டைக்கு வந்து என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, முத்தாய்ப்பாக 'தமிழரசு' இதழின் சார்பில் இசைமுரசு ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. நினைவில் நிற்கும் நினைவலைகள், நெஞ்சில் நிலைத்திருக்கும் புகைப்படத் தொகுப்பு, சான்றோர்களின் கட்டுரைகள், காலத்தால் அழியாத பாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகச் சிறப்பான கருவூலமாகத் தயார் ஆகி இருக்கிறது இம்மலர்.

அண்ணன் ஹனீபா அவர்களின் பன்முக ஆற்றலைப் பதிவு செய்யும் இம்மலரைத் தயாரித்து வழங்கி இருக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், துறையின் செயலாளர் ராஜாராம், செய்தித் துறை இயக்குநர், 'தமிழரசு' ஆசிரியர் இரா. வைத்திநாதன், ஆசிரியர் குழுவினர் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலர் தயாரிப்புக் குழுவில் இடம்பெற்ற ஆரூர் ஷாநவாஸ், இறையன்பன் குத்தூஸ், ப.திருமாவேலன், ஆர்.கோமகன், மு.சத்தியசீலன், பொ.தங்கபாண்டியன், டி.அருள் எழிலன் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுரைகளை வழங்கிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆய்வாளர்கள் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது பங்களிப்புகள், இம்மலருக்கு கூடுதல் சிறப்பை வழங்கி உள்ளது.

இசை முரசு புகழ் வாழ்க!

இசை முரசு எந்நாளும் ஒலிக்கட்டும்!

அன்புடன்,

**(மு.க.ஸ்டாலின்)**

**உதயநிதி ஸ்டாலின்**
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள் 24.11.2025

அன்புடையீர் வணக்கம்!

தமிழ் இசைக்கும், திராவிட இயக்கத்துக்கும் தனது கம்பீரக் குரலால் பெருமை சேர்த்தவர் – மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நிறைந்து இருப்பவர் 'இசைமுரசு' நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள்!

தமிழினத்தின் தனிப்பெருந் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கண்ணியமிகு காயிதே மில்லத் ஆகியோரால் பாராட்டி சிறப்பிக்கப்பட்டவர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பேரன்பிற்கு உரியவராகத் திகழ்ந்தவர்.

முத்தமிழ் அறிஞர் அவர்கள், மறைந்த பெரியவர் நாகூர் ஹனீபா அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது, "அரசியலில் நான் அடியெடுத்து வைத்த சிறு பிராயம் தொட்டு நாகூர் ஹனீபாவை அறிவேன். அன்று கேட்ட அதே குரல்! வளமிக்க குரல்! அனைவரையும் வளைக்கும் குரல்! ஆதிக்கக்காரர்களின் செவிப்பறை கிழிக்கும் இடியோசைக் குரல்!" என்று புகழ்ந்தார்கள்.

தனது இசைத் திறனை சொந்த வளர்ச்சிக்காகப் பயன்படுத்தாமல், தமிழின எழுச்சிக்காக பயன்படுத்தியவர். ஆதிக்கத்தை எதிர்க்கும் துணிவின்றி சோர்ந்து இருந்தோரையெல்லாம் தட்டியெழுப்பி உணர்ச்சியூட்டியது அவரது குரல். கேட்போரை உருக்கும் குரல் வளமும், இசையறிவும் இயற்கை அவருக்கு கொடுத்தப் பரிசாகும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் நிலைத்திருக்கும் மொழியுரிமைப் போராட்டம், மாநில உரிமைப் போராட்டம், சமூகநீதிப் போராட்டம் என அனைத்திற்கும் தனது இசையால் உரமூட்டியவர். தமிழ்ப் பற்றுடன் சேர்ந்து இனமான உணர்வும் கலந்திருந்ததால் தான் அவரது பாடல்கள் தமிழ் மக்களை பெரிதும் ஈர்த்தன.

தமிழ்ச் சமூக மேம்பாட்டுக்கான தனது பங்களிப்பை மேடைகளில் பாடுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல், போராட்டக் களங்களிலும் முன்னணியில் நின்று சிறைகள் பல கண்டவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராகவும் மக்கள் பணியாற்றிய பெருமதிப்பிற்குரிய ஹனீபா அவர்களுக்கு இது நூற்றாண்டு!

அவரது நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில், நாகூர் தைக்கால் தெருவிற்கு "இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா தெரு" என்றும், சில்லடி கடற்கரை சாலையில் உள்ள சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு "இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா" என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயர் சூட்டினார்கள்.

அத்துடன், நாகப்பட்டினம் மாவட்டத்தில், அவரது பிறந்த நாளினை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளது பெருமைக்குரியதாகும்.

பெரியவர் அய்யா ஹனீபாவின் திராவிட இயக்க இலட்சியப் பயணங்களைத் தொகுத்து "இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர்" என்ற சிறப்பு மலரினை செய்தி மக்கள் தொடர்புத் துறை கொண்டுவருவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இசைமுரசு அவர்களது வாழ்வும் தொண்டும் பொதுவாழ்வில் ஈடுபடும் அனைவருக்குமான பாடம்! செய்தி மக்கள் தொடர்புத் துறையின் முயற்சிக்கு எனது பாராட்டுகள்; இந்தச் சிறப்பு மலர் நல்ல வரவேற்பினை பெற எனது வாழ்த்துகள்!

அன்புடன்,



(உதயநிதி ஸ்டாலின்)

**மு.பெ. சாமிநாதன்**
**தமிழ் வளர்ச்சி மற்றும்**
**செய்தித் துறை அமைச்சர்**

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 20-11-2025

## நுழைவாயில்

சுயமரியாதை இயக்கத்தின் உறுதியையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் வீரவணக்கத்தையும், இஸ்லாமியப் பண்பாட்டுத் தளத்தில் மாபெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியவர் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள் என்றால் அது மிகையாகாது.

**"ஹனீபா அய்யாவுக்கு ஒலிபெருக்கி தேவையில்லை"**

– என்று பெருமையாய் சொன்னார் **தந்தைப் பெரியார்** அவர்கள்.

**"வீட்டுக்கு வீடு உன் பாட்டுதான் ஒலித்துக் கொண்டிருக்கிறது"**

– என்று நெஞ்சார பாராட்டினார் **பேரறிஞர் அண்ணா** அவர்கள்

**"நாகூர் ஹனீபா குரல் மட்டுமா இன்றளவும் நிலைத்து நிற்கிறது? அவர் நெஞ்சில் பதிந்த கொள்கை உறுதியுமன்றோ அசையாமல் நிலைத்து நிற்கிறது"**

– என்றார் **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்.

**"திராவிட இயக்கத்தை எட்டுத் திசைக்கும் கொண்டு சேர்த்த குரல்"**

– என்றார் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள்

இத்தகைய பெருமைமிகு கௌரவ சொற்களுக்குரியவர் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள். தேனிசை நிறைந்த தமது கம்பீரமான குரல் வளத்தால் உலக மக்களின் இதயங்களைக் கவர்ந்திழுத்தவர். திராவிடச் சோலையில் வந்துதித்த தேனிசை மகான் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் நூற்றாண்டினை (2025) நினைவு கூறும் வகையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் அவரது நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாக நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பது, அரசின் கலாச்சாரப் பொறுப்புணர்வையும், அவரது பண்பாட்டு பாரம்பரியத்தின் மீது உயர்ந்த மதிப்பையும் உணர்த்துகிறது.

மேலும், போற்றுதலுக்குரிய இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் நூற்றாண்டு நினைவினை முன்னிட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறை **'தமிழரசு'** அச்சகத்தின் வாயிலாக **"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர்"** வெளிவரவிருப்பது எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் வாழ்ந்த பண்பாட்டு நெறியையும், இசையின் வழியே அவர் உலகுக்கு பரப்பிய மனித நேய போதனைகளையும் இச்சிறப்பு மலரினைப் படிப்பதன் மூலம் அறியலாம்.

இம்மலர் தமிழர் தம் கரங்களில் தவழ்ந்து ஒளிவீச எனது உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

அன்புடன்

(மு.பெ.சாமிநாதன்)
20/11/25

**வே. ராஜாராமன்,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

## அணிந்துரை

தமிழின் இனிமையுடனும், இசையின் ஆழமான உணர்வுகளுடனும் ஒன்றிணைந்து பொதுமக்களின் இதயங்களில் அமைதி, ஒற்றுமை மற்றும் தூய்மையின் விதைகளை விதைத்து, ஆற்றல் மிக்க தமது குரலால் இலட்சக்கணக்கான மக்களை இசையால் இயக்கியவர் **'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்கள்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவருமான **'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்களின் நூற்றாண்டு நினைவினைப் போற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் **"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா தெரு"** மற்றும் **"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு பூங்கா"** என்று பெயரிட்டு அழைக்க ஆணையிட்டு பெருமை சேர்த்துள்ளார்கள்.

அந்த வகையில், அவரை மேலும் பெருமைப்படுத்தும் விதமாக **'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்களின் இசைத்தொண்டினைப் போற்றிப் பாதுகாத்திட ஏதுவாக, செய்தி மக்கள் தொடர்புத்துறை **'தமிழரசு'** அச்சகத்தின் வாயிலாக **"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர்"** உருவாக்கியிருப்பதை நினைத்து பெருமை கொள்கிறேன்.

**'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்களின் இசைப் பணிகள் மற்றும் கலைவழி சாதனைகள், நினைவலைகள், பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகள் மூலம் இச்சிறப்பு மலர் மிளிருகிறது.

**"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு மலர்"** சிறப்புடன் வெளிவந்து மின்னுவதற்கு பெரும்பங்காற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

**(வே.ராஜாராமன்)**

தொலைபேசி : 044–25672887, நிகரி : 044–25672021, மின்னஞ்சல் : tdinfosec@tn.gov.in

**மரு. இரா. வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

## ஆசிரியர் உரை

இசை என்பது மொழி, இனம், நாடு கடந்த பொதுவுடைமையாகும். இசையைப் போன்று பிறர் உள்ளத்தை உருகச் செய்ய வல்லது வேறொன்றும் இல்லை என்பது உண்மையே. அத்தகைய இசையை தனது இனிமையான குரல் வளத்தால் மக்களின் இதயங்களில் ஒளியைப் பரப்பிய ஒரு அற்புதமான கலைஞர் **'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2025-2026ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்** ஆணைக்கிணங்க, **'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா'** அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில் அவருக்கு அரசு விழா கொண்டாடப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக **'இசைமுரசு நாகூர் ஹனீபா'** அவர்களின் நூற்றாண்டு நிறைவினைப் போற்றிப் புகழ்வதற்கு ஏதுவாக, அவர் இசை வழியே பரப்பிய மனித நேயத்தையும், நாட்டிற்காக தாம் அர்ப்பணித்த உழைப்பின் பல்வேறு பங்களிப்புகளையும் அறிஞர் பெருமக்கள், கட்டுரையாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் வழங்கிய தொகுப்புகளை மிக நேர்த்தியாக வடிவமைத்து தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை **'தமிழரசு'** சார்பில் **"இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு மலரினை"** உருவாக்கி வெளியிட்டிருப்பது என்பது மகிழ்வும், பெருமையும் தரும் நிகழ்வாகும்.

இச்சிறப்பு மலரினை மிகக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக படைக்க அரும்பாடுபட்ட மலர்க்குழு உறுப்பினர்களான, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் அவர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர் திரு.இறையன்பன்

**மரு. இரா. வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

குத்தூஸ் அவர்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணை இயக்குநர் திரு.ரெ.கோமகன் அவர்கள், மூத்த பத்திரிகையாளர் திரு.ப.திருமாவேலன் அவர்கள், ஊடகவியலாளர் திரு.பொ.தங்கபாண்டியன் அவர்கள், ஊடகவியலாளர் திரு.டி.அருள் எழிலன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் இயங்கும் 'தமிழரசு' அலுவலர்களான நிர்வாக ஆசிரியர், முதன்மை பொறுப்பாசிரியர், பொறுப்பாசிரியர்கள், நிருபர்கள், முதுநிலை ஓவியர், ஓவியர், இதழ் உதவியாளர், கணினி வடிவமைப்பாளர்கள், பிழை திருத்தம் மேற்கொள்பவர் மற்றும் 'தமிழரசு' அச்சகத்தின் தொழில்நுட்பப் பணியாளர்களின் மெச்சத்தக்க பணியினை மனதார பாராட்டுகிறேன்.

'இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா' அவர்களின் ஒவ்வொரு பாடலும் சமூக வாழ்விற்கு ஒரு விளக்காகத் திகழ்வதை அர்ப்பணிப்போடு இம்மலர் எடுத்துச் சொல்கிறது. இம்மலரினை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

அன்புடன்

(மரு.இரா.வைத்திநாதன்)



தமிழ்கூறும் நல்லுலகின்
மணிக்குரல்...



கம்பீர வரிகளின் கணீர் குரல்...

## நாகப்பட்டினம் மாவட்டத்தில்
# “இசை முரசு” நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள் நூற்றாண்டு விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை - விழாக்கள் - 2025-2026ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு - நாகப்பட்டினம் மாவட்டத்தில் "இசை முரசு" நாகூர் இ.எம்.அனிபா நூற்றாண்டு விழா (2025) மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடுதல் - நிருவாக அனுமதி அளித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விழாக்கள்)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.82

நாள் 05.05.2025
திருவள்ளுவர் ஆண்டு2056
விசுவாவசு, சித்திரை 22-ஆம் நாள்

படிக்கப்பட்டது :-

2025-2026ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு

<u>ஆணை :-</u>

2025-2026-ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது :-

"இசை முரசு நாகூர் இ.எம்.அனிபா நூற்றாண்டு விழா நாகப்பட்டினம் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் ".

2. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வஃக்பு வாரியத் தலைவராகவும் தொண்டாற்றிய தமிழ் இசைப் பாடகர், திராவிட இயக்கக் கொள்கைகளை தனது தனித்துவமிக்க குரல் வளத்தால் இசைப் பாடல்களாக பாடியவர், "இசை முரசு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர். இத்தகைய பல்வேறு பெருமைகள் கொண்ட இசை முரசு நாகூர் இ.எம்.அனிபா பிறந்த ஆண்டு டிசம்பர் 25, 1925 ஆகும்.

3. 2025-2026ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு சார்பில் "இசை முரசு" இ.எம்.அனிபா நூற்றாண்டு விழாவினை நாகப்பட்டினம் மாவட்ட அளவில் அரசு விழாவாக கொண்டாடலாம் என செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

-2-

-2-

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, 2025-2026ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் "இசை முரசு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவரும், பல்வேறு பெருமைகள் கொண்ட "இசை முரசு" நாகூர் இ.எம்.அனிபா நூற்றாண்டு விழாவினை (2025) நாகப்பட்டினம் மாவட்ட அளவில் அரசு விழாவாக நடத்திட அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே. ராஜாராமன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்.
கூடுதல் இயக்குநர் (செய்தி),
செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு),
செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
இணை இயக்குநர் (நினைவகங்கள்),
செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.
நகல்:
நிதி(த.வ(ம)செ/வ.செ.பொ-II/வவ-I)த் துறை, சென்னை-9
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(கணக்கு/வரவு-செலவு)த் துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**நாகப்பட்டினம் மாவட்டம்**

- **நாகூர் தைக்கால் தெருவிற்கு**
  **“இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா தெரு”**

**மற்றும்**

- **சில்லடி கடற்கரை சாலை சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு**
  **“இசை முரசு இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவு பூங்கா”**

**என்றும் பெயர் சூட்டப்படும்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணை**

நாகூர் திரு. ஹனீபா அவர்கள் இல்லம் அமைந்துள்ள தெருவிற்கும், புதுப்பிக்கப்பட்ட பூங்காவிற்கும் அவரது பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்கு நாகூர் திரு. ஹனீபா அவர்களின் குடும்பத்தினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

நாகூர் ஹனீபா என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இஸ்மாயில் முகமது ஹனீபா அவர்கள், 1925ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டினத்தில் திரு. முகமது இஸ்மாயில் - திருமதி மரியம் பீவி தம்பதியருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். இவரது தந்தை முகமது இஸ்மாயில் அவர்கள் நாகூரை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதால் முகமது இ.எம். ஹனீபா அவர்கள் நாகூர் இ.எம். ஹனீபா என்று அழைக்கப்பட்டார்.

இயற்கையிலேயே இசை ஞானம் கொண்டிருந்த நாகூர் ஹனீபா அவர்கள் தனது 15-ஆவது வயதிலிருந்தே திருமண நிகழ்வுகளில் இசைக் கச்சேரிகள் நடத்தத் தொடங்கினார். தனது தனித்துவமான குரல் வளத்தாலும், பாடல் திறத்தாலும்




உலகெங்கிலும் அவருக்கு இலட்சக்கணக்கான ரசிகர்கள் உருவாகினர். திரு. நாகூர் ஹனீபா அவர்கள் நூற்றுக்கணக்கான இஸ்லாமியப் பாடல்களையும், இயக்கப் பாடல்கள் மற்றும் இதர பாடல்களையும் பாடி பெரும் புகழ்பெற்றவர்.

1953-ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரைக்கதையில் வெளியான 'நாம்' படத்தில் நாட்டுக்கூத்துப் பாணியில் இயற்றப்பட்ட பலர் சேர்ந்து பாடிய ஒரு பாடலில் நாகூர் ஹனீபா அவர்களும் இணைந்து பாடினார். இதுவே அவரது முதலாவது திரையுலகப் பாடலாகும். இதைத் தொடர்ந்து பல படங்களில் பாடல்களைப் பாடியுள்ளார். 'இறைவனிடம் கையேந்துங்கள்', 'எல்லோரும் கொண்டாடுவோம்', 'நட்ட நடு கடல் மீது', 'உன் மதமா என் மதமா', 'அழைக்கின்றார் அண்ணா', 'ஓடி வருகிறான் உதய சூரியன்' போன்ற பாடல்கள் மிகப் பிரபலமானவை ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாகூர் ஹனீபா அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, "ஹனி" என்றால் தேன், "பா" என்றால் பாட்டு, ஹனீபா-வின் பாட்டு தேனாக இனிக்கிறது என்றும், எனவே அவருக்கு ஹனீபா என்று பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வேண்டும்" என்று புகழ்ந்து பேசியுள்ளார்.

நாகூர் ஹனீபா அவர்களின் இசைப் பங்களிப்பைப் பாராட்டி தமிழறிஞர் சண்முக தேசிகர் அவர்கள் "இசை முரசு" என்ற பட்டத்தை வழங்கினார். நாகூர் ஹனீபா அவர்கள் "Golden Voice From India" என்று சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் Straits Times பத்திரிகையால் பாராட்டப் பெற்றவர்.

சுயமரியாதை இயக்கத் தொண்டராய், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரராய் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கிய நாகூர் ஹனீபா அவர்கள், நீதிக்கட்சி, திராவிட இயக்கங்களின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். பட்டுக்கோட்டை

அழகிரி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கண்ணியத்தலைவர் காயிதேமில்லத் ஆகியோரது அன்பையும் பெற்றவர்.

ஹனீபா என்ற அரபிச் சொல்லுக்கு நேர்மையானவர் என்று பொருள். பெயருக்கு ஏற்ப நேர்மையின் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் நாகூர் ஹனீபா அவர்கள். ஆடம்பரம் விரும்பாமல் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவர்.

“இசை முரசு” நாகூர் ஹனீபா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராகவும் மக்கள் பணியாற்றியவர். கம்பீரமான குரல் வளத்தால் அனைவரையும் கவர்ந்து புகழ்பெற்ற நாகூர் ஹனீபா அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் 8-ஆம் நாள் மறைந்தார்.




நாகை தைக்கால் தெருவில்

**'நாகூர் ஹனிபா' பெயர் பலகை**

நாகப்பட்டினம், டிச.28-

நாகூர் ஹனிபா நூற்றாண்டு தொடக்கத்தை முன்னிட்டு நாகை நகரில் உள்ள தைக்கால் தெரு மற்றும் புதிதாக அமைய உள்ள பூங்காவுக்கு 'இசை முரசு' ஹனிபா பெயர் சூட்டி கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து அவருடைய குடும்பத்தினர் முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலினை, நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக நாகை நகரசபை தலைவர் மாரிமுத்து உத்தரவின் பேரில், நகரமைப்பு அலுவலர் நாகராஜன் மேற்பார்வையில் நாகை தைக்கால் தெருவில் 'இசை முரசு' நாகூர் இ.எம். ஹனிபா என்ற பெயர் பலகை வைக்கப்பட்டது.

தமிழ் இசைக்கும், திரை இசைக்கும் சுமார் 75 ஆண்டுகள் தொண்டாற்றிய நாகூர் இ.எம். ஹனீபா அவர்களின் பங்களிப்பைப் போற்றிப் பெருமை சேர்க்கும் வகையில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு “இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயரிட்டு அழைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு, “இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 21.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், திரு. நாகூர் ஹனீபா அவர்களின் மகன்கள் திரு. நாசர் மற்றும் திரு. நௌஷாத், மகள் திருமதி ஜரீனா பேகம், மருமகன் திரு. சாகுல் அமீது மற்றும் அவர்களது குடும்பத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# தந்தை பெரியார் அவர்களுடன் இசைமுரசு...

திராவிடர் கழகத்தின் சார்பில் ஒருமுறை பெரியாரை நாகூருக்குப் பேச அழைத்துள்ளார் நாகூர் ஹனீபா. அப்போதைய நாகூரில் வலது பக்கத்தில் இந்து சமூக மக்களும் இடதுபுறம் முஸ்லிம்களும் வசித்து வந்துள்ளார்கள். கடவுள் எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி பெரியார் களமாடிக்கொண்டிருந்த காலம் அது.

தமிழ்நாடு சட்டமன்ற மேல்சபைக்கு உறுப்பினராகத் தான் தேர்வு செய்யப்பட்டபோது பெரியார் அவர்களுடன் சந்தித்து வாழ்த்துப்பெறச் சென்றதையும் நேர்காணல் ஒன்றில் நினைவு கூர்கிறார். பெரியார் அவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார். தன்னுடைய நண்பரும் முஸ்லிம் லீக்கின் தலைவர்களுள் ஒருவருமான திரு. ஏ.கே. அப்துல் ஸமது அவர்களுடன் நாகூர் ஹனீபா அவர்கள் செல்கிறார். “நீங்க என் வயசுக்கு இருப்பீங்க” என்று தந்தை பெரியார் அவர்களுடன் தன்னை வாழ்த்தியதையும் அப்போது அங்கிருந்த தந்தை பெரியார் அவர்களின் இணையர் மணியம்மை அவர்கள் ‘பெரியார் யாரையும் இப்படி வாழ்த்தியதில்லை: உங்கள் மீது அவர் கொண்டிருக்கும் அன்பின் காரணமாகவே இவ்வாறு வாழ்த்தினார்’ என்று தன்னிடம் கூறியதையும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் அந்த நேர்காணலில் குறிப்பிடுகிறார். ‘ஹனீபாவுக்குப் பாட ஒலிபெருக்கித் தேவை இல்லை’ என்று பெரியார் கூறியதையும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் அந்த நேர்காணலில் சொல்கிறார்.

அந்தச் சந்திப்பின்போது நிகழ்ந்த மற்றொன்றையும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நினைவுகூர்கிறார். தந்தை பெரியார் அவர்களிடம்



வாழ்த்துப் பெற்றுவிட்டு விடைபெற்று வெளியில் வந்துவிட்டார் இசைமுரசு ஹனீபா அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் மீண்டும் இசைமுரசு ஹனீபா அவர்களை அழைத்துவரச் சொல்கிறார். தந்தை பெரியார் தன்னுடைய மணிபர்சை உதறி உதறி அந்தக்காலத்து வெள்ளி நாணயம் ஒரு ரூபாயை எடுத்து இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களிடம் கொடுக்கிறார். பலபேர் தந்தை பெரியார் அவர்களிடம் இருந்து நாணயம் ஒன்று தங்களுக்குக் கிடைக்காதா என்று ஏங்கிய காலமது.

முஸ்லிம் சமுதாயத்தின் மீதும், அதன் தலைவர் கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் இஸ்மாயில் அவர்கள் மீதும் தந்தை பெரியார் அவர்களுக்கு மிகுந்த மரியாதை இருந்தது. கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் இறந்தபோது அவரின் உடல் பொதுமக்கள் மரியாதைக்காகச் சென்னை புதுக்கல்லூரியில் வைக்கப்பட்டிருந்தது. அப்போது தள்ளாத நிலையிலும் சிறுநீர் டின்னுடன் தந்தை பெரியார் அவர்கள், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத்துக்கு மரியாதை செலுத்த வந்ததையும் தந்தை பெரியார் அவர்களை வேனிலிருந்து இறக்கி தானும் கி.வீரமணியும் அழைத்துச்சென்றதையும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நினைவுகொள்கிறார்.

கண்ணியத் தென்றல் காயிதேமில்லத்தை, 'தம்பி' என்றுதான் தந்தை பெரியார் அவர்கள் அழைப்பார். கண்ணியத் தென்றல் காயிதேமில்லத்தின் உடலைப் பார்த்து, 'தம்பி போய்ட்டீங்களா. இந்த மக்களை யார் காப்பாற்றுவார்' என்று தந்தை பெரியார் அவர்கள் கூறியதையும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நினைவுபடுத்துகிறார்.

நன்றி : "சூரிய பிறை" என்னும் இதழிலிருந்து...

# பேரறிஞர் அண்ணா அவர்களுடன் இசைமுரசு...

1940-இல் ஆரம்பித்த பேரறிஞர் அண்ணாவுடனான இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் நட்பும் நெருக்கமும் ஆழங்கால் பட்டதாக இருந்தது. பட்டுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகைதந்தபோது பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை பேரறிஞர் அண்ணா அவர்களிடம் முதன்முதலாக அறிமுகம் செய்கிறார். மூவலூர் இராமாமிர்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் பட்டுக்கோட்டை அழகிரி அவர்களும் சிறப்புப் பேச்சாளர்கள். பேசத்தொடங்கும் முன்பு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடத்தொடங்குகிறார். கூட்டத்தில் இருந்து இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நெற்றியைக் குறிவைத்து முட்டை ஒன்று வீசப்படுகிறது. முகமெங்கும் முட்டை வழிந்தோடுகிறது. இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் இடை நிறுத்தவில்லை, பாடலைத் தொடர்கிறார். மேடையில் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுந்துவந்து தன்னுடைய தோளில் அணிந்திருந்த துண்டுகொண்டு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் முகத்தைத் துடைத்து விடுகிறார். பின்னாளில் இந்த நிகழ்வை நினைவு கூரும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் செயலைத் தாய்ப்பாசத்துடன் இணைத்துப் பார்க்கிறார். ‘என் தாயின் அன்பைப் பேரறிஞர் அண்ணாவிடம் கண்டேன்’ என்கிறார்.

பட்டுக்கோட்டையில் ஆரம்பித்த பேரறிஞர் அண்ணா அவர்களுடனான நட்பு இயக்கத்திலும், தனிப்பட்ட வாழ்விலும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்குத் தொடர்ந்தது. 1949, செப்டம்பர் -17 திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. நாகூரில் கிளையொன்றை இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தொடங்கினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகைதந்து கிளையைத் தொடங்கிவைத்தார். காஞ்சிபுரத்தில் கிளையினை ஆரம்பிக்கும்போது அந்நிகழ்வில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பங்கேற்றுப் பாடினார். தமிழ்நாடு முழுவதும் கட்சிக் கூட்டங்களில் பேரறிஞர் அண்ணா பங்கேற்றுப் பேசிக்கொண்டிருந்த பரபரப்பான காலம். நாகூரில் தான் கட்டியிருக்கும் புதுமனையை பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகைதந்து திறந்துவைக்க வேண்டுமென்று இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் விரும்பினார். எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டு நாகூர் சென்றார் பேரறிஞர் அண்ணா. தன்னுடைய பத்திரிகையில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் இல்லத் திறப்புவிழா நிகழ்வில் தான் பங்கேற்க இருப்பதைக் குறிப்பிட்டு ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளை வேறொரு நாளில் மாற்றி வைக்க கட்சியினருக்குத் தகவல் கூறி இருந்தார்.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தன்னுடைய முதல் இல்லத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையே வைத்தார். 1953-இல் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் திருமணம் நடைபெற்றது. அவரின் இணையரின் பெயர் ரோஷன் பேகம் அவர்கள். மணமக்களைத் தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துவந்து அவர்களுக்கு விருந்து வைத்தார். பேரறிஞர் அண்ணாவுடனான குடும்ப நட்பு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களிடம் எப்போதும் பச்சையத்துடன் இருந்தது. இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் குழந்தைகளும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது ஈர்ப்பு கொண்டிருந்தார்கள்.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கு நான்கு பெண் குழந்தைகள் (நஜ்மா பேகம், நூர்ஜஹான் பேகம், மும்தாஜ் பேகம், ஜரீனா பேகம்) இரண்டு ஆண்குழந்தைகள் (நவ்ஷாத் அலி, நாஸர் அலி).

இந்தியா - சீனா இடையிலான போர் நடந்துகொண்டிருந்த காலம். அந்த ஆண்டு தன்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டாம் என்று கட்சியினருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் வேண்டுகோள் கொடுத்துவிட்டு இல்லத்தில் இருந்துவிட்டார்.





இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தன்னுடைய குடும்பத்துடன் மகாபலிபுரம் சுற்றுலா சென்றுள்ளார். அவரின் குழந்தைகள் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பார்க்க ஆசைப்பட்டனர். பேரறிஞர் அண்ணாவிடம் சொல்லிவிட்டு காஞ்சிபுரம் சென்ற இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களையும் அவரின் குடும்பத்தினரையும் வரவேற்று விருந்தளித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கும் இடையில் மரியாதையும் அன்பும் கலந்த நட்பு எப்போதுமே இருந்தது. திராவிடர் கழகத்தில் இருந்து திராவிட முன்னேற்றக்கழகம் என்னும் தேர்தல் அரசியல் இயக்கமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் நகர்ந்தபோது அந்த இயக்கத்தில் பேரறிஞர் அண்ணாவைத்தவிர அடுத்தகட்ட தலைவர்களாக இருந்தவர்களுள் பெரும் விழுக்காடு இளைஞர்கள். பெரும்பாலும் முப்பதைக் கடக்காதவர்கள். உண்மையில் இது ஒரு சவாலான ஒன்று.

அரசியல் இயக்கங்கள் என்றால் கொஞ்சம் எண்ணிக்கையில் மூத்தோர் இருப்பார்கள். இடை வயதினர் இருப்பார்கள், இளையோர் இருப்பார்கள். ஆனால் தி.மு.க. அப்படியான இயக்கமாக இல்லாமல் எல்லோரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பிகளாக இருந்தார்கள். தம்பிக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கடிதங்கள் இந்த அடிப்படையிலான உறவின் வெளிப்பாடு. ஓர் அரசியல் இயக்கமாக

தி.மு.க.வை வளர்த்து ஆட்சியில் அமரவைத்ததில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் தம்பிகள் துணை நின்றார்கள்.

1967- தேர்தல் காலம். தமிழ்நாடு முழுவதும் தலைவர்கள் பேச்சால் பரப்புரை, இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாட்டால் பரப்புரை. இராமநாதபுரத்தில் தேர்தல் பரப்புரைக்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகிறார். நள்ளிரவு பிரச்சாரம் முடிந்து திரும்பும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய வாகன ஓட்டுநரிடம் சொல்கிறார் ‘இங்கு அருகில்தான், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் வீடு இருக்கிறது அவரைப் பார்த்துவிட்டுச் செல்வோம்’ என்று.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பூர்வமண் இராமநாதபுரம் அருகில் வெளிப்பட்டினம். அங்கு செல்கிறது பேரறிஞர் அண்ணா அவர்களின் கார். நள்ளிரவு ஊர் உறங்கிவிட்டது. இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் வீட்டின் அருகில் வாகனத்தை நிறுத்தச்சொல்லி அதிலேயே இரவுப் பொழுதைக் கடத்துகிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள். நேரம் வெளுக்கிறது.

வாசல்திறந்து வெளியில் வந்த இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் அம்மா தன்வீட்டுக்கு அருகில் வாகனம் ஒன்று நிற்பதைப் பார்க்கிறார். அது பேரறிஞர் அண்ணா அவர்களின் வாகனம் போல் இருக்கிறது. உள்ளே சென்ற அவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை எழுப்பி தகவலைச் சொல்லுகிறார்.

தூக்கத்தில் இருந்த இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் அவசரமாக எழுந்து வெளியில் வந்து பார்த்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாகனத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்களை வீட்டினுள் அழைத்துச்செல்கிறார்.

‘இரவிலேயே என்னை எழுப்பி இருக்கலாமே’ என்று இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கூற அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், நீங்களும் இசைநிகழ்ச்சி முடிந்து இரவு நடந்துதான் வந்து சேர்ந்திருப்பீர்கள். ‘தூக்கத்தைக் கலைக்க வேண்டாம் என்றுதான் நானும் வாகனத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டேன்’ என்று கூறி உள்ளார்.

நன்றி: சூரிய பிறை என்னும் இதழிலிருந்து...

# கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களுடன் இசைமுரசு...

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் என்னும் சிறப்புப்பெயரால் அழைக்கப்பட்டவர் முஹம்மது இஸ்மாயில் அவர்கள். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் அகில இந்தியத் தலைமை ஆளுமைகளுள் ஒருவர். மதம் என்பதை வைத்து இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு நிலப்பரப்புகளாக இந்த மண் இரண்டாகப் பிளவுண்டபோது இந்தியாவின் பக்கம் நின்றவர். இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கும் தகுதி தமிழ் மொழிக்கே இருக்கிறது எனும் கருத்தை இந்திய நாடாளுமன்றத்தில் கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கது.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் - கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் இருவருக்கும் இடையில் நெகிழ்வும் ஆழமும் கொண்ட உறவும் மதிப்பும் இருந்தது. இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடல்களில் கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் விரும்பிய பாடல்கள் பல இருந்தன. எனினும் “ஈட்டியின் முனையில் நிறுத்தியபோதும் ஈமான் இழக்கமாட்டோம்“ என்னும் வரிகள் கொண்ட பாடல் அதில் முதல் வரிசையில் இருந்தது.

1972-ல் கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் அவர்கள் மரணம் அடைகிறார். அவரின் இறுதி நிகழ்வில் அப்போதைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கேரள முஸ்லிம் லீக்



கட்சியின் தலைவராகவும், கேரளத்தின் மாண்புமிகு முதல்வராகவும் இருந்த திரு. சி.ஹெக்முஹம்மது கோயா, முஸ்லிம் லீக் கட்சியின் அகில இந்தியத் தலைமையாக இருந்த சுலைமான் சேட் அவர்கள் உள்ளிட்டவர்கள் பங்கு பெற்றனர். அப்போது அவரின் நினைவாக ஒரு பாடல்பாட இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களைக் கேட்டுக் கொண்டபோது அவர் கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு மிகவிருப்பமான

*"மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே*
*மாநிலத்தைத் தாங்கிடவோ எங்கள் பெருமானே.*

- என்ற பாடலைப் பாடி அனைவரையும் ஆற்றுப்படுத்தினார்.

ஒருமுறை வேலூரில் வேறுவேறு நிகழ்ச்சிகளுக்காகக் கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் வந்தபோது, இருவரும் ஒரே விடுதியில் தங்கி இருக்கிறார்கள். இரவு நிகழ்ச்சி முடித்துவிட்டுத் தங்கும் அறைக்கு வந்த கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு, அதே விடுதியில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் தங்கி இருக்கிறார் என்னும் தகவல் தெரிகிறது. நள்ளிரவு பன்னிரெண்டு மணி. இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் இருந்த அறைக்குச் சென்று கதவைத் தட்டுகிறார் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள்.

தூக்கத்தில் இருந்து எழுந்துவந்து கதவைத்திறந்தவருக்கு வெளியில் கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் அவர்கள் நிற்பதைப் பார்த்து ஆச்சர்யம். 'என்ன நீங்களே வந்துவிட்டீர்கள் சொல்லி அனுப்பினால் நானே வந்திருப்பேனே' என்று இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் கூற, இல்லை. எனக்கு உங்கள் குரலில் "மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே" பாடலை ஒருமுறை கேட்கவேண்டும் என்று தோன்றியது.

அதுதான் நானே வந்துவிட்டேன் என்று கூற அந்த நடுநிசி இரவில் இசைக்கருவிகள் எதுவுமின்றி இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் அந்தப் பாடலைப் பாடி இருக்கிறார். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் குரலில் உருகிய கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் கண்கள் நிறைந்து நின்றதாகக் கூறுகிறார்கள்.

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்கள் திரு. ஏ.கே.அப்துல் சமது அவர்கள், திரு. லத்தீப் அவர்கள் உள்ளிட்ட முஸ்லிம் லீக் கட்சியின் தலைமைகளோடு நெருக்கமான நட்பில் இருந்தாலும், தன்னுடைய அரசியல் தி.மு.க.வின் அரசியல் என்பதில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் உறுதியாக இருந்தார்.

முஸ்லிம் லீக் கட்சியின் மாநாடுகளில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் இசை நிகழ்ச்சி நடைபெறும். அவரும் பல பாடல்களை அந்த மேடைகளில் பாடுவார். ஆனால் அரசியல் என்று வந்துவிட்டால் தி.மு.க. என்பதே இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் அசையா நிலையாக இருந்தது.

- நன்றி 'சூரிய பிறை' இதழிலிருந்து...

# நானும் ஹனீபாவும் இணைந்து நடத்தும் இலட்சியப் பயணம்!

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

கத்துகடல்சூழ் நாகையைத் தழுவி நிற்கும் நாகூர் ஹனீபாவுக்கு முத்துவிழாவாம்! முத்துவிழா, பவளவிழா, வைரவிழா, மாணிக்க விழா என எத்தனையோ நவரத்தின விழாக்கள் நடத்தலாம். இசையெனில் புகழ் எனவும் பொருள் உண்டு. இவரோ இசைமுரசு! ஆம், முரசென இசை முழக்குபவர்! இளமை முதல் இவர் பெற்ற புகழும் அவ்வாறே.

அரசியலில் நான் அடியெடுத்து வைத்த சிறுபிராயம் தொட்டு நாகூர் ஹனீபாவை அறிவேன்.

அன்று கேட்ட அதே குரல் - வளமிக்க குரல், அனைவரையும் வளைக்கும் குரல் - ஆதிக்கக்காரர்களின் செவிப்பறை கிழிக்கும் இடியோசைக் குரல்!

அந்தக் குரல் மட்டுமா இன்றளவும் நிலைத்து நிற்கிறது? அவர் நெஞ்சில் பதிந்த கொள்கை உறுதியுமன்றோ ஆடாமல் அசையாமல் அப்படியே நிலைத்து நிற்கிறது.

உலகில் இஸ்லாமியப் பெருமக்கள் வாழும் இடமெல்லாம் இவர் குரல் கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு நாட்டுத் தமிழ் மக்கள் இந்த இசைமுரசம் கேட்டு நரம்பு முறுக்கேறிடத் தலைநிமிர்கின்றனர்.

பெரியார் பெயரை உச்சரித்தால், அண்ணாவின் பெயரைச் சொன்னால் ஒருவித முகக்கோணலுடன் சமுதாயத்தில் பலர் பார்த்து

ஒதுங்கிய நேரத்தில் - அவர்களின் பெயரைச் சொன்னால் பிழைக்கவே முடியாது எனும் அச்சுறுத்தல் ஆட்டிப் படைத்த நேரத்தில் - இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு மேடைதோறும் இசை முழக்கம் செய்த ஹனீபாவின் இளமைத் தோற்றத்தையும் கண்டிருக்கிறேன்; இன்று என்னை விட ஓரிரு வயது குறைந்தவராயினும் நரைத்த தாடியுடன் கழகத்தின் கொடிமரமாய் மிடுக்காகத் திகழ்வதையும் கண்டு பூரிப்புக் கொள்கிறேன்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு என நினைவு. கழக ஏடு "நம் நாடு" இதழில் ஒரு பாடல் வெளிவந்திருந்தது. "அழைக்கின்றார் அழைக்கின்றார்... அண்ணா" என்பது பாட்டின் எடுப்பாகும். அதைப் பார்த்தவுடன் எனக்குத் தோன்றியது "இந்தப் பாடலைப் பாடுவதற்கு ஏற்ற குரல் நாகூரில்தான் இருக்கிறது" என்று!

அழைப்பு விடுத்தேன் பாடச் சொல்லி! மெட்டு அமைத்துப் பாடிக் காட்டினார்! அந்தப் பாடல் ஹனீபாவுக்கு - திருவாவடுதுறை ராஜரத்தினத்துக்குத் தோடி ராகம் போல! எங்குச் சென்றாலும் அதைப் பாடச் சொல்கிறார்கள். நான் எழுதிய திரைப்படம் ஒன்றில் அந்தப் பாடலை ஹனீபாவே பாடவேண்டுமென்றேன். பாடினார். ஆனால் அந்தக் காலத்துத் தணிக்கை அதிகாரி அந்தப் பாடலை வெட்டிவிட்டார்.

1957ஆம் ஆண்டு கழகம், பொதுத்தேர்தல் களத்தில் குதிப்பது என முடிவெடுத்த போது நாகை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் இசைமுரசு ஹனீபா அவர்கள் தான். அந்தத் தேர்தலில் அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தைப் பெரும்பாலும் இசைநிகழ்ச்சி வாயிலாகவே நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தத் தேர்தலில் அவருக்கு வெற்றி வாய்ப்பு கிட்டவில்லை. அதற்காக அவர் சோர்ந்து விடவில்லை. தொடர்ந்து கழக மேடைகளில் இசைமுரசு கொட்டத் தொடங்கினார். சட்டமன்ற மேலவையில் நாகூர் ஹனீபா அவர்கள் இடம் பெற்றிருந்தபோது கருத்துகளை இசையாகவே பொழிந்து அனைவரையும் கவர்ந்தார்.

வெறும் இசைவாணர், கழக மேடைகளில் இசை நிகழ்ச்சி நடத்துகிறவர் - என்றில்லாமல் கழகம் நடத்திய போராட்டங்களில் சிறை புகுந்தவர். ஒரு காலகட்டத்தில் திருச்சிச் சிறையில் நானும் அவரும் ஆயிரக்கணக்கான உடன்பிறப்புக்களுடன் அடைக்கப்பட்டிருந்தது; நினைத்தாலே நெஞ்சினிக்கும் நிகழ்ச்சி!

அளவு கடந்த பாசத்தை என் மீது கொட்டி, பற்றினைக் கழகத்தின் மீது காட்டி கழகத்தினரின் பேரன்பைப் பரிசாகப் பெற்றுள்ள இசைமுரசு ஹனீபா அவர்கள் இஸ்லாமியப் பெரியோரும் இளைஞரும் மகிழ்ந்து போற்றத்தக்க அளவுக்கு நபிகள்



நாயகம் அவர்களைப் பற்றிப் பாடியுள்ள பாடல்களை இன்னமும் வானொலி நிலையம் ஒலிபரப்புவதையும், தொலைக்காட்சி நிலையம் நிகழ்ச்சியாக்கிச் சித்திரிப்பதையும் கண்டு, கேட்டுக் களிப்புறாதவர் எவர்?

பாலப்பருவ முதல் நானும் ஹனீபா அவர்களும் இணைந்து நடத்தும் இலட்சியப் பயணம், இடையூறுகளை, சோதனைகளை, வேதனைகளைக் கடந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது. என்மீது இவருக்கு எவ்வளவு அன்பு இருந்தால் இவர் உழைத்துச் சம்பாதித்துக் கட்டியுள்ள நாகூர் இல்லத்துக்குக் "கலைஞர் இல்லம்'" என்று பெயர் சூட்டியிருப்பார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; இதயம் விம்முகிறது - பூரிப்புத் தாங்காமல்!

இனியும் வாழ்க பல்லாண்டு இசைமுரசு ஹனீபா என வாழ்த்துகிறேன்.

-இசைமுரசு **நாகூர் ஹனீபா** அவர்களின்

முத்து விழா மலரிலிருந்து...

# எழுச்சியூட்டும் அரிமாமுழக்கம்!

பேராசிரியர் க. அன்பழகன்

தொடக்கநாள் முதல் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவராய்த் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற முற்பட்டுப் பல பொறுப்புகளையும் ஏற்றுக் கழகத்தின் முன்னணியில் நிலைகொண்டுள்ள மூத்த தோழர்களுள் ஒருவராக விளங்குபவர் நாகூர் ஹனீபா.

நாகூர் ஹனீபாவின் எழுச்சியூட்டும் அரிமாமுழக்கம் ஆர்த்திடாத கழக மாநாடு இல்லை; தலைமைக் கழகத்தின் விழா இல்லை என்று எவரும் பாராட்டிக் கூறுமாறு தமது இசைத் தொண்டினை ஆற்றுபவர் அவர்.

அவரது மங்காத குரல் வளமும் சிதையாத தமிழ் உச்சரிப்பும், பொன்றாத பண் அமைப்பும் அவரது பாடல்களைக் கேட்பவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டிடும் ஆர்வத்தைத் தூண்டுவன.

‘அழைக்கின்றார் - அழைக்கின்றார் அண்ணா’ என்னும் பாடலை அவர் பாடிக் கேட்டுப் பரவசமுறாதார் இல்லை. அவரைப் போல் அந்தப் பாட்டைப் பாட இன்னொருவர் இல்லை.

அவரது தொண்டினைப் பாராட்டியே அவரை மேலவை உறுப்பினர் ஆகக் கலைஞர் இடம்பெறச் செய்தார். அவரது இலட்சியத்தைப் பாராட்டும் முறையில் ‘கலைஞர் விருது’ வழங்கிச் சிறப்பித்துள்ளது கழகம்.

அவர் மார்க்கத்தில் இஸ்லாமியர் என்பதில் பெருமை கொள்ளும் உணர்வுடையார்; தெவிட்டாத தேனெனச் சுவைக்கும் ‘தீன்’ நெறி விளக்கப் பாடல்களைப் பண்ணுடன் இசைப்பதில் அவருக்கு இணை இல்லை எனலாம். நாடெங்கும் அந்தப் பாடல்கள் பரவி ஒலிப்பதே அதன் பெருமைக்குச் சான்று.



மார்க்கத்தால் இஸ்லாமியர்,
மொழியால் தமிழர்,
இனத்தால் திராவிடர் என்று அவர் பெற்றுள்ள உணர்வே -
நாமெல்லோரும் ஓரினம் -
நமது மொழியும் ஒன்று -
கடவுளும் ஒன்று - என்னும்

பொது நெறிக்கு அடிப்படையாவதால் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் - குறிக்கோள் நம் எல்லோரையும் ஒரு தாய் வயிற்று மக்களாக இணைக்கிறது.

மதம் - ஒரு வழியாக; வாழ்க்கை நெறியாக அமைவது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை. மதம் - பிற மதத்தினரை வெறுக்கவும் - வீழ்த்தவும் - வெறியை வளர்க்கவும் இடமாகுமானால் - பிறமனிதர் உரிமைக்கும் வாழ்வுக்கும் உலை வைப்பதாகும், என்னும் தெளிவுடன் நடைபோடுவதே திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தக் கழகக் குடும்பத்தின் செல்வமாய், தமிழ் நாட்டின் பொன்னணியாய் ஒளிரும் கலைமாமணி, இசைமுரசு.

- இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் முத்து விழா மலரிலிருந்து...



# இயற்கை நமக்களித்த
# இசை முரசு...



# மக்கத்து மலரே... மாணிக்கச் சுடரே...

சுயமரியாதை இயக்கத் தொண்டராய், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரராய், தம் அரசியல் வாழ்வைத் தொடங்கியவர் இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய திராவிட இயக்கங்களின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நேசத்திற்குரியவர். கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் அன்பைப் பெற்றவர். தமிழ்நாட்டு அரசியல் களத்திலும், இஸ்லாமிய பண்பாட்டுத் தளத்திலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர். அவரது பாடல்கள் ஒலிக்காத பெருநாட்கள் இல்லை. அவர் குரல் கேட்காத கூட்டங்கள் இல்லை. அவரது பாடல்களில் உருகாத நெஞ்சங்கள் இல்லை. இசைத்தட்டில் ஒலித்த அவரது குரல், இன்றைய ஐபேட் காலத்திலும் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. அந்த மகத்தான கலைஞரின் வாழ்க்கைப் பயணம் பற்றிய ஒரு முழுமையான கட்டுரை.

**“இசைமுரசு” நாகூர் இ.எம். ஹனீபா அவர்களின் வாழ்க்கைப் பயணம்...**



★ இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பாளையத்தில், 1925 டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள், முஹம்மது இஸ்மாயில்-மரியம் பீவி தம்பதியருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள்.

★ இஸ்மாயில் முஹம்மது ஹனீபா என்பது அவரின் இயற்பெயர். அப்பெயரைச் சுருக்கி இ.எம்.ஹனீபா என்று அழைக்கப்பட்டார். தந்தையின் பூர்வீகம் நாகூர் என்பதால் பெயரோடு நாகூரும் சேர்ந்து கொண்டது. இசை உலகில் பிரபலமானவுடன் 'இசை முரசு' எனும் அடைமொழியும் அப்பெயரோடு இணைந்தது.

★ சிறு வயதிலிருந்தே இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடத் தொடங்கி விட்டார். நாகூரில் அவர் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளிக்கூடத்தில் இறைவணக்கம் பாடியதுதான் அவரது முதல் பாடல் அனுபவம். நாகூரில் செயல்படும் 'கௌதியா பைத்து சபை'யில் இணைந்து திருமண நிகழ்ச்சிகளின்போது நடைபெறும் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலங்களில் பாடினார். பைத்து சபாவில் பெற்ற பயிற்சியின் மூலம் தேர்ந்த பாடகராகி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

★ 1930களில் பிரபலமாக இருந்த உருது பாடகர்கள் திரு.காலு கவால் அவர்கள், திரு.பியாரு கவால் அவர்கள் மற்றும் தமிழ்ப் பிரபலங்களாகிய திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்கள், இஸ்லாமியப் பாடகர் திரு.காரைக்கால் தாவூத் அவர்களின் பாடல்களால் ஈர்க்கப்பட்டார். வட மாநிலங்களில் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய 'சைகால்' என்ற பாடகரின் காந்தாரமான குரலும்; திரு.தியாகராஜ பாகவதர் அவர்களின் உச்சஸ்தாயி சஞ்சாரமும் ஒருசேர ஈர்த்தபோதும் யாருடைய பாணியையும் பின்பற்றாமல் தமக்கென தனியொரு பாணியை உருவாக்கிக்கொண்டார்.

★ 1941 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரில் ஒரு திருமண நிகழ்வில் இசைக்கச்சேரி செய்ய வாய்ப்பு கிடைத்தது. வெளியூர் சென்று இசை குழுவினருடன் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் செய்த முதல் கச்சேரி அது. முறையாகப் பணம் பெற்றுக்கொண்டு செய்த முதல் கச்சேரியும் அதுவே. 25 ரூபாயைப் பெற்றுக் கொண்டு அந்தக் கச்சேரியை நடத்தியபோது அவருக்கு வயது 15.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் முறையாகச் சங்கீதம் கற்றவர் அல்ல. அவரது எடுப்பான குரல் இயற்கையாகவே அமைந்தது. முறையாகச் சங்கீதம் கற்றிருந்தால்

அதிகமாக சாதித்திருக்க முடியுமே என அவரிடம் கேட்டபோது, "முஸ்லிம்கள் கர்நாடக சங்கீதத்தை விரும்பிக் கேட்பதில்லை; அப்படி நான் சங்கீதம் கற்றிருந்தால் இன்று இந்த அளவுக்கு மக்களிடம் புகழ் பெற்றிருக்க மாட்டேன்; எனது சங்கீதத்தை மேட்டுக்குடி மக்கள் மட்டுமே கேட்டு ரசித்திருப்பார்கள்; ஆனால், எனது குரலைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் கேட்கிறது; சாதாரண மக்கள் கூட எனது பாடல்களால் ஈர்க்கப்பட்டு ஒரு மக்கள் பாடகனாக விளங்குகிறேன்" என்று பதில் சொன்னார் அவர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்கள் இசைத்தட்டில் பதிவான ஆண்டு 1954, இலங்கை கம்பலையில் வாழ்ந்த நல்ல தம்பி பாவலர் எழுதிய 'சின்னச் சின்னப் பாலர்களே! சிங்காரத் தோழர்களே!' என்று தொடங்கும் சிறுவர்களுக்கான அறிவுரைப் பாடலும்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற உணர்ச்சிப் பாடலும் ஒரே இசைத்தட்டில் பதிவாகி முதன் முதலில் வெளிவந்தது.

★ 'இறையருட்கவிமணி' பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்கள் எழுதிய 'அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் கருணையதால்' எனத் தொடங்கும் பாடல்தான் அவர் பாடி, இசைத்தட்டில் வெளிவந்த முதல் இஸ்லாமியப் பாடல். அப்பாடலுக்கான விளக்க உரையை, 'பிறை ஆசிரியர்' மௌலவி எம்.அப்துல் வஹாப் பாக்கவி அவர்கள் வழங்கினார். அதுவும் அந்த இசைத் தட்டில் பதிவானது.

★ தமிழ் மட்டுமின்றி வேற்று மொழிகளிலும் ஒரிரு பாடல்களைப் பாடியுள்ளார். ஒருமுறை அவர் இலங்கை சென்றிருந்தபோது அன்றைய மாண்புமிகு அமைச்சர் திரு.ஜெயவர்த்தனே அவர்களின் விருப்பப்படி சிங்கள மொழியில் ஒரு பாட்டுப் பாடினார். மும்பை சென்றிருந்தபோது, 'ஓ துனியாகே ரக் வாலே' என்ற இந்திப் பாடலைப் பாடினார். ஹைதராபாத்தில் உருதுப் பாடலைப் பாடினார். அரபு நாடுகளில் அரபுப் பாடல்களைப் பாடி அனைவரையும் ஈர்த்துள்ளார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடகர் மட்டுமின்றி; சிறந்த இசையமைப்பாளரும் கூட! தமிழக அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய 'அழைக்கின்றார் அண்ணா...' என்ற பாடல் அவர் இசையில் உருவான பாடலாகும்.

★ திரைத்துறையிலும் தடம்பதித்த அவர், குலேபகாவலி திரைப்படத்தில் திருமதி ஜிக்கி அவர்கள் மற்றும் திரு. எஸ்.ஜி.கிருஷ்ணன் அவர்களுடன் இணைந்து 'நாயகமே நபி நாயகமே என்ற பாடலைப் பாடினார். பின்னர் 'பாவமன்னிப்பு' படத்தில் திரு.டி.எம்.சௌந்தரராஜன் அவர்களோடு இணைந்து 'எல்லோரும் கொண்டாடுவோம்' என்ற பாடலையும், 'செம்பருத்தி' படத்தில் 'நட்ட நடு கடல் மீது...' என்ற பாடலையும்,

ராமன் அப்துல்லா படத்தில் 'உன் மதமா என் மதமா' என்ற பாடலையும் மேலும் பல திரைப் பாடல்களையும் பாடியுள்ளார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடகராகப் புகழ்பெற காரணமாயிருந்தவர் புலவர் ஆபிதீன் அவர்கள். எழுத்தாளர் இதழாளர் ஓவியர் எனப் பன்முக ஆளுமையாக விளங்கிய அவரும் சிறந்த பாடகராக இருந்தார். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடத் தொடங்கிய காலத்தில் அவரது பாடல்களால் ஈர்க்கப்பட்ட புலவர் ஆபிதீன் அவர்கள், தாம் பாடுவதை நிறுத்திக் கொண்டு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்குப் பாடல்கள் எழுதிக்கொடுத்தார். அவ்வாறு உருவான பாடல்களில் பெரும்பகுதி சூப்பர் ஹிட் பாடல்களாயின. திரு.ஆபிதீன் அவர்களும், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் ஒரே ஊரைச் (நாகூர்) சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கச்சேரிகள் நடத்துவதற்காக அவர் ஊர் ஊராகப் பயணிக்கும்போது கூடவே செல்வாராம், புலவர் ஆபிதீன் அவர்கள். 'நாகூர் இரட்டையர்' என அடையாளப்படும் அளவுக்கு இருவரும் இணைந்தே பயணித்துள்ளனர். பயணத்தின்போதே திரு.ஆபிதீன் அவர்கள் பாட்டெழுத இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் உடனடியாக இசையமைத்துப் பாடுவாராம்.

★ பேரறிஞர் அண்ணா அவர்களும், கண்ணியத் தலைவர் காயிதேமில்லத் அவர்களும் பங்கேற்ற குளச்சல் முஸ்லிம் லீக் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது 'நாட்டின் இரு கண்கள்; நல்லவர்கள் போற்றும் வல்லவர்கள் இவர்கள்' என்ற பாடலை திரு.ஆபிதீன் அவர்கள் எழுத, அங்கேயே இசையமைத்துப் பாடினாராம் இசைமுரசு நாகூர் ஹனீபா. புலவர் ஆபிதீன் அவர்கள் கடைசியாக எழுதிய பாடலும் இதுவே.

★ ஹஜ் பெருநாள் மற்றும் புனித ஹஜ் கடமை பற்றிப் பாடிய பாடல்கள் மிகவும் பிரசித்தமானவை. 'ஐயாயிரம் ஆண்டுகள் முன்னே நடந்தது / அரபு நாட்டிலோர் தியாகம்', 'ஹஜ்ஜுப் பெருநாள் வந்த சரித்திரம் கேளுங்கள்' ஆகிய பாடல்களின் மூலம் ஹஜ் பெருநாள் வரலாற்றைக் கண்முன்னே நிறுத்தினார். 'காணக்கண் கோடி வேண்டும் கஃபாவை' என்ற பாடலைக் கேட்போர் வாழ்நாளில் ஒருமுறையேனும் ஹஜ்ஜுக்குச் சென்றுவிட வேண்டும் என்று ஏங்கித் துடிப்பர். அந்த அளவுக்கு ஹஜ் கடமையின் ஒவ்வொரு அம்சங்களையும் வேகமாக வருணிப்பார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடியுள்ளார். பல்லாயிரக்கணக்கான இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். 1940களில் தொடங்கி 2006 வரை சுமார் 65 ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கச்சேரிகள் செய்துள்ளார். எந்த இசைக் கலைஞரும் செய்யாத அரிய சாதனை இது.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் ஒரு நாடகப் பிரியர். இளம் வயதிலேயே நாடகத்தில் நடிக்க வேண்டும் என்ற தாகம் அவருக்குள் இருந்தது. ஒருமுறை

நாகப்பட்டினத்தில் நாடகம் நடத்திக்கொண்டிருந்த நடிகவேள் திரு.எம்.ஆர்.ராதா அவர்களைச் சந்தித்து, அவரிடம் பாட்டுப்பாடி நடித்துக் காட்டினார். அவரின் கலை ஆர்வத்தைக் கண்டு வியந்த திரு.எம்.ஆர். ராதா அவர்கள் மறுநாளே நாடகக் குழுவில் வந்து சேர்ந்துவிடும்படி சொல்லிவிட்டார். அவரும் வீட்டுக்குத் தெரியாமல் வந்து நாடகக் குழுவில் இணைந்துவிட்டார். மகனைக் காணாமல் தாய் வாடுவதைக் கண்டு கலங்கிய அவரின் அண்ணன், தம்பியைத் தேடியலைந்து ஒருவழியாக கண்டுபிடித்துவிட்டார். அம்மாவின் மீதான அன்பால் அன்று நாடகக் குழுவிலிருந்து பிரியா விடைபெற்றார் கலைஞரான இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள்.

★ புலவர் ஆபிதீன் அவர்கள் எழுதிய பணம் என்ற நாடகம் 1950இல் திருச்சி தேவர் மன்றத்தில் அரங்கேறியது. அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையேற்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்த்துரைக்க நிகழ்ந்த அந்த நாடகத்தில், ஒரு கவிஞராக நடித்தார் அவர். அந்தப் பாத்திரத்திற்கு, 'ஹனீபா' என்றே பெயர் வைக்கலாம். அந்த அளவுக்குச் சிறப்பாக நடிக்கிறார் 'ஹனீபா' என்று பாராட்டினாராம் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

★ 1953இல் தேனி கலவர நிதிக்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'கல் சுமந்த கசடர்கள்' என்ற நாடகம் கம்பத்தில் நடத்தப்பட்டது. அதில் போர் வீரனாக நடித்தார். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய உணர்ச்சி மிகு பாடல்களைப் பாடி நடித்த காட்சிக்குப் பார்வையாளர்கள் மத்தியில் பலத்த ஆரவாரம். நாடகக் கொட்டகையே அதிரும் அளவுக்குக் கரவொலிகள் எழுந்தன.

★ 1951இல் மும்பை சர்தார் ஸ்டுடியோவில் 'பாலா ஜோர் ஜோரோ' என்ற இந்திப் படம் தயாரானது. அதை 'ஜீவன் ஜோதி' என்ற பெயரில் தமிழிலும் தயாரித்தனர். அதில் பாட இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை அழைத்தார்கள். அவரும் மும்பை சென்றார். அங்கேயிருந்த இசையமைப்பாளர் திரு.நௌஷாத் அவர்கள் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களைக் கட்டிப்பிடித்து ஆரத்தழுவிக்கொண்டாராம். திரு.நௌஷாத் அவர்கள் மீது இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்குத் தனிப் பாசம். அதனாலேயே தம் மகனுக்கு 'நௌஷாத்' என்று பெயர் வைத்தார் இசைமுரசு ஹனீபா அவர்கள்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா குரலைப் போலவே தோற்றமும் கம்பீரமாக இருக்கும். தொடக்க காலத்தில் முகச் சவரம் செய்தவராக அடையாளப்பட்டவர், 1980களிலிருந்து தாடி வைத்து உருமாறினார். இப்போது அவரின் தாடியும், தொப்பியும், கண்ணாடியும் தனிச் சின்னங்களாகவே மாறிவிட்டன.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் - ரோஷன் பேகம் அவர்களின் திருமணம் சென்னை மூர் தெருவில் 1953 நவம்பர் 26 ஆம் நாள் நடைபெற்றது. திருமண நிகழ்வில்

அரசியல் தலைவர்களும் திரைத்துறையினரும் கலைஞர்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். ஆயிரக்கணக்கான திருமண நிகழ்ச்சிகளில் கச்சேரிகள் செய்த, அவர் திருமணத்திலும் இசை விருந்து அளிக்கப்பட்டது. திரு.மதுரை எஸ்.உசைன்தீன் அவர்கள், திரு.பொதக்குடி அஹமது அவர்கள், திரு.கொழும்பு என்.எம்.முகமது அலி அவர்கள், திரு.கும்பகோணம் ஏ.டி.சுல்தான் அவர்கள் ஆகிய இசைக் கலைஞர்கள் அந்த விருந்தை அளித்தனர்.

★ 1980இல் மனைவியுடன் புனித ஹஜ் பயணம் சென்றார். தி.மு.க. தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், முஸ்லிம் லீக் தலைவர் திரு.அப்துல் சமது சாகிபு அவர்களும், திரு.அப்துல் லத்தீப் சாகிபு அவர்களும் தம்பதியினரை வழியனுப்பி வைத்தனர். சவூதி அரேபியாவில் இசைக் கச்சேரிகள் நடத்த அனுமதியில்லை என்றபோதிலும், அங்கு சென்று இசை இல்லாமலேயே ஒரு பாட்டு பாடிவிட்டார். அவர் மதீனா நகருக்குச் சென்றிருந்தபோது நபிகளார் அடக்கம் பெற்ற புனித ரவுலா ஷரீபில் அமர்ந்து 'மக்கத்து மலரே! மாணிக்கச் சுடரே! யா ரசூலுல்லாஹ்! உயர் மறையாம் குர்ஆன் வாங்கித் தந்தாரே யாரசூலுல்லாஹ்!' என்ற பாடலை மனம் உருகிப் பாடினார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா தம்பதியரை, காஞ்சிபுரத்தில் உள்ள தம் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் வீட்டுக்கு அவர்கள் சென்றிருந்தபோது வெறும் லுங்கி, சட்டையுடன் வாசலுக்கே வந்து வரவேற்று அழைத்துச் சென்றாராம் பேரறிஞர் அண்ணா அவர்கள். "அண்ணா அண்ணா என்று சொல்லுவீர்களே... அந்த அண்ணா துரை இவர்தானா என்று ஆச்சரியத்துடன் கேட்டாராம்" அவரின் துணைவியார். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் தம்பதியருக்குத் தம் கைப்பட உணவு பரிமாறி உபசரித்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தமது எந்த இசை நிகழ்ச்சிக்கும் 'ரிகர்ஸல்' செய்வதில்லை. பொதுவாக கச்சேரிகள் செய்வதற்கு முன்னர் பாடகர்கள் பயிற்சி செய்து குரலைச் சீர் செய்து கொள்வதே வழக்கம். ஆனால், அவரோ அவ்வாறு எந்த ஒத்திகையும் செய்யாதது மட்டுமின்றி, எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் 'பாடுங்கள்' என்றால் உடனே பாடிவிடுவார். பக்கவாத்தியங்கள் இல்லாமல் பாடினால் கூட அவரின் குரல் அவ்வளவு இனிமையாக இருக்கும். தூங்கிக்கொண்டிருக்கும்போது எழுப்பிப் பாடச்சொன்னால் கூடப் பாடுவார். அப்போதும் வழக்கமான எடுப்பான குரல் அவரிடம் வெளிப்படும்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் உயிரைக் கொடுத்துப் பாடியிருக்கிறார். உச்சஸ்தாயியில் பாடிப் பாடியே தமது செவித் திறனை இழந்திருக்கிறார். அவ்வாறு உழைத்து, ஊர் ஊராக அலைந்து சேர்த்த செல்வத்தைக் கொண்டு நாகூரிலும் சென்னையிலும் சொந்த இல்லங்களைக் கட்டினார். நாகூரில் கட்டிய முதல் வீட்டுக்கு

'கலைஞர் இல்லம்' என்றும் அதே ஊரில் எழுப்பிய இரண்டாம் வீட்டுக்கு 'அண்ணா இல்லம்' என்றும் பெயர் சூட்டினார். சென்னையில் உள்ள வீட்டுக்கு 'காயிதே மில்லத் இல்லம்' என்று பெயர் வைத்தார்.



★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நகைச்சுவை உணர்வுமிக்கவர். "என்றென்றும் காதல்" படத்தில் பின்னணி பாடினார். பாடல் பதிவின்போது 'காதல்... ஆரம்பம்' என்று பாடினார். உடனே குறுக்கிட்ட இசையமைப்பாளர் திரு.மனோஜ் அவர்கள், 'காதல் ஆரம்பம்' எனப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பிறகும் காதல் ஆரம்பம் என்று பிரித்தே பாடினார். மீண்டும் அதைத் திருத்தினார் திரு.மனோஜ் அவர்கள். உடனே அவருக்கு வயதாகிவிட்டது அல்லவா... அதனால்தான் காதல் சேரமாட்டேன்கிறது என்று கூற, சுற்றியிருந்தவர்கள் அனைவரும் சிரித்துவிட்டனர்.

★ திரு.ரொஜுல் மில்லத் அவர்கள், திரு.ஆ.கா.அ. அப்துஸ் ஸமது அவர்கள். திருச்சி எ.எம்.யூசுப் அவர்கள், வடகரை பக்கர் அண்ணன் ஆகியோர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் இளமைக் காலத் தோழர்கள். இவர்கள் அனைவருமே முஸ்லிம் லீக் இயக்கத்தைச் சார்ந்தவர்கள். முஸ்லிம் லீக் கூட்டங்கள், மாநாடுகள் எங்கு நடந்தாலும் அங்கெல்லாம் அவரையும் அழைத்துச் செல்வது இவர்கள் வழக்கம். அதன்மூலம் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கு முஸ்லிம் லீக் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது. கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் நேசத்திற்குரியவராக மாறினார்.

★ தந்தை பெரியார் அவர்களைப் பற்றி நிறைய பாடியுள்ளார். தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய பாடல் ஒன்றை முதன் முதலில் இசைத் தட்டில் பதிவு செய்தவரும் அவர் தான்.

"பேரறிவாளர் அவர் பெரியார் என்னும் ஈ.வெ.ரா
தூங்கிக் கிடந்த உன்னைத் தூக்கித் துடைத்தணைத்து
தாங்கித் தரைமேல் இட்டார் - தமிழர் தாத்தாவாம் ஈ.வெ.ரா.வே!"

என்பதே அந்தப் பாடல் 1955ஆம் ஆண்டு இப்பாடலின் இசைத் தட்டு வெளிவந்தது.

★ 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார் ஹனீபா. எம்.எல்.சி. ஆனதும் பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெறச் சென்றார்.

என் வயது வாழுங்கள்' என்று ஹனீபாவை வாழ்த்தினார் பெரியார். அப்போது அருகில் நின்ற மணியம்மையார், "அய்யா யாரையும் இப்படி வாழ்த்தியதில்லை" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தீவிர வாசிப்பாளர். இதழ்களையும் புத்தகங்களையும் விரும்பிப் படிப்பார். அவர் தந்தை மலேசியாவில் ரயில்வே போர்மெனாக பணியாற்றிக்கொண்டிருந்தபோது, தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தாருல் இஸ்லாம் / சைபுல் இஸ்லாம்' ஆகிய இஸ்லாமிய இதழ்களையும், 'குடி அரசு' போன்ற திராவிட இயக்க இதழ்களையும் வாங்கி, தந்தைக்கு அனுப்பி வைப்பாராம். அப்படி அனுப்பும் முன், அனைத்து இதழ்களையும் ஒரு வரி விடாமல் படித்துவிடுவாராம். இளமையில் ஏற்பட்ட அந்த வாசிப்புப் பழக்கம் இறுதிவரைத் தொடர்ந்தது.

★ "குடிஅரசு" இதழைத் தீவிரமாக வாசித்ததன் விளைவாக, திராவிட இயக்கச் சிந்தனையும், சுயமரியாதை உணர்வும் மேலோங்கியது. சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அதனால் இளமையிலேயே தீவிர இயக்கவாதியாக மாறினார். இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்றார். திராவிட இயக்க மேடைகளில் அவர் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

★ நீதிக்கட்சிக் கூட்டங்களிலும், இந்தி எதிர்ப்பு மாநாடுகளிலும் அவர் பாடல்களுக்கு அமோக வரவேற்பு கிடைத்தது. அந்நிகழ்ச்சிகளில் பங்கேற்கவரும் தந்தை பெரியார் அவர்கள், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அந்நாளில் தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளுக்கு வருவார். அப்படி வரும்போதெல்லாம் அவரை அழைத்துப் பாடச் சொல்லி பலமுறை கேட்டுப் பரவசப்பட்டிருக்கிறார். ஹனீபா அய்யாவுக்கு ஒலி பெருக்கி தேவையில்லை என்று பெருமையாய்க் குறிப்பிடுவாராம், தந்தை பெரியார் அவர்கள். யாரையும் எளிதில் பாராட்டி விடாத தந்தை பெரியார் அவர்கள், அவரைப் பாராட்டியதோடு நில்லாமல், சில நேரம் ஒரு ரூபாய் பரிசு கொடுத்தும் மகிழ்வாராம். "பெரியாரிடம் பாராட்டு வாங்குவதே பெரிய விஷயம்; ஆனால், அவரிடமிருந்து பரிசும் வாங்குகிறாரே" என வியப்போடு பார்ப்பார்களாம் திராவிட இயக்கத் தோழர்கள்.



★ ஒருமுறை ஹாங்காங்கில் உள்ள Holiday Inn என்ற ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அவரின் இசை நிகழ்ச்சி நடந்தது. அந்நிகழ்ச்சிக்குப் பன்னாட்டுத் தூதுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். நிகழ்வில் பங்கேற்ற எகிப்து நாட்டுத் தூதுவரும், அனைத்து அரபு நாட்டு லீக்கின் பிரதிநிதியுமான திரு.இப்ராஹீம் அல் ஹுசைன் அவர்கள், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்களைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார். ‘மக்கத்து மலரே! மாணிக்கச் சுடரே! யா ரசூலுல்லாஹ்!’ என்ற பாடலை அவர் பாடியபோது அப்பாடல் வரிகளான, ‘அல் அமான் யாரசூலுல்லாஹ்! அஷ் - ஷஃபா அத்த யா ரசூலுல்லாஹ்!’ என்ற வரிகளைக் கேட்டு வியந்தாராம். பாடலின் பொருளை மொழிபெயர்த்து எகிப்து தூதுவருக்கு ஆங்கிலத்தில் சொன்னார் திரு.மெஜஸ்டிக் அப்துல் கரீம் அவர்கள். ஒரே பாடலில் வரிக்குவரி ‘ரசூலுல்லாஹ்’ பெயர் ஒலிப்பது கேட்டு மகிழ்ந்தார் தூதுவர். “அரபு அல்லாத மொழி ஒன்றில் ஒரு பாடலில் யா ரசூலுல்லாஹ் என்ற பெயர் ஐம்பது முறைக்குமேல் உச்சரிக்கப்படுவதை இப்போது தான் கேட்கிறேன்” என்று வியந்து பாராட்டினாராம் எகிப்து தூதுவர். மொழி கடந்து, தேசங்களைக் கடந்து, மனங்களை ஈர்க்கும் ஆற்றல் பெற்ற இறையருள் பாடகர் அவர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் முதல் வெளிநாட்டு இசை நிகழ்ச்சி இலங்கையில்தான் நடைபெற்றது. 1949இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த மிலாது விழாவில் முதன் முதலில் பாடினார். அதன் பிறகு இலங்கையில் போகாத ஊர்களே இல்லை எனுமளவுக்கு அந்நாட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் அவர் கச்சேரி நடத்தியுள்ளார். இலங்கையின் ஆட்சியாளர்கள் பலரையும் அவர் நேரில் சந்தித்து உரையாடியிருக்கிறார். மாண்புமிகு முன்னாள் பிரதமர்களான திரு. சர்ஜோன் கொத்தலாவல அவர்கள், திரு.டட்லி சேனநாயக அவர்கள், மாண்புமிகு முன்னாள் ஜனாதிபதிகளான திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனே அவர்கள், திரு. ரணசிங்க பிரேமதாசா அவர்கள் ஆகியோரைத் தம் பாடல்களால் ஈர்த்துள்ளார். அவரின் ஆன்மீகப் பாடல்கள் தமக்கு உத்வேகம் அளிப்பதாக நெகிழ்ந்து கூறுவாராம் மாண்புமிகு ஜனாதிபதியாக இருந்த திரு.பிரேமதாசா அவர்கள். பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு மண்ணில், இலங்கை அரசின் முஸ்லிம் சமய பண்பாட்டு அமைச்சகத்தினால் ஒருங்கிணைக்கப்படும் மிலாது நபி பெருவிழாக்களில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, இஸ்லாமிய இசைவிருந்து படைத்திருக்கிறார். அப்போது அன்றைய மாண்புமிகு ஜனாதிபதி திரு. டிங்கிரி பண்டா விஜேதுங்க அவர்கள் மேடையேறி இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார்.

★ அவரின் பாடல்கள் சமய சமூக நல்லிணக்கத்திற்குப் பெருந்துணை புரிந்துள்ளன. தமிழ்நாட்டில் சமயப் பூசல்கள் இன்றிச் சமூகங்களுக்கிடையே அன்பும் அமைதியும் நிலவுவதற்கு அவரும் ஒரு காரணம். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் தீவிர ரசிகர். மதுரை ஆதீனம் அவர்கள் காரில் பயணம் செய்யும்போதெல்லாம் அவரின் பாடல்களையே பெரிதும்

விரும்பிக் கேட்பாராம். பிரபல எழுத்தாளர் திரு. பாலகுமாரன் அவர்கள் தமக்கு சஞ்சலம் ஏற்படும் போதெல்லாம் அவரின் பாடல்களைக் கேட்டு மன அமைதி அடைவாராம். திரைப்பட இயக்குநர் திரு.சீனு ராமசாமி அவர்கள் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்களால் ஈர்க்கப்பட்டவர். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்களைக் கேட்டே தாம் இஸ்லாமிய சமய வரலாறுகளை அறிந்துகொண்டதாகக் கூறுகிறார். மத வேறுபாடுகளைக் கடந்து இந்து மற்றும் கிறிஸ்தவ வீடுகளிலெல்லாம் ஒலிக்கிறது.

‘இறைவனிடம் கையேந்துங்கள்;
அவன் இல்லையென்று சொல்லுவதில்லை’ - என்ற பாடல்.

★ ஹனீபா என்னும் அரபிச் சொல்லுக்கு நேர்மையாளர் என்பது பொருள். பெயருக்கு ஏற்ப நேர்மையின் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். ஆடம்பரம் ஆரவாரத்தை அறவே விரும்பாதவர் அவர். எளிமையான வாழ்வுக்குச் சொந்தக்காரர். ‘ஹனி’ என்றால் தேன்; ‘பா’ என்றால் பாட்டு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாட்டு தேனாக இனிக்கிறது. எனவே, அவருக்கு ஹனீபா என்று பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வேண்டும் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் இசை நிகழ்ச்சிகள் இல்லாத தி.மு.க. மாநாடுகளே இல்லை, பொதுக் கூட்டங்கள், தேர்தல் பிரச்சாரங்கள் என அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுப் பாடி கட்சியை வளர்த்தார். 1967 தேர்தலில் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி மலர அரும்பாடுபட்டவர் அவர். தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் பயணம் செய்து தம் பாடல்களால் தேர்தல் பரப்புரை செய்தார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்கள் என்றால் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களுக்கு கொள்ளைப் பிரியம். கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் அரசியல் சுற்றுப் பயணங்களின்போது கூடவே சென்று கச்சேரி நடத்துவார் அவர்.

★ ஒருமுறை விழுப்புரத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடினார். மாநாடு முடிந்த பின்னர் விடுதியில் தங்கியிருந்தபோது நள்ளிரவு நேரத்தில் அவர் அறைக் கதவைத் தட்டினார் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள். கதவைத் திறந்து பார்த்த அவருக்கு இன்ப அதிர்ச்சி. உள்ளே வந்த கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் அன்றைய இசை நிகழ்ச்சியை சிலாகித்துப் பாராட்டினார். “ஹனீபா சாகிப் இன்றைக்கு நிறைய பாட்டு பாடுனீங்க. ஆனால், எனக்குப் பிடிச்ச பாட்டு ஒண்ணு பாடலியே” என்றார் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள். “என்ன பாட்டு தலைவரே”

என்று கேட்டார். "மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே" என்ற பாடலின் பல்லவியை எடுத்துக்கொடுத்தார் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள். அந்தப் பின்னிரவு நேரத்திலும் தம் கம்பீரக் குரலால் அப்பாடலைப் பாடினார். அதன் வரிகளைக் கேட்டுக் கண் கலங்கினார் கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள்.

★ ஏழாவது வகுப்பு வரை மட்டுமே படித்தவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். எனினும், அவரது நட்பும், தொடர்பும் அறிஞர் பெருமக்களுடனேயே அதிகம் இருந்தது. கவிஞர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள் எனப் பல தரப்பு அறிஞர்களும் அவருக்குப் பாடல்கள் எழுதியுள்ளனர். குணங்குடி மஸ்தான், பாவேந்தர் பாரதிதாசன், உடுமலை நாராயண கவி ஆகியோர் எழுதிய பாடல்களை அவர் பாடியுள்ளார். புலவர் ஆபிதீன், ஞான பூபதி இப்ராஹீம், கம்பலை நல்ல தம்பிப் பாவலர், இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர், கவிஞர் மதிதாசன், கவிஞர் சாரண பாஸ்கரன், கவிஞர் தா. காசிம், கிளியனூர் அப்துஸ் ஸலாம், நாகூர் சலீம், பேராசிரியர் திருவை அப்துல் ரஹ்மான் என அவருக்குப் பாட்டு எழுதிய பெருமக்களின் பட்டியல் நீண்டு செல்கிறது. ஒவ்வொரு ஊரிலும் கச்சேரிகள் செய்யும்போது பாடலைப் பாடுவதற்கு முன் அப்பாட்டை எழுதிய கவிஞரின் பெயரை மறவாமல் நினைவுகூர்வார்.

★ கொள்கை உறுதிமிக்கவர், பொதுத் தளத்தில் தீவிரமாக இயங்கியபோதும் தமது அடையாளங்களை அவர் மறைத்ததில்லை. இஸ்லாமிய மார்க்க நெறிகளில் அவர் ஒருபோதும் சமரசம் செய்து கொள்வதில்லை, தாம் இன்னார்தான் என்பதைக் கம்பீரமாக வெளிப்படுத்தும் மனத்துணிவு அவரிடம் இருந்தது.

★ 1989ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.அலெக்ஸாண்டர் அவர்களின் முன்னிலையில் அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'கலைமாமணி' விருது வழங்கினார். தமிழ்நாடு அரசின் அவ்விருது, அவரின் கலைச் சேவைக்குக் கிடைத்த உரிய அங்கீகாரமாகும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ச் செம்மல்' விருதையும் பெற்றுள்ளார்.

★ 2002 ஆம் ஆண்டு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கு 'முரசொலி' அறக்கட்டளையின் சார்பில் 'கலைஞர் விருது' முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

★ தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டி, இந்தியாவின் பெருநகர்கள் பலவற்றிலும் அவரின் குரல் ஒலித்துள்ளது. மும்பையில் மூன்றாயிரம் பேர் அமரக்கூடிய சண்முகானந்தா ஹாலில் தொடர்ந்து நான்கு முறை இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார்.

★ 1951ஆம் ஆண்டு பெங்களூர் புட்டண்ணரெட்டி ஹாலில் பேரறிஞர் அண்ணா முன்னிலையில் பாடினார். பெங்களூர் சிவாஜி பார்க்கில் சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமது சாகிப், மற்றும் சி.பி.சிற்றரசு ஆகியோர் பங்கேற்ற விழாவில் இசைமுரசு நாகூர் ஹனீபா இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். மைசூர் தமிழ்ச்சங்க நிகழ்ச்சியிலும், ஆந்திராவின் சித்தூர், நகரி ஆகிய பகுதிகளிலும் அவரின் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.

★ கேரளாவில் பாலக்காட்டில் 1943ஆம் ஆண்டு முதன் முதலில் பாடினார். பின்னர் கொடுவாயூர் - புதுநகரம், கொச்சி, கோழிக்கோடு, பொன்னானி, தளிப்பரம்பு, புனலூர், சங்கனாச்சேரி, விழிஞ்ஞம் எனக் கேரளாவின் பல பகுதிகளிலும் இசைமழை பொழிந்தார்.

★ புகழ்பெற்ற திருவனந்தபுரம் பீமா பள்ளியில் 42 ஆண்டுகள் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி சாதனை படைத்தார். மொழி வேற்றுமை கடந்து மலையாள மக்களின் உள்ளத்தில் அவருக்கு என்றும் ஒரு தனியிடம் உண்டு.

★ உலக நாடுகள் பலவற்றிலும் அவரின் இசை முழக்கம் அரங்கேறியுள்ளது. இலங்கையில் தொடங்கிய அவரது உலக இசைப் பயணம், சிங்கப்பூர் மலேசியா, துபாய், அபுதாபி, கத்தார், பஹ்ரைன், ஹாங்காங் எனத் தொடர்ந்தது. அவர் சென்ற இடமெல்லாம் அங்குள்ள தமிழர்கள், சமுதாயப் பெருமக்கள் தொழில் அதிபர்கள், கலை-இலக்கிய ஆர்வலர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் எனப் பல தரப்பினரும் வரவேற்று உபசரித்து உரையாடி மகிழ்ந்தனர். பொற்கிழிகளையும் பரிசுகளையும் கொடுத்துக் கண்ணியப்படுத்தினர்.

★ 1937இல் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழகம் முழுவதும் அறப்போர் நடைபெற்றது. அப்போராட்டத்தின்போது நாகூரில் கருப்புக்கொடி காட்ட முயன்றதாக நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் இசைமுரசு நாகூர் ஹனீபா. 13 வயது சிறுவனாக இருந்ததால் அவரைச் சிறைக்கு அனுப்பாமல் திருப்பி அனுப்பினர் காவல் துறையினர்.

★ இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு, தனது கந்தர்வக் குரலால் எழுச்சியூட்டியவர் இசைமுரசு நாகூர் ஹனீபா. இந்தித் திணிப்பை எதிர்த்தும், தமிழை வாழ்த்தியும் மேடைகள்தோறும் அவர் பாடினார். ‘ஆறிலும் சாவு நூறிலும் சாவு: அஞ்சாமல் ஓடி வா...’ என்ற பாடல் தமிழ்நாடு எங்கும் ஒலித்தது. தந்தை பெரியார், கண்ணியத்தென்றல் காயிதே மில்லத், திரு.ஜி.டி. நாயுடு போன்ற தலைவர்களும் கலந்துகொண்ட தஞ்சையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அவர் பங்கேற்றார். இந்த மாநாட்டில் அடுத்து இசைமுரசு நாகூர் ஹனீபா பேசுவார் என்று மேடையில் அறிவிக்கப்பட்டது. ஒலிபெருக்கி முன் வந்து நின்ற அவர் ‘எனக்குப் பேசத் தெரியாது; பாடத்தான் செய்வேன்’ என்று கூறி பாடினார்.

''திராவிடச் சோலையிலே
தீரர் வாழும் வேளையிலே
செந்தமிழை மேயவந்த இந்தி என்ற எருமை மாடே
முன்னம் போட்ட சூடு என்ன
மறந்ததோ உனக்கு என்றும்
இந்தி ஏற்க மாட்டோம்
ஓடிப் போ வடக்கு!"

- என்று இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடியபோது, மாநாட்டு அரங்கமே அதிர்ந்தது.

★ இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பாடல்கள் அவருக்கு மிகவும் கை கொடுத்தன. 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு', 'தமிழுக்கும் அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்', 'பாண்டியர் ஊஞ்சலில் பாடி வளர்ந்த பைந்தமிழ்' ஆகிய பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

★ தமிழ்நாட்டில் இயங்கும் வானொலி நிலையங்களின் பெயர்களை 'ஆகாசவாணி' என்று 1955 இல் பெயர் மாற்றம் செய்தது, மத்திய அரசு. அதுவரை சென்னை வானொலி நிலையம் என்று அறிவித்து வந்தவர்கள் பின்னர் 'ஆகாசவாணி' என்று அறிவிக்கத் தொடங்கினர். இந்த இந்தித் திணிப்பை எதிர்த்து திரு. கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள், 'இனி வானொலியில் பேசுவது இல்லை' என்ற போராட்டத்தைத் தொடங்கினார். 'வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டாம்' என்று தமிழர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்று தாம் வானொலியில் பாடுவதை நிறுத்திவிட்டார்.

★ 1945 ஆம் ஆண்டு நாகூரில் 'மாணவர்கள் பிரசங்கப் பயிற்சிக் கழகம்' (கலைக் கழகம்) என்ற அமைப்பு மௌலானா முகமது அலி ஜௌஹர் அவர்களின் நினைவு விழாவை நடத்தியது. அவ்விழாவில் பங்கேற்ற தமிழறிஞர் சண்முக தேசிகர், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் இசைப் பங்களிப்பைப் பாராட்டி அவருக்கு 'இசைமுரசு' என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் 'இசைமுரசு' என்று அழைக்கப்படுகிறார் அவர்.

★ டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்தபோது ஒருமுறை நாகப்பட்டினம் வந்திருந்தார். அவரை நேரில் சென்று சந்தித்தார் இசைமுரசு நாகூர் ஹனீபா. "உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் பாடல்களை நான் ரசித்துக் கேட்பேன். இன்பமயமான தங்கள் பாடல்கள் இதயத்திற்கு இங்கிதமானவை, பிரியமானவை, உங்கள் பாடல்களில் எனக்கு

ஒரு தனி ஈடுபாடும், ஈர்ப்பும் உண்டு" என அவரை வெகுவாகப் பாராட்டினார். தமது பாடல்கள் அடங்கிய ஒலி நாடாக்களைக் கொடுத்தார். அவற்றை மகிழ்வுடன் பெற்றுக் கொண்டார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் கச்சேரி இல்லாமல் தி.மு.க.வின் எந்த முக்கிய நிகழ்ச்சியும் நடந்ததில்லை. தி.மு.க.வின் ஆரம்ப காலத் தலைமை நிலையமான 'அறிவகம்' மற்றும் 'அன்பகம்' இன்றைய தலைமை நிலையமான 'அறிவாலயம்' ஆகியவற்றின் தொடக்க விழா, தி.மு.க.வின் முப்பெரும் விழாக்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாக்களிலும் அவரின் கச்சேரி நிச்சயம் இருக்கும்.

★ தமிழறிஞரும், கதாகாலட்சேபக் கடலுமான சமயச் சொற்பொழிவாளர் கிருபானந்த வாரியார் அவர்கள், அவரின் பாடல்களை விரும்பிக் கேட்பாராம். அவர் பாடிய 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' என்ற பாடலுக்கு இரண்டு மணி நேரம் சிலேடை நயத்தோடு விளக்கம் சொல்லியுள்ளார் அவர். "அப்பா ஹனீபா நீ பாடகன் அல்லப்பா நீ பாட்டுக்கே தலைவனப்பா" என்று உளமார பாராட்டியுள்ளார்.

★ 'Golden Voice From India' என்று சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் 'Straits Times' பத்திரிகையால் பாராட்டப் பெற்றவர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடிய பாடல்களிலேயே மிகப்பெரிய ஹிட்டானது, 'இறைவனிடம் கையேந்துங்கள்; அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' என்ற பாடலாகும். 1975ஆம் ஆண்டு HMV ஆடியோ நிறுவனத்திற்காக அப்பாடலைப் பாடினார். கவிஞர் கிளியனூர் அப்துஸ் ஸலாம் அவர்கள் எழுதிய பாடலுக்கு இசையமைப்பாளர் திரு.டி.ஆர்.பாப்பா அவர்கள், உயிரோட்டமான இசையமைத்தார். உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் போகும் இடமெல்லாம் நேயர் விருப்பமாய் ரசிகர்கள் கேட்பது அந்தப் பாடலையே.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பெரும்பாலான பாடல்கள் அக்காலத்தில் HMV ஆடியோவில்தான் வெளியானது. HMV ஆடியோவுக்காக AVM ஸ்டுடியோவில் ஒரு முறை ரெக்கார்டிங் நடக்கும்போது அவர் வருவதற்கு தாமதமாகிவிட்டது. அங்கே இசைக் கலைஞர்களோடு ஏ.வி.மெய்யப்ப செட்டியார் அவர்களும் காத்திருந்தார். அவர் வந்த உடன், 'பாடகர்களுக்கு எப்போதும் தாமதம் கூடாது என்று சொல்ல, எனக்கு வாகன வசதி இல்லை. பேருந்தில்தான் வருகிறேன்' என்று பதில் சொன்னாராம். அதைக்கேட்ட ஏ.வி.எம். அவர்கள், 'சீக்கிரம் வண்டி வாங்குங்க' என்று உற்சாகமூட்டியுள்ளார். அவ்வாறு அவர் தூண்டிய கொஞ்ச நாள்களிலேயே அம்பாசிடர் கார் ஒன்றை வாங்கிவிட்டார். தாம் முதன் முதலாக கார் வாங்குவதற்கு ஏ.வி.எம். அவர்கள் தான் உந்துசக்தியாக இருந்தார் என்று நெகிழ்ந்து கூறினார்.



★ ஆன்மீகம், அரசியல், சினிமா என மூன்று தளங்களிலும் பயணம் செய்து பாடியிருப்பவர் அவர். “மனதார அனுபவித்துப் பாட வேண்டுமெனில், மூன்றில் நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்” என அவரிடம் கேட்கப்பட்டது. “ஆன்மிகப் பாடல் தான், அதுல என்ன சந்தேகம்?” என்றார் அவர். “ஆன்மிகம்னா, அடிவயித்திலேர்ந்து உயிரைக் கலந்து என்னை மறந்து பாடிக்கிட்டே இருப்பேன். சினிமான்னா, அவங்க எதை, எப்படிப் பாடச் சொல்றாங்களோ அப்படிப் பாடினா போதும். அரசியல் பாடல்களுக்குக் கம்பீரம் வேணும்; வீரம் நிறைந்த மனசோட பாடணும், கோழைகள் பாட முடியாது” என்று விளக்கமும் அளித்தார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் எம்.எல்.சி.யாக இருந்தபோது எம்.எல்.ஏ. விடுதியில் தங்கியிருந்தார். ஒருநாள் அதிகாலை அவரது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தால் மெலிந்த உடல் கொண்ட இளைஞர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். “நான்தான் ராஜா! பாவலர் சகோதரர்கள் என்ற பெயரில் இசைக்குழு நடத்தி வருகிறேன். உங்கள் பாடல்களுக்கு இசை அமைக்க விரும்புகிறேன் சார்” என்றார். “சரி நாளைக்கு வந்து பாருங்கள்” என்று சொல்லி அனுப்பி வைத்தார். அந்த இளைஞரும் மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சரியாக ஆஜரானார். பின்னர் அவரின் பாடல் ஒன்றுக்கு இசையமைத்தார். இசைத்தட்டில் பதிவாகி, தமிழுலகையே திரும்பிப் பார்க்கச் செய்த அந்தப் பாடல்தான். “தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு; எங்கள் திருநபியிடம் போய்ச் சொல்லு... சலாம் சொல்லு...” என்ற பாடலாகும். அச்சம்பவம் குறித்து அவர் கூறும்போது, “அந்தப் பாடலுக்கு அவர் இசையமைக்கும்போது அவரது விரல்கள் ஆர்மோனியப் பெட்டி மீது வேகமாகச் செயல்பட்ட நளினத்தைப் பார்த்து

வியந்தேன்." ரொம்ப இசைஞானம் உள்ளவர் போலிருக்கிறது. எனவே, "பின்னாளில் இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று அப்போதே என் மனதுக்குப்பட்டது. அதன்படியே ராஜா என்ற அந்த இளைஞர், 'இளைய ராஜா' என்ற பெயரில் புகழின் உச்சிக்கே சென்று விட்டார்" என்று புகழ்ந்தார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் மனைவி பெயர் ரோஷன் பேகம். 'ரோஷன்' என்றால் பிரகாசம். என் மனைவி ரோஷன் கிடைத்ததுகூட பிரகாசம்தான் என்று நெகிழ்வார். மனைவியைக் குறிப்பிடும் போதெல்லாம் "அவர்கள்; இவர்கள்" என்று மரியாதையாகத்தான் அழைப்பார். 2002 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் அவர் மனைவி காலமானார். 'என் பிள்ளைகள் தான் என் செல்வங்கள்' என்று கூறும் அவருக்கு ஆறு பிள்ளைகள். நௌஷாத் அலி, நாஸர் அலி என இரண்டு மகன்களும், நஸீமா பேகம், நூர்ஜஹான் பேகம், மும்தாஜ் பேகம், ஜரீனா பேகம் ஆகிய மகள்களும் உள்ளனர்.

★ ஒருமுறை காரைக்காலில் நடைபெற்ற நபிதின விழாவில் பாடினார். அவ்விழாவிற்குப் புதுக்கோட்டை திவான் ஹபீபுல்லா சாகிப் தலைமை தாங்கினார். கோட்டாறு சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் உரையாற்றினார். அவரின் பாட்டைக் கேட்ட பாவலர், 'வாப்பா இங்கே வா!' எனத் தமது அருகே அழைத்து வாழ்த்தினார். "இறைவன் உனக்கு இனிய குரலைக் கொடுத்திருக்கிறான். அதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு" என்று அறிவுரை வழங்கினார். அந்த அறிவுரைப் படியே பொறுப்புடன் வாழ்ந்து காட்டியவர்.

★ மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் போய்விட்டு நாடு திரும்பினார் பேரறிஞர் அண்ணா. அவரைப் பார்க்கப் போயிருந்தார் அவர், அப்போது, 'ஹனீபா நான் போன இடத்திலெல்லாம் நீதான் இருந்தாய்' என்று சொன்னாராம் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. 'வீட்டுக்கு வீடு உன் பாட்டுதான் ஒலித்துக்கொண்டிருந்தது' என்று விளக்கிச் சொல்லிவிட்டுச் சிரித்தாராம் பேரறிஞர் அண்ணா.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும் நெருங்கிய நண்பர்கள். அவரைத் தம் பக்கம் இழுக்க எம்.ஜி.ஆர். எவ்வளவோ முயற்சிகள் செய்தார். அதற்கு அவர் எனக்கு ஒரே இறைவன்; ஒரே கட்சி என்று அவர் உறுதியாக நின்றுவிட்டார். இதனாலேயே ஹனீபாவை, 'கற்பு தவறாதவர்' என்று வர்ணித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். "ஆடாமல் அசையாமல், அலைபாயாமல், சபலத்திற்கு ஆட்படாமல், எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன் தொடேன் என்கிற உறுதிமிக்க இசைவாணர் ஹனீபா" என்று புகழாரம் சூட்டியுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

★ 1957இல், சட்டமன்றப் பொதுத் தேர்தலில் நாகை தொகுதியில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டார். அப்போது கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களை நேரில் சந்தித்து ஆதரவு கேட்டார். 'உங்களுக்கு இல்லாத ஆதரவா ஹனீபா சாகிப்' என்ற கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள் அவரை ஆதரித்து உடனே அறிக்கை வெளியிட்டார்.

★ கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்கள் மரணித்தபோது அவரது உடல் பொதுமக்கள் பார்வைக்காக புதுக் கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. உடலருகே கண்ணீர் மல்க சோகத்துடன் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு தந்தை பெரியார் அவர்களின் வேன் வந்து நின்றது. வேன் அருகே ஓடிச்சென்றார் இசைமுரசு நாகூர் ஹனீபா. தந்தை பெரியார் அவர்களுடன் வந்த திரு.கி.வீரமணியும், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் தந்தை பெரியார் அவர்களைக் கைத்தாங்கலாக அழைத்துவந்தனர். இசைமுரசு நாகூர் ஹனீபாவை கண்டதும் விசும்பிய தந்தை பெரியார், கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் உடல் அருகே வந்ததும் 'தம்பி... தம்பி... போயிட்டீங்களா' என்று குமுறினார். "இந்தச் சமுதாயத்தை இனி யார் காப்பாத்துவா..." என்று கண்கலங்கினார்.

★ திருவல்லிக்கேணி வாலாஜா மஸ்ஜித் வளாகத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தின்போது இசைமுரசு நாகூர் ஹனீபாவைப் பேச அழைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். "எனக்குப் பேச்சு வரவில்லை, கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களுக்குப் பிடித்த பாட்டை பாடுகிறேன்" எனச் சொல்லி, 'மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே!' என்ற பாடலை உருக்கமாகப் பாடினார், அங்கே குழுமியிருந்த அனைவருமே கண்ணீர் சிந்தி கதறி அழுதனர்.

★ காயிதேமில்லத்தின் பிரிவையும், அப்பிரிவினால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்பையும் வேதனையுடன் வெளிப்படுத்தும் வகையில் ஒரு பாடல் பாடினார். 'கருணையே உருவான கண்மணியாம்' என தொடங்கும் அப்பாடலில், 'அண்ணல் நபியின் அறவழியில் நடந்துவந்த வாடாத வண்ண மலர் வாடிவிட்டது' என உருகியிருப்பார்.

★ இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது இந்திய அரசியல் சட்டத்தை எரித்ததற்காகக் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார், "என்னோட வாழ்க்கையில் பதினோரு தடவை மாமியார் வீட்டுக்குப் போய் வந்திருக்கேன். எங்களுக்கு ஜெயில் மாமியார் வீடு மாதிரி" என்று தமது சிறை அனுபவம் பற்றி நகைச்சுவையோடு கூறுகிறார்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் சமகாலத்தைச் சார்ந்தவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் 1924இல் பிறந்தார், இசைமுரசு நாகூர் ஹனீபா 1925இல் பிறந்தார். இருவருக்கும் இடையே அவ்வளவு நெருக்கம்.

★ நாகூரில் ஏழாம் வகுப்பு வரை படித்த அவர் குடும்பச் சூழல் காரணமாக படிப்பதைத் தொடர முடியாமல் திருவாரூருக்குச் சென்று சிறிய தந்தையின் வீட்டில் தங்கி அவரது பலசரக்குக் கடையில் வேலை பார்த்தார்.

★ திருவாரூரில் ‘ஓடம்போக்கி’ ஆறு ஓடுகிறது. தண்ணீர் ஓடாத காலங்களில் அதன் வெண்மணல் பரப்பில்தான் நீதிக் கட்சியின் கூட்டங்கள் நடைபெறும். ஆற்று நடுவே அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்து சுயமரியாதை இயக்கப் பாடல்களை அவர் பாடிக்கொண்டிருக்கும்போது, அவருக்கு வயது 12. அவரைவிட ஒன்றரை வயது பெரியவரான முத்தமிழறிஞர் கலைஞர் அரைக்கால் சட்டை போட்டுக்கொண்டு அங்கும், இங்கும் பம்பரமாகச் சுழல்வாராம். இரவு ஏழு மணிக்குக் கூட்டம் என்றால் ஆறு மணிக்கே போய்விடுவார் அவர். மேடையில் ஏறி பாடி, கூட்டம் சேர்ப்பார். மக்கள் குழுமியவுடன் பொதுக்கூட்டம் தொடங்கும். கூட்டத்தின் தலைவர் அரைக்கால் சட்டை அணிந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கும் அன்று தொடங்கிய நட்பு இறுதிவரை தொடர்ந்தது.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் துணிச்சல்காரர், தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக எத்தகைய இடர்களையும் எதிர் கொள்ளத் தயங்காதவர். சுயமரியாதை இயக்கத்துக்கு எதிர்ப்பு மேலோங்கியிருந்த காலம் அது. இயக்கத்தின் கூட்டங்கள் தொடங்குவதற்கு முன் கொள்கை விளக்கப் பாடல்களை முழு ஈடுபாட்டோடு கண்ணை மூடிக்கொண்டு பாடுவார். பாடி முடித்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தால் அரிவாள்-வேல்-கம்பு-ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் ஒரு கும்பல் மேடையைச் சுற்றி வந்துகொண்டே இருக்கும். பாதுகாப்பற்ற சூழ்நிலையிலும் கச்சேரியை நிறுத்தாமல் மனத் துணிவுடன் தொடர்ந்து பாடிக்கொண்டிருப்பார்.

★ பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக அமெரிக்கா போய் வந்தபோது அவருக்குச் சென்னையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. கடற்கரையில் வரவேற்பு விழா நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். ‘அழைக்கின்றார் அண்ணா’ பாடலைப் பாடிக் கொண்டிருக்கும்போது ஊர்வலம் கடற்கரைக்கு வந்துவிட்டது. ‘பாட்டை நிறுத்த வேண்டாம்; பாடிக்கொண்டிருக்கச் சொல்லுங்கள்’ என பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி அனுப்பினார். அவர் தொடர்ந்து பாடினார், பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடைக்கு வந்து அமர்ந்து பாட்டைக்கேட்டுப் பரவசப்பட்டார்.

★ 1953ஆம் ஆண்டு கோவையில் நடந்த ஒரு கூட்டத்தில்தான் முதன் முதலில் ‘அழைக்கின்றார் அண்ணா... அழைக்கின்றார் அண்ணா...’ என்ற பாடலைப் பாடினார்.

அந்தக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் கலந்துகொண்டார். அப்போது, தி.மு.க. செய்தித்தாளான 'நம்நாடு' நாளிதழில் இந்தப் பாட்டு வெளிவந்திருந்தது. இதை அவர் பாடினால் பொருத்தமாக இருக்குமே என்று முத்தமிழறிஞர் கலைஞர் கருதினார். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் கையில் பாட்டைக் கொடுத்து பாடச் சொன்னார். அப்போதே இசையமைத்துப் பாடினார், மகத்தான வரவேற்பு கிடைத்தது.

★ 1955ஆம் ஆண்டு 'அழைக்கின்றார் அண்ணா' பாடல் இசைத்தட்டில் வெளிவந்து உலகம் முழுவதும் முழங்கியது. முதலில் இப்பாடலைப் பதிவு செய்ய HMV இசைத்தட்டு நிறுவனத்தார் மறுத்து விட்டார்கள். இஸ்லாமியப் பாடல்கள் பாடுங்கள் என்றார்கள். 'இந்தப் பாடலைப் பதிவு செய்யவில்லையானால் நான் வேறு பாடல்கள் பாட மாட்டேன்' என அவர் மறுத்துவிட்டார். அதன் பின்னரே பாடலைப் பதிவு செய்தார்கள்.

★ பாடல் பதிவு முடிந்ததும் தி.மு.க. தலைமை நிலையத்துக்கு அவர் போன் செய்தார். நாவலர் நெடுஞ்செழியன் போனை எடுத்தார். அவரிடம் இசைமுரசு நாகூர் ஹனீபா செய்தியைச் சொன்னதும் உண்மையாகவா என்று வியந்தார். 'நம்ப முடியாத செய்தி! பக்கத்தில் அண்ணா இருக்கிறார் பேசுங்கள்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களிடம் போனைக் கொடுத்தார். பேரறிஞர் அண்ணா அவர்களும் அவ்வாறே வியந்தார். 'எனக்கு ரொம்ப பெருமையான நாள் அது' என்று அந்நாளை மகிழ்வுடன் நினைவுகூர்கிறார்.

★ ஒவ்வொர் ஆண்டும் இசைத்தட்டு விற்பனை விபரத்தை HMV நிறுவனத்தார் அறிவிப்பது வழக்கம். அந்த ஆண்டில் 'அழைக்கின்றார் அண்ணா' என்ற இசைத் தட்டுதான் விற்பனையில் சாதனை படைத்தது. HMV அப்பாடலைப் பதிவு செய்தது குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் வியந்தார். இசைத்தட்டு விற்பனை உச்சத்துக்குச் சென்றதைக் கண்டு HMV நிறுவனம் வியந்தது.

★ திராவிட இயக்கத்தில் "அஞ்சா நெஞ்சன்" என்றால் அது பட்டுக்கோட்டை அழகிரி அவர்களைத்தான் குறிக்கும். ஒருமுறை அழகிரி அவர்கள் மன்னார்குடியை அடுத்த மதுக்கூரில் சுயமரியாதை இயக்கக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார், தலைவர்களின் பேச்சைக் கேட்க சிறுவனான இசைமுரசு நாகூர் ஹனீபாவும் அங்கே போயிருந்தார். ஹனீபா நன்றாய்ப் பாடுவான் என்றனர் நண்பர்கள். 'பாடு! பார்ப்போம்' என்று அழகிரி அவர்கள் சொல்ல, இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் மேடை ஏறினார். கணீர் குரலில் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று பாடினார். அதைக் கேட்டு மெய் சிலிர்த்துப் போன அழகிரி அவர்கள் அன்று முதல் எங்கே கூட்டம் நடந்தாலும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை வரச்சொல்லிப் பாட வைப்பார்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் பாடிக்கொண்டிருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்ற தலைவர்களும் மேடையில் அமர்த்திருந்தனர். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடிக் கொண்டிருக்கும்போதே சரமாரியாகக் கற்கள் வந்து விழுந்தன. அதில் ஒன்று அவரின் நெற்றியில் விழுந்தது. கண்ணை மூடும் அளவுக்கு ஏதோ நெற்றியில் இருந்து பாய்ந்து வழிந்தது. இரத்தம்தான் வழிகிறது என்று அவர் நினைத்தார். ஆனால், அது ரத்தமல்ல, அழுகிய முட்டை. இதைப் பார்த்ததும் மேடையில் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து ஓடோடி வந்தார். தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து அவரின் நெற்றியில் வழிந்ததைத் துடைத்தார். பிறகு அதே மேல் துண்டைத் தன் தோளில் போட்டபடி மேடையில் போய் அமர்ந்துகொண்டார். பேரறிஞர் அண்ணா அவர்களின் தாயுள்ளத்தைக் கண்டு மெய்மறந்தார்.

★ 1940இல் திருவாரூரில் நீதிக் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் நீதிக் கட்சியின் முன்னோடியான சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் காலமானதற்கு இரங்கல் கீதம் பாடும் பொறுப்பு அவரிடம் வழங்கப்பட்டது. அம்மாநாடு குறித்து இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் கூறும்போது, “விழாவுக்கு நிறைய பேர் வந்திருந்தாங்க. பொப்பிலி ராஜா அவர்கள், பனகல் தியாகராயர் அவர்கள் போன்ற பெருந்தலைவர்கள் எல்லாம் வந்தாங்க. அனைவரும் டர்பன் பான்ட் ஜரிகைத் துண்டு போட்டுக்கிட்டு வந்திருந்தாங்க. மேடையே அவங்க போட்டுக்கிட்டிருந்த டிரஸ்ஸால் ஜொலிக்கும். அவங்களுக்கு மத்தியில் இரண்டு பேர் மட்டும் லுங்கி கட்டிய ஆசாமிகள் தப்பாமல் தெரிவோம். ஒன்று நான், இன்னொருவர் தந்தை பெரியார் அவர்கள். மேடையில் எனது கச்சேரியை முடித்த பின் என்னை அழைத்த தந்தை பெரியார் அவர்கள், ‘உம் பேரு என்னய்யா’ என்று கேட்டார். பெயரைச் சொன்னேன் எதிர்காலத்துல நீ பெரிய ஆளா வந்துருவேன்னார். அவரோட பாராட்டைப் போலவே நாலு பேர் பேசற மாதிரி வளர்ந்துட்டேன் என்று நெகிழ்ந்தார்.

★ 1954இல் கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க தி.மு.க. தலைவர்கள் ஊர்தோறும் கைத்தறித் துணிகள் விற்றார்கள். திருச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் விற்பனை செய்தார். அவரையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அழைத்துச் சென்றார். தெருமுனைகளில் கைத்தறிச் சேலை, வேட்டிகளை அடுக்கி வைத்துக்கொண்டு அன்பில் தர்மலிங்கம் தயாராக இருப்பார். இசைமுரசு நாகூர் ஹனீபா பாடுவார். இதற்காக ஒரு பாட்டு வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்க, திரு.உடுமலை நாராயண கவி அவர்கள் உடனே அமர்ந்து ஒரு பாடல் எழுதிக் கொடுத்தார். அதை இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பாடினார். “செந்தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவு

சேலைகள் வேட்டிகள் வாங்குவீர் திராவிட நாட்டின் சேமம் வேண்டி சிங்கார ஆடைகள் வாங்குவீர்!" என்பதே அந்தப் பாட்டு.

★ பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல் பிரபலமானதைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றிய இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடலும் புகழ்பெற்றது. 1953இல் திருச்சி, டால்மியாபுரத்தை, 'கல்லக்குடி'யாக மாற்ற வேண்டும் என்று போராடினார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என்று அவர் பாடிய பாடல் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. விற்பனையிலும் சாதனை படைத்தது.

★ தி.மு.கவின் போராட்டங்கள் அனைத்திலும் தவறாமல் அவர் பங்கேற்பார். 'கலைஞர்கள் போராட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியதில்லை' என பேரறிஞர் அண்ணா அவர்கள் விலக்கு அளித்திருந்தார். அப்படியிருந்தும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் போராட்டத்தில் பங்கேற்பார். இது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது, "நான் வீரத் தமிழன், என் உடலில் தமிழ்க் குருதி ஓடுகிறது. அதனாலேயே கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் நான் விரும்பிக் கலந்துகொண்டேன்" என்றார்.

★ சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்காகவும் பாடியுள்ளார். குழந்தைகளுக்கான அவரது, 'ஹஸ்பி ரப்பி ஜல்லல்லாஹ்' பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது. இன்றும் பல பள்ளிக்கூடங்களில் 'பிரேயர் பாடலாக' அப்பாடலே ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'சின்னச் சின்னப் பாலர்களே; சிங்காரத் தோழர்களே' என்று சிறுவர்களுக்காகப் பாடியுள்ளார். 'தலைவாரி பூச்சூடி உன்னை' என்று மாணவர்களுக்காகப் பாடியிருக்கிறார். 'கண்ணுக்கு இமை போன்ற பெண்ணே' என்று பெண்களுக்காகப் பாடியிருக்கிறார்.

★ நபிகளாரின் அருமை மகளார் பாத்திமா (ரலி) பற்றி அதிகமான பாடல்களைப் பாடியவர். 'பாத்திமா வாழ்ந்த முறை உனக்குத் தெரியுமா' என்று பாடி இன்றைய பெண்களுக்கு அறிவுரை சொல்லியுள்ளார். 'விண்ணகமும் மண்ணகமும் வியந்துரைக்க வந்துதித்த அண்ணலான நபி மகளார் அருமையான பாத்திமா' என்று புகழ் பாடியுள்ளார். 'அண்ணல் நபிகளின் வண்ண மகள் எங்கள் பாத்திமா', 'கன்னியரே அன்னையரே கொஞ்சம் நில்லுங்கள், நம் கண்மணியாம் பாத்திமாவின் சரிதம் கேளுங்கள்' ஆகிய பாடல்கள் மூலம் வரலாற்றுப் பாடம் நடத்தியவர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பாடல்கள் இசைத்தட்டிலிருந்து ஆடியோ கேசட்டாகி, சி.டி.யாகி இன்று லேப்டாப், ஐபேட் என்று பரிணாமம் பெற்று உலகெங்கும் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. இணையத்தில் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் என்று

தட்டினாலே அவரது பாடல்கள் வந்து குவிகின்றன. அவரது கச்சேரிகளின் வீடியோ காட்சிகளும் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் சிறப்புகளைப் பற்றி தமிழ்நாட்டின் அத்தனை பொது ஊடகங்களும், பல்வேறு காலங்களில், பல்வேறு தகவல்களைப் பதிவு செய்துள்ளன. மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியின் சார்பில், 1963இல் ஹனீபாவுக்கு 'முத்துவிழா' எடுக்கப்பட்டு 'முத்துவிழா' மலரும் வெளியிடப்பட்டது. அவர் வாழ்க்கையை திரு. அ.மா.சாமி அவர்களும் பதிவு செய்துள்ளார். தமிழ்நாட்டில் முன்னணி கவிஞர்கள் பலரும் அவரைப் பற்றிக் கவிதைகள் பாடியுள்ளனர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் வளர்ச்சியும், வெற்றியும் தமிழ்நாட்டு முஸ்லிம்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிராமங்களில் சிறுவர்கள் ஒன்றுகூடி மணல் மேடை அமைத்து அவர் போல் வேடம் அணிந்து கச்சேரிகள் நடத்தும் அளவுக்கு அவர் பிரபலமானார். அவரின் பாணியைப் பின்பற்றி அவரது பாடல்களையே பாடக்கூடிய ஏராளமான பாடகர்கள் உருவாயினர்.

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தமது வாரிசுகள் இசைத்துறையில் ஈடுபடுவதை விரும்பவில்லை. தமது 75 ஆண்டுகால கடும் உழைப்பின் மூலம் தாம் தேடி வைத்திருக்கும் பெயருக்கும், புகழுக்கும் ஒரு சின்ன இடர் கூட வந்துவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்

★ இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 8.4.2015 அன்று இயற்கை எய்தினார். அவர் இம்மண்ணுலகை விட்டு மறைந்தாலும் அவருடைய குரல் உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும்.

# நமக்குக் கிடைத்த! நான்காவது முரசு!

முத்தமிழறிஞர் கலைஞர்

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15.9.1989 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் நாகூர் ஹனீபா அவர்களுக்கு கலைஞர் விருது வழங்கி ஆற்றிய உரை:*

இந்த விழாவில் மூவருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் அரசர்களுடைய வரலாறு இவைகளை எடுத்துக் கூறி மூன்று என்ற எண் தமிழ் மொழியை, தமிழ் இனத்தை எப்படி சார்ந்திருக்கிறது என்பதையே பேராசிரியர் விளக்கினார். அவர் சொன்னார் - மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியர் அவர்கள் காலத்தில் இருந்த முரசுகள் மூன்று - வெற்றி முரசு, மண முரசு, கொடை முரசு என்று, அதை மாற்றுகின்ற வகையில் நமக்குக் கிடைத்தவர் - நான்காவது முரசாக இசைமுரசு ஹனீபா அவர்கள்.

அந்த இசை முரசினுடைய கொள்கை விளக்கப் பாடல்கள் இந்த மேடையிலே ஒலித்து - அதைத் தொடர்ந்து நாஞ்சிலார் அவர்கள் வரவேற்புரையாற்றி - அம்மையார் சத்தியவாணி முத்து அவர்கள் வாழ்த்துரை வழங்கி - பொருளாளர் புகழ் உரை நல்கி - பொதுச் செயலாளர், இந்த இயக்கத்தினுடைய தொடக்க கால வரலாற்றைத் தொட்டு இன்றைக்கு இந்தக் காலம் வரையிலே இந்தக் கழகம் வளர்ந்திருக்கின்ற பாங்கினை எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

ஹனீபா அவர்களுக்கு என் பெயரால் அமைந்த விருதினை வழங்கியதிலே ஒரு பெரிய பொருத்தம் இருக்கின்றது. 1938ஆம் ஆண்டு அவர்கள் எப்படி பொது வாழ்க்கையிலே அரசியல் வாழ்க்கையிலே அடியெடுத்து வைத்தார்களோ, அதே ஆண்டிலேதான் நானும் அடியெடுத்து வைத்தேன். என்னுடைய ஊருக்கும், அவருடைய ஊருக்கும் இடையிலே பத்துக்கல் தொலைவுதான். இந்தப் பத்துக்கல் தொலைவில் இருந்த நாங்கள் இளமைப் பருவம் முதல் இந்தப் பருவம் வரை பெரியாருடைய தலைமையிலும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலும் ஒரே கொள்கையை ஏற்று. ஒரே இலட்சியத்திற்காக அன்று முதல் இன்று வரையில் பணியாற்றி வருகின்றோம்.

சிறைக்கு அஞ்சாத சிங்கமாக ஹனீபா அவர்கள் எங்களோடு பல்வேறு சிறைச்சாலைகளிலே வாழ்ந்திருக்கின்றார். அவருடைய குரல் வளம் தமிழ் நிலத்திற்குள்ளே மாத்திரம் அடங்கிவிட்ட ஒன்றல்ல. கடல் கடந்து பல்வேறு நாடுகளிலே இசை முரசு நாகூர் ஹனீபா அவர்களுடைய இசை மழை பொழிந்திருக்கின்றது.

வெளிநாடுகளிலே வாழும் தமிழர்கள் - இஸ்லாமியப் பெருமக்கள் எல்லாம் அவரை வருக வருக என்று அழைத்துச் செல்வதும், வாயார வாழ்த்துவதும், பிறகு மனம் இல்லாமல் மீண்டும் அவரை தமிழகத்திற்கு வழியனுப்பி வைப்பதும் ஆண்டுதோறும் அடிக்கடி நடைபெறுகின்ற நிகழ்ச்சி.

அவ்வளவு செல்வாக்கு தம்முடைய இசைக்கு இருந்தாலுங்கூட. அந்தச் செல்வாக்கை எல்லாம் விட பெரிதாக இந்தக் கழகத்தை - கழக லட்சியத்தை மதிக்கக் கூடிய என்னுடைய உடன் பிறப்புத்தான் இசை முரசு நாகூர் ஹனீபா அவர்கள். அவரையும் நான் வாழ்த்துவதிலே பெருமை அடைகின்றேன்.

## இசைமுரசு இ.எம்.ஹனீபா

# இயற்கையின் அதிசயம்... இறைவனின் அருட்கொடை...

வரலாற்று நாயகன் இசைமுரசு இ.எம்.ஹனீபாவின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதும் பொறுப்பேற்ற பத்திரிகையாசிரியர் அ.மா.சாமி அவர்கள் நாகூருக்குச் சென்று ஹனீபாவை நேரில் சந்தித்தார். அன்று காலை முதல் இரவு வரை ஒரு நாள் முழுவதையும் ஒதுக்கிய ஹனீபாவுடன் அ.மா.சாமி கலந்துரையாடியதைச் சேகரித்து ஆவணப்படுத்தியதே, “இசைமுரசு நாகூர் ஹனீபா” என்று 2006ஆம் ஆண்டு வெளியான அரிய புத்தகம். அதில் இசைமுரசுடன் அ.மா.சாமி எடுத்த பிரத்தியேகப் பேட்டி உண்மையில் வரலாற்றுப் பொக்கிஷம்தான்.

நீங்கள் பிறந்தது இராமநாதபுரத்தில், எப்படி, “நாகூர் ஹனீபா” ஆனீர்கள்?

எங்கள் பூர்வீகம் நாகூர் தான். என் அப்பாவும் நாகூர்க்காரரர் தான். என் அம்மாவுக்கு இராமநாதபுரம். செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பம். என் பாட்டனார் (அம்மாவின் அப்பா) முத்து இராவுத்தர் இராமநாதபுர அரண்மனையில் ஆயுதக் கிடங்குப் பாதுகாவலர் பராமரிப்பாளராகப் பணியாற்றினார். அந்த நாளில் இராமநாதபுரம் சின்னக்கடை வீதியில் அவரது வீடுதான் பெரியது. என் அம்மா கடைக்குட்டி - கடைசிப் பெண்.எனவே, திருமணத்துக்குப் பிறகும் வீட்டோடு வைத்துக்கொள்ள என் பாட்டனார் ஆசைப்பாட்டார். இதனால் திருமணத்துக்குப் பின் என் அப்பா இராமநாதபுரத்தில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்தார். அப்போது நான் அங்கு பிறந்தேன்.

“எப்போது நாகூருக்கு வந்தீர்கள்?”

“எங்களை விட்டுவிட்டு எங்கள் தந்தையார் மலேசியாவுக்கு வேலைக்குப் போய்விட்டார். என் அக்காவுக்குத் திருமணம் நடந்தபோது,

எனக்கு, 'சுன்னத்' திருமணமும் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள என் தந்தையார் கோலாலம்பூரிலிருந்து வந்தார். அவர் திரும்பிப் போகும்போது குடும்பத்தை நாகூரில் குடியமர்த்திவிட்டுச் சென்றார்."

"நாகூர் வாழ்க்கை எப்படி இருந்தது?"

"மிகவும் கஷ்டமான வாழ்க்கைதான். என் அண்ணன் அப்துல் காதர் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினார். நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தேன். என் மீது அண்ணனுக்கு மிகுந்த பாசம் உண்டு. என்னைப் பெயர் சொல்லி அழைக்கமாட்டார்; 'தம்பீ' என்று வாய் நிறைய வாஞ்சையுடன் கூப்பிடுவார். இந்த கஷ்டத்திலும்...."

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்? சொல்லுங்கள்"

"செல்லக் குடும்பத்தில் பிறந்த என் அம்மாவுக்கு தர்ம குணம். யார் வந்து கேட்டாலும், 'இல்லை' என்று சொல்லமாட்டார். நாகூரிலும் அப்படியே வாழ்ந்தார். யாராவது வந்து, 'மகளுக்குத் திருமணம் வைத்திருக்கிறேன். ஒரு ஐந்நூறு ரூபாய் கொடுங்கள்' என்று கேட்பார்கள். அந்தக் காலத்தில் ஐந்நூறு ரூபாய் என்பது, இன்றைக்கு ஐம்பதாயிரத்துக்கு சமம்! அம்மாவிடம் பணம் இருக்காது. 'இல்லை' என்று சொல்ல மனமும் இருக்காது. ஒரு நகையைக் கொடுத்து, 'இதை விற்றுப் பணமாக்கி, மகள் திருமணத்தை நடத்துங்கள்' என்று வந்தவரை அனுப்பி வைப்பார். இப்படியே எல்லா நகையும் போய்விட்டது."

"அப்பா எப்போது திரும்பி வந்தார்?"

"இரண்டொரு முறை வந்தார். 28 ஆண்டுக்குப் பின் ஓய்வு பெற்று நிரந்தரமாகத் திரும்பினார். இங்கு இரும்புக்கடை நடத்தினார்.'

"இசை என்பது உங்களுக்குப் பரம்பரைச் சொத்தா?"

"இல்லை! இயற்கை எனக்குக் கொடுத்த சொத்து! இறைவன் எனக்கு அருளிய கொடை. எனது குடும்பத்தில் என் உடன் பிறப்புகளுக்கோ, அல்லது என் பிள்ளைகளுக்கோ இந்தக் குரல் இல்லை. ஆனால், ஒன்றைச் சொல்லலாம். எங்கள் தந்தையார் குரான் ஓதினால் இனிமையாக இருக்கும், 'பாங்கு' கூறினால் இசையுடன் ஒலிக்கும்."

"உங்களுக்கு மட்டும் எப்படி இசையில் விருப்பம் ஏற்பட்டது?"

"என் தந்தையார் கோலாலம்பூரில் இரயில்வே 'போர்மேன்' ஆக வேலை பார்த்தார். 28 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு, அங்கிருந்து திரும்பினார். இடையிடையே வந்து போனார். ஒரு முறை வரும்போது ஒரு 'கிராம போன்' பெட்டி கொண்டு வந்தார்.



கே.பி.சுந்தராம்பாள், கிட்டப்பா, தியாகராச பாகவதர், பி.யு.சின்னப்பா, சைகால், இஸ்லாமியப் பாடகர் காரைக்கால் தாவூத் போன்றவர்களின் இசைத்தட்டுகளை அந்த கிராமபோன் பெட்டியில் ஓடவிட்டு, நான் கேட்பேன். இது அவர்களைப் போலப் பாடவேண்டும் என்ற ஆசையை என்னிடம் ஏற்படுத்தியது. எந்தப் பாடலையும் ஒரு முறை கேட்டால், அப்படியே திரும்பிப் பாடும் ஆற்றல் இயற்கையாக எனக்கு இருக்கிறது. அப்படிப் பாடிப் பாடிப் பழகிக்கொண்டேன்.''

"யாரிடமாவது முறையாக சங்கீதம் கற்றுக்கொண்டீர்களா?"

"இல்லைங்க. இஸ்லாமியர் கர்நாடக சங்கீதத்தை விரும்பிக் கேட்பதில்லை. அப்படி நான் சங்கீதம் கற்றிருந்தால், இன்று இந்த அளவுக்கு மக்களிடம் புகழ் பெற்றிருக்க மாட்டேன். எனது சங்கீதத்தை மேட்டுக் குடிமக்கள் மட்டுமே கேட்டு ரசிப்பார்கள். இன்று எனது குரலைத் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் கேட்கிறது. சாதாரண மக்கள்கூட எனது பாட்டுகளைக் கேட்கிறார்கள். "மக்கள் பாடகன்" என்று என்னை அழைக்கிறார்கள்."

"யாரையாவது பின்பற்றிப் பாட வேண்டும் என்று நினைத்தீர்களா?"

"நினைத்தது உண்டு. பாகவதரைப் பின்பற்றலாமா, சைகாலைப் பின்பற்றலாமா என்று எண்ணினேன். எனக்குள் ஒரு போராட்டம் நடந்தது. இறுதியில், 'இயற்கை கொடுத்த இனிய குரல் இருக்கிறது; ஆண்டவன் நமக்கு அருள் புரிந்திருக்கிறான்; அதை விட்டு, ஏன் அடுத்தவர்களைப் பின்பற்ற வேண்டும்?' என்ற முடிவுக்கு வந்தேன். எனது குரலிலேயே பாடினேன். மக்கள் வரவேற்றார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா? என் அளவுக்கு உச்சக் குரலில் பாடுகிறவர்கள் இன்று யாரும் கிடையாது!"

"எப்போது முதல் பாடத் தொடங்கினீர்கள்?"

"எனது 11ஆம் வயதில் பள்ளிக்கூடத்தில் பாடினேன். 13ஆம் வயதில் திருமண வீடுகளில் பாடினேன். 15ஆம் வயதில் பக்க வாத்தியங்களுடன் மேடைக்கச்சேரி செய்தேன்."

''இதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்"

"நான் படித்த பள்ளிக்கூடத்தில் காலை வணக்கத்துடன் வகுப்புகள் தொடங்கும். 'பொன்னார் மேனியனே...' என்ற பாடல் இறைவணக்கப் பாடலாகப் பாடப்படும். தமிழாசிரியர் சாமிநாத அய்யர் பாட, பிள்ளைகள் எல்லோரும் பாடுவோம். நான் இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவன். என்னுடன் நிறைய இஸ்லாமிய மாணவர்கள் படித்தார்கள். அவர்களைச் சேர்த்து, இஸ்லாமியப் பிள்ளைகள் தனியாக இறைவணக்கம் செய்தால் என்ன என்று யோசித்தேன். இதற்குத் தலைமை ஆசிரியரிடம் அனுமதி கேட்டோம். அவரும் அன்புடன் அனுமதி அளித்தார். அன்று முதல் இஸ்லாமிய மாணவர் கூடி தனியே இறைவணக்கம் செய்தோம். நான்தான் இறைவணக்கப் பாடல் பாடினேன். "வேளை உதவி தாளை தருவீர் வேந்தர் யா முகமதே" என்பது அந்தப்பாடல். அப்போது நான் ஏழாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு 11 வயது."

"திருமண வீடுகளில் எப்படிப் பாடினீர்கள்?"

"எங்கள் நாகூரில் 'கெளதியா பைத்து சபை' என்ற இஸ்லாமியத் தொண்டு நிறுவனம் இருக்கிறது. அவர்கள் இஸ்லாமியத் திருமணங்களுக்குப் போய், மாப்பிள்ளை அழைப்பின் போது சிறுபறை (தப்சு) அடித்துக் கொண்டு பாடுவார்கள், விருந்து பரிமாற உதவுவார்கள். நான் பள்ளிக்கூடத்தில் பாடுவது தெரிந்து, இச்சபையில் என்னையும் சேர்த்துக் கொண்டார்கள். திருமண வீடுகளில் போய்ப் பாடுவேன். எனது எடுப்பான குரல் என்னை முதன்மைப் பாடகன் ஆக்கியது. எனக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள்! என்னை வளர்த்து ஆளாக்கியது, இந்த கெளதியா சபைதான். அதில் சேர்ந்து பாடியது பிற்காலத்தில் எனக்குப் பயனுள்ளதாக இருந்தது."

"எப்படி?"

"பொதுவாகக் கச்சேரிகள் செய்வதற்கு முதல் நாள் பாடகர்கள் பாடி, குரலைச் சீர் செய்து கொள்ளுவார்கள். ஆனால், எனக்கு அது தேவையில்லை. யாராவது 'பாடுங்கள்' என்று விரும்பிக் கேட்டால், உடனே நான் பாடுவேன். பக்க வாத்தியங்கள் தேவையில்லை. கச்சேரிகளுக்குக்கூட நான் ஒத்திகை பார்ப்பதில்லை. திருமண வீடுகளில் மாப்பிள்ளை அழைப்பு நள்ளிரவு 12 மணிக்குக்கூட நடக்கும். தூங்கிக்கொண்டிருக்கும் என்னை எழுப்பிப் பாடச் சொல்லுவார்கள். அதுபோல, இப்போதும் மாநாடுகளில், சில நேரம் களைப்புடன் புல் தரையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும் என்னை எழுப்பி, மேடையில் ஏற்றிப் பாடச் சொல்லுவார்கள். வழக்கமான எடுப்பான குரலில் பாடுவேன். தூக்கத்தில் எழுப்பிப் பாடச் சொன்னாலும் பாடக்கூடிய பழக்கம், பயிற்சி கிடைத்தது."

"உங்கள் முதல் கச்சேரி எப்போது நடந்தது?"

"1941ஆம் ஆண்டு தேரழுந்தூரில் ஒரு திருமணத்தில் பாட என்னை அழைத்தார்கள். பக்க வாத்தியங்களுடன் எனது முதல் மேடைக் கச்சேரி, அதுதான். அப்போது எனக்கு 15 வயது. எனது முதல் வெளியூர் கச்சேரியும் அதுதான். நான் பணம் வாங்கிக்கொண்டு செய்த முதல் கச்சேரியும் இதுதான். 25 ரூபாய் கொடுத்தார்கள். அதில் ஏழெட்டு ரூபாய் பக்க வாத்தியக்காரர்களுக்குப் போய்விட்டது. அன்று முதல் கடந்த 65 ஆண்டுகளில் ஐந்தாயிரத்துக்கு மேற்பட்டத் திருமண வீடுகளில் பாடியிருக்கிறேன்."

"எப்படி அரசியல் மேடைகளில் பாடத் தொடங்கினீர்கள்?"

"தமிழ் ஆர்வம்தான் அதற்குக் காரணம். இயற்கையாகவே என்னிடம் தமிழார்வம் இருந்தது. 1938ஆம் ஆண்டில் பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டது. இதை எதிர்த்துத் தமிழ்நாடு எரிமலையாக வெடித்தது. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அப்போது (1939) நாகூரில் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டத்தில் கைது செய்யப்பட்ட நாலு பேரில் நானும் ஒருவன். அப்போது எனக்கு 13 வயதுதான்!

"அந்தச் சின்ன வயதிலேயே உங்களிடம் தமிழ் எழுச்சி ஏற்பட்டு விட்டதா?"

"ஆமாம். இன்றும் அந்தத் தமிழ்க் கனல் என் உள்ளத்தில் எரிந்து கொண்டிருக்கிறது!"

"நல்ல தமிழர் நீங்கள்! பிறகு...?"

"அந்நாளில் திராவிடர் இயக்கத்தில் "டார்பிடோ' ஜனார்த்தனம் என்ற நல்ல பேச்சாளர் இருந்தார். அவரை அழைத்து நாகூரில் கூட்டம் நடத்தினோம். நான்

கூட்டத்தில் பாடினேன். பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய 'ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள் - நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே' என்ற பாடலை உணர்ச்சி பொங்கப்பாடினேன். அது முதல் அரசியல் மேடைகளில் பாடத் தொடங்கிவிட்டேன்.''

"உங்களுக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது, தமிழை இனிமையாக, தெளிவாக உச்சரிக்கிறீர்கள். பேச்சாளர் ஆகியிருக்கலாமே?"

"திராவிட இயக்கத்தில் பேச்சாளர்கள் அதிகம். அதனால், பாட்டு எனக்குக் கை கொடுத்தது. என்னைப் போல எடுப்பாகப் பாடக் கூடியவர் வேறு எவரும் இல்லை. அதனால்தான் போட்டியில்லாமல், இந்த 81வது வயதிலும் திருமண வீடுகள், கழக மேடைகள், மாநாடுகளில் பாடிக்கொண்டிருக்கிறேன். இதில் இன்னொரு ஆதாயமும் கிடைத்தது."

"என்ன?"

"பெரியார் முதல் பேரறிஞர் அண்ணா அவர்களுடன், கலைஞர், பேராசிரியர், நாவலர், நாஞ்சிலார் என்று எல்லாத் தலைவர்களும் என்னிடம் பாசத்துடன் இருந்தார்கள். இன்று கூட கலைஞர், "வா, அனிபா. உட்கார்" என்று அன்புடன் என்னை வரவேற்பார். நான் கலந்துகொண்டு பாடாத கழக நிகழ்ச்சிகள், சிறப்புக் கூட்டங்கள், மாநாடுகள் கிடையாது. 'நீங்கள் பாடி முடித்தபின்தான் எங்களை மேடைக்கே அழைக்கிறார்கள்' என்று ஒரு முறை முரசொலி மாறன் அவர்கள் என்னிடம் வேடிக்கையாகக் கூறினார்."

"தந்தை பெரியாருடன் உங்களுக்கு எப்படிப் பழக்கம் ஏற்பட்டது?"

''பெரியாரை நாகூருக்கு அழைத்து நான் கூட்டங்கள் நடத்தியிருக்கிறேன். அந்தக் கூட்டங்களில் நான் பாடியதைக் கேட்டு மகிழ்ந்தார், பெரியார். 'ஹனீபா அய்யா பாட்டுக்கு ஒலிபெருக்கித் தேவையில்லை' என்பார். மயிலாடுதுறை, நாகப்பட்டினம் வரும்போது என்னை அழைத்து வரச் சொல்லிப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார், பெரியார். சில நேரம் என்பாட்டைக் கேட்டு, ஒரு ரூபாய் இனாம் கூடக் கொடுத்திருக்கிறார்!"

"காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிபு அவர்களுடன் உங்கள் தொடர்பு பற்றிச் சொல்லுங்களேன்".

"அவரது கண்ணியத்தால், சமுதாயத் தொண்டால் கவரப்பட்டவன் நான். எனது இசையால் ஈர்க்கப்பட்டவர், அவர். எனது பாடல்களை மிகவும் விரும்பிக் கேட்பார்.

நாகூரில் நான் கட்டிய "அண்ணா இல்லம்" என்ற புதிய இல்லத்தை காயிதே மில்லத் திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால், அன்று அவரால் வர இயலவில்லை.

எனக்கு மடல் எழுதி அதைத் தெரிவித்தார். அதன்பின் ஒரு முறை அல்ல, இரு முறை எனது இல்லத்துக்கு காயிதே மில்லத் அவர்கள் வந்திருக்கிறார்.

அவர் எப்போது நாகூருக்கு வந்தாலும், முதலில் தர்காவுக்குப் போவார். என்னையும் அழைத்துப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார்.

"அறிஞர் அண்ணா அவர்களுடன் உங்களுக்கு எப்படித் தொடர்பு ஏற்பட்டது?"

"அது பற்றிச் சொல்லுவது என்றால், பக்கம் பக்கமாக எழுத வேண்டியிருக்கும்"

'எழுதுகிறேன், சொல்லுங்கள்"

"அந்த நாளில் திராவிட இயக்கத்தில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி என்ற கருஞ் சட்டை வீரர் இருந்தார். அவரை 'அஞ்சா நெஞ்சன் அழகிரி சாமி' என்பார்கள். அவ்வளவு துணிச்சலானவர். மன்னார்குடியை அடுத்த மதுக்கூரில் ஒரு பொதுக்கூட்டம். அதில் பேச அழகிரி வந்தார். நான் பாடினேன். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று நான் முழங்கினேன். அழகிரிக்கு மிகவும் பிடித்துவிட்டது. அது முதல் எங்கே கூட்டம் நடந்தாலும், என்னை அழைப்பார், பாடச் சொல்லுவார்.

ஒருமுறை பட்டுக்கோட்டையில் கூட்டம். பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பேசுவதாக இருந்தது. 'டேய் கருப்பா, நீயும் வந்துவிடு' என்று என்னையும் அழைத்தார். என்னை 'கருப்பா' என்றுதான் அழகிரி கூப்பிடுவார். நானும் போனேன். மாலையில் அழகிரி வீட்டில் சிற்றுண்டி சாப்பிட்டோம். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தார் அழகிரி.

அதன்பின் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பழக எவ்வளவோ வாய்ப்புகள். ஒருமுறை நான் குடும்பத்துடன் காஞ்சிபுரத்துக்கு போய், பேரறிஞர் அண்ணா அவர்களுடன் விருந்தாளியாக இருந்தேன். பேரறிஞர் அண்ணா அவர்களே எங்களுக்குப் பரிமாறியதை என்றும் மறக்க இயலாது!"

"அதைச் சொல்லுங்கள்"

"முதல் முதல் நான் காஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் வீட்டுக்குப் போனபோது, வெறும் லுங்கி, சட்டையுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களை வரவேற்றார். 'அண்ணா அவர்களுடன்.... அண்ணா அவர்களுடன்... என்று சொல்லுவீர்களே, அந்த அண்ணா துரை 'இவர்தானா!' என்று என் மனைவி ஆச்சரியத்துடன் கேட்டாள்! பிறகு அண்ணா அவர்கள் எங்கள் வீட்டுக்கு வர, குடும்ப நண்பர்கள் ஆகிவிட்டோம்.

“ஒரு முறை அறந்தாங்கி அருகே ஒரு கூட்டம். அண்ணா அவர்கள் கலந்துகொண்டார். என்னையும் அழைத்துக்கொண்டார். அதற்கு முன் இரண்டு நாள் அடை மழை. வழியில் தண்ணீர் தேங்கிக்கிடந்தது. அண்ணா அவர்கள் வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, தண்ணீரில் நடந்தார். நானும் நடந்தேன். ஒரு மைல் நடந்து, கூட்டம் நடந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

“ஒருமுறை அண்ணா அவர்கள் மலேசியா, சிங்கப்பூருக்குப் போய்விட்டு வந்தார். அவரைப் பார்க்க நான் போனேன். ‘ஹனீபா! நான் போன இடத்திலெல்லாம் நீதான் இருந்தாய்’ என்று அண்ணா அவர்கள் சொன்னார். எனக்குப் புரியவில்லை. ‘வீட்டுக்கு வீடு உன் பாட்டுதான் ஒலித்துக் கொண்டிருக்கிறது’ என்று அண்ணா அவர்கள் சொல்லி சிரித்தார். பிறரைப் பாராட்ட அண்ணா அவர்கள் தயங்கவே மாட்டார்”.

“கலைஞருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு பற்றிச் சொல்லுங்களேன்”

“அது 65 ஆண்டுக்கதை! அத்தனையும் சொல்லுவது என்றால். அதையே ஒரு தனி நூலாக எழுதவேண்டியிருக்கும்“

“எழுதிவிடலாம், சொல்லுங்கள்”

“நானும் கலைஞரும் ஏறத்தாழ ஒரே வயது. கலைஞர் 1924இல் பிறந்தார். நான் 1925இல் பிறந்தேன். அவ்வளவு நெருக்கம்.

நாகூரில் ஏழாம் வகுப்புடன் எனது படிப்பு முடிந்தது. அதற்கு மேல் படிக்க வறுமை இடம் கொடுக்கவில்லை. திருவாரூரில் எனது சிறிய தகப்பனார் இருந்தார். அவரது வீட்டுக்குப் போய்த் தங்கிக்கொண்டு, அவரது பலசரக்குக் கடையில் வேலை பார்த்தேன்.

திருவாரூரில் ஓடம் போக்கி ஆறு ஓடுகிறது. தண்ணீரைப் போக்கிவிட்டு மணல்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஆற்று மணலில் அடிக்கடி நீதிக்கட்சியின் கூட்டம் நடைபெறும். கூட்ட ஏற்பாட்டாளர்களில் கலைஞரும் ஒருவர்! அப்போது அவர் பள்ளிக்கூட மாணவர். அரைக்கால் சட்டை போட்டிருப்பார். பம்பரம் போல சுழன்று சுறுசுறுப்பாக இயங்குவார். நான் அவரையே பார்த்துக்கொண்டிருப்பேன்.

இரவு ஏழு மணிக்குக் கூட்டம் என்றால், ஆறு மணிக்கே நான் போய்விடுவேன். மேடையில் ஏறிப் பாடி கூட்டம் சேர்ப்பேன். கூட்டம் சேர்ந்ததும், பொதுக்கூட்டம் தொடங்கும். கூட்டத்துக்குத் தலைவர் யார் தெரியுமா? பெரும்பாலும், அரைக்கால் சட்டை போட்டிருக்கும் கலைஞர் தான்!

அன்று தொடங்கிய எங்கள் நட்பு இன்றும் தொடர்கிறது. என்றும் தொடரும். நாகூரில் நான் கட்டிய வீட்டுக்குக் “கலைஞர் இல்லம்“ என்று பெயர் சூட்டினேன்.

கலைஞரே வந்து திறந்து வைத்தார். எங்கள் வீட்டில் என்ன விழா நடந்தாலும் கலைஞர் வந்து கலந்துகொள்ளுவார். என் பிள்ளைகளின் திருமணத்துக்கு வந்து வாழ்த்தியிருக்கிறார்.

எனது கழகப் பற்றும், பணியும் கலைஞருக்குத் தெரியும். அவர் எனக்கு "எம்.எல்.சி." (மேல் சபை உறுப்பினர்) பதவி கொடுத்துச் சிறப்பித்தார். "கலைமாமணி" விருது வழங்கிப் போற்றினார். எல்லாவற்றுக்கும் மேலாக எனக்குக் "கலைஞர் விருது" தந்து, என்னைப் புகழ்க் கோபுரத்தில் ஏற்றி வைத்தார்.

இப்போது அவர் புகழின் உச்சியில் இருக்கிறார். தமிழ் நாட்டின் முதல்வராக ஐந்தாவது முறை பதவி ஏற்றுச் சாதனை படைத்துள்ளார். பதவி ஏற்றதும், பதவி ஏற்பு மேடையிலேயே, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய், உழவர்களின் கூட்டுறவுக் கடன் ரத்து, சத்துணவில் வாரம் இரண்டு முட்டை என்று மூன்று ஆணைகள் பிறப்பித்துப் புதிய வரலாறு படைத்துவிட்டார். அந்த ஆணைகளில் கலைஞர் கையெழுத்திடுவதை டி.வி.யில் பார்த்து நான் மெய்சிலிர்த்துப் போனேன்! முஸ்லிம் சமுதாயத்துக்கு இரு அமைச்சர் பதவிகளை கலைஞர் அளித்திருப்பதும் பெருமையாக இருக்கிறது".

"இந்தத் தேர்தலில் கூட நீங்கள் பிரச்சாரம் செய்தீர்கள் போலிருக்கிறதே?"

"ஆமாம். வாணியம்பாடியில் இரண்டு நாளும், சென்னையில் மூன்று நாளும் முகாமிட்டு, தெருத் தெருவாகப் பாட்டுப் பாடி, தி.மு.க. கூட்டணிக்கு வாக்குச் சேகரித்தேன்".

"தி.மு.க.வும் வெற்றி பெற்று கலைஞர் முதல்வர் ஆகிவிட்டார்."

"அந்த மகிழ்ச்சியில் எனக்கு இளமை திரும்பிவிட்டது!"

"கழகத்தில் இவ்வளவு ஈடுபாடு கொண்ட நீங்கள், கழகம் நடத்தியப் போராட்டங்களில் கலந்துகொண்டீர்களா? 'கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டியதில்லை' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விலக்கு அளித்தார் அல்லவா?"

"போராட்டம் என்றதும் ஓடி ஒளியும் கோழைகளாக, சிறை என்றதும் நடுங்குகிற கோழைகளாக சிலர் இருந்தார்கள். அவர்களுக்காக அண்ணா இந்த விலக்கை அளித்தார். ஆனால், நான் வீரத் தமிழன். என் உடம்பில் தமிழ்க் குருதி ஓடுகிறது. கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் நான் கலந்துகொண்டேன். 11 முறை சிறைக்குப் போயிருக்கிறேன்."

"கழகத்தில் இவ்வளவு ஈடுபாடு கொண்ட நீங்கள், முஸ்லிம் லீக்குடனும் தொடர்பு வைத்திருந்தீர்களே, எப்படி?"

"அரசியல் பணிக்குக் கழகம், சமுதாயப் பணிக்கு முஸ்லிம் லீக் என்று வைத்துக்கொண்டேன்."

"திராவிட இயக்கம் நாத்திக இயக்கம். முஸ்லிம் லீக் இஸ்லாமிய இயக்கம். இரண்டும் எப்படி ஒத்துப்போகும்?"

"'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார், அண்ணா. 'ஏக இறைவன்' என்பதுதான் இஸ்லாமியக் கொள்கையும், 'நான் கைலி கட்டாத முஸ்லிம்' என்றும் அண்ணா சொல்லியிருக்கிறார். எனவே, இரண்டு இயக்கத்துக்கும் எந்த வேறுபாடும் இல்லை."

"நீங்கள் நாத்திகரா? ஆத்திகரா?"

"நான் இஸ்லாமைப் பின்பற்றுகிறவன். மார்க்கக் கடமைகளில் ஒரு சிறுகுறைகூட வைக்கமாட்டேன். எனது ஏழாம் வயதில் நோன்பு வைக்க என் அம்மா எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அன்று முதல் 74 ஆண்டுகளாகத் தொடர்ந்து நோன்பு வைக்கிறேன். ஒரு நோன்பைக் கூட விட்டதும் இல்லை, விட்டுவிட்டு, பிறகு நோன்பு வைத்ததும் இல்லை. நாகூர் தர்கா ஆலோசனைக் குழு உறுப்பினராக இருந்தேன். வக்ப் வாரிய உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்திருக்கிறேன். நபிகள் நாயகம் (சல்) பிறந்தநாள் விழாக்கள், பள்ளிவாசல் திறப்பு விழாக்கள், தர்கா விழாக்களில் பாடுகிறேன். புனித ஹஜ் யாத்திரை போய் வந்தேன்."

"நீங்கள் முஸ்லிம் லீக் உறுப்பினரா?"

"இல்லை. முஸ்லிம் லீக்கில் என்னை சேரச்சொன்னார்கள். மறுத்துவிட்டேன். கழகம் உடைந்தபோதுகூட என்னை மாற்று முகாமுக்கு இழுக்க மிகப்பெரிய முயற்சி நடந்தது. நான் கொஞ்சம் கூட இடம் தரவில்லை. என் இரத்தத்தை எடுத்துச் சோதித்தால்கூட அதில் வேறு கட்சியின் கலப்பு இருக்காது"

"அரசியல் பாட்டுகளும் பாடுகிறீர்கள். ஆன்மீகப் பாடல்களும் பாடுகிறீர்கள். இரண்டுக்கும் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா?"

"நிச்சயமாகத் தெரிகிறது. அரசியல் பாடல்களில் ஒரு மிடுக்கு வேண்டும்! ஒரு வீரம் வேண்டும்! ஆன்மீகப் பாடல்கள் என்றால், மெய்மறந்து பாடுவேன். அரசியல் பாட்டு உணர்ச்சி மயமான வேகம். ஆன்மீகப் பாட்டு உள்ளுணர்வுடன் கூடிய பக்தி தாகம்."

ஆயிரக்கணக்கான பாடல் பாடியிருக்கிறீர்கள். அவற்றில் உங்களுக்குப் மிகவும் பிடித்த பாடல்கள் என்று சில பாடல்கள் இருக்கும் அல்லவா?

ஒரு தாய் நூறு பிள்ளைகள் பெற்றாலும், எல்லாப் பிள்ளைகள் மீதும் ஒரே பாசத்துடன்தான் இருப்பாள். அதுபோல நான் பாடிய எல்லாப் பாடல்களுமே எனக்குப் பிடித்தமானவைதான்

ஆனாலும், ரசிகர்கள் திரும்பத் திரும்ப விரும்பிக் கேட்கும் பாடல்கள் என்று சில இருக்கும் அல்லவா?

"அப்படியென்றால், அரசியலில் 'அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா அவர்கள்', 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே', 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற பாடல்களைச் சொல்லலாம். ஆன்மீகப் பாடல்களில், 'இறைவனிடம் கையேந்துங்கள்'. 'ஐயாயிரம் ஆண்டுக்கு முன்னே நடந்தது அரபு நாட்டிலோர் தியாகம்', 'மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே', 'மதினா நகருக்குப் போக வேண்டும்', 'மண்ணில் பிறந்ததேனோ எங்கள் பெருமானே' என்ற பாடல்களைக் குறிப்பிடலாம்."

"தமிழ் தவிர வேறு மொழிகளில் பாடுவீர்களா?"

"இலங்கைக்குப் போயிருந்தபோது அன்றைய அமைச்சர் ஜெயவர்த்தனாவின் விருப்பப்படி சிங்கள மொழியில் ஒரு பாட்டுப் பாடினேன். மும்பைக்குப் போயிருந்தபோது "ஓ துனியாகே ரக் வாலே" என்ற இந்திப் பாடலை பாடினேன். அரபு நாடுகளில் அரபுப் பாடல்கள் பாடியிருக்கிறேன். ஐதராபாத்தில் உருதுப் பாட்டு பாடி, ரசிகர்களை மகிழ்வித்தேன்."

"உங்கள் பாடல்களுக்கு யார் இசை அமைப்பது?"

"நானே இசையமைப்பேன். 'அழைக்கின்றார் அண்ணா அவர்கள்' பாடலும், 'இறைவனிடம் கையேந்துங்கள்' பாடலும் நானே இசை அமைத்தவை. என் குழுவினரும் இசை அமைப்பார்கள்"

"உங்கள் பாட்டுக்கு இளையராசா இசை அமைத்திருக்கிறாராமே?"

''ஆமாம். நான் எம்.எல்.சி.யாக இருந்தபோது ஒரு நாள் காலையில் ராசா என் அறைக்கததவைத் தட்டினார். எனது பாடல்களுக்கு இசை அமைக்க விரும்புவதாகச் சொன்னார். 'நாளை வந்து பாருங்கள்' என்றேன். மறுநாள் வந்தார். ஒரு பாடல் தந்தேன்.

இசை அமைத்தார். அது இசைத் தட்டில் பதிவாயிற்று. 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு, எங்கள் திரு நபியிடம் போய்ச் சொல்லு சலாம் சொல்லு' என்பது அந்தப் பாடல்."

"உங்கள் புகழுக்கும் சிறப்புக்கும் முதல் காரணம் யார் என்று சொல்ல முடியுமா?"

"சந்தேகம் இல்லாமல் என் மதிப்புக்குரிய ஆசிரியரான புலவர் ஆபிதீன்தான். அவரே ஒரு பாடகர்தான். நான் மேடையேறிய பின் அவர் பாடுவதை நிறுத்திக்கொண்டார். எனக்குப் பாடல்கள் எழுதிக் கொடுத்தார். இந்தப் பாடல்களே எனது சிறப்புக்கு முதல் காரணம்."

"வேறு யார், யார் பாடல்கள் எழுதிக்கொடுத்தார்கள்?"

"அது ஒரு பெரிய பட்டியல். குணங்குடி மஸ்தான் சாகிபு, பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களை நான் பாடுகிறேன். பேராசியர் அப்துல் கபூர், சிக்கல் மதிதாசன், தா.காசிம் என்று சிலரைக் குறிப்பிடலாம். உடுமலை நாராயண கவியின் பாடலையும் பாடியிருக்கிறேன்".

"திரைப்படங்களில் கூடப் பாடியிருக்கிறீர்கள் அல்லவா?"

"அதில் அவ்வளவு ஆர்வமில்லை. விரும்பி அழைப்பவர்களின் படங்களில் மட்டும் பாடுகிறேன்"

"நீங்கள் மிகவும் ரசித்துப் பாடும் பாடல் எது?"

"தாயிப் நகர வீதியிலே எங்கள் தாகா ரசூல் நபி நடக்கையிலே பாவிகள் செய்த கொடுமையினை எண்ணிப் பார்த்தால் நெஞ்சம் உருகுதம்மா கண்களில் கண்ணீர் பெருகுதம்மா என்ற பாடலை என்னையே மறந்து அனுபவித்துப் பாடுவேன்"

"உங்கள் குரலைப் பாதுகாக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"நான் எதுவும் செய்வதில்லை! இறைவன் கொடுத்ததை அப்படியே வைத்திருக்கிறேன். ஒருமுறை காரைக்காலில் நாயகம் (சல்) பிறந்த நாள் விழா. புதுக்கோட்டை திவான் அபிபுல்லா சாகிபு தலைமை தாங்கினார். கோட்டாறு சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் உரையாற்றினார். நான் பாடினேன். என் பாட்டைக் கேட்ட பாவலர், 'வாப்பா, இங்கே வா' என்று என்னை அருகில் அழைத்து, வாழ்த்தினார். 'இறைவன் உனக்கு இனிய குரலைக் கொடுத்திருக்கிறான். அதைப் பாதுகாத்துக்கொள்ள

வேண்டியது உன் பொறுப்பு' என்று அறிவுரை வழங்கினார். நான் அந்தப் பொறுப்பையும் இறைவனிடமே விட்டுவிட்டேன்.

இந்த வயதிலும் குரல் அப்படியே இருக்கிறது என்றால், அதை இயற்கையின் அதிசயம், இறைவனின் அருட்கொடை என்றுதான் கூற வேண்டும்."

"உங்கள் இளமைக் கால நண்பர்கள் யாரும் இப்போது நாகூரில் இருக்கிறார்களா?"

"இருக்கிறார்களே! என் இனிய நண்பர்களான இ.எம். அலி மரைக்காயர், வித்துவான் எஸ்.எம்.ஏ. காதர் இருவரும் இப்போதும் நாகூரில் இருக்கிறார்கள். காரைக்கால் நண்பர் கலைமாமணி எஸ்.எம்.உமர் அவர்கள் சென்னையில் இப்போது வசித்துக்கொண்டிருக்கிறார். அ.மு.சயீது நீடூரில் இருக்கிறார்."

"உங்களுக்கு 81 வயது ஆகிவிட்டது. ஏதாவது ஆசை இருக்கிறதா?"

"சொந்தமாக ஒரு பள்ளிவாசல் கட்ட வேண்டும் என்று ஆசை இருக்கிறது. வக்ப் வாரியத் தலைவராக இருந்தபோது பள்ளிவாசல்கள் கட்ட, விடுதிகள் கட்ட, பள்ளிகள் கட்ட முடிந்த அளவு உதவி செய்தேன். பள்ளி வாசல்கள், பள்ளிக்கூடங்கள் கட்ட கச்சேரி நடத்தி நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறேன். எனது சொந்தப் பணத்தில் நானே ஒரு பள்ளிவாசல் கட்ட வேண்டும் என்று எனக்கு ஆசை. எனக்கு இனிய குரல் கொடுத்து வாழவைத்த இறைவனுக்கு இந்த நன்றியையாவது நான் செய்ய வேண்டும் அல்லவா?"

இறைவனை நாடினால் நிச்சயம் இந்த ஆசை நிறைவேறும்.

# நல்லவர்கள் போற்றும்... வல்லவர்கள் இவர்கள்...

இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள் முஸ்லிம் முரசு பத்திரிகைக்கு அளித்த பேட்டி...

தமிழறிந்த மனிதர்களுக்குப் பரிச்சயமான பெயர் இசை முரசு நாகூர் ஹனீபா அவர்கள். இஸ்லாத்தை அறியாதவர்கள் கூட அவர் பாடலில் இசைந்து தலையசைப்புடன் ஒன்றி நின்று இஸ்லாத்தைப் படிப்பதுண்டு. கட்சிப் பாடல்களை நா-கூர்மையோடு அந்த நாகூரார் கணீரென்று பாடும்போது மணல்கூட மத்தாப்புச் சொரியும். ஒலிப்பதிவு நாடாச் சுருள்களில் பெரும்பாலானவை அவர் பாடலில் கருக்கொண்டே செவிகளுக்குள் சிம்மாசனம் ஏறுகின்றன.

அவருடைய குரல் அன்று போலவே இன்றும் இளமை மாறாமலே இன்பம் பரப்புகிறது. மணிமணியாய்க் குரல் எழுப்பும் அந்த இசைமுரசின் மணிவிழா நாளன்று பத்திரிகையாளர் திரு. ஆளூர் ஜலால் அவர்கள் சந்தித்தபோது, மொட்டவிழ்த்த வார்த்தைப் பூக்களே இங்கே இந்த வரி முதுகுகளில் வசமாய் ஏறிவருகின்றன. நல்ல வசமாய்க் கேட்ட கேள்விக்கெல்லாம் தயக்கமில்லாமல் தடுமாற்றமில்லாமல் வெகு அற்புதமாகப் பதிலளித்த பேட்டி.



தாங்கள் முதன் முதலாகப் பாடிய பாடல் எது?

1954ஆவது ஆண்டு இலங்கை கம்பலையில் வாழ்ந்த நல்லதம்பி பாவலர் எழுதிய 'சின்னச் சின்னப் பாலர்களே. சிங்காரத் தோழர்களே!' என்று துவங்கும் சிறுவர்களுக்கான அறிவுரைப்பாடல் தான் என் முதல் இசைத்தட்டாக வெளிவந்தது, அதன் மறுபக்கம், எங்கள் வாழ்வும் எங்கள்வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்ற பாடல் பதிவாகியிருந்தது.

என் மரியாதைக்குரிய பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்கள் எழுதிய "அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் கருணையால்" எனத் துவங்கும் பாடல்தான் எனது முதல் இஸ்லாமியப் பாடலாக இசைத்தட்டில் வெளிவந்தது. அந்தப் பாடலுக்கு விளக்கம் அளித்தவர்கள் என் மரியாதைக்குரிய அண்ணன் மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் பாகவி எம்.ஏ., பி.ஹெச்.டி. அவர்கள். அதுவும் அந்த இசைத் தட்டில் பதிவாகியுள்ளது.

பாடகராகத் திகழவேண்டுமென்ற எண்ணம் எப்படி உருவானது?

நான் நாகூரில் ஐந்தாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒவ்வொரு நாள் காலையிலும் இறைவணக்கம் பாடப்படும். எல்லா மாணவர்களும் அதில் கலந்துகொள்ளவேண்டும்.

ஒரு நாள் பள்ளித் தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்று, உடனே பாடினேன்;

"வேலை உதவி தாளை தருவீர்
வேந்தர் யா முஹம்மதே!
நாளை மஹ்ஷர் மூளை உருகும்
நாளில் உதவும் நாயகா!"

- எனத் துவங்கும் பாடலைப் பாடினேன்.

பேஷ் பேஷ், நன்னா பாடுறடா என்றார் தலைமையாசிரியர். இதுதான் நான் பாடுவதற்கு அடித்தளமாக அமைந்தது. அதோடு, அப்போது நாகூரில் கௌதியா பைத்து சபை உண்டு (இப்போதும் உண்டு) அதிலிருந்து நாங்கள் திருமணங்களுக்கு பைத்து சொல்லச் செல்வோம். அதுதான் எனக்கு நல்ல பயிற்சியைத் தந்த இடமாகும்.

இரவு 10 மணிக்கு மாப்பிள்ளை புறப்படுவார். நீங்களெல்லாம் தயாராயிருங்கள் என்று சங்கத்துப் பிள்ளைகளிடம் சொல்வார்கள். நாங்கள் 10 மணிக்குப் போவோம். மாப்பிள்ளை புறப்பட மாட்டார். அப்போது நாங்கள் சின்னப் பிள்ளைகள் தானே. எனவே, அக்கம் பக்கத்து வீட்டுத் திண்ணைகளில் படுத்துக்கொள்வோம். இரவு 2 மணி அல்லது 3 மணிக்கு எங்களை வந்து எழுப்பி "மாப்பிள்ளை புறப்பட்டுவிட்டார் வாங்க!" என்பார்கள். பிறகு நாங்கள் எழுந்து சென்று பைத்து சொல்லிக்கொண்டு போவோம்.

அதனுடைய விளைவுதான் இன்றும் அதிகாலை 4 மணி 5 மணிக்கு நன்றாகத் தூங்கக்கூடிய என்னை எழுப்பி பாடச் சொன்னாலும் நன்றாகப் பாடுவேன். சாரீரம் தெளிவாகயிருக்கும். பைத்து சபாவில் நான் சிறு வயதில் பெற்ற பயிற்சிதான் இதற்குக் காரணம்.

### உங்கள் முதல் இசைக்கச்சேரி மேடை எது?

தஞ்சை மாவட்டம், தேரழுந்தூரில் 1941 ஆம் ஆண்டு ஒரு திருமண வைபவத்தில் எனது முதல் இசைக் கச்சேரி நடைபெற்றது. வெளியூர் சென்று முறையாக ஒரு தொகை பெற்று நான் கச்சேரி செய்தது தேரழுந்தூரில் தான்.

### திராவிட இயக்கத்தில் உங்கள் ஈடுபாடு இவ்வளவு அழுத்தமாக - நிலையாக அமைய எது காரணம்? அல்லது யார் காரணம்?

திராவிட இயக்கத்துக்கும் முஸ்லிம் லீக்குக்கும் 1939-40லிருந்தே தொடர்பிருந்து வந்தது. இரு இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டு பேசும் கூட்டங்களில் நான் பாடுவேன். திராவிட இயக்கத்தின்பால் எனக்கு அதிக ஈடுபாடு ஏற்பட காரணம், அவர்கள் நமது மார்க்கத்தின் மீது மரியாதை வைத்து தம் சமுதாயத்தைக் கண்ணியப்படுத்தி,

ரஸூலுல்லாஹ்வைப் பெருமையாகப் பேசுவார்கள் மிலாது விழாக்களிலே! இது ஒரு காரணம். இன்னொரு காரணம் தமிழ்ப்பற்று.

**இஸ்லாமிய நெறிகளை வலியுறுத்தும் உங்கள் பாடல்கள் இறைமறுப்புக் கொள்கையுடைய உங்கள் கட்சி தலைவர்களிடம் எப்போதாவது பிரச்சினைகளை ஏற்படுத்தியதுண்டா?**

என்னுடைய கட்சித் தலைவர்களில் பேரறிஞர் அண்ணா அவர்களிலிருந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வரை யாரும் ஒரே இறை கொள்கையை மறுப்பவர்களில்லை. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்றே அவர்கள் சொல்வார்கள். பெரியார் அவர்கள் சாடியிருந்தாலும் அவர்களுடைய கோளாறுகளைச் சாடியிருப்பார்களே தவிர, நம்முடைய மார்க்கத்தை அவர்கள் ஒருபோதும் விமர்சித்ததில்லை. எனவே, அவர்களிடம் எனது பாடல்கள் பிரச்சினைக்குரியனவாக ஒருபோதும் அமைந்ததில்லை.

**“முடித்துக் கொள்ளுவேன் எந்தன் வாழ்வை, ரவ்ளா ஷரீபிலே ரசூல் முன்னிலே!”என்று பாடிய உங்கள் மனம் அந்த ரவ்ளவின் முன் நின்றபோது எப்படியிருந்தது?**

நான் எதிர்பார்த்தேன் அந்த பாக்கியம் கிடைக்கவில்லை.

**உங்களின் உயிரோட்டமான ஆரம்பகாலப் பாடல்களை எழுதிய புலவர் ஆபிதீன் அவர்களுக்குப் பிறகு அந்த அளவுக்குச் சிறப்பாக அமைந்த பாடல் யாருடையதென்று சொல்லலாமா?**

நான் 12 வயதிலிருந்தே பாடுகிறேன். 1985 டிசம்பர் 26ஆம் தேதி எனக்கு 60 வயது பூர்த்தியாகி 61 ஆவது வயதில் காலடி வைத்திருக்கிறேன். எனக்கே கணக்குச் சொல்லத் தெரியாத அளவுக்கு ஆயிரக்கணக்கானப் பாடல்களை இந்தக் காலகட்டத்திற்குள் பாடியிருக்கிறேன். என்னுடைய மரியாதைக்குரிய ஆசிரியர் புலவர் ஆபிதீன் அவர்கள் அப்போது அதிகமான பாடல்களை இயற்றித் தந்திருக்கிறார்கள். 10 மைல் தூரம் சென்று ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதானால் கூட அந்த இடத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தவாறு பஸ்ஸில் வைத்தே அற்புதமானப் பாடலை எழுதித் தந்துவிடுகிற ஆற்றல் அவர்களுக்கிருந்தது.

புலவர் ஆபிதீன் அவர்களுக்குப் பிறகு அதிகமானப் பாடல்களை எழுதித் தருகிறவர் என் அருமை நண்பர் சிக்கல் மதிதாசன் என்று அழைக்கப்படக் கூடிய ஹெச்.ஏ.ரஹீம் அவர்கள், அருமை சகோதரர் சமுதாயக் கவிஞர் தா. காசிம் அவர்களும்,

மரியாதைக்குரிய பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்களும் சிறப்பானப் பாடல்களை எழுதித் தருகிறார்கள்.

**இஸ்லாமியப் பாடல்களைப் பாடும் மேடைக்கும், கட்சி மேடைக்கும் இடையே தாங்கள் காணும் வித்தியாசமென்ன?**

இது பக்தி, உள்ளுணர்வு! அது உணர்ச்சிமயமான வேகம்!

**இதுவரை பாடியுள்ள பாடல்களில் தாங்களே மனம் லயித்து அதில் ஒன்றிப்போன பாடலாக எதையாவது குறிப்பிட முடியுமா?**

பல பிள்ளைகளைப் பெற்ற ஒருவனிடம் உனக்கு எந்தப் பிள்ளையைப் பிடிக்கும் என்று கேட்பது போலிருக்கிறது இந்தக் கேள்வி. என்றாலும் சில பாடல்களைக் குறிப்பிடுகிறேன். என் ஆசிரியர் புலவர் ஆபிதீன் எழுதிய 'ஐயாயிரம் ஆண்டுகள் முன்னே நடந்தது அரபு நாட்டிலோர் தியாகம்' என்ற பாடலும், சமுதாயக் கவிஞர் தா. காசிம் எழுதிய 'மதீனா நகருக்குப் போகவேண்டும்' என்ற பாடலும், எனது அன்புக்கும் மரியாதைக்குமுரிய காலஞ்சென்ற கவிஞர் ஆர். அப்துஸ் ஸலாம் எழுதிய 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்ற பாடலும் அவரே எழுதிய 'மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே ' என்ற பாடலும், பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம்.ஏ. அவர்கள் எழுதிய 'ஹஸ்பீ ரப்பீ ஜல்லல்லாஹ்' என்ற பாடலும் நான் மனம் லயித்துப் பாடுகிற பாடல்கள்.

**உங்கள் கச்சேரிகளில் உங்களால் மறக்க முடியாத கச்சேரியாக அமைந்தது எது?**

பேரறிஞர் அண்ணா அவர்களும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களும் (கன்னியாகுமரி மாவட்டம்) குளச்சல் முஸ்லிம் லீக் மாநாட்டிலே ஒன்றாகயிருந்தபோது,

"நாட்டின் இரு கண்கள்
நல்லவர்கள் போற்றும்
வல்லவர்கள் இவர்கள்
நாட்டின் இரு கண்கள்"

- என்று ஒரு பாடலைப் பாடினேன். அது என்னால் மறக்க முடியாத பாடலாகும். என் ஆசிரியர் எழுதிய கடைசிப் பாடலும் அதுதான்.

# அன்பின் மிகுதியால் அணைத்துக்கொண்டேன்...

**ப. திருமாவேலன்**

தி.மு.க-வில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கரகரப்பான குரலுக்கு அடுத்தபடியாக, உடன்பிறப்புகளை ஈர்க்கும் கம்பீரமான குரல் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களுடையது. எழுபத்தேழு வயதாகும் இந்த இசைமுரசு, வாணியம்பாடித் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுகிறார்.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை வேட்பாளராக அறிவித்த அன்று அறிவாலயத்தில் பார்த்த காட்சி வித்தியாசமானது. ஒருபக்கம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்னொரு பக்கம் பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் இழுத்து அணைத்துக்கொண்டு போஸ் கொடுத்தார் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். எந்த வேட்பாளரும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத காட்சி அது.

ஆம்பூர் பகுதியில் வோட்டு வேட்டையில் இருந்தவரை நிறுத்திப் பேசினோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் இழுத்து அணைத்துக் கொண்டது பற்றிக் கேட்டால், வெட்கப்படுகிறார் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நிறைய தடவை முத்தமே கொடுத்திருக்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், நான்.. மூவருமே ஒரே வயதுக்காரர்கள். அதனால்தான் அன்று அன்பின் மிகுதியால் அணைத்துக் கொண்டேன்" என்கிறார்.

"1940இல் திருவாரூரில் நடந்த நீதிக் கட்சி மாநாட்டில், விமான விபத்தில் இறந்த சர்.பி.டி. பன்னீர்செல்வம் அவர்கள் பற்றி 'பறந்தனையோ பன்னீர்செல்வம்... எம்மைவிட்டு இறந்தனையோ பன்னீர்செல்வம்...' என்ற பாடலைப் பாடினேன். அந்த மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு அறிமுகமானேன்" என்று உணர்ச்சிவசப்படும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், தேர்தலில் போட்டியிடுவது இது இரண்டாவது முறை. 1957இல் போட்டியிட்டவர், இப்போதுதான் தேர்தலில் நிற்கிறார்.

"எழுபத்தேழு வயதில் தேர்தலில் நிற்கிறீர்களே?" என்றால், "வயது எழுபத்தேழு ஆகலாம். ஆனால், இன்றும் முப்பத்தேழு வயது உணர்வு தான். நான்கு மணி நேரம் தொடர்ந்து பாடுகிறேன்" என்கிறார்.

மறைந்த தலைவர் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் நெருங்கிய நண்பர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். "ஸ்டான்லி மருத்துவமனையில் உடல்நலம் பாதிக்கப்பட்டு கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள் படுத்திருந்த கடைசி நான்கு நாட்கள் திரு.அப்துல் சமது அவர்கள், திரு.எஸ்.எம். ஷெரீப் ஆகியோரோடு நானும் இருந்தேன். கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களைப் பார்க்க வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் 'எங்கள் சமுதாயத்துக்காக நீங்கள் செய்த நன்றியை எப்போதும் மறக்க மாட்டேன்' என்றார் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள். இதற்கு உண்மையான சாட்சி நான் தான்" என்கிறார் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். இஸ்லாமியப் பாடல்கள் அதிகம் பாடினாலும் இவரது இசைக்குழுவில் இந்து, கிறிஸ்தவர் என அனைத்து மதத்தவர்களும் இருக்கிறார்கள்.

நன்றி: ஆனந்த விகடன்







# நீங்காத நினைவலைகள்





# வாழ்க ஹனீபா அவர்களுடைய புகழ்...

**முத்தமிழறிஞர் கலைஞர்**

எனது ஆருயிர் நண்பரும், எனது இளமைக் காலத்திலே இருந்து, இந்த இயக்கத்திலே என்னோடு சேர்ந்து வளர்ந்தவருமான என்னுடைய அன்புக்குரிய சகோதரர் இசைமுரசு ஹனீபா அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார். இயக்கத்திலே அவர் பெற்றிருந்த நற்பெயரையும், தமிழக மக்களிடத்திலே அவர் கொண்டிருந்த அன்பையும் எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன். ‘அவரையா இழந்து விட்டோம்’ என்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

“இசைமுரசு” என்று ஒருவரைத்தான் சொல்ல முடியும். அவர்தான் நம்மை விட்டு இன்று பிரிந்து விட்ட, என்னுடைய ஆருயிர் நண்பர் இசைமுரசு ஹனீபா அவர்கள் ஆவார்கள். (பேச முடியாமல் நா தழுதழுக்கிறார்)

அவரை நாம் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் எவ்வளவோ மரியாதையோடும், அன்போடும் நடத்தியிருக்கிறோம். அவரும் அதற்கு நன்றி மறவாமல் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகளை, தன்னுடைய பாடல்கள் மூலமாகவும், இந்த இயக்கத்திற்கு அவர் வழங்கிய தொண்டின் மூலமாகவும் ஆற்றியிருக்கிறார். வாணியம்பாடி தேர்தலில் ஹனீபா அவர்கள் பாடிப் பாடி அந்த மக்களையெல்லாம் கவர்ந்த காட்சியினை அந்த மக்களில் ஒருவனாக நின்று நானும் ரசித்திருக்கிறேன்.

**"நீங்கள் சிந்துகின்ற கண்ணீரோடு என்னுடைய கண்ணீரையும் கலந்து - அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும்..."**



இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை பாராட்டி மகிழ்ந்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எந்த ஒரு மாநாடும் ஹனீபாவினுடைய இசை நிகழ்ச்சி இல்லாமல் தொடங்கியதும் இல்லை. முடிந்ததும் இல்லை. அப்படிப்பட்ட என்னுடைய ஆருயிர் சகோதரரை இழந்து தவிக்கிறேன்.

நீங்கள் சிந்துகின்ற கண்ணீரோடு என்னுடைய கண்ணீரையும் கலந்து - அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும், வாழ வேண்டும். வாழ்க, வாழ்க ஹனீபாவினுடைய புகழ் என்று கூறி, என்னுடைய அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

இன்று அவர் அமைதி பெற்றிருக்கின்றார். அந்த அமைதி தமிழகமெங்கும் தழைத்தோங்க, அவர் பட்டபாடு, ஆற்றிய பணி இவைகளெல்லாம் நமக்குத் துணையாக இருக்கட்டும் என்று கூறி, வாழ்க ஹனீபா அவர்களுடைய புகழ், ஹனீபா அவர்கள் பாடிய அந்தப் பாடல்கள் என்றென்றும் நம்முடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டே இருக்கும், நம்முடைய நெஞ்சங்களிலே எதிரொலித்துக் கொண்டே இருக்கும் என்று கூறி, வாழ்க இசைமுரசு ஹனீபா, வாழ்க, வாழ்க, வாழ்க என்று உரைத்து என்னுடைய இரங்கல் உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

நன்றி : முரசொலி...

# ஆதிக்கக்காரர்களின் செவிப்பறையைக் கிழிக்கும் இடியோசைக் குரலோன்...


முத்தமிழறிஞர் கலைஞர்

அரசியலில் நான் அடியெடுத்து வைத்த சிறு பிராயம் தொட்டு இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களை அறிவேன். அன்று கேட்ட அதே குரல் வளமிக்க குரல்! அனைவரையும் வளைக்கும் குரல்! ஆதிக்கக்காரர்களின் செவிப்பறை கிழிக்கும் இடியோசைக் குரல்!

அந்தக் குரல் மட்டுமா இன்றளவும் நிலைத்து நிற்கிறது? அவர் நெஞ்சில் பதிந்த கொள்கை உறுதியுமன்றோ ஆடாமல் அசையாமல் அப்படியே நிலைத்து நிற்கிறது.

உலகில் இஸ்லாமியப் பெருமக்கள் வாழும் இடமெல்லாம் இவர் குரல் கம்பீரமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. பல்வேறு நாட்டுத் தமிழ் மக்கள் இந்த இசைமுரசம் கேட்டு நரம்பு முறுக்கேறிடத் தலை நிமிர்கின்றனர்.

அளவு கடந்த பாசத்தை என் மீது கொட்டி, பற்றினைக் கழகத்தின் மீது காட்டி, கழகத்தினரின் பேரன்பைப் பரிசாகப் பெற்றுள்ள இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், இஸ்லாமியப் பெரியோரும், இளைஞரும் மகிழ்ந்து போற்றத்தக்க அளவுக்கு நபிகள் நாயகம் அவர்களைப் பற்றிப் பாடியுள்ள பாடல்களை இன்னமும் வானொலி நிலையம் ஒலிபரப்புவதையும், தொலைக்காட்சி நிலையம் நிகழ்ச்சியாக்கிச் சித்தரிப்பதையும் கண்டு, கேட்டுக் களிப்புறாதவர் எவர்?

பால பருவம் முதல் நானும், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களும் இணைந்து நடத்தும் இலட்சியப் பயணம், இடையூறுகளை, சோதனைகளை, வேதனைகளைக் கடந்து தொடர்ந்துகொண்டிருக்கிறது.

# மங்காத குரல்வளம்... சிதையாத தமிழ் உச்சரிப்பு...



பேராசிரியர்
க. அன்பழகன்

எனது பேரன்புக்குரியவரும். நெடுநாளைய நண்பருமான இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், தொடக்க நாள் முதல் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மிகுந்த அன்பும், மதிப்பும் உடையவராய்த் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற முற்பட்டு பல பொறுப்புகளையும் ஏற்று, கழகத்தின் முன்னணியில் நிலைகொண்டுள்ள மூத்த தோழர்களுள் ஒருவராக விளங்குபவர்.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் எழுச்சியூட்டும் அரிமா முழக்கம் ஆர்த்திடாத கழக மாநாடு இல்லை, தலைமைக் கழகத்தின் விழா இல்லை என்று எவரும் பாராட்டிக் கூறுமாறு தமது இசைத் தொண்டினை ஆற்றுபவர் அவர்.

அவரது மங்காத குரல் வளமும், சிதையாத தமிழ் உச்சரிப்பும். பொன்றாத பண் அமைப்பும் அவரது பாடல்களைக் கேட்பவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டிடும் ஆர்வத்தைத் தூண்டுவன.

‘அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா’ என்னும் பாடலை அவர் பாடிக்கேட்டுப் பரவசமுறாதார் இல்லை. அவரைப்போல் அந்தப் பாட்டைப் பாட இன்னொருவர் இல்லை.

அவர், மார்க்கத்தில் இஸ்லாமியர் என்பதில் பெருமை கொள்ளும் உணர்வுடையார்; தெவிட்டாத தேனெனச் சுவைக்கும் ‘தீன்’ நெறி விளக்கப் பாடல்களைப் பண்ணுடன் இசைப்பதில் அவருக்கு இணை இல்லை எனலாம். நாடெங்கும் அந்தப் பாடல்கள் பரவி ஒலிப்பதே அதன் பெருமைக்குச் சான்று.

# இயக்கத்தை எட்டுத் திசைக்கும் கொண்டு சேர்த்த தனி மனித வானொலி...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு.மு.க.ஸ்டாலின்**
அவர்கள்

*‘ஓடி வருகிறான் உதயசூரியன்’...*
*‘அழைக்கின்றார்...அழைக்கின்றார் அண்ணா’...*
*‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே’...*

*‘இறைவனிடம் கையேந்துங்கள்...*
*அவன் இல்லையென்று சொல்லுவதில்லை...’*
*‘வளர்த்தகடா மார்பில் பாய்ந்ததடா...’*

என்று கணீர்க் குரலுடனும், கம்பீர வரிகளுடனும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், திராவிட இயக்கத்தை எட்டுத் திசைக்கும் கொண்டுசேர்த்த ‘தனிமனித வானொலி’.

அவர் குரலுக்கு மனதைப் பறிகொடுத்த அனைவரும் இயக்கத்துக்குள் இணைந்து இரண்டறக் கலந்துவிட்டனர். திராவிட இயக்கம் இருக்கும்வரை அதன் செவிகளில் தூரத்து இடி முழக்கமாக இசைமுரசுவின் எக்காளப் பேரொலி எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் திடீர் மறைவால் எனக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட இழப்பை



விவரிக்க ஏற்ற வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன். சுயமரியாதைப் போராளியாகத் திகழ்ந்த அவர் கழகத்தின் அசையாச் சொத்தாகவும், எண்ணற்ற இளைஞர்களுக்கு ஒரு உந்து சக்தியாகவும் விளங்கியவர்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் 'அழைக்கின்றார் அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா' என்று அவர் இயற்றிய உணர்ச்சி மிகுந்த பாடல் கழகத்திற்கு உத்வேகத்தைக் கொடுத்தது. அதேபோல் 'ஓடிவருகிறான் உதயசூரியன்' என்ற பாடல் இன்றைக்கும் கழகத்தின் சின்னமான உதயசூரியனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறது.

அவரது பாடலின்றி ஒரு தேர்தலைக் கூட திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை சந்தித்ததில்லை என்பதை நினைத்துப் பார்க்கும்போது அவரது மறைவு என் மனதில் வேதனைத் தீயை மூட்டுகிறது. அவரைப் பிரிந்து வாடும் உறவினர்களுக்கும், கழகத் தொண்டர்களுக்கும் ஆறுதல் சொல்ல வார்த்தைகளை இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன்.

# உயிரனைய தோழர்
# நாகூர் ஹனீபா மறைந்தார்!

தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால், 'கணீர்' குரலால், கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கை பரப்பி வந்த தூய பெருந்தொண்டர், 1952 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களைப் பாடி இலட்சக்கணக்கானோர்களை ஈர்த்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர், "இசைமுரசு" எனும் அடை மொழியால், அகிலத்தவரால் அழகுதவழ அழைக்கப்பட்ட நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள், நேற்றிரவு இயற்கை எய்தினார் எனும் துயரமிகு செய்தியினை அறிவிக்க "முரசொலி" பெரிதும் வருந்துகிறது.

தமது அன்புத் தோழர், ஹனீபா அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றொணாது கண்ணீர் உகுத்தார். எவரும் தேற்ற முடியாத வகையில் அழுது வாடினார்.

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள ஹனீபா அவர்களின் இல்லத்திற்கு இரவே சென்று, அன்னாரது திருவுடலுக்கு மலர் மாலை வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

அங்கே திரண்டிருந்த ஏராளமான செய்தியாளர்கள் மத்தியில் ஹனீபா அவர்களின் தொண்டு, தியாகத்தை நினைவு கூர்ந்து, நா தழுதழுக்கப் புகழாரம் சூட்டினார். அன்னாரது உடலுக்குக் கழகப் பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அஞ்சலி செலுத்தினார்.

அண்மைக் காலமாக உடல்நலம் குன்றியிருந்த இசைமுரசு அவர்கள் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள தமது இல்லத்தில் இருந்தவாறு சிகிச்சை பெற்று வந்தார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றியும், முதுமை காரணமாகவும் இரவு இயற்கை எய்தினார். அன்னாரது மனைவி ரோஷன் ஏற்கனவே இறந்து விட்டார்.

ஹனீபா-ரோஷன் இணையருக்கு நௌஷாத் அலி, நாசர் அலி எனும் மகன்களும், நஸீமா பேகம், நூர்ஜகான் பேகம், ஜரீனா பேகம், மும்தாஜ் பேகம் எனும் மகள்களும் உள்ளனர். ஏராளமான பேரன் பேத்திகளும் கண்டு நிறைவான வாழ்வு வாழ்ந்தவர் இசைமுரசு அவர்கள்!

'இசைமுரசு' என்றாலே நம் நினைவுக்கு வருபவர் நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள் ஆவார்.

தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியில் பிணைந்து தொடர்ந்து தொண்டாற்றியவர்களில் நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். அவர் இளம் வயதில் தமது அண்ணன் நடத்திவந்த கார் மெக்கானிக் தொழிலுக்குத் துணையாகப் பணியில் ஈடுபட்டார்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார். அக்காலத்தில் அரைக்கால் சட்டை அணிந்து சுறு சுறுப்புடன் பொதுத் தொண்டு ஆற்றி வந்த பள்ளி மாணவர், கலைஞர் அவர்களால் கவரப்பட்டுத் தொண்டாற்றத் தொடங்கினார்.

மலேசியா நாட்டில் இவரது தந்தை சில ஆண்டுகள் வாழ்ந்து வந்த காலத்தில் தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வந்த 'குடியரசு' வார இதழினை வாங்கி மலேசியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்பாக இடைவெளியில் படித்துப் படித்து இயக்க உணர்வையும், பொது அறிவையும் வளர்த்துக் கொண்டவர்.

திராவிட இயக்கத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவரான அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் கலந்து கொள்ளும் கழகப் பிரச்சார மேடைகளிலும், திருமணக் கூடங்களிலும் தனது கம்பீரக் குரலில் இயக்கப் பாடல்களைப் பாடி தமிழக மக்களை ஈர்க்கத் தொடங்கினார்.

அரும்பெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கலந்து கொண்ட மேடைகளிலெல்லாம் ஹனீபா அவர்கள் கலந்து கொண்டு தமது இனிய குரலில் தமிழ் முழங்கப் பாடி அனைவரையும் ஈர்த்துப் புகழ் ஏணியில் ஏறினார்.

1940-ஆம் ஆண்டு நீதிக்கட்சி மாநாடு திருவாரூரில் நடைபெற்றபோது சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இவர் தமது கம்பீரக் குரலில் பாடியதைக் கேட்ட தலைவர் கலைஞர் அவர்கள் பல மேடைகளில் இவரைப் பாராட்டியதைப் பெருமைப்பட நினைவு கூர்வதுண்டு.

கழகத்தின் தொடக்க காலத் தலைமை நிலையமான ‘அறிவகம்‘ மற்றும் ‘அன்பகம்‘, இன்றைய தலைமை நிலையமான ‘அண்ணா அறிவாலயம்‘ ஆகியவற்றின் தொடக்க விழாக்களில் இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிலும், கழக முப்பெரும் விழாவிலும் தவறாமல் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் நடத்தி வந்தார்.

1952-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தி.மு.கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி இதுகாறும் நடைபெற்ற அனைத்து மாநாடுகளிலும் தனது இசைக்குழுவுடன் கலந்துகொண்டு இயக்கப் பாடல்களைப் பாடி இலட்சக்கணக்கானவர்களை ஈர்த்து வந்தார்.

தமிழகத்தின் பட்டிதொட்டிகள் அனைத்திலும் உள்ள மக்களை தன் இசையால் ஈர்த்த இவர், இலங்கை, சிங்கப்பூர். மலேசியா, ஹாங்காங், துபாய், உம் அல் குவெயின் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் சென்று தமிழ் மற்றும் இஸ்லாமியப் பாடல்களைப் பாடியுள்ளார்.

நாகூர் ஹனீபா அவர்கள் பாடிய “அழைக்கின்றார் அழைக்கின்றார்... அழைக்கின்றார் அண்ணா”... “ஓடி வருகிறான் உதயசூரியன்”... “கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே”... ஆகிய உணர்ச்சியூட்டும் பாடல்கள் நம் இயக்கத்திலுள்ள அனைவரையும் எழுச்சிகொள்ளச் செய்கின்ற பாடல்களாகும்.

இவரது தொண்டினைப் போற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவருக்குச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவி அளித்ததுமின்றி, வக்ஃபு வாரியத் தலைவர் பதவியையும் அளித்துப் பாராட்டியதை தன் வாழ்நாளில் பெருமையாகக் கருதியவர். ஹனீபா அவர்கள்.

நாகை மாவட்டம் நாகூர் நகரில் 1925-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் இருபத்து ஐந்தாம் நாள் முகம்மது இஸ்மாயில் - முகம்மது மரியம் பீவிக்கும் மகனாக இ.எம் ஹனீபா பிறந்தார்.

தமிழக அரசின் “கலைமாமணி விருது”, தி.மு.கழக முப்பெரும் விழாவில் வழங்கிய “கலைஞர் விருது” மதுரை பல்கலைக் கழகம் வழங்கிய “இசைத் தமிழ்ச் செம்மல்” சிறப்புப் பட்டம் போன்ற விருதுகளைப் பெற்ற இவரது சீரிய பணிகள் தொடரவும், துலங்கவும் வாழ்த்தி, முரசொலி அறக்கட்டளை ஹனீபா அவர்களுக்கு, ‘கலைஞர்’ விருது வழங்கிச் சிறப்பித்துப் பெருமைப்படுத்தியதுடன் ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் வழங்கி மகிழ்ந்தது.

- முரசொலி - 9.4.2015...

# மனித நேயத்தை வளர்க்கும் பாலமாக விளங்கும் ஹனீபா பாடல்கள்...


ஜி. கே. மூப்பனார்

இஸ்லாமிய மேடைப் பாடகர்களில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் சொல்லும் அளவுக்கு நாகூர் ஹனீபா அவர்கள் விளங்குகிறார்.

கல்வி அறிவு பெற முடியாத ஏழைக் குடும்பத்திலே பிறந்த அவர், தன் இளமைப் பருவத்தில் அன்றைய இஸ்லாமிய மேடைப் பாடகர்களான காரைக்கால் ஏ.எம். தாவூது போன்றவர்களின் பாடல்களைக் கேட்டு தானும் ஒரு சிறந்த பாடகராக வரவேண்டுமென்ற இலட்சிய வேட்கை கொண்டு இசைப் பயிற்சி எதுவும் பெறாமல் கேள்வி ஞானத்தைக்கொண்டே, இன்று தானே மெட்டமைத்துப் பாடக் கூடிய அளவுக்கு ஹனீபா அவர்கள் திறமை பெற்றிருக்கிறார் என்றால் அதற்கு அவரது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே காரணமாகும்.

ஒழுக்கம், நேர்மை, நாணயம், இஸ்லாமிய நெறி தவறாத வாழ்வு கொண்ட கொள்கையில் உறுதி இவையே ஹனீபாவின் சிறப்பம்சங்களாகும். வயதானாலும், குரல்வளம் மாறாத தன்மை என்பது ஹனீபா அவர்களுக்கு இறைவன் தந்த வரமாகும்.

இசை உலகில் தனக்கெனத் தனியோர் இடம்பெற்றுள்ள ஹனீபா அவர்களின் பாடல்கள் ஒலிக்காத இடமில்லை. மதங்களைக் கடந்து அவர் பாடல்கள் மனித நேயத்தை வளர்க்கும் பாலமாக விளங்குகின்றன.

# தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் சிறப்பான சேவை செய்தவர்...



அ.க.ஆ. அப்துல் சமது சாஹிப்

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். என் இனிய நண்பர், இளமைக்காலம் தொட்டு இஸ்லாமியப் பாடல்களை முழங்கிவரும் அவர், தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஓர் சிறப்பான சேவை செய்தவராக விளங்குகிறார். தமிழ் பேசும் மக்கள் நடமாடும் இடங்களிலெல்லாம் அவர் பாடல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

இஸ்லாத்தைப் பற்றி பொதுவாகவும், அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி சிறப்பாகவும் ஆயிரக்கணக்கான இசைப்பாக்களை அவர் முழங்கியிருக்கிறார். சமுதாயத்திற்கு எழுச்சி தரும் பாடல்களையும் அவர் பாடியிருக்கிறார்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவரது பாடல்கள் தமிழ்நாட்டில் இரவும் பகலும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

அவர் பாடத் தொடங்கிய காலத்திலிருந்து அப்பாடல்களை நான் கேட்டு வருகிறேன். அவருக்கு வயது ஏற ஏற அவருடைய குரலில் ஓர் புதிய மெருகு ஏறி இருப்பதை உணர முடிகிறது. இதற்கு அவர் பெற்ற இஸ்லாமிய சமய ஒழுக்கப் பயிற்சிதான் காரணம் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

# "இசைமுரசு" தமிழர்களின் பொதுச்சொத்து...


எம்.ஏ. லத்தீப் சாஹிப்

தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளில் மட்டும் அல்லாமல், கடல்கடந்து வாழும் தமிழர்களின் குடியிருப்புகளிலும் அன்றாடம் கேட்கப்படும் பொருளாக அண்ணன் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் இசை, தமிழர்களின் பொதுச்சொத்தாக மாறியிருக்கிறது.

சமுதாய மக்கள் எங்கெங்கு கூடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களை அசைந்தாட வைக்கும் இசைத் தேனமுதை ஊட்டுபவர் நாகூர் ஹனீபா அவர்கள் என்றால் அது மிகையாகாது.

அண்ணன் இசைமுரசு ஹனீபா அவர்களின் குரல் ஈடு இணையற்றது. எடுப்பானது. எழுச்சிப் பிழம்பானது. இந்தக் குரல் யாருக்கும் எளிதில் கிட்டாதது. முதுமை நிலையை அடைந்தபோதும் திகைப்பூட்டும் வகையில் 'உச்சஸ்தாயியில்' பாடக்கூடிய ஆற்றல் தெய்வீகமானது.

அவருடைய இசைக்கும் திறனும், கலைநயமும் கிடைக்க அரிதானவை. நடமாடுபவர்களை நிற்க வைக்கவும். நின்று கொண்டிருப்பவர்களை ஆடவைக்கவும் செய்திடும் ஓர் இறைக்கொடையில் பிறந்த நடையாகும்.

# நல்ல பண்பாளர்... பழகுதலுக்கினிய பெரியவர்...



தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

இனிய அன்பர் இசை முரசு நாகூர் ஹனீபா அவர்களுடைய இனிய அருளிசை நம் எல்லோரையும், அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாக விளங்கும் இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்திய அனுபவத்தை எழுத்தால் எழுத இயலுமா?

நல்ல பண்பாளர், பழகுதலுக்கினிய பெரியவர், இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் பலநூறு பிறைகள் கண்டு வாழ்ந்திட அருள் செய்யும்படி இறைவனிடம் மன்றாடி பிரார்த்தனை செய்கின்றோம்.

# காலத்தை வென்று நிற்கும் இசைமுரசின் பாடல்கள்...



வைகோ

சாதி மத எல்லைகளைக் கடந்து, இந்தப் பூபாகத்தில் தமிழர் எங்கிருந்தாலும் நேசிக்கும் குரலுக்குச் சொந்தக்காரர் அண்ணன் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகில் அவர் மணிக்குரல் ஒலிக்காத இல்லமும் இல்லை: உள்ளமும் இல்லை.

கோடிக்கணக்கான குரல்களுக்கு மத்தியிலும் தன்னிகரில்லாத அண்ணன் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் இசைக் குரல் முழக்கத்தைக் கடல்கடந்த நாடுகளில் வாழ்வோரும்கூடக் கச்சிதமாக இனம்கண்டு கொள்வாரெனில், இசைமுரசு அண்ணன் ஹனீபாவின் குரலின் சிறப்பைக் கூற வேறென்ன சான்று வேண்டும்?

குற்றால அருவியைப்போல், வற்றாத பெருநதியைப்போல், முற்றாத தமிழைப்போல் பற்றாளர் திளைத்திருக்கும் இசைமுரசு அண்ணன் நாகூர் ஹனீபா அவர்களின் இசைமுழக்கம் என்றென்றும் நிலைத்திருக்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது,

'தமிழ் மணக்கும் திசை எல்லாம் தேடினேன் உன்னைச் சான்றோர் தம் அவையெல்லாம் அலையவிட்டேன் கண்ணே எங்கே சென்றாய்? எங்களை ஏங்கவிட்டு எங்கே சென்றாய்?' என அவர் பாடியதைக் கேட்கும்போது கண்கள் குளமாகும்.

அவரது இசுலாமியப் பாடல்கள், உலகெங்கிலும் வாழும் இசுலாமிய மார்க்கத்தைச் சேர்ந்த தமிழர்களது இல்லங்களில் நாள்தோறும் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன.

# இசைமுரசு அவர்களின் பாடல்களில் மயங்காதவர்கள் எவரும் இல்லை...


மதுரை ஆதீனம்

14 வயது மாணவனாக இருந்த காலத்திலேயே, தமிழ்மொழி மீதும், தமிழ் இனத்தின் மீதும், எல்லாம் வல்ல இறைவன் மீதும் நமக்கு எந்த அளவுக்குப் பற்றும் பாசமும் ஈடுபாடும் இருந்ததோ, அந்த அளவிற்கு நமது இசைமுரசு அவர்களுடைய பாடலிலும் நமக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. இன்றும் அந்த ஈடுபாடு இருந்து கொண்டேதான் இருக்கிறது. அது என்றும் இருக்கும்.

தமிழ்நாட்டிலே நடைபெற்ற எத்தனையோ மிலாது விழாக்கள், திருமண விழாக்கள், இறை இல்லத் திறப்பு விழாக்களில் கலந்துகொண்டு அருளுரை நிகழ்த்தி, நமது இசைமுரசு அவர்களின் இசை நிகழ்ச்சியிலும் முன்னிலை வகித்துச் சிறப்பித்த காலகட்டங்களை நாமோ, இசைமுரசு அவர்களோ வாழ்வில் மறக்க முடியாது.

இசைமுரசு அவர்களின் பாடல்களை உலகின் பல்வேறுபட்ட பகுதிகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் சிறுவர் முதல் பெரியோர் வரை ஏன்? இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவர் என்ற வேறுபாடுகள் இல்லாமல், ஏக இறைத் தத்துவத்தின் அடிப்படையில் கேட்கின்ற, ரசிக்கின்ற காட்சிகளை நாம் இன்றும் என்றும் காணலாம். அவர் பாடல்களில் மயங்காதவர் எவரும் இல்லை எனத் தெளிவாகக் கூறலாம்.

# இசையில் கம்பீரக் குரல்...


கவிக்கோ அப்துல் ரஹ்மான்

இசைக்கு மென்மையான குரல் இருந்தால்தான் இனிமையாக இருக்கும் என்று சொல்வார்கள். மேடைப் பாடகனாக தனது கம்பீரக் குரலால் அந்த வரையறையை உடைத்து தவிடுபொடியாக்கியவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள்.

அவர் இல்லாமல் தி.மு.க. மாநாடு நடந்ததே இல்லை. தி.மு.க. மாநாடுகளில் ‘அழைக்கின்றார் அழைக்கின்றார். அழைக்கின்றார் அண்ணா’ என்று ஹனீபா உச்சஸ்தாயியில் பாடும்போது ஒவ்வொரு தொண்டனும் கண்ணில் நீர் கோர்க்க கணீர் குரலுக்குள் கரைந்து போய்விடுவான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் பிடித்த இஸ்லாமியர்கள் இருவர். ஒருவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள், இன்னொருவர் நான். முதலில் வஃக்பு வாரியத் தலைவர் பதவியை இசைமுரசு நாகூர் ஹனீபாவுக்கு, அடுத்து எனக்கு விரும்பிக் கொடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். என்னை மூன்றுமுறை சட்டமன்றத் தேர்தலில் நிற்கச்சொல்லி வற்புறுத்தினார் கலைஞர். அரசியல்வாதிக்குரிய குணாதிசயங்கள் எனக்கு இல்லாததால், நாசூக்காகத் தவிர்த்து விட்டேன். என்னைப் போலவே முத்தமிழறிஞர் கலைஞர் பலமுறை கேட்டும் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் மறுத்து வந்தார். கடைசியில் முத்தமிழறிஞர் கலைஞர் ரொம்பவும் வற்புறுத்தவே வாணியம்பாடி இடைத்தேர்தலில் போட்டியிட்டார் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். வாணியம்பாடி சென்று இசைமுரசு நாகூர் ஹனீபாவுடன் பிரச்சாரம் செய்தேன். வாத்தியக் கருவிகளை வைத்துக்கொண்டு கிராமம் கிராமமாகச் சென்றோம். மக்கள் கூட்டம் திரண்டவுடன் பாடல்கள் பாடி வாக்கு கேட்பார் இசைமுரசு நாகூர் ஹனீபா. இந்து, முஸ்லிம் அன்பர்களை ஒன்றாக இணைத்த ஒரே இசைமுரசு ஹனீபா அவர்கள்தான்.

# அய்யாவின் குரல் தனித்துவமானது...



தொல்.
திருமாவளவன்

திராவிட இயக்க வளர்ச்சியில், அய்யா இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

எனது இளமைக் காலத்திலேயே இசைமுரசு ஹனீபா அவர்களின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். ‘அழைக்கின்றார் அண்ணா...’ ‘ஓடிவருகிறான் உதயசூரியன்...’ போன்ற பாடல்களை அந்தக் காலத்தில் கேட்கும்போதெல்லாம் தி.மு.க.வில் போய் சேர்ந்துவிடத் தோன்றும். அந்த அளவுக்கு அவரது பாடல்கள் உணர்வுப்பூர்வமானவை.

இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் குரல் தனித்துவமானது: கம்பீரம் கொண்டது. மற்ற எந்தப் பாடகருக்கும் வாய்க்காத சிறப்புக்குரியது. அவரது காந்தாரக் குரல் கேட்டுக் கிறங்காதார் யாருமில்லை.

# வினோதமான கொடை அவரது குரல்...



கவிஞர்
மனுஷ்யபுத்திரன்

இஸ்லாமிய இசைப் பாடல்களுக்குத் தமிழில் ஒரு வடிவமும் முகமும் கொடுத்தவர் நாகூர் ஹனீபா. கம்பீரமும் உருக்கமும் கொண்ட வினோதமான கொடை அவரது குரல். 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்ற அவரது அழைப்பு இஸ்லாமியர்களை மட்டுமல்ல ஆன்மீகத்திலும் இசையிலும் நாட்டம் கொண்டவரையும் நீண்ட நெடுங்காலமாக வசீகரித்து வந்திருக்கிறது. ஒருவிதத்தில் அவர் இறையியலை மக்களின் மொழியில் கொண்டுசென்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பாடகராக அவரது பங்களிப்பு பிரம்மாண்டமானது. இன்றும் ஒரு இடத்தில் தி.மு.க கூட்டம் நடக்கிறது என்பதன் பிரதான அடையாளமே தமிழகம் முழுக்க தி.மு.க மேடைகளில் ஹனீபாவின் குரல் வியாபித்திருப்பதை நேரில் கேட்டிருக்கிறேன். ஹனீபாவின் குரல் தமிழிசை வாழும்வரை வாழ்ந்துகொண்டிருக்கும்.

# இசைமுரசுக்கு கண் தெரியாதவர் கண்ணீர் அஞ்சலி...

சென்னை தாம்பரத்தில் இருந்து எலெக்ட்ரிக் டிரெயினில் வரும்போது கம்பார்ட்மெண்டில் பாடி யாசகம் பெறும் நபர் ஒருவர் ‘இறைவனிடம் கையேந்துங்கள்’ என்ற பாடலைப் பாடினார். அப்போது ஒரு நபர் ‘இந்தப் பாடலைப் பாடிய நாகூர் ஹனீபா சமீபத்தில் இறந்துபோனார் ‘என்று கூறினார். உடனே அந்தப் பாடகர் ‘ஐயா! நான் தெனமும் எம்.ஜி.ஆர். பாட்டு, சிவாஜி பாட்டு, ரஜினி பாட்டு, கமல் பாட்டுன்னு பாடுவேன்யா!

ஆனாலும் இந்தப் பாடலைப் பாடும்போதுதான் எனக்கு கைநிறைய காசு கெடைக்கும். இந்தப் பாட்டை திரும்பவும் பாடச் சொல்லி கேக்குற ரசிகர்களும் இருக்காங்க’ என்று கண்ணீர் கசியக் கூறினார். கண் தெரியாத அந்த நபர் நாகூர் ஹனீபாவிற்குச் செலுத்தும் கண்ணீர் அஞ்சலியாகவே அது தெரிந்தது.

நன்றி: குமுதம் வார இதழ்...

# பாண்டியனே
# வாங்க என்பார் பாரதிதாசன்...

எப்போது கேட்டாலும் சரி எந்த மதத்தைச் சேர்ந்தவரையும் சிலிர்க்க வைக்கும் 'இறைவனிடம் கையேந்துங்கள்...' எனும் இஸ்லாமியப் பாடல், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையும் கூட உருக வைக்கும் குரல்!

அந்த வெண்கலக் குரலுக்குச் சொந்தக்காரர் நாகூர் அனிபா, தன் 83 வயதிலும் படு சுறுசுறுப்பாக இசை நிகழ்ச்சிகளுக்காக வெளிநாடுகளுக்குப் பறந்தபடியிருக்கிறார். அவர் போகுமிடமெல்லாம் நேயர் விருப்பமாய் ரசிகர்கள் கேட்பது 'இறைவனிடம் கையேந்துங்கள்.

"நான் பாடிய பாடல்களிலேயே பெரிய ஹிட்டான 'இறைவனிடம் கையேந்துங்கள்' பாடலை 1975-ம் வருசம் ஹெச்.எம்.வி.க்காக பாடினேன். கவிஞர் அப்துல் சலாம் எழுதின பாடலுக்கு டி.ஆர். பாப்பா உயிரோட்டமா இசையமைச்சாரு.

ஒரு முறை குடவாசலுக்குச் சொற்பொழிவுக்காக கிருபானந்த வாரியார் சுவாமி வந்திருந்தார். அவர் பேசின சொற்பொழிவுல இந்தப் பாட்டைப் பத்தி மட்டுமே இரண்டு மணி நேரம் பேசியிருக்கார். வாரியாருக்கே உரிய சிலேடையோடு பேசி பாட்டுக்குப் புது விளக்கமும் சொன்னார்.

அதாவது, 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்பது மூன்று மதத்தினருக்கும் பொதுவானது. இஸ்லாமியர் கையேந்தி தொழுவார்கள். இந்துக்கள் கைகூப்பி வணங்குவார்கள், கிறிஸ்தவர்கள் நெஞ்சில் கை வைத்து வணங்குவார்கள். இப்படி மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கு' என்று பேசினதை மறக்க முடியாது.

இன்னொரு விஷயம் இளையராஜா சினிமாவுக்கு வர்றதுக்கு முன்னால முதன் முதல்ல இசையமைத்த பாட்டை நான் பாடியிருக்கேன்" என்று வியக்க வைத்தார் அனிபா.

"அப்ப பாவலர் வரதராஜனோட இளையராஜா இருந்தார். 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு எங்கள் திருநபியிடம் போய்ச் சொல்லு...' என்ற அந்தப் பாட்டும் பெரிய ஹிட்டாச்சு. இப்பவும் என் மேல தனிப் பிரியத்தோட இருக்காரு இளையராஜா.

பாரதிதாசன் பாடலை முதன் முதலில் பாடும் பாக்கியமும் எனக்குக் கிடைச்சது. அவரோட 'பாண்டியன் தொட்டிலிலே...' என்கிற அந்தப் பாடலைக் கேட்டுட்டு பாரதிதாசனே வியந்து பாராட்டினார். நான் அவரைப் பார்க்கப் போகும் போதெல்லாம் 'பாண்டியனே வாங்க.. அந்தப் பாடலைக் கொஞ்சம் பாடுங்க' என்று பாடச் சொல்லிக் கேட்பார்.

என்னோட குருநாதர் புலவர் ஆபிதீன். இவரோட பாடலைத்தான் நான் அதிகமா பாடியிருக்கிறேன். இப்போ சமீபமா அபிவை தாஜிதீனோட பாட்டை அதிகம் பாடிட்டிருக்கேன்.

என்னுடைய பெரும்பாலான பாட்டு அந்தக் காலத்துல ஹெச்.எம்.வி.யில தான் ரெக்கார்ட் ஆச்சு அப்ப ஏவி.எம்.தான் வெளியிட்டாங்க. ஒரு முறை ஏ.வி.எம்.ல ரெக்கார்டிங். நான் கொஞ்சம் லேட்டா போனேன்.

அங்க எனக்காக காத்திருந்த வாத்தியக் கலைஞர்களோட ஏ.வி.எம். மெய்யப்ப செட்டியாரும் இருந்தார்.

'பாடகர்களுக்கு எப்போதும் தாமதம் கூடாது. மற்ற கலைஞர்கள் காத்திட்டு இருப்பாங்கல்ல' என்றார். நான் 'எனக்கு வாகன வசதி இல்லை பஸ்ஸுலதான் வரணும்' என்றேன். சீக்கிரமே வண்டி வாங்குங்க'ன்னார். அவர் சொன்ன கொஞ்ச நாள்லயே அம்பாசிடர் கார் வாங்கிட்டேன். முதன் முதல்ல கார் வாங்கறதுக்கு ஏ.வி.எம். ஒரு உந்து சக்தியா இருந்தாரு.

1960-இல் விருகம்பாக்கத்தில் நடந்த மாநாட்டில் அண்ணா பேசும்போது, "இப்போ தமிழர்களுக்குத் தேவை உணர்ச்சி. அந்த உணர்ச்சி கிளர்ச்சியான உணர்ச்சியா இருக்கக்

கூடாது. அப்படிப்பட்ட உணர்ச்சி அனிபாவோட பாட்டில்தான் இருக்கு. அதனால அனிபா பாட்டு தமிழர்களுக்குத் தேவை' என்றார். இது எனக்குக் கிடைத்த பெரிய கௌரவம்" என்று சிலிர்க்கிறார்.

இந்தப் பக்திப் பாட்டுக்கு அப்புறம் அதிகமான ரெக்கார்ட் விற்பனையான பாட்டு, "அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா" என்கிற பாட்டுதான். ஒருமுறை மாநாட்டு மேடையில பாடி முடிச்சதும் முதல்ல கை தட்டி பாராட்டுனது ராஜாஜிதான். காயிதே மில்லத்தும் அண்ணாவும் கட்டிப்பிடிச்சுக்கிட்டாங்க.

1974இல் மேல்சபை உறுப்பினராக என்னை நியமிச்சாங்க. நான் அப்போ கலைஞர்கிட்ட 'எனக்குப் பேச வராது. என்னைப்போய் மேல் சபை உறுப்பினராக்குறீங்களே'ன்னேன். பேச்சு வராதுன்னா பாடுங்களேன்'னார். அதேபோல பட்ஜெட்ல சிறப்பான விசயங்களையெல்லாம் பாட்டா எழுதி சபையில் பாடிட்டேன்.

அப்போ சபையில் உறுப்பினரா கே.பி.சுந்தராம்பாள், டி.கே.சண்முகம் இருந்தாங்க. தலைவாராயிருந்த சி.பி.சிற்றரசு கூட, 'மேல்சபை கூடும்போது, அனிபாவோட பாட்டோடு தொடங்கலாமே'ன்னார். இந்த அளவிற்கான என் வாழ்க்கை வெற்றிக்கு எனது மனைவி ரோசன் பேகம் ஒரு முக்கியக் காரணம்" என்கிறார்.

இவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக மூன்று முறை சிறை சென்றவரும் கூட.

நாகூருக்கு முதல்முதலில் போன் வந்தது ஹனிபாவின் வீட்டுக்குத் தான். அவரது தொலைபேசி எண் ஒன்று'. இஸ்லாமிய இசை உலகில் அவருக்கான இடத்தைப் போலவே!

- நன்றி: குங்குமம் வார இதழ்...

# கடைசி நிமிடத்திற்காக புன்னகையுடன் காத்திருந்தார்!

இசைமுரசு ஹனீபாவின் மூத்த மகன்
நௌஷாத் அலி

‘அண்ணல் நபி பொன்முகத்தை கண்கள் தேடுதே - அந்த ஆவலினால் காவலின்றி இதயம் வாடுதே’ என்கிற அந்த காந்தக் குரல் நெஞ்சுக்குள் இழையோடி இதயத்தைத் துயரத்தால் அறுக்கிறது.

எங்கள் வாப்பா பொன்முகத்தைக் கண்கள் தேடுதே என மனம் ரணமாகி ரகசியமாய் அரற்றுகிறது.

‘புஷ்டங்களின் மகரத்தமாம் மதினப் புழுதியில் - நான்

உருளவேண்டும் புரளவேண்டும் போலிருக்குதே’ - என அருளில் நனைந்து உருகும் அந்தக் குரல் உயிரைக் கரைக்கிறது.

புஷ்பங்களின் மகரந்தமாம் உங்கள் மடியிலே - நான் உருளவேண்டும் புரளவேண்டும் போலிருக்குதே என வேதனை நெஞ்சம், அப்பாவை நினைத்து தனக்குத் தானே விம்முகிறது.

உலகை மயக்கிய எங்கள் இதயத்தின் இசை, ஊமையாகிவிட்டது.

கலகலப்பும் கம்பீரமும் மிக்க அந்தக் குரலைத் தொலைத்துவிட்டோம். எங்கள் நிம்மதி பறிபோய் விட்டது. எங்கள் பொக்கிஷத்தைக் காலன் அள்ளிக் கொண்டு போய்விட்டான். வீடு வெறுமையாகிவிட்டது.

எங்கள் உணர்வோடும் உயிரோடும் பின்னிப் பிணைந்திருந்த எங்கள் அப்பாவைக் காலன் அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

அப்பாவின் ஹம்மிங் கலந்து எங்கள் இல்லத்தை நிறைத்திருந்த அந்த ஈரக் காற்று, இப்போது துக்கப்பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது.




மனம் பல்வேறு நினைவுச் சுழலில் சிக்கித் தத்தளிக்கிறது.

அப்பாவால் சுழன்றது எங்கள் உலகம்.

அப்பா, தோற்றத்தில் கம்பீரமானவர், ஒழுக்கத்தில் கண்டிப்பானவர், கொள்கைகளில் கறாரானவர். அன்பில் தாராளமானவர். உபசரிப்பில் விசாலமானவர், குரலால் புகழ்பெற்று எங்கள் குடும்பத்தையே வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தவர்.

அப்பாவுக்கு ஏற்ற துணையாக அம்மா ரோஷனம் பீவி அமைந்தார். இவர் தாய்மையின் கருணை மிகுந்தவர். அவர்களுக்கு நான், தம்பி நாசர் மற்றும் நான்கு பெண் பிள்ளைகள். அன்பான குடும்பம். அப்பாவை பெரும்பாலும் மேடைகளிலும் இசைத் தட்டுகளிலும் கேசட்டுகளிலும்தான் இளம்வயதில் நாங்கள் பார்க்கமுடியும். நிகழ்ச்சி நிகழ்ச்சி என்று பறந்து கொண்டே இருப்பார்.

என் தம்பி நாசர், நாகூரில் இருக்கும் ஹனீபா லாட்ஜை கவனித்துக்கொண்டிருக்கிறார். எனக்கு அஷ்ரப் என்ற மகனும், பென்சீர் என்ற மகளும் இருக்கிறார்கள்.

அப்பாவை மைய அச்சாகக் கொண்டு சுழன்று கொண்டிருந்தது எங்கள் உலகம். நிசப்தத்தில் இருக்கப் பழகிக்கொண்டார். அப்பாவுக்கு வயது 97. ஆனால் பல இடங்களில் 91 என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவரது குரலின் கம்பீரம் இறுதி நிமிடம்வரை அப்படியே இருந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி தப்ரயாலும் பாதுஷா பள்ளிவாசலில்தான் அவர் கடைசியாக மேடை ஏறினார். அங்கு தன் இசை நிகழ்ச்சிக்கு அவராகவே முற்றுப்புள்ளி வைத்தார். அதன்பின் எவ்வளவோ அழைப்புகள் வந்தும் அவர் போகவில்லை. காரணம் தொடர்ந்து உரத்த குரலில் பாடியதால், அவரது செவி நரம்புகள் சேதமுற்றன. கேட்கும் திறனை அவரது செவிகள் இழந்துவிட்டன.

கருவியைப் பொருத்திக்கொண்டால் அவரால் எல்லாவற்றையும் செவிமெடுக்க முடியும். ஆனாலும் கடைசிக் காலத்தில் இயற்கையான நிசப்தத்திலேயே இருக்க பழகிக்கொண்டார்.

அப்படியிருந்தும், எதிராளியின் உதட்டசைவை வைத்தே என்ன பேசுகிறார்கள் என்பதை துல்லியமாகக் கணித்துவிடுவார். அதனால் அவருக்குக் காதுகேளாமை ஒரு பிரச்சினையாக இருந்ததில்லை. முழுக்க முழுக்க இறைநினைவிலேயே கடைசி நாட்களில் தன்னை வைத்துக்கொண்டார்.

எவரிடமும் கையேந்தாதவர்!

அப்பா, அல்லாமீது அளவுகடந்த நம்பிக்கை உடையவர், இறைநெறியைப் பாடிப் பரப்புவதில் எந்த அளவுக்கு அவர் ஈடுபாடு கொண்டிருந்தாரோ, அதே அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பரப்புவதிலும் மிகுந்த ஆர்வம்கொண்டிருந்தார்.

'இறைவனிடம் கையேந்துங்கள்' என்று அவர் பாடிவந்தபோதும், அவர் அந்த இறைவனிடமும் அவர் எதையும் எதிர்பார்த்ததில்லை கட்சியிடமும் அவர் எதையும் எதிர்பார்த்துக் காத்திருந்ததில்லை.

எனினும் இறைவன் புகழையும் நிம்மதியையும் கடைசிவரை அவருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தான். கட்சியும் கடைசிவரை அவருக்குரிய மரியாதையை வாரிவாரிக் கொடுத்தது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் அன்பையும் பாசத்தையும் வெகுவாகப் பெற்றிருந்தார் அப்பா. கழகமே அவரது சுவாசம்.

ராசய்யா என்னும் இசை ராஜா!

தகுதி உடையவர்களைக் கண்டால் மதித்துப் போற்றவும் அப்பா தவறமாட்டார்.

அப்பா மேல்சபை உறுப்பினராக இருந்த நேரம். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கியிருந்த அப்பாவைத் தேடி ஒரு இளைஞர் வந்தார். வந்தவர், 'என் பெயர் ராசைய்யா நான் நல்லா மெட்டுப் போடுவேன். உங்கள் பாடலுக்கு மெட்டுப்போட விரும்புகிறேன்' என்றார் பவ்யமாக.

அப்பாவோ, அப்படியென்றால் நீங்கள் என் பாடல்களை வெளியிடும் ஹெச்.எம்.வி. நிறுவனத்தைத் தான் அணுகவேண்டும் என்றார் வந்தவரோ, முதலில் அங்குதான் சென்றேன் உங்களைச் சந்தித்துவிட்டு வரச்சொன்னார்கள் என்றார். இரண்டொரு பாடல்களையும் ராசய்யா பாடிக்காட்டினார். அப்பாவின் முகத்தில் பிரகாசம்.

சரி, ஒரு பாடல் எழுதி மெட்டு போடப்பட்டுவிட்டது. வழக்கம்போல் இன்பராஜ் போட்ட மெட்டு. அது பதிவாக வேண்டியதுதான் பாக்கி. அதற்கு நீங்கள் பின்னணி இசை அமையுங்கள் என்றார்.

அப்படி அன்றைய ராசையா என்கிற இளையராஜாவால் பின்னணி இசை அமைக்கப்பட்டு பதிவான பாடல்தான் 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு. எங்கள் திரு. நபியிடம் போய்ச் சொல்லு சலாம் சொல்லு' என்ற பாடல். இதைக்கேட்டு மகிழ்ந்த அப்பா 'தென்றல் காற்றே ஒரு கணம் நிற்பதுபோல் பண்ணிவிட்டீர்களே. அபாரமான ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது. எங்கேயோ போகப்போகிறீர்கள்' என மனதாரப் பாராட்டினார்.

கொஞ்ச நாளில் மீண்டும் வந்த இளையராஜா, 'நீங்கள் கச்சேரிக்குச் சிங்கப்பூர், மலேசியாவெல்லாம் போகப்போகிறீர்களாமே?' என்னையும் அழைத்துச் செல்லுங்கள் என்றார்.

'அப்பாவோ, ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட இசைக் கலைஞர்களை வேண்டாம் என்று எப்படிச் சொல்வது. அடுத்த முறை உங்களைக் கண்டிப்பாக அழைத்துச்செல்கிறேன்' என்றார்.

தொடர் இசை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, அப்பா தமிழகம் வந்தபோது, எங்கு பார்த்தாலும் 'மச்சானைப் பார்த்தீங்களா மலைவாழத் தோப்புக்குள்ளே' பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. அந்த ஒரே படம், இளையராஜாவை இசைராஜாவாக ஆக்கிவிட்டது. அப்பாவின் கணிப்பு இளையராஜாவிடம் வீண்போகவில்லை. எப்போது அப்பாவைச் சந்திக்க நேர்ந்தாலும் இளையராஜா ஆசி வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

### கலைஞரும் அப்பாவும்

என் மகன் அஷ்ரப்பின் திருமணம். கலைஞரிடம் தேதியெல்லாம் கேட்கவில்லை. எல்லாம் ஏற்பாடு செய்து பத்திரிகையும் அடித்தாகிவிட்டது.

அப்பாவால் அலையமுடியாது என்பதால், நான் கொண்டுபோய் கலைஞரிடம் அழைப்பிதழ் கொடுத்தேன் அப்பாவின் நலனை விசாரித்த கலைஞர் கண்டிப்பாக திருமணத்திற்கு வருவேன் என்று சொல்லியனுப்பினார்.

திருமண நாளன்று தி.மு.க. வேட்பாளர்களுக்கான நேர்காணல் கலைஞர் தலைமையில் அறிவாலயத்தில் நடந்துகொண்டிருந்தது. அதனால் அவர் வரமாட்டார் என்று எல்லாரும் நினைத்திருந்தோம். ஆனால் கலைஞரோ ஒரு ஆளை அனுப்பி கொஞ்சம் தாமதமாக வருவேன் என தகவல் அனுப்பினார்.

மண நிகழ்வுகள் நடந்த நிலையில் கலைஞரின் கார் மண்டப வாசலுக்கு வருகிறது. உடனே மணமக்களை மண்டப முகப்பில் இருந்த கலைஞரிடம் அழைத்துச் செல்கிறோம். மண்டபத்திற்குள் இருந்த அப்பாவிடம், 'தலைவர் வந்திருக்கிறார்' என்று சைகையால் சொன்னோம். அப்பாவோ இருந்தால் என்ன? வரட்டும். அவர் வந்து வாழ்த்தித்தானே ஆகனும் என்று சொல்லிவிட்டார். கலைஞரும் அப்பா எங்கே என்று கேட்டார். மண்டபத்திற்கு உள்ளே இருக்கிறார் என்றோம். இருக்கட்டும். அவருக்கும் வயசாச்சுல்ல என்றபடி மணமக்களை மனதார வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார் கலைஞர்.

அப்பா மண்டப வாசலுக்கு வந்து வரவேற்கவில்லை என்ற ஆதங்கமோ எதிர்பார்ப்போ கலைஞரிடம் இல்லை. கலைஞர் உள்ளேவந்து தன்னைப் பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் அப்பாவிடமும் இல்லை. இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டதால்தான் அப்படி நடந்துகொண்டனர்.

### கடைசி நிமிடங்கள்

சென்னை கோட்டூர்புரம் வீட்டில்தான் அப்பாவின் கடைசிக்காலம் நகர்ந்தது. முதல் தளத்தில் வீடு. லிஃப்ட் வசதியெல்லாம் இல்லை, எனினும் அப்பா கோலை ஊன்றி, அவராகவே மாடியேறிவிடுவார். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் என் மகனான தன் பேரனுடன் வெளியே காரில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வருவார்.

8.4.2015 புதன்கிழமை வழக்கம்போல் விடிந்தது. அந்த நாளின் அர்த்த அடர்த்தி அப்போது எங்களுக்குப் புரியவில்லை.

காலை கண்விழித்த அப்பா வழக்கம் போல் கிரீன் டீ குடித்தார். காலை 9.30க்கு தோசை சாப்பிட்டார். பகல் முழுக்க ஓய்வு. மதியம் அவருக்கு அவர் விரும்பிச் சாப்பிடும் நெய்சோறும் மட்டன் குழம்பும் பரிமாறப்பட்டது. ருசித்துச் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருந்துவிட்டு படுத்துக்கொண்டார். பின்னர் உறங்க ஆரம்பித்தார். இரவு 7 மணிக்கு கண் விழித்தார். அவருக்கு கிரீன் டீ கொடுத்தோம். அப்போது அவருக்கு மூச்சிரைப்பு தெரிந்தது. தொண்டையில் ஒருவித கர்புர் சத்தம். தக்பீர் சொல்லிவிட்டு கைகளை நெஞ்சில் கட்டுவதுபோல் கைகளை மார்பின் குறுக்கே அப்பா கட்டிக் கொண்டார். அல்லாஹ் என்றபடியே, தன் வலது கையின் கலீமா விரலை (மோதிர விரல்) உயர்த்தினார். இதற்கு இறைவன் ஒருவனே என்பது பொருள். அவரது உதட்டில் ஒருவித புன்னகை இருந்தது. அந்த விரல் மெல்ல நடுங்கியது. உடனே என் மகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, பக்கத்துத் தெருவில் இருக்கும் எங்கள் குடும்ப டாக்டர் முபாரக்கை அழைக்க ஓடினேன்.

வேகமாக வந்தார் டாக்டர். அப்பா கண்களை மூடியிருந்தார். மனதை ஏதோ பிசைந்தது. நாடித் துடிப்பைக் கவனித்த டாக்டர், அப்பாவின் இமைகளைத் திறந்து டார்ச் லைட்டை அடித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கிவிட்டார்.

நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் பதறினோம். பொங்கிவந்த கண்ணீரோடு அப்பாவின் உடலைத் தொட்டுப்பார்த்தேன். உடல் சூடாக இருந்தது. உயிர்த்துடிப்பு இருக்கலாம் என்ற பேராசையில் பக்கத்தில் இருக்கும் பூங்கோதை டாக்டரை அழைத்து வந்தேன். பரிசோதித்துப் பார்த்த அவர், சகாப்தம் முடிந்துவிட்டது என்று கூறிவிட்டுக் கிளம்பினார்.

ஒருசில நிமிடங்களில் எல்லாம் முடிந்ததை எங்களால் நம்பமுடியவில்லை. கடைசி வரை அவரிடம் மரணம் பற்றிய பயம் இல்லை, அவர் தனது கடைசி நிமிடத்திற்காகப் புன்னகையுடனே காத்திருந்தார். அவரிடம் எந்தவித பதட்டமும் இல்லை. ஆனால், நாங்கள்தான் உறைந்துபோனோம்.

‘நெளசாத்’ என அறைக்குள் இருந்து அழைக்கும் அந்த கம்பீரக் குரல் இனி கேட்கவே கேட்காதா? மனதிற்குள் கலவரம் சூழ்ந்தது. இடிந்து உட்கார்ந்த நாங்கள், சுதாரித்துக்கொண்டு முதலில் கலைஞருக்குத் தகவல் கொடுத்தோம்.

### கலைஞரின் கண்ணீர் அஞ்சலி!

தகவலைக் கேட்டுப் பதறிய கலைஞர் உடனடியாக எங்கள் இல்லத்திற்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறார் என தகவல் வந்தது. உடலைச் சுத்தம்செய்து உடைமாற்ற வேண்டியிருப்பதால், கொஞ்சம் தாமதமாக வரச் சொல்லுங்கள் என நாங்கள் சொன்னபோது, கலைஞர் கிளம்பிவிட்டார் என்றனர்.

கலைஞரால் மாடி ஏற முடியாது என்பதால், உடனடியாக அப்பாவின் உடலைக் கட்டிலோடு கீழ்தளத்திற்குக் கொண்டுவந்தோம். கலைஞர் கண்ணீர் மல்க, குரல் தழுதழுக்க தன் 75 ஆண்டுகால நண்பருக்கு அஞ்சலி செலுத்தினார். அஞ்சலி செலுத்த வந்த தளபதி ஸ்டாலின், அப்பாவின் உடல் நாகூர் புறப்படும்வரை நள்ளிரவு கடந்தும் எங்களோடு இருந்தார்.

### அப்பாவின் நிராசை!

ஒன்றரை மாதங்களுக்குமுன், அறிவாலயத்தில் இருந்து திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் எனக்குப் போன் பண்ணினார். 'தலைவர் அப்பாவை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்' என்றார். கலைஞருக்கு அப்படி ஏன் திடீரென்று தோன்றியது என்று தெரியவில்லை. அப்போது நான் வெளியூரில் இருந்தேன். அதோடு அப்பாவை மாடியிலிருந்து கீழே அழைத்துக்கொண்டு வருவது சிரமம். கலைஞரையும் வீட்டின் மாடிக்கு அழைத்துச் செல்வதும் இயலாத காரியம். எனவே பிறகு பார்க்கலாம் என்று இருந்து விட்டேன். 'தலைவர் உங்களைப் பார்க்கவேண்டும் என்று சொன்னாராம்' என்று அப்பாவிடம் சொன்னோம். 'அடடா என்னாலும் அவரைப்போய்ப் பார்க்க முடியவில்லையே' என்ற அப்பா அன்றிலிருந்து சரியாகத் தூங்கவில்லை. கலைஞரைப் பார்க்கவேண்டும் என்ற ஆசைதான் அவரது கடைசி ஆசையாக இருந்தது.

எங்கள் குடும்பத்திற்கு அப்பாவின் இசைவாரிசாக இருப்பவன் நான் ஒருவன் மட்டும்தான். நானும் அப்பாவைப்போலவே இஸ்லாத்திற்காகவும் கழகத்திற்காகவும் என் இசையை அர்ப்பணித்துக் கொள்கிறேன்.

அப்பா மறையவில்லை. தன் குரலால் காற்றில் எங்கெங்கோ இழைந்துகொண்டே இருக்கிறார்.

- நன்றி உதயம் மாத இதழ்...



# நிலைத்து நிற்கும்
# நிழற் படங்கள்





பேரறிஞர் அண்ணா மற்றும்
தனது மனைவி
குழந்தைகளுடன் இசைமுரசு...



இல்ல விழாவில் பேரறிஞர்
அண்ணா அவர்களுடன்...




கைத்தறி துணிகள்
விற்பனையில்
பேரறிஞர் அண்ணா
அவர்களுடன்...



சட்டமன்ற மேலவை உறுப்பினராக பதவியேற்பு நிகழ்வில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன்...



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நட்பின் ஆழத்தால் ஆரத்தழுவுதல்...



மேலவை உறுப்பினராக பதவியேற்று கையெழுத்திடும் ஹனீபா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன்...



முத்தமிழறிஞர் கலைஞர்,
பேராசிரியர் அன்பழகன்,
துரைமுருகன் ஆகியோருடன்...



முத்தமிழறிஞர் கலைஞர்,
அப்துல் சமது,
அப்துல் லத்தீப் மற்றும்
ஆற்காடு வீராசாமி
ஆகியோருடன்...



தமது மகள் திருமணத்தின்போது
முத்தமிழறிஞர் கலைஞர்,
ஆற்காடு வீராசாமி
மற்றும் துரைமுருகன்
ஆகியோருடன்...



முத்தமிழறிஞர் கலைஞர்
மற்றும் அப்துல் லத்தீப்
அவர்களுடன் ஒரு
நிகழ்வில்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மற்றும் டி.ஆர்.பாலு அவர்களுடன்...



முத்தமிழறிஞர்
கலைஞர் மற்றும்
பேராசிரியர்
அன்பழகன்
அவர்களுடன்
தோளோடு தோளாக...



முத்தமிழறிஞர்
கலைஞர் அவர்களின்
பாசப் பிணைப்பில்...



கலைமாமணி
விருது வழங்கும் விழாவில்
மேதகு ஆளுநர்
டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர்
அவர்களுடன்...



அண்ணா இல்லம்
திறப்பு விழாவில் அறிஞர்
அண்ணா அவர்களுடன்...



திருச்சியில் நடைபெற்ற
மாநில மாநாட்டில்
முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களுடன்...



தேர்தல் பரப்புரையில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன்...





தனது மகள் திருமண விழாவின் போது
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன்...




தமிழ்நாடு
வக்ப் வாரிய தலைவராக
பணியாற்றியபோது...



மனைவி ரோஷன் பேகம்
அவர்களுடன்...



இளைய மகன்
குடும்பத்தினருடன்...



இளமைக்கால
நண்பர்களுடன்...



கண்ணியத் தென்றல்
காயிதே மில்லத் அவர்களுடன்...



டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்
அவர்களுடன்...



கண்ணியத் தென்றல்
காயிதே மில்லத் அவர்களின்
மகன் தாவூத் மியாகான்
அவர்களுடன்...



திரு. வி.வி. கிரி
அவர்களுடன்...



இசைமுரசு அவர்கள்
முத்தமிழறிஞர் கலைஞர்
மற்றும் குழுவினருடன்...



திரு. எம்.ஜி.ஆர்.
அவர்களுடன்...



முத்தமிழறிஞர்
கலைஞர் அவர்களுடன்
பேரணியில் ஓரணி...



திரு. வை.கோ.
அவர்களுடன்...



இசைப்புயல்
ஏ.ஆர்.ரகுமான்
அவர்களுடன்...



பாடலாசிரியர்
புலவர் ஆபிதீன்
அவர்களுடன்...



புனித ஹஜ்
பயணத்தின்போது...



புனித ஹஜ்
பயணத்தின்போது
உறவினர்கள் வழியனுப்பிய
தருணம்...



தென்றல் காற்று ஒன்று
கம்பீர குரலில்
பாடியபோது...



இனிய குரலில்
இறைவனை நினைத்து
பாடும்போது ...



தேனினும்
இனிய குரல்
மேடையில்
தவழ்ந்தபோது...







தனது குரலில் வெளியான அம்மையப்பன் திரைப்படம்.....

குலேபகாவலி திரைப்படத்தில் பதிவு பெற்ற தனது குரல்...




எல்லோரும் கொண்டாடுவோம் பாடல் இடம்பெற்ற பாவமன்னிப்பு திரைப்படம்...

# கட்டுரைகள்





# நூற்றாண்டு நாயகர் ஹனீபா 'இசை முரசு' மட்டுமல்ல முத்தமிழ் முரசும் கூட



ஆசிரியர் கி. வீரமணி
தலைவர்
திராவிடர் கழகம்

நூற்றாண்டு விழா நாயகர் 'இசை முரசு' நாகூர் இ.எம். ஹனீபா அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் பெருமைக்குரிய இதழான "தமிழரசு" நூற்றாண்டு நினைவு மலர் வெளியிடுவது மிகவும் பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்!

தமிழ்நாட்டில், இராமநாதபுரம், வெளிப்பட்டினத்தில் பிறந்து, நாகூர் நகரில் வளர்ந்த அவர், உலகப் புகழ்பெற்ற இசைவாணராக - இன்னிசை மழையாகக் கேட்போர் காதுகளில் தேன் வந்து பாயும் கம்பீர முழக்க முத்திரைகளாக ஈர்த்து - 'வசியமாக்கும்' இன்னிசை மழைமூலம் திகழ்ந்து -வரலாறு படைத்தவர் 'இசை முரசு' அவர்கள்!

இசைக்கு மயங்காதவர் எவரோ! இசை என்றால் 'புகழ்' என்றும் பொருள் உண்டு.

அவரது வெண்கல நாதக் குரல், நாட்டின் பட்டிதொட்டிகள், கிராமம், நகரம் என்ற வேறுபாடுகளை நாட்டு எல்லைகளைக் கடந்தும், அவரது இசையை ரசித்துச் சுவைத்த, சுவைக்கும் மக்கள் கோடானு கோடி!



*1946* ஆம் ஆண்டு முதலே - சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே, திராவிட மாணவர்களின் பிரச்சாரப் பணிகட்கு கோடை விடுமுறை பிரச்சாரத் திட்டத்தைத் தந்தை பெரியார் -பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, மாவட்டங்களுக்கு அனுப்பும் பழக்க முறையையொட்டி, தஞ்சை மாவட்டத்திற்கு *13* வயது மாணவனாக இருந்த நான், பிரச்சார அணியில் சேர்க்கப்பட்டு, ஏறத்தாழ *3, 4* வாரங்கள், நாளும் பல ஊர்களில் பிரச்சாரம் செய்வோம் திராவிடர் இயக்கக் கொள்கைகளை!

கடலூரில் எனது ஆசிரியர் ஆ. திராவிடமணி, என்னைப் போன்ற மாணவர்களைப் பயிற்சிக் களத்தில் இறக்கி, மேடையில் ஏறச்செய்து, தயாரித்த உரையை - மனப்பாடம் செய்து, பேசச் செய்வதுபோல், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களது பாடல்களையும் ராகத்துடன் பாடும் பயிற்சியையும் எங்களுக்குத் தக்கோர் மூலம் தந்ததினால், அந்நாளில் ஊர்களில், மேடைப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக முதலில் பாடல் பாடி, கூட்டத்தைச் சேர்ப்பது வழக்கம்.

ஒலிபெருக்கியே கிடையாது முக்கியப் பேச்சாளர்கள், பெருங்கூட்டம் வரும் தலைவர்களது கூட்டங்களுக்கு மட்டும் "ஒலி பெருக்கி உண்டு" என்று துண்டறிக்கையில் போடுவார்கள்!

அப்படி தஞ்சை மாவட்ட மாணவர் கோடை விடுமுறை சுற்றுப்பயணத்தின்போது, திருவாரூர், நாகை, நாகூர் போன்ற ஊர்களில் கூட்டங்கள் நடந்தபோது, முத்தமிழறிஞர்-அன்றைய "மாணவர் திருவாரூர் மு.கருணாநிதி" (கலைஞர்) அவர்கள் எங்களோடு பரப்புரையில் இணைந்து சிறப்புப் பேச்சாளராகப் பேசிய கூட்டங்களில், கூட்டம் தொடங்குமுன் கொள்கைப் பாடல்களைத் தனது இளமை நிறைந்த கம்பீரக் குரலில் பாடுவார் திரு. ஹனீபா அவர்கள். வாழ்நாள் இறுதிவரை அவரது குரல் வளம் மாறாது, சீரிளமைத் திறத்தோடு, அதேபோல், வெண்கல நாத இசை முழக்கமாகவே அமைந்தது அவருக்கே உரிய தனிச்சிறப்பு

எனது "இயக்க வரலாறாகிய, தன் வரலாறு" என்ற "அய்யாவின் அடிச்சுவட்டில்" (முதல் பாகம்) நூலில், அந்நாள் 'குடிஅரசு' வார ஏட்டில் ஒரு செய்தி இதோ;

*1.5.1945*-இல் திருவாரூரில் நடைபெற்ற தென் மண்டல திராவிட மாணவர் மாநாட்டில், திராவிட நாட்டுப் படத்தை தோழர் திராவிடமணி பி.ஏ. அவர்கள் திறந்து

வைத்தார். மாநாடு, பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாயிற்று. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின், "இளமையின் எழுச்சி" பற்றி தோழர் தவமணிராசன் அவர்களும், "போர்க்களம் நோக்கி" என்பது பற்றி தோழர் வீரமணி அவர்களும், "வாள் முனையில்" என்ற தலைப்பில் தோழர் இளம்வழுதி அவர்களும், "முரசொலி கேட்டு" என்ற தலைப்பில் தோழர் (ஏ.பி.) ஜனார்த்தனம் பி.ஏ. அவர்களும், கருத்துத் துலங்க, வீரங் கொப்பளிக்க விரிவுரையாற்றினார்கள்" என்று 'குடிஅரசு' இதழில் வெளிவந்துள்ளது.

இன்னிசை பாடியோர் (மாநாட்டில்) பட்டியலில் இடம் பெறும் ஹனீபா யார் தெரியுமா? இன்று இசை உலகில் தனக்கென தனித்த ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ள இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா அவர்கள்தான்! நமது இயக்க மேடைகளில் பாடுவது அப்போதே அவரது தொடக்கம் எனலாம்.

பாடியவர் பட்டியலில் அவரும் நானும்! நினைத்தால் சிரிப்பு வருகிறதல்லவா? கழகப் பாடல்களை எல்லா மேடைகளிலும் இசையுடன் பாடுவதும் அன்று வழக்கம்?

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் எங்களைப் போன்ற பல தோழர்கள் அவரது ஈர்ப்பான இசைச் சுவைஞர்கள்.

நூற்றாண்டு நாயகர் “இசை முரசு” அவர்கள் முத்திரைப் பதித்த வித்தகப் பாடகர் என்பதைவிட, பழகுதற்குப் பாங்கான எளிய, இனிய மனிதர் - அனைவரையும் நேசித்தவர் அவர்.

இஸ்லாமிய நெறிப்பாடல்களையும் பாடியவர். திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் பாடல்கள் அவரிடம் இறுதிவரை ஊற்றுபோல - வற்றாது வந்து கொண்டே இருந்தது!

அவரைப் பாராட்டி, ‘இசை முரசு’ என்பதையும் தாண்டி, ‘முத்தமிழ் முரசு’ என்றேகூட அழைக்கலாம், அந்த அளவு முத்தமிழிலும் அவர் தனிச் சிறப்புடன் சாதனை படைத்தவர்.

அவரை, முதலமைச்சர் கலைஞர், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், கலையில் வல்லவர் என்ற உயர் தகுதி காரணமாக அமர்த்திப் பெருமைப்படுத்தியது - இசைத்தமிழ் பெற்ற பெருமைகளில் ஒன்றாகும்!

நனி நட்பிற்குரிய நாயகராக இருந்தவர் திராவிட இயக்கக் கொள்கையில் சற்றும் சமரசமில்லாது இறுதி மூச்சடங்கும்வரை தனது இசைப் பயணத்தை, பாதை மாறாப் பயணமாக்கிய சீரியர் அவர்.

அவர் மறையவில்லை: மறையமாட்டார்; ‘இசைக்கு ஏது வயதும், முதுமையும், மரணமும்’?

என்றும் ‘இசைமுரசு’ ஒலித்து, இனி வரும் தலைமுறையையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைக்கும்!

# காலமெல்லாம் இசையாக ஒலிக்கும் இசை முரசு!



பேராசிரியர்
கே.எம். காதர்
மொகிதீன்

தங்கத் தமிழகத்தில் பொங்கு புகழ் பெற்று வரும் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நாள்தோறும் நாட்டு மக்கள் ஏற்றுப் போற்றும் படியான நற்காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிறார். அதனால் எல்லாத் துறைகளைச் சேர்ந்தவர்களும் இதயப் பூர்வமான வாழ்த்துக்களை நாள்தோறும் தெரிவித்து மகிழ்ந்து வருகிறார்கள். நாள் இருக்கும் நாளெல்லாம் திராவிட மாடல் நல்லாட்சி தமிழ்நாட்டில் தொடர வேண்டும் என்றும், இந்த நல்லாட்சியின் பேறும் புகழும் பாரதம் முழுவதிலும் மட்டுமின்றி, பாருலகம் முழுவதிலும் சென்று, நிலைத்து நின்று, உலகத்தவர்களின் இதயங்களை வென்று நிற்க வேண்டும் என்றும் நல்லோர்கள் வேண்டி நிற்கின்றனர்.

சங்கம் வளர்த்த தமிழ் இயல், இசை, நாடகம் என்று வளர்ந்து, இன்றைக்கு அறிவியல் என விரிந்து, ஆன்மீகம் எனவும் பல்கி,

உலக மக்களின் இதயங்களை ஈர்த்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழில் பரிமாணங்கள் அனைத்தையும் உன்னிப்பாகத் தெரிந்து ஒவ்வொரு துறையை வளர்ப்பதோடு, அந்த ஒவ்வொரு துறையிலும் உச்சியில் நின்று உன்னதமான வரலாற்றைப் படைத்திருக்கும் வல்லவர்களை - தமிழுக்குப் பாடுபட்டு உழைத்த நல்லவர்களைக் கண்டறிந்து அவர்களின் பேரும் புகழும் நிலைக்கும் வகையில் அரசு விழாக்களை நடத்தி மேன்மக்களின் மேலான சாதனைகளைச் சரித்திரமாக்கி வருகிறார். இந்த வகையில் நாகூர் இசை முரசு இ.எம்.ஹனீபா அண்ணன் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக அறிவித்து பெருமை சேர்த்திருக்கும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் தமிழ் முஸ்லிம் சமுதாயம் நன்றிப் பெருக்கை அள்ளி தெளித்து பேருவகை கொள்கிறது என்பதே உண்மையாகும். ஸ்ரீலங்கா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளில் உள்ள முஸ்லிம்கள் தமிழக அரசு அறிவித்த இசை முரசு நூற்றாண்டு விழாவுக்கு நன்றி தெரிவித்து பெரிய அளவில் விழாக்கள் நடத்திச் சிறப்பித்து இருக்கிறார்கள்.

அண்ணன் இசை முரசு இ.எம்.நாகூர் ஹனீபா அவர்களுடன் நீண்ட காலமாக தொடர்பு கொண்டிருந்தவன் என்னும் தனி பார்வை எனக்குரியதாகும். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராக திகழ்ந்தவர் சிராஜ் மில்லத் ஆ. கா. அப்துல் ஸமது சாஹிப், மறுமலர்ச்சி வார இதழ் ஆசிரியர் நாவலர் ஏ.எம். யூசுப் சாஹிப் ஆகியோர் நாகூர் ஹனீபா அவர்களின் இளமைக் காலத்துத் தோழர்களாகவும் விளங்கியவர்கள் ஆவார்கள். ஆரம்ப காலத்தில் ஹனீபா அண்ணன் பாடத் தொடங்கிய வரலாறு புதுமையானதாகும். கடல் ஓரங்களில் வாழும் சமுதாய மக்கள் தங்கள் குடும்பத் திருமணங்களை பின்னிரவு நேரங்களில் தாம் நடத்துவர். இது கடல் பொங்கும் நேரம் என்று கூறி, அந்த நேரத்தில் தான் திருமணம் நடத்துவது என்பது நலமாக இருந்தது. பின்னிரவு நேரம் வரும்போது தூங்கிக் கொண்டிருப்போரை எழுப்பிவிடுவர். பின்னர் திருமணம் நடைபெறும் அந்தச் சமயத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் அப்துஸ் ஸமது, யூசுப், ஹனீபா அவர்களை எழுப்பி விடுவார்கள். ஹனீபா அவர்கள் மணமக்களை வாழ்த்தி பாடுவார். இதுதான் ஹனீபா அண்ணன் அவர்களின் ஆரம்ப கால வரலாறு என அவரே கூறியிருக்கிறார். நாடக புலவர் ஆபிதீன் எழுதிக் கொடுத்த பாடல்களை ஆரம்ப காலத்தில் பாடி, பாடி ஹனீபா அவர்கள் மக்கள் மத்தியில் பாராட்டுப் பெற்று வந்தார். பிற்காலத்தில் கூறை நாடு அப்துஸ் ஸலாம், நாகூர் சலீம், கவிஞர் காசிம், நாகூர் சாதிக், அபிவை தாதீன், பாவலர் நல்லதம்பி, வீரைரமான் போன்ற கவிஞர்கள் எழுதிய பாடல்கள் பலவாகும். கூத்தாநல்லூர் அஹமது என்னும் சாரண பாஸ்கரன் எழுதிய பல பாடல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும்.



கல்லக்குடி ரயில் மறியல் போராட்டத்தில் சிறைக்குச் சென்ற முத்துவேல் கருணாநிதி அவர்களுக்கு 1954-இல் திருவாரூரில் பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்த போது, கவிஞர் சாரண பாஸ்கரன் எழுதிய 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!' என்னும் பாடல் மேடையில் அரங்கேற்றப்பட்டது. இசை முரசு இந்தப் பாடலை காலமெல்லாம் பாடி வந்தார். தமிழக மக்கள் எல்லோரும் அறிந்த பாடலாக இது விளங்கியது.

இசைமுரசு அவர்கள் பாடிய "இறைவனிடம் கையேந்துங்கள்! அவன் இல்லையென்று சொல்லுவதில்லை" என்னும் பாடல் எல்லாச் சமுதாய மக்களாலும் போற்றப்பட்ட பாடலாகும். இந்தப் பாடலை எழுதியவர் மயிலாடுதுறை கூறை நாடு அல் பத்தாஹ் ஜவுளிக் கடை முதலாளியாகத் திகழ்ந்த கவிஞர் அப்துஸ் ஸலாம் ஆவார்கள். 1982ஆம் ஆண்டு என நினைவு. தலைவர் சிராஜுல் மில்லத் ஆ.கா. அப்துஸ் ஸமத் சாஹிப் அவர்களுடன் நாங்களும் கவிஞர் அப்துல் ஸ்லாம் அவர்களைப் பார்க்கப் போனோம். இவருக்கு இரணியா ஆபரேஷன் நடந்திருந்தது. ஜவுளிக்கடை முதலாளி - கவிஞர் - தனது உடல் நிலையில் வலி தாங்க முடியாமல் இறைவனிடம் கோரிக்கை வைத்துப் பாடிய பாடல் இது! இது மதுரை ஆதீனம் மனப்பாடம் செய்து பாடி வந்திருக்கிறார். மயிலாப்பூர் கோவில் பாடகர் இந்தப் பாடலை தங்களின் கோயில் விழாவிலேயே பாடியிருக்கிறார். பல கிராமங்களில் இந்தப் பாடல் கேசட்டுகளாக எல்லா சமுதாய மக்கள் வீடுகளிலும் பாடப்படுவதைப் பார்த்திருக்கிறோம்.

ஒரு சமயம் இளையான்குடி புதூரில், நடந்த மிலாது விழாவில் கலந்து கொண்டு பேருந்தில் திரும்பி வரும்போது, ஆனந்தூர் ஏரிக்கரையில் பேருந்து டயர் வெடித்து விட்டது. மழை தூரிக் கொண்டிருந்தது. பேருந்து டிரைவர், நடத்துனர் வெடித்த டயரை மாற்றிக் கொண்டிருக்கும்போது, மழையில் நனையாமல் இருக்க தூரத்தில் இருந்த ஒரு குடிசைக்குச் சென்றோம். அங்கே ஒருவர் தேநீர் கடை வைத்திருந்தார். இரவு இரண்டு மணி இருக்கும் அங்கே நாங்கள் நுழைந்தபோது, நாகூர் ஹனீபா அண்ணன் அவர்கள்

பாடிய இறைவனிடம் கையேந்துங்கள் என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அவரிடம் கேட்டபோது, இந்தப் பாடல் எங்களின் வாழ்வுக்குப் பெரும் உதவியாக இருக்கிறது என்றும் இரவில் இந்தப் பாடலை தான் கேஸட்டில் கேட்பது எங்களுக்கு பழக்கமாகிவிட்டது என்றார்கள். எல்லாருடைய மனங்களையும் ஈர்க்கும் படியான பாடல் இது என்பதை உணரலாம்.

கூத்தாநல்லூர் சாரண பாஸ்கரன் அவர்கள் எழுதிய பாடலை நாகூர் ஹனீபா அண்ணன் எல்லா கச்சேரிகளிலும் பாடுவார். தர்காகளில் நடக்கும் சந்தன கூடு விழாக்கள், மிலாது விழா மேடைகள் போன்றவற்றில் சாரண பாஸ்கரின் இந்தப் பாடல் மிகவும் பிரபலமானது.

*அல்லாவைத் தவிர யார்க்கும் அஞ்சிடாத சிங்கங்காள்!*
*அண்ணல் நபி வழியில் அணிவகுத்துச் செல்லுங்கள்!*
*நிமிர்ந்து நில்லுங்கள்! சொல்லுங்கள் தக்பீர் சொல்லுங்கள்!*
*தாரே தக்பீர் ! அல்லா அக்பர்!*
*முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!*

இந்தப் பாடலை ஹனீபா அண்ணன் பாடும் போது தக்பீர் சொல்லுங்கள் என்று அவர் சொன்னவுடன் கூட்டத்தில் இருக்கும் பல்லாயிரம் பேரும் அல்லா அக்பர் என்பார்கள்!

ஹனீபா அண்ணன் அவர்கள் 'பென்ஸ் கார்' வாங்கி இருந்தார். கேள்விப்பட்டிருந்தேன். அந்தக் காரில் பயணம் செய்தது கிடையாது. சேலத்தில் நடந்த மிலாது விழாவில் பங்கேற்க வந்த ஹனீபா அண்ணன் அவர்கள் பென்ஸ் காரில் வந்திருந்தார். விழா முடிந்த பிறகு அவருடன் அந்த காரில் திருச்சி வரை சென்றேன். வழி நெடுக பல பேச்சுக்கள் அண்ணே! உங்கள் வரலாற்றைத் தொகுத்து எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்றேன். நீங்கள் பிறந்த தேதி தெரியுமா? என்று ஆரம்பித்தேன். "என் தாயார் அடிக்கடி கூறுவார் என்று சொல்லிவிட்டுச் சொன்னார்". அத்தா நீ காயிதே ஆஜம் பிறந்த நாளில் தான் பிறந்தாய் என்று எனது தாயார் கூறினார் என்றார். காயிதே ஆஜம் முகம்மதுஅலி ஜின்னா சாஹிப் அவர்கள் டிசம்பர் 25 கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்தார் என்பது அப்போது இந்திய முஸ்லிம் ஆண், பெண் அனைவருக்கும் தெரிந்து இருந்தது என்பது விளங்கியது.

இசை முரசு நாகூர் ஹனீபா அண்ணன் அவர்களின் இசைப் பாடல்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவருடன் வாழ்ந்த நபித் தோழர்கள், நான்கு கலீபாக்கள், நபியவர்களின் குடும்பத்தினர், நபியவர்களின் போதனைகள்,

வாழ்க்கை முறை, திருக்குர்ஆன், நபி மொழிகள் பற்றிய விளக்கங்கள் எல்லாமும் இசை முரசு பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அவரின் பாடல்களைக் கேட்டவர்கள் இஸ்லாம் மார்க்கம் பற்றியும், முஸ்லிம்களின் சரித்திரம் பற்றியும், நபியவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்தும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையிலேயே திளைத்தார்கள். மிகப்பெரிய பாட போதனையே அவரின் பாடல்கள் மூலம் மக்கள் மத்தியில் நடந்தது. சகோதர சமுதாய மக்களும் இஸ்லாம் பற்றியும் இஸ்லாமிய சரித்திரம் குறித்தும் பாராட்டும் வகையில் அவரின் பாடல்கள் திகழ்ந்தன.

சமுதாயங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் சௌஜன்யமும் சுமுகமும் நீடித்து நிலைப்பதற்கு வழிகாட்டும் வகையில் அவர் பாடிய இசை பாடல்கள் அமைந்திருந்தன. தமிழ்நாட்டில் வாழும் எல்லா சமுதாயத்தவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வும் நம்பிக்கையும் சமுதாயத்தில் வேரூன்ற இசைமுரசின் பாடல்கள் பயன்பட்டன.

இசை முரசு அவர்களின் குரல் வளம் என்பது அற்புதமானது. தமிழ் எழுத்துக்களை இசைமுரசு உச்சரித்தது போல வேறு யாரும் உச்சரித்து இருக்கிறார்களா ? என்பது ஆய்வு செய்வதற்கு உரியதாகும். 'பகல்' என்பதில் உள்ள 'ல்' என்னும் எழுத்தை உச்சரித்து, பின்னர் பூக்கள் என்பதில் உள்ள 'ள்' என்னும் எழுத்தை உச்சரித்துக் காட்டும் போது, ஹனீபா அண்ணன் அவர்களின் உச்சரிப்பு அதன் ஒலி நயம் கேட்பவர்களின் காதுகளில் மட்டுமல்ல, அவர்களின் மனங்களிலும் அச்சடித்தது போலப் பதிந்திருக்கும். 'ல்' க்கும் 'ள்' க்கும் உள்ள உச்சரிப்பு வேறுபாட்டை இசைமுரசு அவர்களின் உச்சரிப்பில் கண்டது போல, வேறெங்கும் கண்டிருக்க முடியாது என்பதை அவர் காலத்தில் கேட்டிருந்த யாரும் ஒப்புக் கொள்வார்கள். அதனை துல்லியமாக எழுத்தின் உச்சரிப்பை அவரிடம் தான் முதலில் பார்த்தோம், கேட்டோம், சுவைத்தோம், ரசித்தோம். அந்த இசை ஒலி எங்கோ மறைந்திருக்கிறது!

அவர் பாடி இருக்கும் இசைத் தட்டுகளில் வரும் ஒலியைக் கேட்கும் போது அவரே கண்முன் வந்து ஒலிப்பது போல உணர்கிறோம்! காலமெல்லாம் இசையாக ஒலிக்கும் இசை முரசு என்றும் வாழ்கிறார்! வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் காட்டிய நல்லிணக்கணம்! எங்கும் சூழ்க இறையருள்! இறைவனிடம் கையேந்துங்கள்! அவன் இல்லை என்று சொல்லுவதில்லை.

# சமத்துவமும் சமூகநீதியுமே ஹனீபாவின் இலக்கு!



ஆளூர் ஷா நவாஸ்
சட்டமன்ற உறுப்பினர்

தமிழ்நாட்டின் அரசியல் களத்திலும் பண்பாட்டுத் தளத்திலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஆளுமை இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா. அவர் பாடிய “அழைக்கின்றார் அண்ணா” பாடல் அரசியல் களத்திலும், “இறைவனிடம் கையேந்துங்கள்” பாடல் பண்பாட்டுத் தளத்திலும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இந்தி எதிர்ப்பு அறப்போருக்காக எழுச்சிப் பாட்டுப் பாடினார். சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் மறைந்த போது இரங்கல் பாட்டுப் பாடினார். பெரியாரை, அண்ணாவை, காயிதே மில்லத்தை, கலைஞரை, எம்.ஜி.ஆரை போற்றிப் பாடினார். நெசவாளர் துயர் நீக்கப் போராடிப் பாடினார். திராவிட இனப் பகையை எதிர்த்து துணிந்து பாடினார். தி.மு.கவின் சாதனைகளை வியந்து பாடினார். தி.மு.கவுக்குத் துரோகம் செய்தவர்களைத் தோலுரித்துப் பாடினார். சமய நல்லிணக்கத்திற்காக உருகிப் பாடினார். மக்கள் ஒற்றுமைக்காக உரக்கப் பாடினார். மாநில உரிமைக்காக ஓங்கிப் பாடினார். ஊரெங்கும் பாடினார். உலகெங்கும் பாடினார்.



விடலைப் பருவம் முதல் வயது முதிர்வு வரைப் பாடினார். ஓயாமல் பாடிப் பாடியே எங்கும் நிறைந்த அவர், “நான் கச்சேரிக்காரன் அல்ல; கட்சிக்காரன்” என்று கூறினார். இதுவே அவரின் கொள்கை உறுதிக்குச் சான்று.

இயற்கையாகவே தமக்கு அமைந்த எடுப்பான குரலையும், சங்கீதம் கற்காமல் இயல்பிலேயே தமக்கு அமைந்த பாடும் திறனையும், தனிப்பட்ட முறையில் பொருள் ஈட்டுவதற்கும் புகழ் ஈட்டுவதற்கும் சுருக்கிக் கொள்ளாமல், கொள்கைக்காகவும் கட்சிக்காகவும் அர்ப்பணித்தார். அதனாலேயே நிலைத்த புகழைப் பெற்றார்.

இறை இசைப் பாடியவர் திரை இசையிலும் பாடினார். முஸ்லிம் லீக்கில் வாய்ப்பிருந்தும் தி.மு.கவில் பயணித்தார். அல்லாவைத் தொழுது கொண்டே பெரியாரின் தொண்டரானார். தோற்போம் என்று தெரிந்தே 1957 பொதுத் தேர்தலிலும், 2002 வாணியம்பாடி இடைத்தேர்தலிலும் துணிந்து போட்டியிட்டார். கழகத்தில் உள்ள கலைஞர்களுக்குப் போராட்டங்களில் பங்கேற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட போதும், போராடிச் சிறை சென்றார். அருமை நண்பர் எம்.ஜி.ஆர் விரும்பி அழைத்த போதும் அ.தி.மு.கவுக்கு செல்ல மறுத்தார். “எனக்கு ஒரே இறைவன்; ஒரே தலைவன்” என்று முரசறைந்தார்.

அவர் தி.மு.கவுக்காக மட்டுமே பாடினார். ஆனால், எல்லாக் கட்சியினரும் அவர் பாடல்களை ரசித்தார்கள். அவர் இஸ்லாமிய கீதங்களை மட்டுமே பாடினார். ஆனால், எல்லாச் சமயத்தினரும் அவரைக் கொண்டாடினார்கள். மறைந்த மதுரை ஆதீனம் அருணகிரிநாதருக்கும் ஹனீபாவுக்கும் இடையிலான நட்பும் பிணைப்பும் அதற்குச் சான்று.

ஹனீபாவின் பாடல்கள் மார்க்க நெறி ஊட்டியதே தவிர; மதவெறி ஊட்டவில்லை. இன உரிமை, மொழி உரிமை முழங்கியதே தவிர, இனவாதம், மொழிவாதம் முழங்கவில்லை. சமத்துவமும் சமூகநீதியுமே, ஹனீபாவின் இலக்கு. இறுதி மூச்சுவரை அதில் உறுதி கொண்டிருந்தார். வாழ்க அவர் புகழ்!

# இசைவானில் பறந்த தனித்த பறவை!



**எழுத்தாளர் இமையம்**
துணைத் தலைவர்
தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
மாநில ஆணையம்

1977இல் நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது எனக்கு வயது 12. எங்களுடைய ஊருக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக மாலை வேளையில் ஒரு அம்பாசிடர் கார் வந்தது. காருக்குள் இருந்தவர் துண்டு பிரசுரங்களை அள்ளி வீசிக்கொண்டேபோனார். துண்டு பிரசுரங்களைப் பொறுக்குவதற்காகத் தெருப் பிள்ளைகள் எல்லாம் காரைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். அப்படி ஓடிய சிறுவர்களில் நானும் ஒருவன். யார் அதிகத் துண்டு பிரசுரங்களைப் பொறுக்கிச் சேர்க்கிறார்கள் என்பதில் சிறுவர்களான எங்களுக்குள் ஒரு போட்டி. அதனால், காரைப் பின்தொடர்ந்து தெருத்தெருவாக ஓடிக்கொண்டிருந்தோம். அப்படி ஓடிக்கொண்டிருக்கும்போது காரில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியில், 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என்ற பாடலைப் போட்டார்கள். அந்தக் கணத்தில்தான் கலைஞர் எனக்குள் வந்தார். தி.மு.க. எனக்குள் வந்தது.



'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே', 'அண்ணா அழைக்கின்றார்', போன்ற பாடல்கள், சினிமாப் பாடல்களைப் போன்றில்லாமல் வேறாக இருந்தன. பாடிய குரலும் வேறாக இருந்தது. 12 வயதில் கேட்ட அந்தப் பாடல்களை இன்றும் கேட்கிறேன். பாடல் வரிகளும் பாடிய குரலும் எனக்குள் அப்படியேதான் இருக்கின்றன. எத்தனை முறை கேட்டாலும் சலிப்பு ஏற்பட்டதில்லை. ஏற்படாது. யார் எழுதிய வரிகள், யார் பாடியது, எதற்காகப் பாடியது என்பது எதுவும் எனக்கு அப்போது தெரியாது, ஆனால், பாடல் வரிகளும் பாடிய குரலும் என் இரத்தத்தோடு கலந்துவிட்டது. சினிமாப் பாடல்களைப் பாடும் குரல்கள் போன்று இல்லை, கிராமத்துக் குரல். ஒருவிதத்தில் நாட்டுப்புறத்தான் குரல். கட்டைக்குரல். அதே நேரத்தில் தனித்த குரல். அந்தக் குரலில், 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என்ற பாடலை எப்போது கேட்டாலும் அப்போது எனக்குள் ஒரு மாற்றம் நிகழும். அந்த மாற்றத்தை, அந்த சந்தோஷத்தை வார்த்தைகளினால் சொல்லிவிட முடியாது.

தி.மு.க.வைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும், நீதிக்கட்சி, திராவிடர் இயக்கம் பற்றியும் பாடல்களை யார் எழுதியது, எந்தச் சூழலில் எழுதப்பட்டது, பாடியது யார், எதற்காக, யாருக்காகப் பாடினார் என்பதெல்லாம் பின்னாளில்தான் நான் தெரிந்துகொண்டேன். மாபெரும் அரசியல், சமுதாய இயக்கத்திற்கு ஒரு பாடகர் தன் குரலின் வழியாக செய்த பங்களிப்பு காலம் முழுவதும் நிற்பதாக மாறிவிட்டது. இது காலம் சொல்லும் வரலாறு.

பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும், தி.மு.க.வையும் கடைநிலை மனிதன் வரை இசையின் மூலம் கொண்டுபோய் சேர்த்த பெருமை, 'இசை முரசு' என்று கலைஞரால் போற்றப்பட்ட நாகூர் ஹனீபாவுக்கு மட்டுமே உண்டு. இப்படியொரு பாடகர் இந்தியாவில் எந்தக் கட்சியிலும் இல்லை.

1935இல் மலேசியாவில் வேலை பார்த்துவந்த தனது தந்தைக்காக 'சைபுல் இஸ்லாம்', 'தாருல் இஸ்லாம்', 'குடி அரசு' போன்ற இதழ்களை வாங்கி அனுப்புகிற வேலையைப் பார்த்தவர் ஹனீபா. முதலில் தான் படித்துவிட்டு, பிறகு தந்தைக்கு அனுப்பினார். அந்தப் படிப்பால், பத்திரிகைகளால்தான் திராவிட இயக்கப் பற்றாளரானார். 12, 13 வயதிலேயே

கலைஞருடன் இணைந்து திருவாரூர் ஓடம்போக்கி நதியில் நடந்த திராவிட இயக்கக் கூட்டங்களுக்குச் சென்றவர். கடைசிவரை கலைஞரை, 'மு.க.' என்று உரிமையுடன் அழைத்தவர். 1939இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தவர். 13 வயது என்பதால் காவல் துறையினர் சிறைக்கு அனுப்பவில்லை.

மாற்றுக்கட்சிக்கு அழைத்தபோது, "எனக்கு ஒரே இறைவன். ஒரே கட்சி. ஒரே தலைவன் (கலைஞர்)" என்று சொன்னவர். கடைசிவரை தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாதவர். அதனால்தான் 'கற்பு நெறி தவறாதவர்' என்று கலைஞர் புகழ்ந்தார். அதோடு நிற்காமல், "ஆடாமல் அசையாமல், அலை பாயாமல், சபலத்திற்கு ஆட்படாமல், எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன், தொடேன் என்கிற உறுதிமிக்க இசைவாணர்" என்று எழுதினார்.

1940 முதல் 2006ஆம் ஆண்டுவரை, அதாவது 65 ஆண்டுகள் ஓயாமல் பல்லாயிரக்கணக்கான இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். எந்த இசைக் கலைஞரும் செய்யாத சாதனை, 'ஹனீபாவுக்கு ஒலிபெருக்கியே தேவையில்லை' என்று பெரியார் புகழ்ந்துள்ளார். ஹனீபா எந்த இசை நிகழ்ச்சிக்குச் சென்றாலும் ஒத்திகை பார்க்கிற பழக்கமற்றவர். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பாடுகின்ற வல்லமை படைத்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்ட சமயத்தில் பாரதிதாசன் எழுதிய, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!', 'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்', 'பாண்டியர் ஊஞ்சலில் பாடி வளர்ந்த பைந்தமிழ்' ஆகிய பாடல்களை ஹனீபா பாடினார். பாரதிதாசனின் பாடல் வரிகளும் ஹனீபாவின் குரலும் இந்தி எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்குப் பெரும் ஆற்றலை தந்தது. எழுச்சியைத் தந்தது. பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். அதைவிடவும் தமிழ் மொழி மீது அதிகப் பற்றுக்கொண்டவர். அதனால்தான், 'தமிழ் எங்கள் தாய் மொழி. இஸ்லாம் எங்கள் மார்க்க வழி' என்று சொன்னார்.

ஹனீபா பாடியதில் ஒரு பாடல்கூட காலத்தால் மங்கிப்போகவில்லை. மாறாக புது ஆற்றல் கொண்டு ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'அழைக்கின்றார் அண்ணா' (1955), 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' (1953) 'எத்தனை கலைஞர்கள் இருந்தாலும் தமிழ் வித்தகக் கலைஞர்' (1962), 'கம்பீரக் கலைஞர் எங்கள் கருணாநிதி (1984),' 'ஆசை ஆசை கலைஞர்மீது ஆசை' போன்ற பாடல்கள் தி.மு.க.வின் கிளைக் கழக நிகழ்ச்சி, ஒன்றிய, நகர மாவட்ட, மாநில மாநாடுகளில் இன்றுவரை ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. தி.மு.க. இருக்கும்வரை ஒலிக்கும். தி.மு.க. மாநாடுகளில் மட்டுமல்ல, தி.மு.க. நடத்தும் போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும்கூட ஹனீபாவின் பாடல்கள்தான் அனைவரையும் ஒன்றிணைக்கும் கருவியாக இருக்கிறது. முன்பு அல்ல, இன்றல்ல என்றும் தி.மு.க.வின் பிரச்சாரப் பீரங்கியாக இருப்பது ஹனீபா பாடிய பாடல்கள்தான். அந்த நாட்டுப்புறத்துக் குரல்தான். தி.மு.க. போன்ற ஒரு கட்சியையும், ஹனீபா போன்ற ஒரு பாடகரையும் உலகில் எங்குமே காண முடியாது. அதிசயமான கட்சி. அதிசயமான

தொண்டன். ‘ஆசை ஆசை கலைஞர் மீது ஆசை’ என்ற பாடலில் ‘உன்னை அடித்து விளையாட ஆசை’ என்று பாடியிருக்கிறார். இப்படிப் பாடுவதற்கு ஹனீபாவுக்கு மட்டுமே ஆற்றல் உண்டு.

திராவிட இயக்கக் கொள்கைகளுக்காகப் பாடியதோடு ஹனீபா பல திரைப்படங்களிலும் பாடியிருக்கிறார். ‘குலேபகாவலி’ படத்திலும் ‘பாவ மன்னிப்பு’ படத்திலும் எல். கிருஷ்ணனுடனும் T.M. சௌந்திரராஜனுடனும் இணைந்து பாடியிருக்கிறார். ‘செம்பருத்தி’ படத்தில் ‘நட்ட நடு கடல் மீது நான் பாடும் பாட்டு’ காலகாலத்திற்கும் ஏற்ற பாடல். காதலர்களால் கொண்டாடப்படும் பாடல். இப்பாடலை நான் சோகமாக இருக்கும்போதெல்லாம் விரும்பி ஆசையாகக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கேட்கிறேன். தமிழ் மொழியில் மட்டுமல்ல, சிங்கள மொழியிலும் இந்தி, உருது, அரபு மொழிகளிலும் பாடியிருக்கிறார். தன்னுடைய வாழ்நாளில் பல மொழிகளில் தனிப் பாடல்களையும், சினிமாப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் பாடியவர். பல்லாயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளை நடத்தியவர்தான் என்றாலும் ஹனீபா முறையாக இசை கற்றவர் அல்ல என்பதுதான் நாம் கவனம் கொள்ள வேண்டிய விஷயம். ‘இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை’ (1963) என்ற பாடலை இஸ்லாம் சமூகத்தினர் மட்டுமல்ல, இந்து மடாதிபதிகளும்கூட இன்றும் விரும்பிப் பாடுகின்றனர். எல்லா மக்களாலும் கொண்டாடப்படும் பாடல். இஸ்லாம் சமூகம் இருக்கும்வரை ‘இறைவனிடம் கையேந்துங்கள்’ பாடலும் ஹனீபாவின் குரலும் இருக்கும். அழியாத பாடல். அழியாத குரல்.

திராவிட இயக்கக் கொள்கைகளில், சுயமரியாதைக் கொள்கைகளில் எவ்வளவு ஈடுபாடு கொண்டவர் ஹனீபா என்பதற்கு ஆயிரமாயிரம் எடுத்துக்காட்டுகளைக் காட்ட முடியும். இருக்கின்றன. கொள்கைக் குன்று. இளம் வயதிலேயே பெரியாரை வரவழைத்து நாகூரில் கூட்டம் போட்டவர், தான் கட்டிய வீடுகளுக்கு ‘கலைஞர் இல்லம்’, ‘அண்ணா இல்லம்’ என்று பெயர் வைத்தவர். பெரியாரோடு முரண்பட்டு அண்ணா திராவிடக் கழகத்தை விட்டுப் பிரிந்தபோது, அண்ணாவுடன் வந்தவர். தன்னுடைய வீட்டுக்கு வரவழைத்து அண்ணாவால் விருந்து கொடுக்கப்பட்டவர். கலைஞர், பேராசிரியர் அன்பழகன் இருவரின் தோள்களிலும் கையைப் போட்டுக்கொண்டு போட்டோவுக்கு ஸ்டைலாக ‘போஸ்’ கொடுத்தவர். அதிசயமான போட்டோ அது. கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் ஹனீபாவுக்கு அளித்த கௌரவம் அது.

சிங்கப்பூர், மலேசியா என்று வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துவிட்டு வந்த அண்ணா, ஹனீபாவை அழைத்து, “வீட்டுக்கு வீடு உன் பாட்டுதான் ஒலித்துக்கொண்டிருந்தது” என்று சொன்னார். ஹனீபா பாடிய இயக்கப் பாடல்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் வாழ்கிற தமிழர்கள் வீடுகளில் எல்லாம் அன்று மட்டுமல்ல, இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அதே மாதிரி, ‘இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை’ என்ற பாடலும் உலகெங்குமுள்ள தமிழர்கள் இல்லங்களில் எக்காலத்திலும் ஒலிக்கும் பாடலாக

இருக்கிறது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, 'தமிழ் மணக்கும் திசையெல்லாம் தேடினேன் உன்னை' (1969) என்ற பாடலை ஹனீபா பாடியவிதம் ஒரு லட்சம் முறை கேட்டாலும் சலிப்பே வராது.

'ஹனி' என்றால் தேன். 'பா' என்றால் பாட்டு. ஹனீபாவின் பாட்டு தேனாக இனிக்கிறது. எனவே அவருக்கு ஹனீபா என்று பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வேண்டும்" என்று ஹனீபாவைப் பற்றி கலைஞர் பேசியும், எழுதியும் இருக்கிறார். தமிழ்நாட்டில் ஆயிரம் பாடகர்கள் இருந்தாலும், ஹனீபாவுக்கான இடம் என்பது யாராலும் இட்டு நிரப்ப முடியாத இடம். இசை வானில் பறந்த தனித்த பறவை. எளிய கருவிகளையும், நான்கைந்து கருவிகளையும் மட்டுமே கொண்டு ஹனீபா உருவாக்கிய இசைக் கோர்வை என்பது அலாதியானது. உன்னதமானது.

எழுத்தாளர், பத்திரிகையாளர், ஓவியர், பாடகர் என்று பல பரிமாணங்களைக் கொண்ட ஆபிதீன் என்பவர்தான் ஹனீபாவின் முழு வளர்ச்சிக்கும் காரணமானவர். அவரே பாடகராக இருந்தும், தனக்கு வந்த வாய்ப்புகளை ஹனீபாவுக்காகத் தந்தவர். புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்தவர். ஹனீபாவின் நூற்றாண்டில் ஆபிதீனை நினைவுகொள்வது அவசியம். அதிசயமான மனிதர்.

தி.மு.கழகத்திற்கும் ஹனீபாவின் பாடல்களுக்கும் என்றும் அழிவில்லை. தலைமுறை தலைமுறையாகத் தொடரும் கொள்கை உறவு. ஹனீபாவின் நூற்றாண்டை ஒட்டி தமிழ்நாட்டின் முதலமைச்சர், சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுகின்றார், நூற்றாண்டு விழாவையும் நடத்துகின்றார், இயக்கத்திற்காக உழைத்தவர்களைப் பாதுகாப்பதிலும் அவர்களுடைய நினைவுகளைப் போற்றுவதிலும் தீராத தாகம் கொண்டவர்தான் மு.க.ஸ்டாலின். கலைஞரைவிடவும் கூடுதலான பாசமும் அக்கறையும் ஹனீபாமீது கொண்டவர். சாதாரண எளிய கட்சிக்காரனையே கொண்டாடித் தீர்க்கிறவர், ஹனீபாவின் நூற்றாண்டை எளிமையாகக் கொண்டாடுவாரா என்ன?

கட்சிக்காக உழைத்த யாரையும் தி.மு.கழகம் மறந்ததில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளிக்கத் தவறியதில்லை. ஹனிபாவுக்குக் கட்சியில் பல பொறுப்புகள் வழங்கப்பட்டன. சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். அவர் மறைந்த பிறகு நாகூர் தைக்கால் தெருவிற்கு ஹனிபா பெயர் சூட்டப்பட்டுள்ளது. சில்லடி கடற்கரைச் சாலை சிறுவர் பூங்காவிற்கும் ஹனிபாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தி.மு.க. என்கிற சமுதாய இயக்கம் இருக்கும்வரை நாகூர் ஹனீபா இருப்பார். தி.மு.க.வின் மேடைகளில் முதல் குரலாக அவருடைய குரலே ஒலிக்கும். தி.மு.க. மேடைகளை எக்காலத்திலும் அலங்கரிக்கும் ஹனீபாவின் குரல்.

# காலத்தால் அழியாத வரலாறு...



செ. திவான்
வரலாற்று ஆய்வாளர்

உலகச் சாதனை செய்தவர் என்று போற்றப்படும் அண்ணல் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக மேடைக் கச்சேரிகள் நடத்திய பெருமைக்குரியவர்.

ஈசா (அலை) (இயேசு பிரான்) அவதரித்த டிசம்பர் 25 - 1925இல் பிறந்தவர் ஹனீபா அண்ணன். மானங்காத்த மறவர் சீமையான இராமநாதபுரம் நகரிலுள்ள வெளிப்பாளையத்தில் தந்தையுடன் அவரது தொழிலில் உதவிகளைச் செய்து வாழ்ந்து வந்தார். காலச் சுழற்சியால் இராமநாதபுரத்திலிருந்து ஹனீபா அண்ணனின் குடும்பம் குடிபெயர்ந்தது திருத்தலமான நாகூர் நோக்கி.

நாகூர் அரசு மேனிலைப் பள்ளிக்கூடத்தில் ஏழாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, காலையில் இறைவணக்கம் பாடும் வழக்கத்தை பள்ளித் தலைமை ஆசிரியரால் கிடைக்கப் பெற்றார் ஹனீபா அண்ணன்.

வேளை உதவி தாளை தருவீர்
வேந்தர் யா முகம்மதே!
நாளை மஹ்ஷர் மூளை உருகும்
நாளில் உதவும் நாயகா!

நாகூர் வண்ணக் களஞ்சியப் புலவர் என்றழைக்கப்பட்ட புலவர் அப்துல் ரசீது எழுதிய இப்பாடலைப் பாடி 'வெண்கல மணி போலக் கணீர்' என்ற குரலுடன் தொடங்கியது அண்ணனின் இசைப்பயணம்.

அண்ணன் நாகூர் ஹனீபாவுக்கு அப்போது 11 வயது. எட்டுக்கட்டையில் எடுப்பாகப் பாடக்கூடிய இனிய குரலை இறைவன் அவருக்குக் கொடுத்திருந்தான். யார் பாடச் சொன்னாலும் வஞ்சகமில்லாமல் பாடி அவர்களின் நெஞ்சம் இனிக்க வைத்தார்.

அப்போது நாகையில் இருந்த கௌதியா பைத்து சபை என்ற இஸ்லாமிய சமூகச் சேவை சங்கம்தான் ஹனீபா அண்ணனுக்கு நாற்றாங்காலாக அமைந்தது. இதில் அவருக்கு புலவர் ஆபிதின் உறுதுணையாக இருந்தார். சிவத்த மரைக்காயர், அப்துல்ரசீது ஆகியோர் உதவியாக இருந்தார்கள்.



1941இல் தேரழுந்தூரில் 15 வயதில் மேடைக்கச்சேரி செய்யத் தொடங்கிய அண்ணன் ஹனீபா இறுதி வரையில் கச்சேரி நடத்தினார். இதுவரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கச்சேரிகள் செய்திருப்பதாக கலைமாமணி ஹாஜ் உமர் பதிவுசெய்திருக்கிறார்.

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஹனீபா அண்ணனின் தந்தையைக் கவர்ந்தது. அப்போது வெளிவந்து

> **“1957 மற்றும் 2002 வாணியம்பாடி இடைத்தேர்தல்களில் போட்டியிட்டு தேர்தல் அரசியலில் பங்கேற்ற ஹனீபா அண்ணன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மேல்சபை உறுப்பினராகவும், வக்பு வாரியத் தலைவராகவும் பொறுப்பு வழங்கப்பட்டதில் சிறப்பாகப் பணியாற்றிப் பெரும் புகழ் சேர்த்தார்.”**

கொண்டிருந்த ‘தாருல் இஸ்லாம்’ போன்ற இஸ்லாமிய இதழ்களையும், ‘குடி அரசு’ என்ற சுயமரியாதை இயக்க இதழையும் வாங்கி, வேலை தேடி வெளிநாடு சென்ற (கோலாலம்பூரில்) தந்தைக்கு அனுப்பிக் கொண்டிருந்த அண்ணனுக்கு அந்த இதழ்களைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சுயமரியாதை இயக்கத் தலைவர் ஈரோட்டுப் பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அதில் தன்னை இணைத்துக் கொண்டார். ஹனீபாவின் பகுத்தறிவு பாடல்களை சிங்கத்தின் கர்ஜனை போன்ற வெண்கலக் குரலில் பாடிய மிடுக்கு பெரியாரைக் கவர்ந்தன.

ஹனீபாவின் அரசியல் வாழ்க்கைக்கு திருவாரூர் தான் அடித்தளம் அமைத்தது. 1938-இல் தமிழ்நாட்டில் இந்தியை கட்டாயமாகத் திணித்தது. அதனை எதிர்த்து தந்தை பெரியார் போர் முரசு கொட்டினார். இப்போராட்டத்திற்கு எதிராகக் கையில் கறுப்புக் கொடியுடன் கலந்து கொண்ட அண்ணன் ஹனீபாவை போலீசார் அவரின் சிறு வயதை காரணம்காட்டி எச்சரித்து விட்டு விட்டார்கள்.

சிறுவயதிலேயே கொழுந்துவிட்டு எரிந்த தமிழ்க்கனல் இறுதிவரை அணையாது எரிந்தது. திருவாரூர் ஓடம் போக்கி ஆற்றில் நடந்த அரசியல் கூட்டங்களில் கலைஞர் - ஹனீபா இடையே ஏற்பட்ட அன்றைய நட்பு இறுதிவரை நீடித்தது. திராவிட இயக்க மேடைகளில் பாடி புகழ்பெற்ற ஹனீபா அண்ணன் திரையுலகிலும், அரசியலிலும் தனக்கெனத் தனி இடத்தை உருவாக்கிக் கொண்டார்.

1940இல் அறிஞர் அண்ணா பேசுவதாக இருந்த பொதுக் கூட்டத்தைப் பட்டுக்கோட்டை அழகிரி ஏற்பாடு செய்திருந்தார். அழகிரிசாமியின் வீட்டில் நடந்த தேனீர் விருந்தில் அண்ணாவுடன் ஏற்பட்டது ஹனீபா அண்ணனின் முதல் சந்திப்பு, அக்கூட்டத்தில் பாடிய ஹனீபா அண்ணனுக்கு அண்ணாவின் தாய்ப்பாசம் கிட்டுவதற்கான நிகழ்ச்சியும் நடந்தேறியது.

தந்தை பெரியார், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் பகுதிகளுக்கு வரும் போது ஹனீபா அண்ணனை அழைத்து வரச்சொல்லி பலமுறை பாடவைத்து இருக்கிறார். ‘ஹனீபா அய்யாவுக்கு ஒலிபெருக்கி தேவையில்லை’ என்று பெரியார் பாராட்டுவதுடன், தனது பர்சில் இருந்து பணம் எடுத்துப் பரிசு கொடுத்தும் இருக்கிறார்.

1957 மற்றும் 2002 வாணியம்பாடி இடைத்தேர்தல்களில் போட்டியிட்டுத் தேர்தல் அரசியலில் பங்கேற்ற ஹனீபா அண்ணன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மேல்சபை உறுப்பினராகவும், வக்பு வாரியத் தலைவராகவும் பொறுப்பு வழங்கப்பட்டதில் சிறப்பாகப் பணியாற்றிப் பெரும் புகழ் சேர்த்தார்.

அதன்பிறகு, திராவிட இயக்க மேடைகளில் இன்று வரையிலும் ஹனீபா அண்ணன் பாடல் ஒலிக்காத நாளே இல்லை. துவக்கம் முதல் இறுதிவரை திராவிட இயக்கங்களிலேயே பணியாற்றினார். நீதிக்கட்சி - திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றிற்காக தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தார்; இலட்சிய உறுதியோடு இசைத்தார். காலத்தால் அழியாத வரலாறாக நிலைத்தார்.

நானில மாந்தருக்கெல்லாம் - இந்த இசைமுரசு நாகூர் ஹனீபாவின் புகழ் வளர்க! ஓங்குக! என்று கொட்டுமுரசே!

# மதங்களைத் தாண்டி மனங்களில் நிறைந்தவர்...



இறையன்பன் குத்தூஸ்
துணைத்தலைவர்
தமிழ்நாடு மாநில
சிறுபான்மையினர்
ஆணையம்

இசைப்பயணத்தில் பிரச்சாரம் என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எனக்கு வழிகாட்டியவர். அவர் காட்டிய பாதையில், அவர் அமைத்துச் சென்ற வழியில் இசைப்பயணத்தை அமைத்துக் கொண்டதற்குக் காரணம், மக்கள் அவரது இசையில் அவரை எவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்பதைக் கண்டு வியந்ததால்தான். இசை முரசு என்றாலே அது ஒரே ஒருவரைத்தான் சொல்ல முடியும். அவர்தான் இன்று நம்மை விட்டுப் பிரிந்து விட்ட நாகூர் ஹனீபா என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போற்றிப் புகழ்ந்த நாகூர் ஹனீபா அவர்கள். தமிழகத்தில் வாழும் தமிழர்கள் மனதில் மட்டுமின்றி உலகத் தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் நிறைந்திருப்பவர். இசைக்கும், இசைக் கருவிகளுக்கும் முக்கியத்துவம் தரும் இக்காலத்தில் தனது தனித்துவக் குரலால் கணீர் எனப் பாடி மக்கள் மனங்களைக் கவர்ந்திழுத்தவர். பல



நேரங்களில் இசையே இல்லாமல் பாடினாலும் இதற்கும் இவ்வளவு சிறப்பா எனக் கேட்போர் வியக்கும் வண்ணம் பாடும் ஆற்றல் மிக்கவர். பாடலில் உள்ள இசைக்கு மாத்திரம் முக்கியத்துவம் தராமல் பாடலில் உள்ள வார்த்தைகளுக்கு எல்லாம் அழுத்தம் கொடுத்து எழிலாகப் பாடும் குரல் வளம் மிக்கவர். ஹனீபா ஆளும் உயரம், அவர் குரலும் உயரம் என்று சொல்லுவார்கள்.

முறைப்படி இசை பயிலாமலேயே கர்நாடக இசைக் கலைஞர்களுக்கு நிகராகப் புகழ்பெற்றவர். கர்நாடக இசை பயின்றிருந்தால் பாமர மக்களின் மனதில் இடம் பிடிக்க முடியாது, மேட்டுக்குடி மக்கள் மட்டுமே ரசித்திருப்பார்கள். இன்று சாதாரண மக்கள் கூட என் பாடல்களைக் கேட்டு ரசிக்கிறார்கள். இதுவே எனக்குக் கிடைத்த மிகப்பெரிய விருது என்று பல நேரம் எங்களிடம் நாகூர் ஹனீபா அவர்களே கூறியது உண்டு.

1955 ஆம் ஆண்டு 'நம் நாடு' கழக இதழில் வெளிவந்த 'அழைக்கின்றார் அண்ணா' என்ற பாடலை ஹெச்.எம்.வி நிறுவனம் பதிவு செய்து நாகூர் ஹனீபாவின் கம்பீரக் குரல் இசைத்தட்டில் வெளியாகியபோது அப்பாடல் தென்னக அரசியலில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்த மூல காரணமாக அமைந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு அஞ்சாமல் ஓடி வா' என்று அவர் முழங்கிய போது ஆர்த்தெழுந்தார்கள் தொண்டர்கள். உணர்ச்சிப் பெருக்கால் நரம்புகள் முறுக்கேற தலைவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டுப் படையெடுத்தார்கள்.

இது மட்டுமின்றி, கழகப் பாடல்கள் சிறந்து விளங்கியதைப் போலவே இஸ்லாமியப் பாடல்களிலும் இசை நிகழ்ச்சிகளிலும் சிறந்து விளங்கியவர். குர்ஆனின் விளக்கம், நபிகள் நாயகம் வாழ்க்கை முறை, ஐந்து கடமைகள் என இஸ்லாமியக் கொள்கைப் பாடல்கள் ஆயிரக்கணக்கில் பாடி இஸ்லாமியர் நெஞ்சங்களில் தனி இடம் பற்றிக் கொண்டவர். இவர் பாடிய 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்ற பாடல் உலகெங்கும் தமிழ் பேசும் முஸ்லிம் மட்டுமின்றி எல்லா மதத்தினரையும் ஈர்க்கும் பாடலாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து அதன் கூட்டங்கள், மாநாடுகள், தேர்தல் நிதி திரட்டுதல், தேர்தல் பரப்புரை, கொள்கை பரப்புரை எதுவாக இருப்பினும் ஹனீபாவின் குரல் இசைத்தது. அரசியல், ஆன்மீகம் என இருமுனைகளிலும் முரசு இசைத்தவர் ஹனீபா. இப்பாடல்கள் இசைத்தட்டுகள், ஒலிநாடாக்கள், குறுந்தகடுகள் என உலகம் முழுதும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

தமிழகத்தில் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களிலும் அதையும் தாண்டி அயல் நாடுகளிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். ஹனீபாவின் 75 ஆண்டு கால இசைப் பயணத்தில் ஏராளமான பரிசுகள், பாராட்டுகள், பட்டங்கள், விருதுகள் இவரை நாடி வந்துள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய காலத்திலிருந்து முதல் கட்டத் தலைவர்களோடு தோளோடு தோள் நின்று கட்சியின் இன்ப துன்பங்களில் பங்கேற்று பல இன்னல்களிலும் கொள்கை மாறிடாமல் நின்று மேடைதோறும் முழங்கி கட்சியை வளர்த்த பெருமை இசை முரசு நாகூர் ஹனீபா அவர்களுக்கு உண்டு. பணத்திற்கும் பதவிக்கும் விலை போகாத ஓர் அரசியல் நேர்மை கொண்ட இரும்பு மனிதர். இவரை மாற்று முகாமில் உள்ளவர்கள் அழைத்த போதெல்லாம் என் வாழ்நாளில் எப்போதும் ஒரே இறைவன், ஒரே இயக்கம், ஒரே தலைவர் என்று உறுதிபடக்கூறியவர்.

தலைவர் கலைஞருக்கும், இவருக்கும் ஏற்பட்ட நட்பு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. நாகூர் ஹனீபாவின் 70வது பிறந்தநாள் மலர் வாழ்த்துரையில் தலைவர் கலைஞர் அவர்கள் அரசியலில் நான் அடி எடுத்து வைத்த நாள் முதல் இன்று வரை நான்

ஹனீபாவை அறிவேன். அன்று கேட்ட அதே குரல், வளம் மிக்க குரல், ஆதிக்ககாரர்களின் செவிப்பறையைக் கிழிக்கும் இடியோசைக் குரல். அந்தக் குரல் மட்டுமா நிலைத்து நிற்கிறது; அவர் கொண்ட கொள்கை உறுதியும் ஆடாமல் அசையாமல் இன்றும் நிலைத்து நிற்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இருபது வருடங்களுக்கு முன் தலைவர் கலைஞர் அவர்கள் எனது பாடலை முதலில் கேட்டு நேரில் பாராட்டும்போது உனக்குக் குரல் ஹனீபா போல் இருக்கிறது. ஆனால் குரல் மட்டும் ஹனீபாவை போல் இருந்தால் போதாது, கொள்கையிலும் ஹனீபாவைப் போல் இருக்க வேண்டும் என்று கொள்கை உறுதிக்கு நாகூர் ஹனீபா அவர்களைத்தான் எனக்கு உதாரணம் காட்டினார். இசைப் பணி மூலம் கழகத்திற்கு அவர் ஆற்றிய தொண்டினைப் போற்றி அந்தந்த நேரங்களில் அவருக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் சிறப்பாகச் செய்துள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நாகூர் ஹனீபா அவர்களை சட்டப்பேரவை மேலவை உறுப்பினர் ஆக்கி அழகு பார்த்தவர் கலைஞர். அதுபோலக் கழக ஆட்சியின் போது 1990-ல் அரசின் கலைமாமணி விருது வழங்கியும், 2002 ஆம் ஆண்டு முரசொலி அறக்கட்டளை சார்பில் தன் பெயரில் உள்ள கலைஞர் விருது வழங்கியும் சிறப்பித்தார்.

கலைஞரைப் போலவே இன்றைய முதல்வர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அவரது பாடலுக்கு ரசிகராக மட்டுமில்லாமல் அவரது கலைச் சேவையைப் போற்றும் அளவுக்கு நாகூரில் அவர் வாழ்ந்து வந்த தெருவுக்கு நாகூர் ஹனீபா தெரு என்றும், நாகூரில் அரசின் சார்பில் அமைக்கப்படும் பூங்காவுக்கு நாகூர் ஹனீபா பூங்கா என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளார். மேலும், அவரது நூற்றாண்டைப் போற்றும் வகையில் அரசின் சார்பில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உத்தரவும் பிறப்பித்துள்ளார்.

இசை முரசு ஹனீபாவின் தமிழிசையில் மயங்காதவர் யாரும் இருக்க முடியாது. காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்தாலும் அவரது பாடல்கள் காலம் கடந்து வாழும். அவர்கள் மறைவின் மூலம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய செய்தி, கொள்கை உறுதி பேணுவோம் தலைவர் கலைஞர் தலைமையில் அன்புத் தளபதி வழிகாட்டுதலில் உறுதியோடு நடப்போம்!

வாழ்க இசை முரசு நாகூர் ஹனீபாவின் புகழ்!

# பாட்டுக் கட்டியவரும், பாட்டுப் பாடியவரும்



நா. மம்மது
தமிழிசை ஆய்வாளர்

ஓர் இசைப் பாடல் இனிமை பெற மூன்று பேர் முக்கியமானவர்கள். பாடல் ஆசிரியர் (கவிஞர்), பாடலின் இசையமைப்பாளர், பாடகர்.

பாடல் எழுதி, இசையமைத்துப் பாடக்கூடியவர்கள் நம் மரபில் சிலரை நாம் நினைவு கூறலாம். தமிழிசை மூவர், கர்நாடக இசை மூவர் மற்றும் அண்மைக்கால பாபநாசம் சிவன். மூவரை வாக்கேயக்காரர்கள் என்று சிறப்பாக நாம் அழைத்து வருகிறோம். (வாக்கு = பாடல்; கேயம் = இசை).

பாடலை எழுதியவர் வேறு; அதற்கு இசையமைத்தவர் வேறு என்றும் ஒரு முறை. இது நம் மரபில் வளமையானது. “2000 ஆண்டுகள் தொன்மை உடையதாகக் கருதப்படும். பரிபாடல் என்ற (சங்க) இலக்கியப் பனுவலுக்கு இசையமைத்த செய்தி கிடைக்கின்றது. பாடலை ஒருவர் எழுத மற்றவர் பாலை (அரிகாம்போதி), நோதிறம் (இந்தளம்), காந்தாரம் (கருநாடகா தேவ காந்தாரி) என்ற பண்களில் இசையமைத்தது குறிப்பிடப்படுகின்றது.

நன்னாகனார், பெட்டாகனார், கண்ணாகனார், மருத்துவன் தாமோதரனார் முதலிய இசையமைப்பாளர்கள் (பரிபாடலுக்கு இசையமைத்தவர்கள்) தொன்றுதொட்டே நம்மிடம் உருவாகி வந்திருக்கின்றனர்." (நா. மம்மது - ஆதி இசையின் அதிர்வுகள் பக்.96)

நம் காலத்திய இனிமையான பாடகர் நாகூர் இ.எம். ஹனீபா; இஸ்லாமியப் பாடகர் என்று அறியப்பட்டாலும் எல்லாச் சமயத்தவரும் அவர் பாடல்களை விரும்பிக் கேட்டு வருகின்றனர்.

இசைத் தொழுகை (பஜனை)ப் பாடகர் சுவாமி ஸ்ரீ விட்டல்தாஸ் மகராஜ் அவர்களையும் ஈர்த்த குரல் (பாடல்) நாகூர் ஹனீபாவுக்கு உரியது.

எம். கே. தியாகராஜ பாகவதருக்குக் கிடைத்த பாடலாசிரியர் பாபநாச சிவன் போல், சீர்காழி கோவிந்தராசருக்குக் கிடைத்த பாடலாசிரியர் உளுந்தூர்பேட்டை சண்முகம்போல் பல பாடல் ஆசிரியர்கள் ஹனீபாவிற்கு வாய்த்திருந்தனர். அவர்களின் சிறந்த பாடல் சிலவற்றை இக்கட்டுரையில் நாம் பார்க்கலாம்;

விட்டல்தாஸ் மகராஜ் தமது ஆன்மீக இசை நிகழ்ச்சியில் பாடியவரும் ஹனீபாவின் பாடல்;

*"இறைவனிடம் கையேந்துங்கள்"*

இப்பாடலை எழுதியவர் கிளியனூர் அப்துல் சலாம். ஹிந்துஸ்தானி பண், தர்பாரி கானடா சாயலில் பாடல் அமைந்துள்ளது. இசைப்பற்று இறைப்பற்று கொண்டோருக்கு இந்தப் பாடல் எக்காலத்திற்கும் பிடித்துபோகும்.

பெங்களூர் ரமணி அம்மாள் பாடிய பாடல்களுள் இனிமையான பாடல் ஒன்று;

*பால் இருக்குது; பழம் இருக்குது -*
*பழனி மலையிலே*

பாடல் தொடக்கம் பீம்ப்லாஸ் பண்ணிலும், அடுத்து சங்கராபரணம் பண்ணிலும் அமைந்த இனிமையான பாடல் அது.

அந்த மெட்டு ஹனீபாவை மிகவும் கவர்ந்ததால் கவிஞர் சலீமை அழைத்து அந்த மெட்டில் பாடல் ஒன்று இயற்றித்தரக் கேட்டுக்கொண்டார். அந்த இனிமையான பாடலே;

*அருள் மணக்குது; அறம் மணக்குது -*
*அரபு நாட்டிலே*

கவிஞர் தா. காசிம் எழுதிய பாடல்களில் ஒன்று;

*தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு! கொஞ்சம் நில்லு!!*

இந்தப் பாடலை இசைப்படுத்தியவர் இளையராஜா. பாடலின் பண் வைகறைப் பாணியில் (சிவரஞ்சனி) அமைந்துள்ளது. இளையராஜாவின் இனிய இசையமைப்பில், ஹனீபாவின் தேன்மதுரக் குரலில் இப்பாடல் எல்லோரையும் கவர்ந்துள்ளது வியப்பில்லை தானே!



அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பொற்காலம் இருந்தது. ஊர் முழுக்க இசைமணக்கும். பண்டாரம், பரதேசி, பக்கீர்சா, அன்னக்காவடி, கோடாங்கி, சாமியாடி, குறிகாரி இவர்களெல்லாம் பாட்டுப்பாடி ஊரையே இனிமை இசையால் கிரங்கடித்த காலம். எல்லாம் போய்விட்டது. பாடித் திரிந்த குயில்களையெல்லாம் இழந்துவிட்டோம்; மெல்லவே இழந்து வருகிறோம்.

அந்தப் பழைய காலப் பண்டாரமும், பரதேசி, பக்கீர்சாக்களும், சித்தர் பாடல், வள்ளலார் பாடல், பட்டினத்தார் பாடல், குணங்குடி மஸ்தான் பாடல் என்றெல்லாம் அன்றைய காலத்தில் பாடி வருவார்கள்.

அந்தக் குணங்குடியாரின் பாடல் ஒன்று; ஹனீபாவின் மனம் கவர்ந்த பாடல் அது.

'தவராஜ மகிமைசாற்றல்' என்ற தலைப்பில் நாகூர் ஆண்டவர் செய்யது சாகுல் ஹமீது மீது குணங்குடியார் பாடிய பாடல்;

'திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து' இப்பாடல் சுபபந்து வராளிப் பண்ணில் அமைந்தது. இந்தப் பண் அவலச்சுவை (இரங்கல் சுவை) கொண்டது பொதுவாக. ஆனால், ஹனீபா கம்பீரச் சுவை கொண்ட பண்ணாக மாற்றி இப்பாடலைப் பாடித் தந்திருக்கின்றார். ஹனீபாவின் உச்சமான குரல் வளத்திற்கு இந்தப் பாடல் ஒரு சான்று.

அடுத்து இந்தப் பாடல் மீதிப் பகுதியை எழுதியவர் பாடலாசிரியர் மதிதாசன் (அப்துல் ரஹீம்)

துன்பமே வரும்போது உன் புகழ் பாடி என்பது முதல் இறுதி அடிவரை மதிதாசன் பாடலை எழுதி முடித்திருக்கிறார்.

இவ்வாறாக ஹனீபாவின் பாடும் சிறப்புக்கு உரமாக நின்று பாடல் புனைந்து தந்த கவிஞர் பலர். ஒரு சிலரை மட்டுமே இந்தக் கட்டுரையில் பார்த்திருக்கிறோம் இடம் கருதி. வாய்ப்பு ஏற்படின் மிகநீண்ட கட்டுரையாக ஹனீபாவின் பாடல் கவிஞர்களை நாம் பார்க்கலாம் எதிர்வரும் காலங்களில்.

# இசை அதிசயம் இசைமுரசு இ.எம். ஹனீபா



சாரு நிவேதிதா
எழுத்தாளர்

சில ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய ஒரு கட்டுரையை இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இசைமுரசு இ.எம். ஹனீபா பற்றிய கட்டுரை அது.

சில ஆண்டுகளுக்கு முன்பு காலமான இசை முரசு இ.எம். ஹனீபா பற்றி எத்தனை பேர் நினைவு கூர்ந்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு இலக்கியத்தை விட அதிக விருப்பமானது இசை. என் இசை ரசனைக்கு வித்திட்டவர்களில் முதன்மையானவர் நாகூர் ஹனீபா. நினைவு தெரிந்த நாள் முதலாய் ஹனீபாவின் பாடல்களைக் கேட்டு வளர்ந்தவன் நான். ஹனீபாவின் குரல் வேறு யாராலும் பின்பற்ற முடியாத தனித்துவம் கொண்டது. அந்த வகையில் unique-ஆன பாடகர் அவர். இந்தி கிஷோர் குமாரின் குரலும் தனித்துவமானதுதான் என்றாலும் அவருடைய பாணியில் அவருக்கு முன்னதாக கே.எல். செய்கல் இருந்திருக்கிறார். இதை

கிஷோர் குமாரே குறிப்பிட்டும் இருக்கிறார். கிஷோரைப் போல் யாரேனும் பாடி விடவும் கூடும். ஆனால் ஹனீபாவைப் போல் பாட அவரை விட்டால் வேறு யாருமே இல்லை. உலகிலேயே அவர் மட்டும்தான். இது பற்றி ஹனீபா, "இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? கோடிக்கணக்கான மனிதர்கள் பிறந்து கொண்டு இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி முகம் இருக்கிறதுதானே? ஒருவரைப் போல் இன்னொருவர் இல்லையே?" என்கிறார். தொடர்ந்து சொல்லும் போது, "என்னைப் போல் என் குரலில் பல இளைஞர்கள் பாடுவதைக் கேட்கிறேன். ஆனால் இரண்டு பாட்டுகளுக்கு மேல் அவர்களின் குரல் வேறு மாதிரி ஆகி விடுகிறது" என்கிறார். உண்மைதான்.

ஒலிபெருக்கி இல்லாமலேயே பல காத தூரம் கேட்கும் அளவுக்குக் கனத்த குரல் ஹனீபாவினுடையது. அதே சமயம் தேனினும் இனிமையானது. இதையெல்லாம் விடப் பெரிய விஷயம், நான்கு ஐந்து மணி நேரத்துக்கு இடைவிடாமல் மழை போல் பொழியும் இசைக் கலைஞன் ஹனீபா. வேறு யாராலும் இவ்வளவு high pitch குரலில் நான்கு ஐந்து மணி நேரம் பாடுவதை யோசித்தும் பார்க்க முடியாது. அதிலும் பல பாடல்களில் சுவாசத்தில் இடைவெளியே கொடுக்காமல் பாடிக் கொண்டே போவார். உதாரணமாக, "திக்குத் திகந்தமும் கொண்டாடியே" என்ற பனிரெண்டு நிமிடப் பாடலில் முதல் ஆறு நிமிடம் ஹனீபாவின் குரல் இசையும் இறைமையும் கலந்து நிற்கும் உன்னத வெளிக்கு நம்மை அழைத்துச் செல்லும். ஆறு நிமிடம் கழிந்த பிறகே "உம்மை ஒரு போதும் நான் மறவேன் மீரா" என்ற அற்புதப் பாடல் நிகழும். இந்தப் பாடலைக் கேட்டுக் கண்ணீர் விடாத மனிதரை நான் கண்டதில்லை.

ஹனீபாவின் இசைமழையில் நனைந்து வளர்ந்த பயிர் நான். கந்தூரியின் போதும் மற்ற விசேஷங்களிலும் ஹனீபாவின் கச்சேரி இரவு முழுவதும் நடைபெறும். அவரது பாடல்கள் மதம், இனம் போன்ற பாகுபாடுகளைக் கடந்தவை என்றாலும் பல பாடல்கள் இஸ்லாமிய அறக் கோட்பாடுகளையும் வாழ்வியல் நெறிகளையும் விளக்குபவையாக இருக்கும்.

உதாரணம் - "அதிகாலை நேரம் சுபுஹூக்குப் பின்னே அண்ணல் நபி வரும் போது இன்னல் செய்தாள் ஒரு மாது" என்ற பாடல் நபிகள் நாயகத்தின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வை விளக்குகிறது.

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்.*

- என்ற குறளை நினைவூட்டும் சம்பவம் அது. இது போல் எண்ணற்ற ஹதீஸ்களைப் பாடலாகப் பாடியிருக்கிறார் ஹனீபா. நெஞ்சம் உருகுதம்மா என்ற




பாடலில் தீனோர்களின் தியாக வரலாற்றைச் சொல்லுவார். “ஐந்தாயிரம் ஆண்டுகள் முன்பே நடந்தது அரபு நாட்டிலே ஓர் தியாகம்” என்ற ஒரு பாடல். இடது காதை இடது கையால் பிடித்தபடி ஹனீபாவின் தனி முத்திரையான “ஒ...” என்று இழையும் குரலை இந்தப் பாடலில் கேட்கலாம்.

“கன்னியரே அன்னையரே கொஞ்சம் நில்லுங்கள்; கண்மணியாம் ஃபாத்திமாவின் சரிதம் கேளுங்கள்”, “ஃபாத்திமா வாழ்ந்த முறை உனக்குத் தெரியுமா?”, “தீன்குலக் கண்ணு...” போன்ற பாடல்கள் ஒரு இஸ்லாமியப் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்பவை. அது தவிர இந்தப் பாடல்களின் இனிமை கேட்பவரை இசைப் பேரின்பத்தில் ஆழ்த்துபவை. ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கும் இசைமுரசு இ.எம். ஹனீபாவின் மிக முக்கியமான பாடல்கள்: “கருணைக் கடலாம் காதர்வலியின் காரண சரிதம் கேளுங்கள்”, கரீப் நவாஸ் (ஏழைகளின் பங்காளன்) என்று அழைக்கப்படும் அமீர் ஔலியாவைப் பற்றிய பாடலான அமீர் ராஜாவே கருணை க்வாஜாவே”, “சொன்னால் முடிந்திடுமோ சொல்வதென்றால் இயன்றிடுமோ, என்னவென்பேன் என்னவென்பேன் ஏந்தலர் பெருமைகளை...” ஹனீபாவின் பல நூறு பாடல்கள் குதூகலத்தையும் கொண்டாட்டத்தையும் தரக் கூடியவை.

உதாரணங்கள்: "அருள் மேவும் ஆண்டவனே அன்புடைய காவலனே”; “மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே யாரசூலல்லா”; “மௌத்தையே நீ மறந்து இங்கு வாழலாகுமா?” (மௌத் = மரணம்); “தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு, எங்கள் திருநபியிடம் போய்ச் சொல்லு...”; “ஹஸ்பி ரப்பி ஜல்லல்லா”; “உலக மக்கள் யாவருக்கும் உரிமையானவர்.”

இந்தியாவின் சூஃபி பரம்பரையில் வந்த மாபெரும் இசைக் கலைஞனான இசைமுரசு இ.எம். ஹனீபா நவீன இசைக் கருவிகள் பழக்கத்துக்கு வரும் முன்பே நான்கே நான்கு கருவிகளோடு - தப்லா, ஹார்மோனியம், ஷெனாய், டேப் (ஃபக்கீர்கள் பயன்படுத்தும் இசைக்கருவி) - நான்கைந்து மணி நேரம் கச்சேரி செய்தவர்.

ஹனீபா தன் வாழ்நாள் முழுவதும் சினிமாவை ஒதுக்கித் தள்ளினார். குலேபகாவலி, பாவ மன்னிப்பு போன்ற இரண்டு மூன்று படங்களில் தான் பாடினார். ஹனீபாவின் இன்னொரு சாதனை, திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் மக்கள் இயக்கமாகத் திரண்ட ஆரம்ப காலத்திலும் சரி, அதற்குப் பிறகு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகும்

சரி, அந்தக் கட்சியை மக்களிடம் கொண்டு சென்றதில் ஹனீபாவின் பங்கு மகத்தானது. "கல்லக்குடி கொண்ட கருணாநிதியே" என்ற பாடலைக் கேட்கும் போது நம் மனம் உருகி விடும். ஹனீபா தன்னுடைய பெரும்பான்மையான பாடல்களுக்குத் தானே இசை அமைத்தார். அவருடைய ஒரு பாடல் கூட கேட்பதற்கு அசுவாரசியமாக இருந்ததில்லை.

இங்கே நான் குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம், அவருடைய பாடல்களை இயற்றிய புலவர் ஆபிதீன் மற்றும் நாகூர். இரண்டாமவர் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றியவர் சலீம். கவிஞர் கண்ணதாசன், வாலி ஆகியோருடன் இணையாகப் பேசப்பட வேண்டிய நாகூர் சலீமும் சினிமாவின் நிழல் படியாத இடத்தில் இருந்ததால் பிரபலமாக அறியப்படவில்லை. இந்த மகத்தான கலைஞர்களை இந்தத் தருணத்திலாவது நாம் நினைவு கூறுவோம். அதன் பொருள், காலத்தால் அழியாத அவர்களின் பாடல்களைக் கேட்டு இன்புறுவோம்.

பின்குறிப்பு: ஏ.ஆர். ரகுமான் ஒருமுறை இ.எம். ஹனீபாவின் பாடல்களை ஒன்று திரட்டி டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தொகுக்க வேண்டும் என்று சொன்னார். ஹனீபா தான் பாடிய ஒவ்வொரு பாடலையும் ஆயிரக்கணக்கான மேடைகளில் பாடினார். அதாவது, ஒவ்வொரு பாடலையும் பத்தாயிரம் இருபதாயிரம் தடவை பாடியிருப்பார். ஹனீபாவுக்குப் பாடல் என்பது நமக்கு சுவாசத்தைப் போல. அருள்மழை பொழிவாய் ரகுமானே...

பின்வரும் இணைப்பில் இ.எம். ஹனீபாவின் சிறிய பேச்சையும் கேட்கலாம்.

நபிகள் நாயகத்தின் வாழ்வில் நடந்த ஓர் அற்புதச் சம்பவத்தை விவரிக்கிறார் ஹனீபா. ஒருநாள் மதீனா நகர்தனிலே... ஐயாயிரம் ஆண்டுகள் முன்னே நடந்தது அரபு நாட்டில் ஒரு தியாகம் - என்ற மகா அற்புதமான பாடல். இந்தப் பாடலில் இ.எம். ஹனீபாவுக்கு மட்டுமே உரிய தனித்துவமான விசேஷங்களைக் கேட்கலாம். இஸ்லாமிய நாடோடி இசையின் உச்சம் இந்தப் பாடல். மௌனத்தையே நீ மறந்து வாழலாகுமா? இ.எம். ஹனீபாவின் இளமையான குரல் எவ்வளவு தேடினாலும் அவருடைய சில பாடல்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

பின்குறிப்பு: மேடையில் தனக்குப் பக்க வாத்தியம் வாசிப்பவர்களை உற்சாகப்படுத்துவதற்காக ஹனீபா ஒலிபெருக்கியைக் கையால் மறைத்தபடி ஒரு காரியம் செய்வார். அந்த அட்டகாசத்தை நாகூர்வாசிகள் மட்டுமே அறிவோம். ஒரு மாபெரும் கலைஞனின் விளையாட்டு மனோபாவம் அது என்று சிரித்துக் கொள்வோம்.

# கலந்து விடாத கரைந்து விடாத பேரிசைக் குரல்!



கவிஞர் யுகபாரதி
திரைப்பட பாடலாசிரியர்

இசை எங்கிருந்து உருவாகிறது எனும் கேள்விக்கு, உலக இசைமேதைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைத் தந்திருக்கிறார்கள். ஒருவரின் தேடலும் புரிதலும் எதைநோக்கிச் செல்கிறதோ அதை வைத்தே அவரின் வாக்கும் வாழ்க்கையும் அமைகிறது. உறங்க நீலாம்பரி, விழிக்க பூபாளமென்று சப்த ஒழுங்குகளை இராகங்களாகப் பட்டியலிட்டு வைத்திருக்கும் பாரம்பரிய இசைமரபு நம்முடையது. என்றாலும், இசையின் இலட்சணங்கள் எல்லோருக்கும் பிடிபடுவதில்லை. அதே கேள்வியை ஒருமுறை இளையராஜாவிடம் கேட்டபோது 'இசை எனக்குள் அதுவாகவே உருவாகிறது' என்றிருக்கிறார். மறுப்பிற்கோ மறுகேள்விக்கோ இடமளிக்காத வகையில் அவர் அளித்த அந்தப் பதில் மிகமிக நுட்பமானது. இசையில் உள்ளார்ந்து பயணிப்பவர்களால் மட்டுமே அப்படியொரு பதிலை அளிக்க முடியும். இரண்டறக்

கலத்தலே இசையென்று ஊகித்தாலும், வைத்திருக்கும் உணர்வுகளை வார்த்தைப்படுத்த முடியாத பட்சத்தில் எந்தக் கேள்வியும் கேள்வியாகவே நின்றுவிடுகிறது.

அனுபவிக்க வேண்டிய இசையை ஆராய்ந்து கொண்டிருப்பதில் பயனில்லை. ஆன்மிகத்தை இசையாக ஒலிபெயர்த்த ஹஸ்ரத் இனாயத் கான், 'இறைவன் மனித உடலுக்குள் ஆன்மாவைப் புகுந்துகொள்ள அறிவுறுத்தியபோது அது இசையின் வடிவில்தான் இறங்கியது' என்கிறார். சூஃபி ஞானியும், இசைக் கலைஞருமான அவர் குறித்த மேலதிகத் தகவல்களை நண்பர் நாகூர் ரூமி எழுதிய 'இசையும் இறைவனும்' நூலில் வாசிக்கலாம்.

இசையும் இறைவனும் ஏதோ ஒரு புள்ளியில் இணைவதாகவே எல்லோரும் சொல்கிறார்கள். இறைவனை எட்டித் தொட இசையால் மட்டுமே முடியும் என்பது அவர்கள் நம்பிக்கை. அந்த நம்பிக்கையில் கையையோ காலையோ வைக்க நமக்கு உரிமையில்லை. புலிபோல் புதருக்குள்ளிருந்து ஒலியெழுப்பிய சிறுவனே பின்னாட்களில் அக்பரின் அவையில் தான்சேனாக நிமிர்ந்திருக்கிறார். ஒலிக் குறிப்புகளால் உயிர்களின்-உன்னதங்களை உணரமுடியுமென நம்பிய ஹரிதாஸர், தான்சேனை எப்படியெல்லாம் உருவாக்கினார் என்பது ஒருபுறமிருக்க, தன்னைத் தானே உணர்ந்தவராக அவர் இருந்திருக்கிறார். நாகூர் தர்கா வித்வான் தாவூத் மியான்கான் கால்வலியால் அவதியுற்றபோது, மால்கோஸ் இராகத்தை நாற்பதுநாள் தொடர்ந்து பாடிக் குணமடைந்ததாகக் குறிப்பு இருக்கிறது. நாகூர் ஆண்டவரும் தான்சேனும் ஒரே குருவிடம் பயின்றதால் ஆற்றல் பொருந்திய ஆண்டவரே தாவூத் மியான்கானுக்கு அவ்வுத்தரவை வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது.

சுரங்களின் வேறுபாடுகளைக் கற்றுக்கொள்வதால் மட்டுமே ஒருவர் சிறந்த இசைக் கலைஞராக ஆவதில்லை. இசையின் மகத்துவம் பிடிபட வேண்டுமானால் இதயங்களை நெருங்கவேண்டும். வான்வெளியில் வட்டமிடும் இறகின் ஓசையை எவரால் கேட்க முடிகிறதோ அவரே இசையாலும் இறைவனாலும் ஆசீர்வதிக்கப்படுகிறார். ஒருமுறை ஹரிதாஸரின் பாடலைக் கேட்ட அக்பர் தான்சேனிடம், 'உங்கள் குருவின் பாடலில் ஏதோ ஓர் அற்புதம் தென்படுகிறதே' என்றிருக்கிறார். அதற்கு தான்சேன், 'நான் அரசனான உங்களைப் பாடுகிறேன். அவரோ ஆண்டவனைப் பாடுகிறார்' என்று கடந்திருக்கிறார். ஆண்டவனும் அரசனும் ஒன்றில்லை என்பதை மட்டும் தான்சேன் உணர்த்தவில்லை. இசையின் பரிமாணங்கள் எவ்விதம் வெளிப்படுகின்றன என்றும் அவ்வாக்கியத்தில் விளக்கியிருக்கிறார்.

இசையின் அற்புதங்களை விவரிக்க வழியில்லை. என்றாலும், உலகத்தின் ஒவ்வொரு நிலப்பரப்பும் ஒவ்வொரு இசைமரபைத் தழுவி நிற்கிறது. மேற்கு, தெற்கு

என்பதையெல்லாம் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் இசை எங்கேயும் ஒரே மாதிரியான உணர்வையே தருவிக்கிறது. பெயர்கள் வெவ்வேறாக இருந்தாலும், இசையின் வழியே நாம் கண்டடையும் இன்பமென்பது ஒன்றுதான். பேரின்பமென்று பெயரிட்டாலும் பிழையில்லை.

இசையின் வகைகளைப் பகுத்தும் தொகுத்தும் தரக்கூடிய எத்தனையோ ஆய்வு நூல்களை நான் வாசித்திருக்கிறேன். என்றாலும், அவை அனைத்தின் அடிப்படைகளும் மனத்தைத் தொடுவதன்றி வேறில்லை. பிரதேச எல்லைகளைத் தாண்டியும் ஓர் இசைக் கலைஞர் பிரசித்தி பெறுவதற்கு அவர் தன்னுடைய அகத்தை அங்குலமும் பிசகாமல் பிரதிபலிக்கிறாரா என்பதைப் பொறுத்தே அமைகிறது. இடம், காலம், சூழல் எல்லாவற்றையும் கடந்து நிற்க இசையால் முடியும். ‘திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து / தீன் கூறியே நிற்பார் கோடி’ என்கிற பாடலில் குணங்குடி மஸ்தான் எதைக் காட்டுகிறாரோ அதையே ‘நேநந்து வெதுகுதுரா’ கீர்த்தனையில் தியாகய்யரும் காட்டுகிறார். இசைக்குப் பேதமில்லை. இசையென்னும் பாலமில்லாமல் மதம் கடந்த ஆன்மிகத்தை அடைவது சாத்தியமில்லை.

இந்த இடத்தில் தமிழ் இஸ்லாமிய இசைமரபில் தனித்த ஆளுமையாக விளங்கிய நாகூர் ஹனீபா நினைவிற்கு வருகிறார். அவரைச் சூஃபி இசைக் கலைஞராகத் தம் கட்டுரை ஒன்றில் எழுத்தாளர் சாரு நிவேதிதா தெரிவித்திருக்கிறார். சூஃபிதத்துவத்தின் தன்மைகளை உள்வாங்கிய ஒருவராக அவரை ஏற்பதில் பலருக்குத் தயக்கமுண்டு. என்றாலும், எனக்கு எந்தப் பிரச்சனையுமில்லை. அவர் பாடல்களைக் கேட்டு வளர்ந்த தலைமுறையைச் சேர்ந்தவன் என்பதால் அவருடைய மிதமிஞ்சிய இசையாற்றலில் எனக்கு மயக்கமுண்டு.

முறையான சங்கீதப் பயிற்சியை மேற்கொள்ளாமலேயே அவரால் அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்க முடிந்திருக்கிறது. சொல்லப் போனால் கேள்வி ஞானத்திலேயே இசையின் வேராகவும் கிளையாகவும் அவர் விளைந்திருக்கிறார். தமிழர்களின் நனவிலி மனத்தில் பதிந்துள்ள முதன்மையான குரல் அவருடையது. ஓராயிரம் குரல்களுக்கு மத்தியில் இன்றும்கூட தன்னை யாரென்று அவருடைய குரல் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. சிம்மக் குரலோன், இசைமுரசு என்றெல்லாம் அவரை வருணித்தாலும் எந்தக் கட்டுக்குள்ளும் சிக்கிவிடாத அசாத்திய கம்பீரமும், சாரீரமும் அவருக்கே உரியவை. ‘காற்றில் கலந்த பேரோசை’ என்று பொதுவுடைமைத் தலைவர் வாவின் குரலை எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதுவார். எனக்கோ காற்றிலும் கலந்துவிடாத, கரைந்துவிடாத பேரிசைக் குரலே இ.எம். ஹனீபாவின் குரல் எனச் சொல்லத் தோன்றுகிறது. இஸ்லாமியப் பண்பாட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்ட அசலான தமிழ்க்குரல் ஹனீபாவினுடையது. அவர்போல எத்தனையோபேர் பாட முயன்றிருக்கிறார்கள். என்றாலும், அவர் குரலையும்

பாடும்முறையையும் ஒருவராலும் பிரதியெடுத்துப் பின் தொடர முடிந்ததில்லை. சுருதி, இலயம் என்பவற்றைத் தாண்டிய சுயத்தை அவர் பாடல்களில் பார்க்கலாம். அவரையும், அவர் குரலையும் இயற்கையே வழங்கிய கொடை என்றுதான் சொல்ல வேண்டும். பாடல்களில் எங்கேனும் ஓர் இடத்திலேனும் அவர் தன்னுடைய அதி அற்புதக் கமகக் கையெழுத்தை இட்டுவிடுவதால் அவரை விஞ்சுவதோ மிஞ்சுவதோ எளிதில்லை.

ஒரு பாடலின் சிறப்பு மெட்டிலிருக்கிறதா வரியிலிருக்கிறதா என விவாதிப்பவர்கள், இறுதியில் அவர் குரலே எல்லாமுமென்ற முடிவிற்கு வந்துவிடுவர். எது மாதிரியும் இல்லாத புதுமாதிரியான அமைப்பை அவர் பாடல்களில் மட்டுமே கேட்கமுடியும். மிகக் குறைந்த வாத்தியக் கருவிகளை வைத்துக்கொண்டே உயரிய இசையனுபவத்தை வழங்குபவராக அவர் இருந்திருக்கிறார். தமிழிசையின் தாத்பரியங்களைப் புரிந்த அவர், இந்துஸ்தானியையும் அவற்றுள் கலந்தே கொடுத்திருக்கிறார். மொழியை அட்சரம் பிசகாமல் உச்சரிப்பதில் அவருக்கிருந்த ஆர்வம், வெறுமனே விளைந்த மொழிப் பற்றால் நிகழ்ந்ததில்லை. திராவிட அரசியலில் அவர் எடுத்துக்கொண்ட பங்கினாலும் அக்கறையாலும் அரும்பியது. மேலோட்டமாகக் கவனித்தாலும்கூட பாடலில் வரக்கூடிய உருதுச் சொற்களையும், அரபுச் சொற்களையும் அவரளவிற்கு அழுத்தமாகவும் திருத்தமாகவும் பாடியவர்கள் எவருமில்லை.

அவரால்தான் பல அரபுச் சொற்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு என்போன்றோருக்குக் கிடைத்தது. அதுமட்டுமன்று, அவருடைய தாக்கத்தில் எத்தனையோ அரபுச் சொற்கள், மக்களின் புழங்குச் சொற்களுக்குள் புகுந்துள்ளன. 'நான் கச்சேரிக்காரனில்லை, கட்சிக்காரன்' என்று திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் முழங்கிய நாகூர் ஹனீபா, பெரியாருடனும் அண்ணாவுடனும் நெருங்கிப் பழகியிருக்கிறார். கலைஞர் மு. கருணாநிதியின் அத்தியந்த நண்பர்களில் அவரும் ஒருவர். நாகூரில் பிறந்திருந்தாலும் தம்முடைய இளவயதின் பெரும்பகுதியைத் திருவாரூரில்தான் கழித்திருக்கிறார். எனவே, கலைஞருடனான ஹனீபாவின் தொடர்பென்பது நீண்ட நெடிய நினைவுகளைக் கொண்டது.

ஹனீபாவின் திராவிட இயக்கச் சார்பு, அவருடைய தந்தை முகமது இஸ்மாயிலிடமிருந்து தொடங்குகிறது. முப்பதுகளில் மலேசிய ரயில்வேயில் போர்மேனாகப் பணியாற்றிய தம் தந்தைக்கு, பெரியார் நடத்திய 'குடியரசு' பத்திரிகையை ஹனீபாவே வாரந் தவறாமல் வாங்கி அனுப்பியிருக்கிறார். அது, நாகையிலிருந்து மலேசியாவிற்குக் கப்பல் போக்குவரத்து இருந்த காலம். தந்தையின் கைகளைச் சேருவதற்குள் குடியரசு, தாருல் இஸ்லாம் ஆகிய பத்திரிகைகளை எழுத்தெண்ணி வாசிப்பவராகவும் அவர் இருந்திருக்கிறார். அதைவிட, 1939இல் நாகூரில் நடைபெற்ற இந்தித் திணிப்பிற்கு

எதிராகக் கறுப்புக்கொடி காட்டிக் கைதாகியிருக்கிறார். பாடகர் என்கிற தளத்தில் இருந்து மட்டுமே அவரைப் பார்ப்பவர்களுக்கு இந்த விஷயங்களெல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

பதிமூன்று வயதில் கொள்கைக்காகக் கொடி பிடிக்கத் தொடங்கிய ஹனீபா, தம் அந்திமக் காலம்வரை அதையே பற்றியிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. தனக்கு என்ன கிடைக்குமென்று எதிர்பார்த்து உழலும் தன்னல அரசியலில், தமிழினத்தின் மீட்சிக்காக அவரளவில் பாடுபட்டிருக்கிறார். முறுக்கேறிய மொழியுணர்வில் பாரதிதாசனின் பல பாடல்களுக்கு அவர் மெட்டமைத்துக் கொடுத்திருக்கிறார்.

ஹனீபாவின் குரல் அவ்வளவு எளிதாக நம்மிடமிருந்து விடைபெறாது. மனத்தில் பதியும்படி ஒருமுறைக்கு இருமுறை சொற்களை அனுபவித்துப் பாடும்முறை அவருடையது. அவர் பாடும்போதே வரிகள் முழுவதும் நமக்கு மனனமாகிவிடும். இனியும் ஒருதரம் பாடமாட்டாரா என ஏங்க வைத்துவிடும் ஆற்றல் அவருக்கே உரியது. ஒருசமயம் விழுப்புரத்தில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இஸ்லாமிய மாநாட்டை நடத்தியிருக்கிறார். அந்த மாநாட்டில் ஹனீபாவும் பங்கெடுத்துப் பாடியிருக்கிறார். எப்பவும்போல கச்சேரிக் களை கட்டியிருக்கிறது. ஆரவாரம் மேலிட அடுத்து அடுத்து என ஆர்வலர்கள் கேட்க அவரும் விடாமல் பாடிக்கொண்டே இருந்திருக்கிறார். பிறகு ஒருவழியாக கச்சேரி முடிந்ததும் அறைக்கு வந்து அயர்ந்து தூங்கியிருக்கிறார். அப்போது யாரோ ஒருவர் அறைக் கதவைத் தட்டும் ஓசை கேட்கிறது. நள்ளிரவில் யாரென்று பதறிப்போய்க் கதவைத் திறந்தால் கலங்கிய கண்களுடன் காயிதே மில்லத் நின்றிருக்கிறார்.

விவரம் என்னவென்று விசாரிக்கையில் ஹனீபா மேடையில் பாடிய ‘மண்ணிலே பிறந்ததேனோ பெருமானே’ என்றப் பாடலை மறுபடியும் கேட்க விரும்புவதாகச் சொல்லியிருக்கிறார். கேட்டவரை மட்டுமல்ல, பாடியவரையும் தூங்கவிடாத அந்தப் பாடலை எத்தனைமுறை கேட்டிருப்பேன் என்பதற்குக் கணக்கில்லை. திரும்பத் திரும்பக் கேட்டாலும் திகட்டாத பாடல்களே அவருடையவை. அவருமே அடுக்குத் தமிழின் அழகுகளில் மயங்கிய திராவிட இயக்கப் பேச்சாளர்களின் மரபில்தான் வருகிறார். சொல்லையும் பொருளையும் உணர்ந்துபாடும் இலாவகமே அவரின் தனித்துவம். நிறுத்த வேண்டிய இடத்தில் நீட்டியும், நீட்ட வேண்டிய இடத்தில் நிறுத்தியும் உச்சரிப்பது அவர் பாணி.

எழுத்தாளர் கி. ராஜநாராயணன் தம்முடைய ‘சங்கீத நினைவலைகள்’ நூலில் ‘தமிழ் இசையில் வர்ணமெட்டுகள்’ என்றொரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அதில், மகாவித்வான் என்.டி. ராமநாதனுக்கும், தீப.நடராஜனுக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்துக் குறித்த தகவல் ஒன்று வருகிறது. தீப. நடராஜனும், கி.ராவும்

என்.டி.ராமநாதனின் இசையில் கிறங்கியவர்கள். ஆனாலும், தீப. நடராஜனுக்கோ ராமநாதன் இசைக்குத் தரும் இடத்தை மொழிக்குத் தர மறுக்கிறாரே என்கிற ஆதங்கம் இருந்திருக்கிறது. அதை அவரிடமே கேட்டுவிடலாம் என்றுதான் கடிதம் எழுதியிருக்கிறார். 'அழகாகப் பாடும் நீங்கள் ஏன் வார்த்தைகளைச் சிதைக்கிறீர்கள்' என்பதுதான் கடிதத்தின் சாரம்.

கேள்விக்குப் பதிலாக ராமநாதன், 'ரயில் போவதற்குத் தண்டவாளம் முக்கியந்தான். ரயிலைப் பாருங்கள், ஏன் தண்டவாளத்தைப் பார்க்கிறீர்கள்' என்றிருக்கிறார். மொழியே பாடலுக்குத் தண்டவாளம் என்பதை மகாவித்துவான் மறுக்கவில்லை. என்றாலும், வார்த்தைகளை உச்சரிப்பதில் அவருக்கு ஏதோ ஒரு தடை இருந்திருக்கிறது. இசைக்கு மொழியில்லை என்பதால் எப்படி வேண்டுமானாலும் பாடலாமென்கிற கருத்தை ஹனீபா ஏற்பதில்லை. ஏனெனில், அவர் மொழிக்காகத் தண்டவாளத்தில் தலைவைத்துப் போராட்டம் நடத்திய இயக்கத்தைச் சேர்ந்தவர். தனிப்பட்ட முறையில் ஹனீபாவை நான் அதிகமும் கொண்டாடுவதற்கு இன்னொரு காரணம் தேவையில்லை.

தாய்மொழியின் காவலராகப் பதிமூன்று வயதில் களமிறங்கிய ஹனீபா, முதுமைவரை அம்முயற்சியிலிருந்து பின்வாங்கவே இல்லை. மூர்க்கக் காதலுடன் அவர் மொழியை அணுகுவதாகப் பலபேர் பரிகாசம் செய்திருக்கிறார்கள். ஆனாலும், அதற்கெல்லாம் அவர் அசரவே இல்லை. தன்னுடைய அடையாளம் எதுவென்பதில் அவருக்குக் குழப்பமே இருந்ததில்லை. மக்கள் மத்தியில் வேறு எந்தப் பாடகருக்கும் கிடைக்காத செல்வாக்கை அவர் அப்படித்தான் பெற்றிருக்கிறார். ஒப்பீட்டளவில் சீர்காழி கோவிந்தராஜன், சிதம்பரம் ஜெயராமன் போன்றோர்க்குக் கிடைத்த திரையுலக வாய்ப்புகள் அவருக்குக் கிடைக்கவில்லை. என்றாலும், அவர்களுக்கும் மேலான பிரபலத்தை அவர் அடைய, அரசியல் கட்சி மேடையும், இஸ்லாமிய இசை மரபும் உதவியிருக்கிறது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் பாடத் தொடங்கிய அவர், சொற்களின் இசைமையில் கொண்டிருந்த மயக்கத்தையே ஒருகட்டத்தில் பாடலாக மாற்றியிருக்கிறார். 'இறைவனிடம் கையேந்துங்கள் /அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' என்று பாடிப் பரவசப்படுத்திய அவரே நாத்திக மேடைகளிலும் காட்சியளித்திருக்கிறார். எனக்குள்ள ஆச்சரியம், ஆத்திகத்தையும் நாத்திகத்தையும் ஒரே மேடையிலிருந்து அவரால் எப்படி ஒருசேர உச்சரிக்க முடிந்தது என்பதுதான். பகுத்தறிவைக் கற்பித்துக்கொண்டே பரம்பொருளையும் நாடிய மனம் அவருடையது.

பொதுக்கூட்ட மேடைகளில், 'ஆறிலும் சாவு / நூறிலும் சாவு / அஞ்சாமல் ஓடிவா/ அண்ணாவின் வழியில் / கண்ணான கலைஞர் / அழைக்கின்றார் ஓடிவா' என்று அவர் பாடத் தொடங்கினால் தொண்டர்களின் உள்ளத்தில் உற்சாகம் பெருக்கெடுத்து




ஓடியிருக்கிறது. வாகனத்தில் இருந்து இறங்குகிறவர்கள், வரிசை வரிசையாக அரங்கத்தை நோக்கி நடக்க, உந்தியெழும் உணர்ச்சிப் பெருக்கில், ‘தன்மான உணர்வும் / தாய்மொழிப் பற்றும் / தாழ்வுற்று அழிவதோ / உன் கண்போன்ற தாயகம் / காட்டிக் கொடுப்போரின்/ காலடியில் கிடப்பதோ’ என்று அவர் பாடி மூட்டிய பாட்டு நெருப்பில் மாநாட்டுப் பந்தலே கனன்றிருக்கிறது. எதற்காகக் கூடுகிறோம், எதை நோக்கிப் போராடுகிறோம் என்பதற்கான விளக்கவுரையாகவே அவர் தம் பாடல்களை அமைத்திருக்கிறார். கூட்டம் எதுவென்றாலும் தொண்டர்களை வரவேற்கும் பதாகையாக அவர் குரலே இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அடையாளங்களில் ஒன்றாக அவர் குரலை இன்றும் வைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

மேடையைக் கொள்கைக்கேற்பவும், கோரிக்கைக்கேற்பவும் தயாரிக்கும் தளகர்த்தராக அவர் இருந்திருக்கிறார். வேறு எந்தக் கட்சியும் செய்ய முடியாத அல்லது செய்யத் துணியாத முன்மாதிரி அவர். இயல்பில் அவருக்கிருந்த இசையார்வத்தைக் கோட்பாட்டு ரீதியாக விரிவுபடுத்திய விவேகம் அவருடையது.

பொதுவாக ஒரு கட்சியைக் காக்கும் அரணாக, அக்கட்சியைச் சேர்ந்த கலைஞர்கள் எவ்விதம் செயல்படவேண்டும் என்பதற்கு ஹனீபாவே ஆகச்சிறந்த உதாரணம். தலைமைக் கழகம் எழுதிக்கொடுத்தோ தாங்கிப் பிடியுங்கள் எனக் கேட்டுக் கொண்டோ பாடல் பிறந்திருக்க வாய்ப்பில்லை. தன்னெழுச்சியாக ஒரு பாடலை உருவாக்கி, அதை மக்கள்

மத்தியில் பிரச்சாரப் பாடலாக்கும் வலிமை அவருக்கு இருந்திருக்கிறது. கன சாரீரத்தில் கருங்கல் கோட்டைகளையும் தவிடு பொடியாக்கும் வித்தையை அவர் கற்றிருக்கிறார்.

உண்மையில், தனிப்பாடல்கள் வழியே மேடைக் கச்சேரிகளுக்கான இடத்தை அவரே உண்டாக்கியிருக்கிறார். கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்த மேடைகளில் போர்க்களப் பாடல்களையும் பாடமுடியும் என நிரூபித்தவர்களில் அவரும் ஒருவர். அவருடைய மேடையும் அமைப்புமுறையும் வித்தியாசமானவை. தோளில் சால்வையை அணிந்துகொண்டு முஷ்டியையும் உள்ளங்கையையும் அவர் மடக்கி மடக்கிப் பாடும் உடல்மொழி ஈர்ப்புக்குரியது. எந்த மேடை என்றாலும் தலையில் குல்லா அணிந்திருப்பார். அதை அவ்வப்போது சரிசெய்தபடியே அவர் மேற்கொள்ளும் ஆலாபனை அரங்கத்தை உயிர்ப்புடையதாக ஆக்கிவிடும். கட்சி மேடைகளில் அவர் எத்தகைய கம்பீரத்துடன் வெளிப்படுகிறாரோ அதே கம்பீரத்துடனே இன்னபிற மேடைகளிலும் அவர் தென்பட்டிருக்கிறார்.

இஸ்லாமிய இசைச் சித்தர் மரபைத் தமிழகத்தில் வளர்த்தெடுத்தவர்களில் தக்கலை பீரப்பா, குணங்குடி மஸ்தான், குலாம் காதிரு நாவலர், செய்கு தம்பி பாவலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அந்த வரிசையில் ஹனீபாவை வைக்க முடியாது. என்றாலும், அவர்கள் அனைவரின் பாடல்களையும் ஹனீபா தம் குரலால் அலங்கரித்திருக்கிறார். ஏட்டில் மட்டுமே இருந்த அவர்களின் ஆன்மிகப் பாடல்களை எல்லோருக்கும் கேட்கும்படியான குரலில் அவரே முழங்கியிருக்கிறார். ஆயிரக்கணக்கில் அவர் பாடி அளித்துள்ள பாடல்களில் ஒன்றையுமே ஒதுக்கமுடியாது. எடுத்த எடுப்பிலேயே உச்சியைத் தொட்டுவிடும் அவர் குரல், எங்கேயாவது இறங்குமா என யோசிப்பதற்குள் முழுபாடலுக்குள் நம்மை மூழ்கடித்துவிடுவார்.

இஸ்லாமியர் வீட்டுத் திருமணங்களில் அவர் பாடக்கூடிய பாடல்களின் தன்மை வேறு தரத்திலானவை. அங்கே அவர் மார்க்கத்தை உத்தேசித்தே பாடுவார். ‘அண்ணல் நபி பொன்முகத்தை / கண்கள் தேடுதே’ என்றொரு பாடல். அப்பாடலில், ‘கஸ்தூரி மணம் கமழும் / தங்கள் மேனியை / இந்தக் கண்களாலே / பருகுகின்ற ஆவல் ததும்புதே’ என்ற வரிகளும், ‘புஷ்பங்களின் மகரந்தமாம் / மதினப் புழுதியில் / நான் புரள வேண்டும் உருள வேண்டும் போலிருக்குதே’ என்னும் வரிகளும் என்னை எங்கேயோ இழுத்துச் சென்றுவிடும். திரைப்பாடலுக்கு இணையாக ஒரு தனிப்பாடலைக் கேட்கத் தூண்டும் முறையில்தான் அவர் ஒவ்வொரு பாடலையும் அமைத்திருக்கிறார். தமிழ்ச்சூழலில் பாடல்கள் வழியே நபித் தோழர்களின் தியாக வாழ்வைப் பொதுவெளிக்குப் புரியவைத்த ஹனீபாவின் ஆற்றல் அளப்பெரியது. உரைநடையில் விளக்குவதே கடினமென்கிற செய்திகளைக்கூட இசைப்படுத்தி மக்கள் மத்தியில் உலவவிட்டிருக்கிறார். குறிப்பாக, ‘பெரியார் பிலாலின் தியாகவாழ்க்கைக் கூறுவேன்’ பாடலைச் சொல்லலாம்.

அப்பாடலை மேடைகளில் பாடுவதற்கு முன்பாக பெரியார் பிலால் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப் பகிர்ந்துகொள்வார். ஹஸ்ரத் பிலாலை நபி பெருமகனார் முஅத்தினாக நியமனம் செய்தபோது நபித் தோழர்களில் சிலர் அதை விரும்பவில்லை. ஏனெனில், ஹஸ்ரத் பிலால் கொன்னல் உள்ளவர். அரபி வார்த்தைகளை நன்கு உச்சரிக்கத் தெரியாதவர். 'அஷ்ஹது' என்பதை 'அஸ்ஹது' என்பார். 'அஷ்ஹது அன் லாஇலாஹா இல்லல்லா' என்றால் வணக்கத்துக்குரியவர் அல்லாவைத் தவிர எவருமில்லை என்று நான் சான்று பகிர்கின்றேன் என்பதாகும். ஒருசொல் மாறி உச்சரித்தால்கூடப் பொருள் மாறுபட்டுவிடும் என்பதால் நபித் தோழர்கள் ஹஸ்ரத் பிலால் பாங்கு சொல்வதைத் தவிர்க்கவேண்டும் என்கின்றனர்.

நபிகளாரோ அந்த உச்சரிப்பிலும் கொன்னலிலும் ஆண்டவனுடைய பக்தியும் இறைத்தூதருடைய காதலும் நிறைந்திருப்பதாகத் தெரிவித்து, எதிர்த்தவர்களை ஏற்க வைத்திருக்கிறார். உள்ளத் தூய்மையும் விசுவாசமும் இருந்துவிட்டால் உச்சரிப்புப் பிழைகளை உதறுவது தப்பில்லை என்பதே நபிகளாரின் அறிவுரை. அதை ஹனீபா உருக்கத்துடன் மேடைகளில் தமக்கே உரிய குழைவுடன் தெளிவுபடுத்தும்போது கண்கள் கசிந்துவிடும். ஓசை ஒழுங்குகளுடன் வார்த்தைகளை உச்சரித்து அவர் அச்சம்பவத்தை விளக்கும்விதம் வேறு எவருக்கும் வாய்க்காதது. சகோதரச் சமயத்தாரிடமும் பெரியார் பிலாலைக் கொண்டு சேர்த்ததில் அவருடைய பங்கே அதிகம். திரையில் இடம்பெற்ற பாரதிதாசன், உடுமலை நாராயணக்கவி பாடல்களையும் ஹனீபா மேடைகளில் பாடுவதுண்டு. திரையிசையிலிருந்து வேறுபட்ட அழகுடன் அவர் பாடியுள்ள பாடல்கள் இணையத்தில் கிடைக்கின்றன.

'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாடலை பி.சுசீலாவைக் காட்டிலும் அதீத உணர்ச்சி பாவத்துடன் ஹனீபா பாடியிருக்கிறார். தொழில்முறை பாடகர்கள் தொடமுடியாத உச்சத்தைத் தொட்டுவிடுவதொன்றே அவர் நோக்கமாக இருந்திருக்கிறது. வேறுபடுவதற்கும் வித்தியாசப்படுவதற்கும் உள்ள மிகச் சிறிய புள்ளியில் அவர் கோடானு கோடிக் கோலங்களை அவர் வரைந்திருக்கிறார். தொடக்கத்தில் இந்தித் திரையிசைப் பாடல்களின் சந்தத்தை உள்வாங்கிப் பாடல்களை அமைத்துவந்த அவர், பின்னாட்களில் தாமே மெட்டமைத்துப் பாடும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார்.

அவர் குரலையும் பாவத்தையும் கிரகித்து அதற்கேற்பப் பாடல்களைப் புனைந்தளித்த புலவர் ஆபிதீன், பேராசிரியர் அப்துல் கபூர், கிளியனூர் அப்துல் சலாம், நாகூர் சலீம் ஆகியோரை இந்த இடத்தில் நினைக்க வேண்டும். மக்கள் உணர்வுகளையும், மார்க்கக் கருத்துகளையும் பிழையின்றி எழுதிய அப்பாடலாசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மார்க்கத்தின் கொள்கைகளையும், தன்மைகளையும் எங்கேயும் அவர் விலகியோ

விலக்கியோ பாடியதில்லை. இஸ்லாத்தில் சொல்லப்பட்டுள்ள அத்தனை கடமைகளையும் பட்டியலிட்டே பல பாடல்களைப் பாடியிருக்கிறார். 'தீன் குல கண்ணு / எங்கள் திருமறைப் பொண்ணு' என்ற ஒரு பாடல் போதும், அவர் எத்தகைய கருத்துகளுடன் இயங்கினார் என்பதை விவரிக்க. அப்பாடலில், **`நகை சுமக்கும் பதுமையாக / மாறவும் மாட்டாள் / பிறர் நகைக்கும்படி வீண் பெருமை / கூறவும் மாட்டாள் / வகை வகையாய் உணவு செய்து / இன்பமூட்டுவாள் / கணவன் வரவறிந்து செலவு செய்து / மீதம் ஈட்டுவாள்'** என்று வரக்கூடிய வரிகள் குறிப்பிடத்தக்கவை. மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கு முரணாக அவர் ஒரு பாடலையும் பாடியதில்லை. மாறாக, குரானிலும் ஹதீஸிலும் உள்ள அரிய செய்திகளையே பாடலாக ஆக்கி அளித்திருக்கிறார்.

என்னை ஆகக் கவர்ந்த 'ஒருநாள் மதினா நகர்தனிலே' பாடலையும், அப்பாடலுக்கு எழுந்த கண்டனங்களையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். தனக்குத் தெரியவந்த செய்திகளைப் பாடலாக்கிப் பாடும் மரபையே ஹனீபா பின்பற்றி வந்திருக்கிறார். சொல்லப்பட்டச் செய்திகளின் உண்மைத் தன்மைக் குறித்தெல்லாம் ஆராயும் போக்கு அன்றைக்கு வழக்கில் இல்லை. வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்ததை நம்பியே உக்காஷாவின் கதையையும் பாடலாக்கினார்.

எத்துணை நீளமான பாடல் வரிகளையும் சோர்வில்லாமல் கேட்கச்செய்யும் சூட்சமத்தை ஹனீபா கற்றிருக்கிறார். இயைபான சொற்களில் எப்படி ஒரு விஷயத்தை அடுக்கிச் சொல்ல வேண்டும் என்பதை அவர் பாடல்களின் வழியே படித்துக்கொள்ளலாம். ஒருமுறை தமிழறிஞரும், சொற்பொழிவாளருமான திருவாரூர் சண்முகவடிவேல், ஹனீபாவைப் பற்றிப் பகிர்ந்துகொண்ட தகவல்கள் சுவாரஸ்யமானவை. இளவயதில் உடனிருந்த தன்னைக் கண்ணியம் குறையாமல் அவர் நடத்திய விதத்தையும், கச்சேரிகளில் நடந்த கலகலப்பான சம்பவங்களையும் அவர் வாயால் கேட்க வேண்டும்.

குன்றக்குடி அடிகளார் பங்கெடுத்த ஒரு கூட்டத்தில் புலவர் ஆபிதீன் எழுதிய 'பாண்டியர் ஊஞ்சலில் ஆடி வளர்ந்த / பைந்தமிழ் அமுதே நீ அம்மா' என்னும் பாடலை ஹனீபா பாடியிருக்கிறார். அப்பாடல் முழுக்கவே தமிழின் சிறப்புகளை எடுத்துரைப்பது. பாடிக்கொண்டே வந்த ஹனீபாவிற்கு இடையில் இரண்டொரு வரி மறந்திருக்கிறது. எனினும், ஆலாபனையை நிரவியபடியே அப்பாடல் வரிகளை நினைவிற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஓசையழகுக் கெடாமல் தமிழை உச்சரித்த அவர், கடைவாயிலேயே கவிதைகளையும் ஒளித்து வைத்திருப்பது போலிருக்கும்.

இறுதிவரை திராவிட இயக்கத்தின் தேவையை உணர்ந்தவராகவே அவர் இருந்திருக்கிறார். களச் செயல்பாட்டின் முன்னணி வீரர்களில் ஒருவராக இருக்கவே அவர் விரும்பியதால் பதவிகளின் மீதெல்லாம் அவர் பார்வை போகவே இல்லை. என்றாலும்,




கழகம் ஒருபோதும் தோற்றுவிடக் கூடாதென்றே உழைத்திருக்கிறார். ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி’ பாடலையும், ‘பாளையங்கோட்டை சிறையினிலே’ பாடலையும் எத்தனைமுறை கேட்டாலும் எனக்குச் சலிக்காது.

ரஜினிகாந்த் நடித்த ‘லால் சலாம்’ திரைப்படத்தில் ‘எல்லாமும் இங்கே / அல்லா உன்னாலே ஆகும்’ என்றொரு பாடலை நான் எழுதியிருக்கிறேன். இசையமைப்பாளர் தேவாவின் குரலில் வெளிவந்துள்ள அப்பாடலை என்னால் எழுத முடிந்ததற்கு முழுமுதற் காரணம் ஹனீபாவே என்றால் மிகையில்லை. மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த என்னாலும் அல்லாவைப் பற்றிப் பிழையில்லாமல் எழுத முடியும் என்கிற நம்பிக்கையை ஹனீபாவின் பாடல்களே வழங்கின.

வரிகளை வாசித்த ஏ.ஆர். ரகுமானே நெகிழ்ந்துபோய், ‘எப்படி எழுதினீர்கள்?’ என்றார். ‘இருக்கவே இருக்கிறதே ஹனீபா ஐயாவின் பாடல்கள்’ என்றதும், அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. எல்லாச் சமூகத்தினருள்ளும் ஹனீபா விதையாக விழுந்திருக்கிறார். வயது வித்தியாசமில்லாமல் அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தக்குரல் அவருடையது. என் இனிய நண்பர் மீரா கதிரவன் இயக்கும்‘ ஹபிபீ’ திரைப்படத்தில் ‘வல்லோனே வல்லோனே / வையம் உன்னாலே’ என்னும் பாடல் இடம்பெற்றிருக்கிறது. அப்பாடலையும் நானே எழுதியிருக்கிறேன். அப்பாடலின் சிறப்பு என்னவென்றால் ஹனீபாவின் குரலிலேயே அப்பாடல் வந்திருப்பது. ‘ஏஐ’ முறையில் அவர் குரலை அப்படியே கொண்டு வந்திருக்கிறார்கள். காலம் கடந்தாலும் அவர் நம்முடனேயே இருக்கிறார் என்பதற்கான அத்தாட்சி அது.

இஸ்லாமிய வாழ்வைப் பிரதிபலிக்கும் ஒரு திரைப்படத்தில் அவர் குரல் இல்லாமல் எப்படி என்கிற எண்ணத்துடனே தோழர்கள் அம்முயற்சியில் ஈடுபட்டதைப் பெருமிதத்துடன் வரவேற்கலாம். 'பூமானின் போதம் / ஈமானே நீதம்' என்றெல்லாம் அப்பாடல் வரிகளை நானெழுத ஹனீபாவே உந்துவிசை என்பதை உணர்ந்துகொள்வது கடினமில்லை. திரைத்துறையில் அவரை இன்னும் கூடுதலாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்கிற ஆதங்கம் பலருக்கு உண்டு. ஆனால், அவருடைய குரலின் தன்மை அனைத்து வகைப் பாடல்களுக்கும் பொருந்துமா எனும் யோசனையில் தவிர்த்திருப்பார்களோ எனத் தோன்றுகிறது.

எது அவருடைய தனித்துவமென்று சிலாகிக்கிறோமோ அதுவேதான் அவருக்குத் திரைத்துறையில் தடையாகவும் இருந்திருக்கிறது. சகோதர மதத்தினர் அவரைத் தம் வீட்டில் ஒருவராகக் கருதும் அளவிற்கு இணக்கத்துடனே அவர் செயல்பட்டிருக்கிறார். 'உன்மதமா என்மதமா / ஆண்டவன் எந்த மதம்?' என்று அவர் கேட்டால், அக்கேள்வி சரியானதே எனச் சகலரும் ஏற்கும் இடத்தில் தன்னை வைத்திருக்கிறார். அவருடைய பாடல் பட்டியலில் எனக்குப் பிடித்ததென்று கணக்கெடுத்தால் ஆயிரக்கணக்கான பாடல்களைச் சொல்ல வேண்டும். சமூகத்தில் ஒரு பாடகராக ஹனீபா ஏற்படுத்தியுள்ள தாக்கம், கணக்கிட முடியாதது. எளிய மனிதர்கள் அத்தனை பேரையும் அவர் வசீகரித்திருக்கிறார்.

இத்துடன் இணைத்துச் சொல்ல வேண்டிய இன்னொரு தகவல், உதயநிதி நடிப்பில் வெளிவந்த 'மாமன்னன்' திரைப்படத்தில் இடம்பெற்ற 'மலையிலதான் தீப்பிடிக்குது ராசா/ ஏம் மனசுக்குள்ள வெடிவெடிக்குது ராசா' என்னும் பாடலைப் பற்றியது. வைகைப்புயல் வடிவேலு அப்பாடலைப் பாடியிருக்கிறார். அப்பாடல் பதிவின்போது ஒரு சம்பவம். முதலில் அப்பாடலைப் பாட வடிவேலு சம்மதிக்கவில்லை. இயக்குநர் மாரி செல்வராஜ், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், உதயநிதி, நான் என எல்லோரும் அவர் பாடுவதை விரும்பினோம். என்றாலும், அவர் பிடிகொடுக்கவில்லை. தன்னால் பாடமுடியுமா? எனத் தயக்கத்துடன் தவிர்த்தார். நாங்களும் விடாமல் அவரை ஒருமுறைக்குப் பலமுறை வற்புறுத்தினோம்.

பிறகு ஒருவழியாகப் பாட ஒப்புக்கொண்டு ஒலிப்பதிவிற்கு வந்தார். வந்தவர், பாடத் தொடங்கினார். என்றாலும், எவ்வளவோ முயன்றும் அவரால் அப்பாடலைப் பாட முடியவில்லை. அழைத்துவிட்டோமே என்கிற தவிப்பு எங்களுக்கு. அவருக்கோ பாட முடியவில்லையே என்கிற பதற்றம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்படியும் பாட வைத்தே தீருவதென்ற முடிவில் இறங்கிய ஏ.ஆர்.ரகுமான் சட்டென்று அவரைப் பாடும் அறையிலிருந்து வெளியே வரச் சொன்னார். வடிவேலும் வெளியே வந்தார்.

வந்தவரைத் தன் அருகில் அமர வைத்துக்கொண்டு பழைய பாடல்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார். குறிப்பாக, ஹனீபாவின் பாடல்கள்.

வடிவேலுவிற்கு ஹனீபாவின் அநேகப் பாடல்கள் அத்துப்படி என்பதால் ஒவ்வொரு பாடலையும் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டார். அவர் கேட்கக்கேட்க வடிவேலுவும் பாடிய படியே இருந்தார். இறுதியில் ரகுமான், 'அடடா என்ன அற்புதமாகப் பாடுகிறீர்கள்' என்று பாராட்டினார். ஒரு மணி நேரங்கழிந்த பின் ஏ.ஆர். ரகுமான், 'சரி இப்போ மலையிலதான் பாட்ட பாடிடுவோமா' என்றார். வடிவேலுவிற்கு ஒன்றும் புரியவில்லை. 'மறுபடியும் முதலில் இருந்தா? என்கிற அவருடைய புகழ்பெற்ற வாக்கியத்தை முகக்குறிகள் தமாஷாகப் பேசின.

அதன்பிறகு கொஞ்ச நேரத்தில் வடிவேலுவின் இருக்கைக்குப் பக்கத்திலேயே ஒலிவாங்கியைப் பொருத்தி, ஹனீபாவின் ஒவ்வொரு பாடலையும் பாடிக் காண்பித்தபடியே மலையிலதான் பாடலைப் பதிவு செய்ய தொடங்கினார். கால் மணி நேரத்தில் முழுப் பாடலையும் வடிவேலு பாடி முடித்தார். வடிவேலுவிற்கே ஆச்சரியம் தாங்கவில்லை. 'அண்ணே.. ஹனீபா ஐயா பாட்டுக்குள்ளதான், மலையிலதான் பாட்டும் இருந்துச்சா' என்றார், வெகுளியாக. அப்போது ஏ.ஆர். ரகுமான் சிரித்தபடியே, 'எல்லாப் பாட்டுக்குள்ளும் எல்லோரின் கூட்டுக்குள்ளும் அவர் இருப்பதால், இந்தப் பாடலையும் எளிதாக உங்களால் பாட முடிந்தது' என்றார். தமிழர்களின் நனவிலி மனத்தில் பதிந்துள்ள ஹனீபாவின் குரலைக் காலக் கரையான்களால் அரிக்கவோ அழிக்கவோ முடியாது.

நாதஸ்வர சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை, குறிப்பிட்ட பருவத்தில் அதுவும் காவிரிக் கரையில் விளைந்த நாணல் தட்டையை மட்டுமே சீவாளியாகப் பயன்படுத்துவாராம். வெற்றிலைக் குதப்பிலில் இருந்து நாணல் தட்டைக்குத் துவர்ப்பை இறக்கி அவர் சீவாளியைத் தயாரிக்கும் முறையைக் கேட்டால் வியப்பே மேலிடுகிறது. அவர், தேர்ந்தெடுத்த நாணல் தட்டைகளைப் பரிசோதிக்க பூதக் கண்ணாடியைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. கோடி கொடுத்தாலும் கிடைக்காத ராஜரத்தினத்தின் தோடியின் சூட்சமம் அது. உண்மையில், இதழ்வைத்து ஊதும் சீவாளியிலும்கூட சங்கீதத்தின் நுட்பம் இருக்கிறது. நாகூர் ஹனீபாவிடம் இசை எங்கிருந்து உருவாகிறது என்னும் கேள்வியை யாரேனும் கேட்டிருக்கிறார்களா எனத் தெரியவில்லை. அப்படிக் கேட்டிருந்தால், 'எனக்குள் அதுவாகவே உருவான இசை, கொள்கைச் சீவாளியில் குடிகொண்டிருந்தது' என்றிருப்பார்.

# இதயங்களை வருடிய இசைமுரசு



நாகூர் ரூமி
எழுத்தாளர்

நாக்கையும் நாதத்தையும், இசையையும் இன்பத்தையும் கொடுத்த இறைவனுக்கே எல்லாப் புகழும். உலகை விட்டு உடலால் மறைந்தபின்னும் வாழும் மனிதர்கள் வெகு சிலரே. அவர்கள் அனைவரும் சாதனையாளர்கள். இந்த வரிசையில் ஆயிரக்கணக்கான, இல்லை, லட்சக்கணக்கான மனிதர்களின் இதயங்களை தன் கம்பீரக்குரலால், காந்தக்குரலால் வருடிக்கொடுத்தவர் மர்ஹூம் இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா மாமா.

மாமா என்று உரிமையாக நான் அவரை அழைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, நானும் நாகூர்க்காரன். இரண்டு, ஹனீபா மாமா அவர்களின் அருமை மகனார் நௌஷாத் என் நெருங்கிய நண்பர். மூன்று, எங்கள் குடும்பத்தை நன்கறிந்தவர் ஹனீபா மாமா. நான்கு, நாங்கள் அடுத்தடுத்த தெருவில் வசித்தவர்கள்.

பள்ளிப்பருவக் காலத்திலிருந்தே அவரது குரலின் ஆயிரக்கணக்கான ரசிகர்களில் நானும் ஒருவன். அவர் மறைந்த

பின்னும் அவரது எதிரொலி என்று சொல்லிக்கொண்டு நம்மை அவஸ்தைக்குள்ளாக்கும் சில 'பிரபல' பாடகர்களே அதற்கு சாட்சி!

கம்பீரமும் இனிமையும் எதிரெதிர் துருவங்கள். ஆனால் ஹனீபா மாமாவின் குரலில் இந்த இரண்டு துருவங்களும் இணைந்தன. அவர் குரலில் எந்த அளவுக்குக் கம்பீரம் இருந்ததோ அந்த அளவுக்கு இனிமையும் இருந்தது.

புலவர் ஆபிதீன் காக்கா, என் மாமா கவிஞர் நாகூர் சலீம், கவிஞர் நாகூர் சாதிக் நானா, கவிஞர் தா.காசிம் என மறைந்த பல புகழ்பெற்ற கவிஞர்களின் பாடல் வரிகளுக்கு இசைமுரசு தன் குரலால் உயிர் கொடுத்தார். அவரது கச்சேரியை நேரில் கேட்பதே மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். அந்த அனுபவத்தை நான் பலமுறை பெற்றிருக்கிறேன். இசைமுரசுக்கு இசைக்கருவிகளை வாசித்த, இசையமைத்த இன்பராஜ் போன்ற பலரை நான் நெருக்கமாக அறிவேன்.

இசைமுரசு அளவுக்கு உச்சத்தைத் தொட்ட பாடகர்கள் யாருமே இல்லை. இனி அப்படியொருவர் வருவதும் சாத்தியமில்லை என்றே நினைக்கிறேன். அது இறைவனால் அருளப்பட்ட அருட்கொடை. நாகூர் பெரிய எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களைப் புகழ்ந்து ஞானி குணங்குடி மஸ்தானால் இயற்றப்பட்ட 'திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து' என்ற பாடலை இசைமுரசு அவர்களைத் தவிர வேறு எந்த மனிதராலும் அந்த உச்சத்தில் அவ்வளவு இனிமையாகப் பாடவே முடியாது.



இசைமுரசின் பாடல்களின் இன்னொரு முக்கியமான சிறப்பு அவற்றை முஸ்லிமல்லாத, மாற்று மதத்தைச் சேர்ந்த பல பாடகர்களும் பாடினர், பாடுகின்றனர். மதங்களைக் கடந்து மனங்களை இணைக்கும் கந்தர்வக்குரல் அவரது. 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்ற பாடல் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களாலும் கச்சேரியில் பாடப்பட்டது! இணையத்திலும் அதைப்பார்க்கலாம்.

இசைமுரசுக்கும் தி.மு.க.வுக்கும் இருந்த உறவு முக்கியமானது. தி.மு.க. ஆட்சியில் அமர்வதற்கு இசைமுரசின் பாடல்களும் ஒரு

முக்கிய காரணம். நாகூரிலிருந்த தனது வீட்டுக்கு 'அண்ணா இல்லம்' என்றே அவர் பெயர் வைத்திருந்தார்.

கலைஞரின் தோள்மீது கைபோட்டுப் பேசக்கூடியவர் இசைமுரசு. பட்டுக்கோட்டை அழகிரி, பெரியார், அண்ணா, கலைஞர், காயிதே மில்லத் என அனைவரின் அன்பையும் பெற்றவர் இசைமுரசு. தமிழக அரசியல் களத்திலும், இஸ்லாமியப் பண்பாட்டுத் தளத்திலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர். அவரது பாடல்கள் ஒலிக்காத பெருநாள்கள் இல்லை. அவர் குரல் கேட்காத அரசியல் கூட்டங்கள், திருமண நிகழ்ச்சிகள் இல்லை. அவரது பாடல்களில் உருகாத நெஞ்சங்கள் இல்லை.

பள்ளிக்கூடத்தில் இறைவணக்கம் பாடியதுதான் அவரது முதல் பாடல் அனுபவமாம். இறைவணக்கத்தில் துவங்கிய அவரது இசை வாழ்வு இறைவனோடு அவர் சென்று சேரும்வரை தொடர்ந்துகொண்டே இருந்தது. அந்த கணீர்க்குரல், கம்பீரக்குரல், கந்தர்வக்குரல் உலக முடிவு நாள்வரை தமிழுலகில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

சங்கீதம் கற்றவரல்ல இசைமுரசு. ஆனால் பாடும்போது சட்ஜமத்திலிருந்து நிஷாதம்வரை அவர் தொடாத ஸ்வரஸ்தானங்களே இல்லை! சில திரைப்படங்களில் அவர் பாடியுள்ளார் என்பது அத்திரைப்படங்களின் புகழுக்குச் சாட்சியாகும்.

அந்தக்காலத்தில் நாகூரிலும் வேறு ஊர்களிலும் நடந்த திருமண நிகழ்ச்சிகளில், மாப்பிள்ளை அல்லது பெண் வீட்டில் இசைமுரசின் கச்சேரி நடக்கும். அப்போதெல்லாம் நான் போய் நின்று கேட்டு ரசித்து வருவேன்.

ஒரு புத்தகத்தால், ஒரு அரசியல் நிகழ்வால் சொல்லமுடியாத செய்தியையெல்லாம் அவருடைய ஒரு பாடலால் சொல்ல முடிந்தது. 'மலையாளக் கரைதனிலே இரத்த ஆறு ஓட்டம், மாப்பிள்ளைமார் சேவைகளை நினைவு படுத்திக்காட்டும்' என்ற ஒரு பாடல் போதும், கேரள மாப்பிள்ளைமார்களின் தியாகத்தையும் சேவைகளையும் நமக்கு எடுத்துச் சொல்லிவிடும்.

அவரது ஆயிரக்கணக்கான பாடல்களும் இசைத்தட்டுக்களும் உலகம் உள்ளவரை அவரது புகழைப் பாடிக்கொண்டே இருக்கும்!

இறையருளால் ஹனீபா மாமா 90 வயதுக்கும் சற்றுக்கூடுதலாக வாழ்ந்தார். உடல்நலக்குறைவால் சென்னையில் கோட்டூர்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அவரது உயிர் பிரிந்தது. ஆனால் அவரது குரல் எப்போதும் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

# பெருவெள்ளத்தின் பேராற்றல்



களந்தை பீர்முகம்மது
எழுத்தாளர்

1990ஆம் ஆண்டு கோவில்பட்டியின் அருகிலுள்ள பேரிலோவன்பட்டியில் அமைந்துள்ள சாமிநாடார் மேல்நிலைப் பள்ளியில் நான் இருந்தேன். அன்றைக்கு அங்கே நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சார்பில் மாணவர்களுக்குப் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதன் காரணமாக நான் அங்கு போயிருந்தேன்.

பள்ளிக்கூடத்தின் காலை நேரப் பிரார்த்தனை நிகழ்வு முடிந்து மாணவர்கள் அனைவரும் தத்தமது வகுப்பறைகளுக்கு ஒருவர்பின் ஒருவராகத் திரும்புகிறார்கள். அப்போது ஒலிக்கிறது ஒரு பாடல், “இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை / பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை.” அந்தச் சூழலில் அந்தப் பாடல் ஒலித்தபோது நான் என்னை மெய்மறந்து நின்றேன், ஒரு முஸ்லிமாக அல்ல; ஒரு மனித நேயனாக!



தமிழர்கள் உருவேற்றப்பட்ட தம் ஆன்மீக உணர்ச்சிகளால் கறைபடியாத பொற்காலம் அது என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. அதே போன்ற ஒரு நிகழ்வு ஓர் இஸ்லாமியக் கல்வி நிறுவனத்தில் நடக்கும்போது சீர்காழி கோவிந்தராஜனின் பாடல் ஒலித்திருந்தாலும் நாம் ஒரு மனித நேயனாக மெய்மறந்துதானே நின்றிருப்போம்?

இந்தச் சூழலிலிருந்துதான் நாகூர் ஹனீபாவின் இசைப் பணியையும் அவர் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய பணியையும் அளவிட வேண்டியதாக இருக்கின்றன.

தமிழ்நாட்டின் இசைக் கலைஞர்களில் நாகூர் ஹனீபாவிற்கான இடம் தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இங்கு ஒரு பாடகர் புகழடைய வேண்டுமெனில் திரைத்துறையில் அவர் ஈடுபட்டவராக இருந்திருக்க வேண்டும்; அதிலும் சாதாரணப் பாடகராக இருந்தாலும் பயனில்லை; பிரபலமான பாடகராக, பிரபலமான நடிகர்களுக்காக அவர் பாடியிருக்க வேண்டும். ஆனால் இந்தத் தன்மைக்கு அப்பால் நிற்கிறார் அவர்.

நாகூர் ஹனீபா புகழ்பெற்ற ஓர் இசைக் கலைஞராக ஒளிர்ந்ததற்கான காரணங்களாக இரண்டினைச் சொல்லலாம். முதலில் அவர் ஓர் இஸ்லாமியப் பாடகர்; இரண்டாவது, அவர் தி.மு.கழகத்தின் சிம்மக் குரலோனாக இருந்திருக்கிறார். 1950களில் தி.மு.கவும் அரசியல் சார்பான நிலையில் பெரிய கட்சியாக இருந்திருக்கவில்லை. அது அப்போதுதான் தோன்றி வளர்ந்துவரும் நிலை. நாகூர் ஹனீபா இந்தக் கழகத்துடன்தான் தன் அரசியலை இணைத்துக்கொண்டிருந்தார். இந்த இரண்டு வகைகளிலுமான

தொடக்க நிலை வலுவில்லாத அல்லது வளர்ச்சியடைந்திராத நிலையிலிருந்துதான் நாகூர் ஹனீபாவின் குரல் தமிழ் மக்களோடு தன் உறவை வளர்த்துவருவதாக இருந்திருக்கிறது. இதுவே நாகூர் ஹனீபாவின் தனித் தன்மைக்கு உரைகல்லாக அமைந்தது.

இஸ்லாத்தையும் கழகக் கொள்கைகளையும் மட்டுமே பாடிவந்த நாகூர் ஹனீபாவைத் தமிழ்நாடு தன் இதயத்தில் ஏற்றிக் கொண்டாடியது. அதற்கு அவருடைய பாடல்களும் அவரின் குரல்வளமும் காரணமாக இருந்தன. இன்னொரு காரணமும் உண்டென்று சொல்ல வேண்டும். அது அவரின் தீராத தமிழ்ப் பற்றாகும். இஸ்லாமியப் பாடல்களையும் கழகத்தின் கொள்கைப் பாடல்களையும் பாட நேரும்போது அவர் புதிய புதிய சொற்களை அவற்றின் லாவகங்களோடு உச்சரிக்க வேண்டிய நெருக்கடி இருந்தது. ஏனெனில் தி.மு.கழகம் தமிழ்நாட்டிற்குப் பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை முன்னெடுத்துத் தமிழ் மக்களிடையே பரப்பி வந்திருக்கிறது. அதற்கேற்ற சொற்கள் பாடல்களில் இருந்தாக வேண்டுமல்லவா? இதையெல்லாம் கணக்கில் கொண்டு பாடினால்தான் அவரால் தன் நோக்கத்தின் இலக்கை அடைய முடியும்; மக்களுக்கும் அதன் நேரிய அம்சங்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு வந்து சேரும். அதை அவர் யாதொரு பிசிறுமின்றிப் பாடினார். அதனால்தான் மதத்தையும் கட்சியையும் தாண்டி அவர் அனைவரின் மதிப்பிற்குள்ளும் நுழைந்தார்.

தமிழ், இஸ்லாம், கழகம் என மூன்றும்தான் அவரின் ஒரே சுவாசம். ஒன்றோடொன்று முட்டி மோதவில்லை. இதை அவரின் சாதனையாகக் குறிப்பிட வேண்டும். மூன்றுக்குமான முரண்கள் என எவையும் ஊடறுக்காமல் அவரோடு இசைந்திருந்தமையை விவரிக்கும் ஆற்றல் நம்மிடம் இல்லை. தி.மு.கழகத்தின் கொள்கைக் கோட்பாடுகள் இஸ்லாத்தின் கோட்பாட்டிற்கு நெருக்கமாக அமைந்துவிட்டதால் அவருக்கு மனத்தடைகளும் ஏற்படவில்லை. மார்க்கம் சார்ந்த மேடைகளில் அவர் இஸ்லாமியப் பாடல்களைப் பாடிய அதே வேகத்தில் கழகத்தின் பாடல்களையும் பாடி மகிழ்வித்தார்.

பல சமயங்கள் சார்ந்து தமிழில் ஒலிக்கும் பக்திப் பாடல்களில் காணக் கிடைக்காத இன்னொரு கூறு என்னவென்றால், தன் பாடல்களில் பெண் குரலையும் இணைத்துக்கொண்டதுதான்; அந்தப் பாடல்களுக்கான மெட்டுகள் பெண்குரலை இயல்பாகச் சேர்த்துக்கொள்ளக் கூடியனவாக அமையும்படிப் பார்த்துக்கொண்டார். அவரோடு இணைந்து பாடிய பாடகி ராணி ஒரு முஸ்லிமாக அல்லாதபோதும் அரேபியச் சொற்களை அதன் ஒலிப்புத் தன்மை மாறாமல் அவரைப் பாட வைத்தது இன்றளவும் பேசுபொருளாக இருக்கிறது. மரபார்ந்த இசைக்கு அளித்த முக்கியத்துவத்தைப் புதுமைநாடும் பாங்குக்கும் நகர்த்திச் சென்றதில் நாகூர் ஹனீபா ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

இஸ்லாத்தின் மார்க்க நெறிகளில் மனம் தோய்ந்த அறிஞர்கள் பொதுவாக இசையை இஸ்லாத்தின் பண்பாட்டுப் பகுதியாக ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள். இசை முஸ்லிம்களின் மனங்களை மயக்கி இறைமைச் சிந்தனையிலிருந்து விலக்கிவைத்துவிடும் என்கிற கருத்துகள் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டிலும் நிலவிவந்தன. அப்படியே நாகூர் ஹனீபாவின் கலைப் பணிக்கும் ஆரம்பக் காலத் தடைகள் இருந்தன. ஆனால் அவற்றைப் பொருட்படுத்தாமல் அவர் மார்க்க மேடைகளில் ஏறினார். பெரும் இசைக் கச்சேரிகளில் பயன்படுத்தும் இசைக் கருவிகளெல்லாம் இல்லாமல் இசைக்குத் தேவைப்படும் எளிதான, மிகக் குறைவான கருவிகளோடு மேடைகளை ஆக்கிரமித்துக்கொண்டார்; அதன் வழியே முஸ்லிம்களின் இதயங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டார்; அதன் வழியே மதமாச்சரியங்கள் இல்லாமலிருந்த தமிழர்களின் மனங்களையும் வசப்படுத்திக் கொண்டார். இதெல்லாம் ஒரு கலைஞராகச் சமூகத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்கிற நுட்ப அறிவினால் சாத்தியமானது. ஆகவே அவரை ஒரு சமூக ஞானி என்றும் நாம் தாராளமாக வரையறுக்கலாம்.

அரேபிய மண்ணின் ஆன்மிக மார்க்கத்தையும் திராவிட இயக்கத்தின் பகுத்தறிவு, சுயமரியாதை போன்றவற்றையும் ஒருசேரக் கையாளும்போது நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குச் சில முரண்பாடுகள் எழுகின்றன. ஆனால் நாகூர் ஹனீபா அத்தகைய பாடல்களில் மூட நம்பிக்கைகள் கலந்துவிடாதபடிக் கவனமாக இருந்து வந்துள்ளார். அவ்வகையில் இஸ்லாமியப் பெரியோர்களின் சமூகம்சார்ந்த அணுகுமுறைகளை, வரலாறுகளை வெளிப்படுத்தும் பாடல்களுக்கு முன்னுரிமை அளித்து வந்திருக்கிறார். அதற்கேற்றபடியான பாடலாசிரியர்கள் அவருக்கு அமைந்ததையும் ஒரு வரம் என்றுதான் சொல்ல வேண்டும். இதனால்தான் அவருடைய, “இறைவனிடம் கையேந்துங்கள்” பாடலைச் சகோதரச் சமயத்தவர்களும் தங்களின் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பாடிவந்துள்ளனர். சமயச் சார்பில்லாமல் அனைத்துத் தரப்பினரையும் கவர்ந்திழுத்த பாடலல்லவா அது?

ஆன்மிகத்தையும் திட்டவட்டமான அரசியலையும் இணைத்துச் செயல்பட்ட வேறு பாடகர்கள் நம்மிடையே இல்லை. ஒன்றினால் இன்னொன்று பாதிக்கப்படும் என்கிற நிலையிருந்தாலும் அவர் அதை அலட்சியப்படுத்திதான் இருக்கிறாரென்று தெரிகிறது. அதற்கான காரணங்கள் அவருடைய இளம்பருவம் தொட்டே இருந்து வந்திருப்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஓர் இசைக் கலைஞர் அரசியலுக்கான போராட்டக் களங்களில் ஒரு போராட்டக்காரராகவும் இருந்திருப்பதை அவருடைய வாழ்க்கையை உற்றுநோக்கும்போது தெரிய வருகிறது. ‘குடியரசு’ இதழைத் தொடர்ந்து வாசித்துவந்ததின் மூலம் அவர் ஆரம்பக் காலத்திலேயே சுயமரியாதை உணர்வைப் பெற்றுவிட்டார்; மொழியுணர்வையும் பெற்றுவிட்டார். 1937ஆம் ஆண்டில் இந்திமொழியைத் தமிழ்நாட்டில்



திணிக்கும் முயற்சியை கண்டித்து நாகூரில் நடைபெற்ற கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் ஹனீபா தன்னையும் ஒரு தொண்டராக இணைத்துக்கொண்டார். அதில் அவருக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. ஆனாலும் அவர் சிறைவாசம் அனுபவிக்கவில்லை. அதற்கான காரணமும் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. அதாவது, அவருக்கு அப்போது பதின்மூன்று வயதுதான். அதன் பொருட்டாக அவரைச் சிறையில் அடைக்க விதியில்லாததால் வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். ஒருவர் தன் பதின்மூன்றாவது வயதிலேயே மொழி, அரசியல் உணர்வுகளைக் கொண்டுவிட்டாரேயானால், அப்புறம் அவருடைய வாழ்க்கை ஒரு பெருவெள்ளமாகத்தான் அன்னாரின் வாழ்நாள் முழுதும் பொங்கிப் பிரவகிக்கும். இதுபோன்ற போராட்டக்காரர்கள் காலம்தோறும் உருவாகி வந்திருப்பதை உலக வரலாற்றின் பல்வேறு பக்கங்களில் நாம் பார்க்க முடியும். நாகூர் ஹனீபாவிற்கும் இதுதான் நேர்ந்தது.

இதுபோக அவர் வேறுபல போராட்டங்களிலும் கலந்துகொண்டு பதினொரு முறை சிறை சென்றுள்ளார். இச்செய்திகள் நமக்குத் தெளிவாகக் காட்டும் உண்மை என்னவென்றால் அரசியல் உணர்வும் சுயமரியாதை உணர்வும் மொழிப் பற்றும் அவரை அவருடைய இளம் காலம்தொட்டே பின்னிப் பிணைத்து வந்துள்ளமையைத்தான். இவ்வளவு உணர்வெழுச்சிக் கொண்ட இளைஞருக்கு அரசியல் களப்பணியை எவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியிருக்கும். அப்படியானால் அதைத் தன்னிடம் பொதிந்துள்ள கலையம்சத்தோடுதான் செய்தாக வேண்டும் என்ற திட்டமிடலில் அவர் பாடகராய் மாறினார். அதன்பின் தான் ஏற்றுக்கொண்ட தி.மு.கழகத்தின் அரசியலை விட்டு அவர் எங்கும் நகர்ந்தாரில்லை. மாறாக, கழகத்திலிருந்து வெளியேறிச் சென்றவர்கள் எப்படிப்பட்ட ஆளுமைகளாக இருந்தாலும் அவர் அதைப் பொருட்படுத்தாமல்

அவர்களையும் விமர்சனம் செய்தே பாடிவந்திருக்கிறார். ஒரு தீவிரமான விசுவாசியாக, திராவிடத் தன்னுணர்வாளராக அவர் தன்னை உருவேற்றிக்கொண்டது தற்செயலான நிகழ்வல்ல என்று இதுபோன்ற செய்திகள் காட்டுகின்றன. தன்னுடைய இறுதிநாள்வரை அவர் எள்ளளவும் தளர்வுறாமல் இப்பெருவெள்ளத்தில் நீந்திவரும் அசகாயச் சூரராக இருந்திருக்கிறார்.

கொள்கைப் பற்றுக்கான அவருடைய உறுதி அவருக்கான பொருளாதார வாய்ப்பையும் பறித்திருக்கிறது; புகழ்பெறுவதற்காகத் தனக்குக் கிடைக்கப் போகும் அனைத்து வாய்ப்புகளையும் ஏற்றுக்கொள்ள விரும்பாதவராக அவர் இருந்திருக்கிறார். சென்னை வானொலி நிலையம் 1955 ஆம் ஆண்டில் தன்னை ஆகாசவாணி என்று அழைக்கத் தொடங்கியதை அவர் விரும்பவில்லை. இதன் காரணமாக அவரின் இயல்பான தமிழ்ப்பற்றும் திராவிடக் கொள்கையும் அவரைத் தன் வாழ்நாள் முழுக்கவும் ஆகாசவாணியைப் பயன்படுத்த விடாமல் தடுத்துவிட்டது. ஆனால் பிற்காலங்களில் வானொலி தன் நிகழ்ச்சியினைத் தொடங்கும்போது ஒலிபரப்பும் ஆன்மிகப் பாடல்களில் நாகூர் ஹனீபாவின் பாடல்கள் தவிர்க்கப்பட முடியாத அளவில் இடம்பெற்று வந்துள்ள முரண்பாட்டைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அண்மையில் வாசித்த ஒரு செய்தியின்படி நாகூர் ஹனீபா கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்காகத் தன்னுடைய இசை நிகழ்ச்சிகளைப் பல்வேறு ஊர்களில் நிகழ்த்தி வந்ததாகத் தெரியவருகிறது.

இஸ்லாமிய மார்க்க ரீதியான அவருடைய கலைப் பணிகள் ஒருபுறம் தொடர்ந்தபடியிருக்க, அவர் சகோதரச் சமூகத்தின் ஆன்மிகப் பெரியோர்களுடனும் நல்லுறவைக் கொண்டிருக்கிறார். அவருடைய நிகழ்ச்சிகளில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், மதுரை ஆதீனம் போன்றோர் பங்கெடுத்து உரையாற்றியமையைச் சான்றுகளாகக் காட்டலாம். அது மட்டுமல்லாமல் அவருடைய பாடல்களையும் அதே மேடைகளில் கேட்டு இன்புற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் சமய நல்லிணக்கத்திற்கான நாகூராரின் பங்களிப்பாக மட்டுமே இவற்றைக் கருதாமல் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பாகவும் இவற்றைக் கருத வேண்டும். இவற்றை மறக்கவோ மறைக்கவோ முடியாது.

# திராவிடத்தின் இசை முரசு



கோம்பை எஸ். அன்வர்
எழுத்தாளர்

1930களில் நாகூரில் உள்ள செட்டியார் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும், இளம் மாணவனாக, இஸ்லாமிய பிரார்த்தனை பாடலைப் பாட ஆரம்பித்த இ.எம். ஹனீபா விரைவில் அது தன் வாழ்நாள் தொழிலாக மட்டுமின்றி, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தின் அழைப்புக் குரலாகவும், கோடானு கோடி தமிழர்களின் அபிமான குரலாகவும் மாறும் என்று நினைத்திருக்க மாட்டார். ஏனென்றால் அவருக்கு இசையில் முறையான பயிற்சி இல்லை.

1925 டிசம்பர் 25ஆம் தேதியன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வெளிப்பாளையத்தில் பிறந்த ஹனீபா, வளர்ந்ததெல்லாம் தந்தையின் ஊரான, நாகூரில். மலேசியாவில் பணிபுரிந்த தந்தை, கிராமபோன் ஒன்றை வீட்டிற்குக் கொண்டு வர, கவ்வாலி இசையிலும், அன்று பிரபலமான தமிழ் இஸ்லாமிய பாடகர் காரைக்கால் A.M. தாவூத்தின் இசை தட்டுகளையும் கேட்டு தன் இசை ஞானத்தை மெருகேற்றிக் கொண்டார்.



இளம் வயதாயினும், ஹனீபாவின் அட்சரப் பிழையின்றிக் கணீரென்று ஒலிக்கும், மனதைக் கவரும் குரலினால் 'நாகூர் கவ்தியா பைத்து சபை'யின் முன்னிலைப் பாடகராக, திருமண ஊர்வலங்களிலும், மேடைகளிலும் மற்றும் மிலாது நபி போன்ற சமூக நிகழ்ச்சிகளிலும் அவருக்குப் பாட வாய்ப்புக் கிடைத்தது. பின்னாளில் தனது நண்பரான நாகூர் தர்கா வித்வான் ஷிவிகி காதர் அவர்களுடைய உதவியுடன் கர்நாடக இசையில் தனது ஞானத்தை வளர்த்துக் கொண்டார்.

### திராவிட இயக்க ஈடுபாடு

தனது சிறு வயதில், மலேசியாவில் வேலை செய்து வந்த தந்தைக்கு, அவர் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, சுயமரியாதை இயக்க ஏடான பெரியாரின் "குடி அரசு" மற்றும் தமிழ் இஸ்லாமிய மறுமலர்ச்சியைப் போதித்த பா. தாவூத் ஷாவின் "தாருல் இஸ்லாம்" ஆகிய பத்திரிகைகளை வாங்கி அனுப்புவது ஹனீபாவின் வழக்கம். அனுப்பும் முன்னர் அவற்றை ஆர்வமாக படித்த ஹனீபாவிற்கு, சுயமரியாதை இயக்கத்தின்பால் ஈர்ப்பு ஏற்பட்டது. அதன் தாக்கம், 1938-ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கறுப்புக்கொடி காட்டுமளவுக்கு ஹனீபா மாறினார்.

திருவாரூரில் உறவினர் கடையில் வேலை செய்யச் சென்ற போது, ஹனீபாவைப் போலவே, மேடையில் ஏறி இளம் வயதிலேயே சுயமரியாதை கருத்துகளை முழங்கிய முத்துவேல் கருணாநிதியுடன் தொடர்பு ஏற்பட்டது. ஹனீபாவை விட ஏறக்குறைய ஓரிரண்டு வயது மூத்தவர் கருணாநிதி. 1940ல், திருவாரூரில் பெரியாரின் தலைமையில் நீதிக்கட்சி மாநாடு நடந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மாநாட்டில் நாகூர் தொண்டர் படையுடன் பங்கேற்ற ஹனீபா, பெரியாரின் வேண்டுகோளை ஏற்று, சில மாதங்களுக்கு முன்னர் இலண்டனுக்குச் செல்லும் வழியில் விமான விபத்தில் மறைந்த, நீதிக்கட்சித் தலைவர் ஏ.டி.பன்னீர்செல்வத்தின் எதிர்பாரா சோக மரணம் குறித்து,

"பரகதி சேர்ந்தனையோ பன்னீர்ச் செல்வமே", என்று ஹனீபா பாட, கூடியிருந்த மக்கள் தாங்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுதனர்.

1945 ஆம் ஆண்டு நாகூரில் மாணவர்கள் பிரசங்கப் பயிற்சிக் கழகம் எடுத்த விழா ஒன்றில் தமிழறிஞர் சண்முக தேசிகர் அவர்கள் நாகூர் ஹனீபாவின் கம்பீரமென ஒலிக்கும், அனைவரையும் ஈர்க்கும் இனிய குரல் கேட்டு அவர்களுக்கு, 'இசைமுரசு' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். பின்னர் அவர் தமிழக அரசின் 'கலைமாமணி' உட்பட பல பட்டங்களை பெற்றாலும் அதுவே காலத்துக்கும் அவரோடு ஒட்டிக்கொண்டது.

தந்தை பெரியாரின் மயிலாடுதுறை - நாகை சுற்றுப்பயணங்களில் உடன் பயணித்து திராவிட இயக்கப் பாடல்கள் பாடுவது ஹனீபாவின் வழக்கம். இருப்பினும் பேரறிஞர் அண்ணா 1949ல் தந்தை பெரியாரிடம் பிரிந்து, திராவிட முன்னேற்ற கழகத்தைத் துவங்கியவுடன், அதனை ஆதரித்து, தந்தி மூலம் முதல் வாழ்த்தினைத் தெரிவித்தது மட்டுமல்லாமல், அண்ணாவுடன் அரசியலில் ஐக்கியமாகி, தி.மு.க.வின் கொள்கைகளை, எழுச்சிமிக்க பாடல்களாகப் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் கொண்டு செல்லத் தொடங்கினார்.

'நம் நாடு' பத்திரிகையில் வெளியான "அழைக்கின்றார் அண்ணா .."பாடலை ஹனீபா பாட வேண்டும் என்று கருணாநிதி விரும்ப, மேற்கொண்டு நடந்ததை கருணாநிதியே ஹனீபாவின் முத்து விழா மலர் (1993) வாழ்த்துரையில் விவரிக்கின்றார், "அழைப்பு விடுத்தேன் பாடச் சொல்லி! மெட்டு அமைத்து பாடிக் காட்டினார்! அந்தப் பாடல் ஹனீபாவுக்கு திருவாவடுதுறை ராஜரத்தினத்துக்கு தோடி ராகம் போல! எங்கு சென்றாலும் அந்தப் பாடலைப் பாடச் சொல்கிறார்கள். நான் எழுதிய திரைப்படம் ஒன்றில் அந்தப் பாடலை ஹனீபாவே பாட வேண்டுமென்றேன், பாடினார். ஆனால் அந்தக் காலத்துத் தணிக்கை அதிகாரி அந்தப் பாடலை வெட்டி விட்டார்."

"அழைக்கின்றார் அண்ணா" என்று ஹனீபாவை பாடவைத்துப் படம் எடுத்து, அதைத் திரையிட அரசு அனுமதித்தால் திராவிட நாடு பெற்று விடுவேன் என்று அண்ணா சொல்லுமளவுக்கு 'மோகன' ராகத்தில் பாடப்பட்ட அப்பாடல் சாமானிய மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அதனால் என்னவோ ஏ. பீம்சிங் இயக்கத்தில் உருவான 'அம்மையப்பன்' படத்தில் சேர்க்கப்பட்டிருந்த அப்பாடலை தணிக்கை அதிகாரிகள் நீக்கிவிட, சற்றும் மனம் தளராமல் HMV நிறுவனத்தின் இசைத்தட்டாக ஹனீபா வெளியிட்டு தமிழக மக்களிடம் பாடலைக் கொண்டு சென்றார். 1956இல் 'ஆல் இந்திய ரேடியோ'வின் பெயர் அன்றைய மத்திய அரசால் 'ஆகாசவாணி' என்று மாற்றம் செய்தபோது, தமிழகத்தில் பல கண்டனக் குரல்கள் எழுந்தன. தனது அரசியல்

பயணத்தை மாணவப் பருவத்திலேயே இந்தித் திணிப்பு எதிர்ப்பாளராக ஆரம்பித்தவர் நாகூர் ஹனீபா. கொதித்துப் போனார். இனிமேல், தான், தமிழர்களின் உணர்வினை மதிக்காத 'ஆகாசவாணி'யில் பாடுவதில்லை என்று தன் எதிர்ப்பைச் செயலில் காட்டினார்.

தி.மு.க.வின் வளர்ச்சியில் ஹனீபாவின் தன்னலமற்ற உழைப்பினை நன்கு உணர்ந்த பேரறிஞர் அண்ணா, 1966ல் ஹனீபா, நாகூரில் வீடு கட்டி அதற்கு 'அண்ணா இல்லம்' என்று பெயரும் வைக்க, ஏற்கனவே அறிவித்திருந்த நிகழ்ச்சி நிரல் எல்லாவற்றையும் ரத்து செய்துவிட்டு நாகூருக்கு நேரில் சென்று 'புதுமனை புகு' விழாவில் கலந்து கொண்டார்.

'கல்லக்குடி கொண்ட கருணாநிதி' என்ற எண்ணற்ற ஹனீபாவின் பாடல்கள் தி.மு.க.வைப் பலப்படுத்தின. ஹனீபாவின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டு அவருக்குப் பாடல்கள் எழுதித் தர புலவர் ஆபிதீன், சமுதாயக் கவிஞர் தா. காசீம், கவிஞர் சலீம், சாரண பாஸ்கரனார், கவிஞர் அப்துல் சலாம், பேராசிரியர் கா.அப்துல் கஃபூர், கவிஞர் அப்துல் ரஹூம், கவிஞர் வீரை ரஹூமான் என்று பல நண்பர்கள் இருந்தனர்.

வெறும் இசைப்பணியை மட்டும் தன் இயக்கப் பணியாகக் கொண்டிராமல், களத்திலும் சரிக்குச் சமமாக இறங்கி வேலை செய்தவர் ஹனீபா. அறிஞர் அண்ணாவுடன் சேர்ந்து உரக்கப் பாடிக்கொண்டே திருச்சி மாநகரின் தெருக்களில் கைத்தறி விற்றதாகட்டும் அல்லது இந்தி எதிர்ப்பில் சிறை சென்றதாகட்டும், ஹனீபா தன்னை முழுவதுமாக இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். 1957 தேர்தலில் நாகப்பட்டினத்தில், 2002 இடைத்தேர்தலில் வாணியம்பாடியில் போட்டியிட அவருக்குக் கட்சி வாய்ப்பு வழங்கியது. இரண்டிலும் அவர் தோல்வியுற்றாலும், அவரை தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு. கருணாநிதி மேல்சபை உறுப்பினராக்கினார். பின்னர் அவரை வக்ப் வாரியத் தலைவராக்கியும் மகிழ்ந்தார். பெரிதும் படித்திராத ஹனீபாவிற்குப் பதவிகளைத் தேடித் செல்வதில், வகிப்பதில் பெரும் ஆர்வம் இருந்ததில்லை என்கிறார் அவரது மகன் நவ்ஷாத் அலி.

திராவிட இயக்கத்தைத் தாண்டி ஹனீபா பெரிதும் மதித்த தலைவர் இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். காயிதே மில்லத்தும் ஹனீபாவின் தீவிர மாபெரும் ரசிகர். விழுப்புரத்தில் நடந்த முஸ்லீம் லீக் மாநாட்டில் ஹனீபாவின் பாடலைக் கேட்டு உறங்க முடியாமல் அவரை நள்ளிரவில் மீண்டும் பாடக் கேட்டு மகிழ்ந்தவர். 'இதுதான் நாங்கள் செய்த துரோகமா?' மற்றும் 'மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே' ஆகிய பாடல்கள் அவருக்கு மிகவும் பிடித்த ஹனீபாவின் பாடல்கள். 1972-ல் காயிதே மில்லத் மறைந்த பொழுது அவரது நல்லடக்கம் திருவல்லிக்கேணி பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது. அப்போது இறுதி

மரியாதை செய்ய அங்கு வந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் மு. கருணாநிதி அனுதாப கீதம் பாடுமாறு ஹனீபாவை வேண்டிக் கொள்ள விழுப்புரத்தில் நடுயாமத்தில் காயிதே மில்லத் உயிருடன் இருக்கும் போது கேட்டு மகிழ்ந்த "மண்ணிலே பிறந்த தேனோ எங்கள் பெருமானே...." என்ற பாடலை உருக்கமாகப் பாடினார்.

## திரைத்துறையில் ஹனீபா

1950-ல் திரைப்படத்தில் பாட வேண்டும் என்ற எண்ணம் ஹனீபாவிற்கு ஏற்பட்டது. இருப்பினும் தனது கம்பீரம் பொங்கும் குரலால் தனக்கென்று இசைத்துறையில் ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்ட ஹனீபாவிற்கு குலேபகாவலி, அம்மையப்பன், பாவமன்னிப்பு, தர்ம சீலன், என்றென்றும் காதல், செம்பருத்தி, ராமன் அப்துல்லா என பல திரைப்படங்களில் பாடும் வாய்ப்புகளும் வந்தன. திரையுலகப் பிரவேசத்திற்கு முன்பு இசைத்தட்டுக்காக இசைமுரசுவின் பாடல்களுக்கு இசையமைத்த இளையராஜாவின் இசையில் 'அல்லாஹு அக்பர்' என்ற படத்திற்கு ஹனீபா ஆறு பாடல்கள் பாடியிருக்கிறார். அப்படம் இதுவரை வெளிவரவில்லை.

கட்சிப் பணியில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்ட காலத்திலும் இஸ்லாமியப் பாடல்களைப் பாடுவதிலும் இனிய தமிழ்ப் பாடல்கள் பாடுவதிலும் தொடர்ந்து பணியாற்றினார். பாரதிதாசன் மற்றும் குணங்குடி மஸ்தான் சாகிபு ஆகியோரின் பாடல்களையும், பிற இஸ்லாமியப் பாடல்களையும் பாடுவது மட்டுமின்றி இசைத்தட்டாகவும் வெளியிட ஆரம்பித்தார். அவ்வாறு ஹனீபா மெனக்கெட்டு மெட்டமைத்த பாடல், மதங்களைக் கடந்து அவருக்கு இரசிகர்களை பெற்றுத் தந்த பாடல்தான் "இறைவனிடம் கையேந்துங்கள் ....". குன்றக்குடி அடிகளார், மதுரை ஆதீனம் மகா குரு சோமசுந்தரத் தம்பிரான் என்று மதங்களைக் கடந்தும் கடல் கடந்தும் தமிழர்கள் வாழுமிடமெல்லாம் ஹனீபாவின் பாடலுக்கு ரசிகர்கள் உண்டு.

ஹனீபாவின் முதல் வெளிநாட்டு நிகழ்ச்சி 1949-இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மிலாதுவிழா. அதனைத் தொடர்ந்து மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், துபாய், ஓமன் என்று தமிழர்கள் வாழும் பல நாடுகளில் பாடியவர் ஹனீபா.

## இஸ்லாமிய மெய்யியல் ஈடுபாடு

நாகூரில் வளர்ந்த ஹனீபா இயற்கையாகவே இஸ்லாமிய மெய்யியல் சூஃபி மரபை மிகவும் நேசித்தவர். நாகூர் நாயகம் ஷாகுல் ஹமீதை பாடுவது மட்டுமின்றி, பல இறைநேசர்கள் அடங்கியிருக்கும் தர்கா நிகழ்வுகளிலும் பாடுவதுண்டு. வருடா வருடம் திருவனந்தபுரத்தில் அடங்கியிருக்கும் பீமா அம்மாவின் தர்கா நிகழ்ச்சிகளிலும்

பாடுவது அவரின் வழக்கம். ஒரு வருடம் அவ்வூரில் கொடிய தொற்று நோய் பரவிய நேரத்தில் விழா அமைப்பாளர்கள் ஹனீபாவின் நலம் கருதி வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டபோது; "என்ன ஆனாலும் சரி நான் வந்து பாடியே தீருவேன் என்று தீர்மானமாகப் பாடிச் சென்றார்" ஹனீபா என எல்.கே.எஸ். முகம்மது மீரான் முகைதீன் முத்து விழா மலரில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சாமானியர்கள், தலைவர்கள், துறவிகள், இசைக் கலைஞர்கள் என்று பலரும் வியந்து பாராட்டியவர் ஹனீபா அவர்கள். இத்தனைக்கும் சிறு பிராயத்திலிருந்தே இஸ்லாமிய மார்க்க நெறிகளான ஐவேளை தொழுகை, நோன்பு, ஜகாத் போன்றவற்றை தவறாது பின்பற்றி வருபவர் ஹனீபா. இஸ்லாமிய மார்க்கத்தில் ஐந்து கடமைகளில் ஐந்தாவது கடமையான ஹஜ் புனித பயணத்தை 1980ஆம் ஆண்டு துணைவியாருடன் நிறைவேற்றப் புறப்பட்டபோது சென்னை இரயில் நிலையத்தில் அவரை வழியனுப்பி வைத்தவர்கள் கலைஞர் மு. கருணாநிதி, அப்துல் சமத், அப்துல் லத்தீப் ஆகியோர்.

### கொடுத்துச் சிவந்த கரம்

தனது இசைக்கச்சேரிகள் மூலம் கல்விக் கூடங்களுக்கும், பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும் நிதி திரட்டுவதற்காக, இலவசமாகப் பல இசை நிகழ்ச்சிகள் நடத்திய பெருமையும் ஹனீபாவுக்கு உண்டு. 1993ல் இசைமுரசுவின் முத்துவிழாவை மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி நடத்த முற்பட்டபோது, பள்ளியின் பொருளாதாரத் தேவையுணர்ந்து நிகழ்ச்சியில் தன் சார்பாக நிதி தருவதாக வாக்களித்தது மட்டுமின்றி, "முஸ்லிம் மேல்நிலைப் பள்ளிக்காக துபாய், அபுதாபி, ஷார்ஜா, ஓமன் போன்ற நாடுகளில் ஐந்து இசை நிகழ்ச்சிகள் நடத்தி அதில் கிடைக்கும் நிதியை பள்ளிக்குத் தருகிறேன்" என்று ஹனீபா சிரத்தையெடுத்துக் கொண்டதாக அப்பள்ளியின் தாளாளர் எம். ஏ. எஸ். முகம்மது அபூபக்கர், "கலைமாமணி, இசைமுரசு அல்ஹாஜ் நாகூர் இ.எம். ஹனீபாவின் முத்து விழா" மலரில் நினைவுகூர்கிறார். இவ்வாறு தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கையிலுள்ள பாத்திமா முஸ்லீம் பெண்கள் கல்லூரி என்று பல கல்வி நிறுவனங்களுக்கு, மனமுவந்து தனது இசைக்கச்சேரிகள் மூலமாக நிதி திரட்டி உதவியவர் ஹனீபா.

தமிழக வரலாற்றில் பாடல்கள் மூலம் ஒரு அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இசைமுரசு ஹனீபா தனது 90வது வயதில் காலமானார். இசையில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிய ஹனீபா, திராவிட இயக்க வரலாற்றிலும், தமிழக இஸ்லாமியர் வாழ்விலும் நீங்காத இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை.

# நெகிழ்வும் கம்பீரமும் - நாகூர் ஹனீபா



கவின் மலர்
பத்திரிகையாளர்

நாகூர் ஹனீபா என்னும் பெயரை நான் முதன்முதலில் கேள்விப்பட்டது எப்போது என யோசித்துப் பின்னோக்கி என் நினைவுகளை மீட்டிப் பார்த்தால் நான் பிறந்த ஊரான ஒரத்தநாட்டில் சென்று நிற்கிறேன்.

என் பால்யத்தோடு பதிந்துவிட்ட பெயர் அவருடையது. ஒவ்வொரு வார இறுதியிலும் என்னை என் தந்தை தன் சகோதரி வீட்டில் கொண்டு சென்று விடுவது வழக்கம். தந்தை இஸ்லாம் மதத்தில் பிறந்தவர் என்பதால் அங்குதான் முதன்முதலில் நாகூர் ஹனீபா அவர்களின் குரலைக் கேட்டேன். அந்த கம்பீரக் குரலில் நான் இஸ்லாமியப் பாடல்களையே என் குழந்தைப் பருவத்தில் அதிகம் கேட்டிருந்தேன். எங்கள் மாமி (தந்தையின் சகோதரி) வீட்டிலும் ஒரத்தநாட்டில் இருக்கும் எங்கள் பிற உறவினர்களின் வீடுகளிலும் அவர் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும். காயல் ஷேக் முகமது போன்ற பலர் இஸ்லாமியப் பாடல்களைப் பாடுவோர் இருந்தாலும், என் குழந்தைப் பருவத்தில் அவர்களின்



குரலையும் ஹனீபாவின் குரல் என்றே நம்பி இருந்திருக்கிறேன். பின்னாளில்தான் குரல்களின் வித்தியாசத்தை உணரும் பக்குவம் வந்தது.

*"தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு எங்கள்*
*திருநபியிடம் போய்ச் சொல்லு"*
*என்று உருகுவதாகட்டும்,*

*"இறைவனிடம் கையேந்துங்கள் -அவர்*
*இல்லையென்று சொல்லுவதில்லை*
*பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் அவர்*
*பொக்கிஷத்தை மூடுவதில்லை"*

என அறிவுறுத்துவதாகட்டும், அவர் குரலுக்கு பெரும் ஈர்ப்பு இருந்தது. சுருதி சுத்தமாக அவர் உச்ச ஸ்தாயியில் பாடுவதை நான் அப்போது என் பிஞ்சுக் குரலில் பாட முயன்று தோற்றிருக்கிறேன்.

எங்கள் ஊரில் டேப் ரிக்கார்டர்களை வளைகுடா நாடுகளுக்குச் சென்று வரும் இஸ்லாமியர்கள் வாங்கி வருவது வழக்கம். இன்னொரு பக்கம் சிங்கப்பூர் சென்று வரும் இஸ்லாமியரல்லாதோர் உண்டு. இந்த இரு தரப்பாரிடம் மட்டுமே டேப் ரிக்கார்டர்களைப் பார்க்க முடியும். காலை நேரத்தில் பள்ளிவாசல் தெருவுக்குள் நுழைந்தால் எல்லா வீடுகளிலும் ஹனீபாவின் பாடல்கள் ஒலிப்பதைக் கேட்க முடியும். இஸ்லாமியர்களின் வாழ்வியலோடு கலந்த குரல் அவருடையது.

எங்கள் ஊரில் வெலிங்டன் பள்ளி என்றொரு தனியார் பள்ளி இருந்தது. அதில் நடக்கும் ஆண்டுவிழாவில் ஒவ்வோர் ஆண்டும் மும்மதங்களைச் சேர்ந்த பாடல்களுக்கான நடனங்களே முதலில் இடம்பெறும். முதலில் 'செல்லாத்தா செல்ல மாரியாத்தா' போல ஒரு மாரியம்மன் பாடல்; பின் 'விண்ணுலகிலிருந்து தேவன் இறங்கி வருகிறான்' போல ஒரு கிறித்தவப் பாடலுக்கு நடனம்; அடுத்து உறுதியாக ஒரு நாகூர் ஹனீபா பாடல் இருக்கும். ஒரு கைலி, தலையில் தொப்பி, கையில் தப்ஸ் வைத்து ஒரு சிறுவன் நடனம் ஆடுவான். அப்படி இஸ்லாமியர்களை பிரதிநித்துவப்படுத்தும் குரலாக ஹனீபாவின் குரல் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு விழா முடிந்த மறுநாளே பேருந்து நிலையத்துக்கு அருகே அல்லது யானைக்காரத் தெரு அருகே நடக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்கூட்டத்தில் கூம்பு வடிவக் குழாய்களில் 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என அதே நாகூர் ஹனீபா திராவிடத்தின் குரலாக முழங்கிக்கொண்டிருப்பார். எப்படி இது சாத்தியமானது?

இஸ்லாமியப் பாடல்கள் மட்டுமே பாடுபவராக எனக்கு அறிமுகமாகி இருந்த ஹனீபாவின் குரலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடலை முதன்முறை கேட்ட

நாள் நினைவில் இருக்கிறது. அது தேர்தல் காலம். தி.மு.க.வின் கூட்டமொன்று நடைபெறவிருந்தது. அங்கு கட்டியிருந்த பெரிய கூம்புக் குழாயில் இருந்து ஒலித்தது. அந்தப் பாடல்,

*“பாளையங்கோட்டை சிறையினிலே*
*பாம்புகள் பல்லிகள் நடுவினிலே*
*அஞ்சாமல் இருப்பவர் யார்*
*எங்கள் கலைஞரின் புகழினைப் பார்”*

என்று அந்த வரிகளும் மனதில் அப்படியே பதிந்துவிட்டன. பாடல் என் செவிகளை வந்தடைந்து என் கவனத்தில் வைப்பதற்குள் பாடல் முடிந்து விட்டது. இதென்ன ஹனீபா குரல் போல் இருக்கிறது? இது இஸ்லாமியப் பாடல் போல் இல்லையே எனக் கொஞ்சம் குழப்பம் எனக்கு. அடுத்தடுத்துப் பாடல்கள் தொடர்கின்றன.

*“கலைஞர் ஆட்சி மலரப் போகும் காலம் வருதடா*
*நம் கவலை யாவும் தீரப்போகும் நேரம் வருதடா”*

என ஒரு தாய் தன் குழந்தைக்குத் தாலாட்டு பாடுவதாக அமைந்த அந்தப் பாடலைக் கேட்டபோது எனக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது ஹனீபா பாடியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடல் என. அன்று நான் எங்கள் ஆசிரியை ஒருவரின் வீட்டில் இருந்தேன். எனக்கு வகுப்பெடுத்த தங்கம்மாள் ஆசிரியை என்னை தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று விடுவார். அங்கேயே உண்டு உறங்கி சில நேரங்களில் இரவுகளிலும் அவர் வீட்டிலேயே உறங்கிவிடுவேன். காலையில் கொண்டு வந்து எங்கள் வீட்டில் விடுவார்கள். அப்படியான ஒரு நாளில்தான் இந்தப் பாடல்களைக் கேட்டேன். அதன் பின் தினமும் இந்தப் பாடல்கள் எங்கள் ஊரில் ஒலிப்பதைக் கவனிக்கத் தொடங்கினேன். அந்தப் பாடல்களை எழுதி இசையமைத்து ஒலிப்பேழையாக்கியவர் டி.ராஜேந்தர் எனப் பின்னாளில் அறிந்தேன்.

அந்தத் தேர்தல் முடியும் வரை ஹனீபாவின் குரல் எங்கள் தெருக்களை நிறைத்தது. “கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே”, “அழைக்கின்றார் அண்ணா”, ‘பாளையங்கோட்டை சிறையினிலே’, என ஹனீபா பெருங்குரலெடுத்துப் பாடிக்கொண்டே இருந்தார்.

இஸ்லாமியக் குரலாக எனக்குள் இருந்த ஹனீபாவின் குரல் மெல்ல மெல்ல அரசியல் குரலாக மாறியது. தந்தை பெரியாரின் வழிவந்த திராவிடக் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்ட தி.மு.க.வின் பரப்புரைக் குரலாக இன்றுவரை ஒலிக்கும் ஹனீபாவின் குரல்தான் இஸ்லாமியப் பாடல்களையும் பாடியது என்பது ஒரு சுவையான முரண். ஒரு வகையில் சொல்லப் போனால் இஸ்லாமியர்களைத் திராவிடக் கொள்கைகளின்பால் ஈர்த்ததில் நாகூர் ஹனீபாவுக்கும் ஒரு பங்குண்டு.

அவரது குரலை எதனோடும் ஒப்பிட இயலாது. அப்படியொரு குரல் அது. எவ்வளவு உச்ச ஸ்தாயியில் ஒலித்தாலும் தெளிவாக வார்த்தைகள் புரியும். தி.மு.கவின் மேடைகள்தோறும் ஒலித்த ஹனீபாவின் குரல்தான் அன்றைக்குக் கூட்டம் நடக்கப் போவதையும் பரப்புரைக்காக தி.மு.க.வின் தலைவர்கள் வரவிருக்கிறார்கள் எனவும் மக்களுக்குக் கட்டியம் கூறிய குரல். ஒரு தேர்தல் பிரச்சார உரையைக் கேட்க தொண்டர்களைத் தயார்படுத்திய குரல். எங்கள் ஊரில் பள்ளிவாசல் தெருவுக்குள் ஹனீபாவின் குரலுக்கு இருக்கும் மதிப்பு வேறு. பள்ளிவாசல் தெரு தாண்டிய இடங்களில் ஒலிக்கும் குரலுக்கும் இருக்கும் மதிப்பு வேறு. இரண்டுமே அவர் மீதான மரியாதையையும் அன்பையும் எனக்குள் ஊட்டின.

எப்படி ஒரே நேரத்தில் மார்க்கத்திற்காகப் பாடுவது, இயக்கத்திற்காகப் பாடியது இரண்டையும் அவர் செய்தார் என்பது வியப்பான விஷயம்தான். அவர் பெரியார் பற்றிய பாடலை 1955இல் பாடி வெளியிட்டிருக்கிறார். அதற்கு அவர் சார்ந்த மார்க்கம் தடை போடவில்லை. அது போலவே அவர் தொடர்ந்து இஸ்லாமியப் பாடல்களைப் பாட தி.மு.க. தடைபோடவில்லை. அவரை அவராகவே ஏற்றுக்கொண்டது. இந்த ஏற்பு இரு தரப்பிலும் கிடைக்க அவருடைய ஆளுமையும் கொள்கைப் பற்றும் இசைத் திறனும், கம்பீரமாக ஒலித்த பிரபஞ்சத்தை உலுக்கும் அந்தக் குரலும்தான் காரணம்.

"1949ல் தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தபோது அதற்கு முதல் முதல் வாழ்த்துத் தந்தி அனுப்பியவர் இசை முரசு நாகூர் ஹனீபா. சிறு வயது முதலே பெரியாரின் 'குடிஅரசு' பத்திரிகையையும் அறிஞர் பா. தாவூத் ஷாவின் 'தாருல் இஸ்லாம்' இதழையும் படித்து வளர்ந்தவர் நாகூர் ஹனீபா.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியபோது முதல் வாழ்த்துத் தந்தி கொடுத்த ஹனீபா, தி.மு.க. எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் கண்டபோதும் உடன் நின்றவர்.

'அன்னக்கிளி'க்கு முன்னரே, இசைஞானி இளையராஜாவின் முதல் பாடல் பதிவில் ஒலித்தது ஹனீபாவின் குரல்தான். 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு' என்கிற அந்த இஸ்லாமியப் பாடலுக்கு இசையமைத்தவர் இளையராஜாதான் என்கிற உண்மையை அறிந்துகொண்டபோது சிலிர்ப்பாகத்தான் இருந்தது. அந்தப் பாடல் இருவரின் திறமைக்கும் சாட்சி. ஹனீபா இது குறித்து அளித்த நேர்காணல் இன்னமும் யூடியூபில் இருக்கிறது.

"ஒரு சின்ன பையன் என் வீட்டுக்கு வந்தார். இப்போ அவர் ரொம்பப் பெரியவர். அப்போ சின்னப் பையனா இருந்தார். எச்.எம்.வி. இசைத்தட்டு நிறுவனம் என்னை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறது. பாடல்களுக்கு இசையமைப்பேன்" என அவரிடம் அறிமுகப்படுத்திக்கொண்ட அந்தப் பையன் இன்று சிம்பொனி இசைத்த மேஸ்ட்ரோவாக உயர்ந்து நிற்கிறார். அவருடைய இசையில் ஒலித்த முதல் குரல்



ஹனீபாவுடையது என்பது எத்தனை பெருமைக்குரிய விஷயம்! அந்தத் திறமையாளனை அந்த இளம் வயதிலேயே கண்டுகொண்டு ஹனீபா. அவருடைய இசையை தன் பாடலுக்குப் பயன்படுத்திக்கொண்டார். இசை : 'பாவலர் பிரதர்ஸ்' என்கிற பெயரில் அந்த இசைத்தட்டு வெளிவந்தது.

முன்னதாக, 1955-ல் ஜிக்கி, எஸ்.சி.கிருஷ்ணன் இருவருடனும் இணைந்து பாடிய 'நாயகமே நபி நாயகமே' என்கிற அற்புதமான பாடல் மூலம்தான் திரையுலகில் அடியெடுத்து வைத்தார் ஹனீபா. அந்தப் பாடலில் அத்தனை இளமையாய் ஒலிக்கும் ஹனீபாவின் குரல் வியக்க வைக்கும். அதன்பின் டி.எம்.சௌந்தரராஜனுடன் இணைந்து 'பாவமன்னிப்பு' திரைப்படத்துக்காக 'எல்லோரும் கொண்டாடுவோம்' பாடலைப் பாடினார்.

அதன்பின் நீண்ட இடைவெளிவிட்டு தன் இசையில் ஒலித்த முதல் குரலை 'செம்பருத்தி' படத்தில் 'நட்டநடுக் கடல் மீது நான் பாடும் பாட்டு' பாடலை மனோவுடன் இணைந்து பாட அழைத்தார் இசைஞானி. 'பிரிந்தது உயிரல்ல உடல்தான்.. விட்டு விலகாது உயிர்க்காதலே' என்று அப்பாடலில் ஒரு வரி வரும். அந்த வரியை அத்தனை உச்சஸ்தாயியில் அவர் பாடியதை இப்போது கேட்டாலும் நெஞ்சம் கனத்துத்தான் போகிறது. பின் மீண்டும் இளையராஜா அவரை 'தர்மசீலன்' திரைப்படத்தில் 'எங்குமுள்ள அல்லா' பாடலை எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துடன் இணைந்து பாட வைத்தார்.

பாலு மகேந்திராவின் 'ராமன் அப்துல்லா' படத்தில் ஒரு காட்சியில் மும்மதச் சின்னங்களாக ஒருவர் காவி உடை தரித்து, தலையில் குல்லாவுடன், கழுத்தில் தொங்கும்

சிலுவையுடன் ‘உன் மதமா என் மதமா’ பாடலைப் பாடுவார். இப்பாடலுக்கும் இசைஞானியே இசையமைத்திருந்தார். அதன் பின் 1999-ல் எஸ்.ஏ.ராஜ்குமாரின் இசையில் ‘என்றென்றும் காதல்’ திரைப்படத்தில் ‘இது காதல் ஆரம்பம்’ பாடலைப் பாடினார்.

மிகச் சில திரைப்படப் பாடல்களே பாடியிருந்தாலும் ஹனீபாவின் பாடல்கள் மறக்க முடியாதவை. தன் ஆளுமையை அத்தனை பாடல்களிலும் அழுத்தமாகப் பதித்துவிட்டே சென்றிருக்கிறார். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் மட்டுமே திரைப்படங்களில் பாடிய ஒரு பாடகரைத் தமிழ்ச் சமூகம் இந்தளவுக்குக் கொண்டாடக் காரணம் என்ன? ஏனெனில் அவர் வெறும் திரைப்படப் பாடகர் மட்டுமல்ல. இஸ்லாமியப் பாடல்களைப் பாடுபவர் மட்டுமல்ல. ஒரு தலைமுறை இளைஞர்களைத் திராவிட இயக்கத்தின் பக்கம் ஈர்த்த மாயக் குரலுக்குச் சொந்தக்காரர். சுதந்திரத்துக்குப் பிந்தைய தமிழ்நாட்டின் வரலாற்றில் தவிர்க்க முடியாத குரல் ஹனீபாவின் குரல். திராவிட இயக்கத்தின் போர்க் குரலாய்த் தமிழகத்தின் ஒவ்வொரு தெருவிலும் ஒலித்த குரல். ஒரு தலைமுறையை வளர்த்தெடுத்த குரல். திராவிடத்துக்கும் தன் மார்க்கத்துக்குமிடையேயான பாலமொன்றைப் போட்டு அங்குமிங்குமாக அவர் மட்டும் அதில் சென்றவாறு இருந்தார் ஒரு கலைஞனாக, இறுதி வரையிலும்!

மேடைக் கச்சேரிகளில் பாடலுக்கு முன்பு அவர் சொல்லும் கதைகளும் அறிமுகங்களும் அவர் ஒரு சிறந்த கதைசொல்லி என்பதற்குச் சாட்சி. மனம் நெகிழ்ந்த பொழுதொன்றில் கேட்க நேர்ந்த “அருள் அன்பு பண்பில் அளவற்ற உன்றன்” என்கிற பாடல் மேலும் நெகிழ வைத்து கண்ணீரை வரவழைத்தது. அப்பாடலின் சரணத்தில் கம்பீர ஹனீபாவின் குரல் கடவுள் நம்பிக்கையற்ற என்னை அப்படி கனிந்து குழைந்து உருக்கியது. “அதிகாலை நேரம் சுபுவுக்குப் பின்னே” என்றொரு பாடல். நபிகள் நாயகம் சாலையில் செல்லும்போதெல்லாம் அவர் மீது குப்பையைக் கொட்டும் பெண் ஒருத்தி இருந்தாள். அவர் அவளை ஏதும் சொல்லாமல் குப்பையைத் தட்டியபடி சென்று விடுவார். ஒரு நாள் அவள் குப்பை கொட்டமாட்டாள். அப்போது அப்பெண்ணைக் காணோமே என நபிகள் விசாரிக்க அவள் உடல்நலமற்றிருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு சென்று பார்ப்பார். அப்பெண் தன் செய்கைக்கு வருந்துவாள். இதைப் பாடலாகப் பாடும் ஹனீபாவின் குரலில் தெரியும் உணர்ச்சிக்குப் பெயரொன்று இட்டால் மன்னிப்பின் குரல் எனப் பெயரிடலாம்.

இருபதாண்டுகளுக்கு முன்னால், ஒரு முறை பேருந்தில் திருச்சியைக் கடந்து வருகையில் ஹனீபா அவர்கள் கச்சேரி செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். வயது மூப்பின் காரணமாக அவரால் முன்பு போலப் பாட முடியவில்லை. அவரது கம்பீரக் குரலையே கேட்டுப் பழக்கப்பட்டுப் போன எனக்கு அப்படி அவர் பாடுவதைக் கேட்கக் கேட்க கண்ணீர் முட்டியது. ஆனால் அவருடைய வயதில் அவரைப் போலப் பிறரால் அந்த அளவுக்குக் கூட பாட முடியாது என உறுதியாகச் சொல்ல முடியும்.

அந்த வயதிலும் கொள்கைக்காக முழங்கும் அவருடைய உறுதியை வியந்தவாறே அந்த இடத்தைக் கடந்தேன்.

2015 ஏப்ரல் 8 அன்று அவர் மறைந்த செய்தி வந்தது. நள்ளிரவிலேயே சொந்த ஊருக்குப் புறப்படவிருக்கிறார் ஹனீபா என ஆளூர் ஷாநவாஸ் தெரிவிக்க, இரவு ஒரு மணிக்கு கோட்டூர்புரத்தில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றேன். அந்த இரவு நேரத்தில் ஏராளமான இளைஞர்களும், ஆண்களும், பெண்களும் இரவு ஒரு மணிக்குக் கூட ஹனீபாவின் வீட்டிற்கு முன் நாகூருக்கு அவரை வழியனுப்ப நின்றனர். அவர் மிக அமைதியாக உறங்குவது போன்ற பாவனையில் மரித்திருந்தார்.

சில விஷயங்களை காலத்தோடு செய்யவேண்டும். நாகூர் ஹனீபாவை ஒரு நேர்காணல் செய்யவேண்டும் என்று வெகு நாட்களாக எனக்கு ஆசை. நிறைவேறாத ஆசையாகப் போய்விட்டது. எத்தனையோ நிறைவேறாத ஆசைகளில் இதுவும் ஒன்றாகிவிட்டது.

அவரை வெறும் இஸ்லாமியப் பாடகராக மட்டும் யாரும் பார்க்கவில்லை என்பதற்கு நாகூரில் அவரது இறுதி நிகழ்வில் இடதுசாரியினர் கலந்துகொண்டனர் என்பதே சாட்சி.

ஹனீபாவின் குரலுக்கும், அவரின் இசைக்கும் வயது அவர் வாழ்ந்து முடிந்த 91 ஆண்டுகள் மட்டுமல்ல. அன்றாடம் ஏதோவொரு வானொலி நிலையத்தில் அவர் பாடிய இஸ்லாமியப் பாடலொன்று அதிகாலையில் ஒலித்துக் கொண்டுதானிருக்கும். தமிழகத்தின் அல்லது உலகின் எந்த ஒரு மூலையிலும் உள்ள இஸ்லாமிய வீடுகளில் எங்கோ அவர் குரல் ஒலிப்பேழையில் ஒலித்த வண்ணமே இருக்கும். நியாயம் கேட்கும் குரலாகச் சமூக இயக்கங்களின் மேடைகளில் ஒலிக்கும். தமிழகத்தின் வீதிகளில் தேர்தல் நேரத்திலோ அல்லது தி.மு.க.வின் மேடைகளிலோ ஒலிக்கும்போது மாற்றுக் கட்சியினரும் நின்று கேட்டு விட்டுச் செல்லும் குரல் ஹனீபாவின் குரல். தமிழ்நாட்டின் காற்றலைகள் அவரின் கம்பீரக் குரலைத் தத்தெடுத்துக் கொண்டன.

நாகூர் ஹனீபாவைப் போல, தான் சார்ந்த மார்க்கத்துக்கெனவும், தான் தேர்ந்தெடுத்த அரசியலுக்கெனவும் ஒங்கி ஒலித்த குரல் வேறு எவருடையதுமில்லை. ஹனீபாவை வெறும் இஸ்லாமியப் பாடகர் என்று சுருக்கி விடுபவர்களின் அறியாமையை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. அந்தக் குரலில் திராவிட இயக்கம் தமிழ்நாட்டுக்கு அளித்த கொடையான விடுதலை உணர்வும் பெருமிதமும் கலந்திருக்கும். மதம் கடந்த கலையை உயர்த்திப் பிடித்தார் ஹனீபா ‘இறைவனிடம் கையேந்துங்கள்’ பாடலில், அந்தக் குரலில் ஒருசேர மிதக்கும் நெகிழ்விலும் கம்பீரத்திலும் தன்னைத் தொலைத்துக் கண்ணீர் விட்ட நாத்திகவாதிகள் பலர் உண்டு. மதம் விட்டு மதம் தாண்டியது மட்டுமல்ல, மதத்தைத் தூக்கி எறிந்தவர்களையும் தாண்டிச் சென்றடையும் வல்லமை ஹனீபாவின் குரலுக்கு உண்டு.

# திராவிடம் பாடிய தமிழ்ப்பாணன்



எச். ஹாமீம் முஸ்தபா
எழுத்தாளர்

சிறுவயதில் நாம் கண்களில் கலைடாஸ்கோப் வைத்து விளையாடும்போது பல காட்சிச்சித்திரங்கள் விழிகளில் விழும். இசைமுரசு நாகூர் ஹனீபா குறித்து யோசிக்கும்போதும் அதுபோன்று பல காட்சிச் சித்திரங்கள் கண் முன்னே விரியும். ஹனீபா என்னும் தமிழ்ப்பாணனை கேன்வால் வரைய முற்படும்போது கறுப்பு, சிகப்பு, பச்சை என்று மூன்று நிறங்கள் வரிசையாய் முன்வந்து நிற்கின்றன. இந்த மூன்று நிறங்கள் அல்லாமல் வேறொரு நிறங்கொண்டு அவரை வரைதல் சாத்தியமில்லை. பச்சை அவரின் பிறப்பொடு தொடர்புடையதாக அறியப்பட, முதலில் ஏற்றிருந்த கறுப்பும், பின்னர் கறுப்பும் சிகப்பும் ஹனீபா விரும்பி ஏற்றுக்கொண்ட நிறங்கள். ‘என் நிறம் கறுப்பு என் உடலில் ஓடும் இரத்தம் சிகப்பு’ என்று அந்த இரு நிறங்களையும் ஹனீபா தன் உடலோடு ஒப்பீடு செய்துகொண்டார்.

நாகூர் என்னும் பண்பாட்டுப் பெருநகரில் தான் சார்ந்த சமயப்பின்புலம் சார்ந்த இசைப்பாடல்களை பாடிக்கொண்டிருந்த ஹனீபா என்னும் பாணன் ஒரு சமூக மனிதனாக தன்னை வெளிப்படுத்தத் தொடங்கியபோது அவரின் உதடுகள் உச்சரித்த முதல் கோஷம் ‘இந்தி ஒழிக’. முதன்முதலாக அவர் கரம் ஏந்திய கொடியின் நிறம் கறுப்பு.

‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு’ என்னும் போராட்டத்தின் வழியாக பதிமூன்று வயதில் ஹனீபாவின் பொதுவாழ்க்கை தொடக்கம் பெறுகிறது. இசைத் தட்டில் வெளிவந்த ஹனீபாவின் முதல் பாடல் இலங்கையைச் சேர்ந்த நல்லதம்பிபாவலர் எழுதிய “எங்கள் நாடும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று” என்னும் பாடல்.

“நம்மள்கே நிம்மள்கே’ என்று தமிழ்த் திரைப்படத்தில் இடம்பெற்ற முஸ்லிம் கதாபாத்திரங்கள் தமிழை உச்சரித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில்தான், “பாண்டியர் ஊஞ்சலில் ஆடிவளர்ந்த / பைந்தமிழ் அமுதமே நீ - அம்மா / பைந்தமிழ் அமுதமே நீ”என்று அந்த இசைப்பாணன் அட்சர சுத்தமாக தமிழில் பாடிக்கொண்டிருந்தார்.

தமிழை அழிக்கவரும் இந்தித் திணிப்பை எதிர்த்தல் என்பது நாகூர் ஹனீபாவிடம் இரண்டு விதமாகத் தொழிற்பட்டது. ஒன்று, இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டக்களத்தில் முன்கள வீரனாக நின்று போராடுவது. அதற்காகச் சிறை செல்வது. இந்தியைத் திணிப்பதற்கு இராஜாக்கு எதிரான கறுப்புக்கொடி போராட்டம், தமிழ்நாட்டு இரயில் நிலையங்களில் இந்தியில் எழுதப்பட்டிருந்த பெயர்களை அழிக்கும் போராட்டம், டால்மியாவை கல்லக்குடி என்று பெயர் மாற்றக் கோரி நடைபெற்ற போராட்டம் என்று நாகூர் ஹனீபாவின் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் வரிசைப்படுகின்றன.

இன்னொருபுறம் இந்தித் திணிப்பை அதனுள் இருக்கும் வைதீக அரசியலை எதிர்க்க வேண்டிய அவசியத்தை பாடல் வடிவில் மக்களிடம் கொண்டு சேர்ப்பது. இத்தகையப் பாடல்களும் நாகூர் ஹனீபாவிடம் இரண்டு நிலையில் வெளிப்பட்டன. ஒன்று ‘எப்பக்கம் இருந்துவரும் இந்தி’ என்னும் தன்மையில் வெளிப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் குரல்களை ஒத்த இந்தித் திணிப்பை எதிர்க்கும் நேரடிப் போராட்டக் குரலாக வெளிப்பட்டது. மற்றொரு புறம் தமிழின் பெருமையை அதன் காலப் பழமையை, அவைகுறித்த திராவிட அறிவு மரபு கொண்டிருந்த புரிதலின் வழியாக ஹனீபாவிடம் வெளிப்பட்டது.

‘தமிழுக்கும் அமுதென்று பேர்’, ‘வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே’ எனப் பாவேந்தரின் பாடல்கள் ஹனீபாவின் குரலில் மறு உயிர்ப்பு அடைந்தது. பாவேந்தரின் பாடல்களை அவர் நினைத்த உணர்ச்சியில் பாடுபவராக ஹனீபா இருந்தார்.

*“திங்களொடு செழும்பரிதி தன்னோடும் / விண்ணோடும் உடுக்களோடும் /*
*மங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் / பிறந்தோம் நாங்கள்;*
*ஆண்மை சிங்கத்தின் கூட்டமென்று / சிறியோர்க்கு ஞாபகம் செய் முழங்கு சங்கே”*



-என்று பாவேந்தரின் வரிகளில் தன்னுடைய குரல்கொண்டு ஹனீபா உயிர் ஏற்றுகையில் கேட்கும் உள்ளங்கள் உணர்ச்சியில் ஊற்றெடுக்கும்,

ஹனீபாவின் பாடல்களில் திராவிடம் குறித்த பதிவுகள் முக்கியமானவை. இந்தியாவில் காலனிய ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நடைபெற்ற அதிகார மாற்றத்தில் இருக்கும் போதாமைகளை தந்தை பெரியார் அவதானித்தார், அதன் விளைவே இந்தியா விடுதலை பெற்ற நாளை, 'கறுப்பு நாள்' என்று அவரை அறிவிக்க வைத்தது. இந்த முன்னுணர்வு காரணமாகவே பெரியார் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் செய்கிறார் என்று கருதத் தோன்றுகிறது.

வடக்கின் ஆரியச் செல்வாக்கை எதிர்கொள்ளத் தெற்கில் திராவிடம் என்னும் கருத்தாக்கம் வலுப்பெற்றது. திராவிட நாடு என்பதற்கான நாட்டுப்பண் ஒன்றும் இயற்றப்பட்டது. அந்தப் பாடல் ஹனீபாவின் குரலில் தமிழ் நாடெங்கும் ஒலித்தது. பாடலில் தன்னைப் பறிகொடுத்த அறிஞர் அண்ணா ஹனீபாவின் இந்தப் பாடலை மட்டும் திரைப்படத்தில் பயன்படுத்த தணிக்கைக்குழு அனுமதிக்கும் என்றால் விரைவில் திராவிட நாடு அடைந்து விடுவேன் என்றார். அந்தப் பாடலில் திராவிட நாட்டிற்கான நிலவியல் வரையறை இவ்வாறு அமையும்

*"வாழ்க வாழ்கவே / வளமார் எமது திராவிடநாடு / வாழ்க வாழ்கவே*
*சூழும் தென்கடல் ஆடும் குமரி / தொடரும் வடபால் அடல்சேர் அங்கம்/*
*ஆழும் கடல்கள் கிழக்கும் மேற்காம் / அறிவும் திறனும் செறிந்த நாடு"*
*வடக்கில் இருந்து ஒன்றிய அரசு இந்தி மொழியை திணிப்பதை திராவிட மொழிகளுக்கு விடப்பட்ட சவால் என்றே திராவிட இயக்கம் கருதியது.*
*"திராவிடச் சோலையிலே வீரர் வாழும் வேளையிலே*
*அருந்தமிழை மேயவந்த இந்தி என்ற எருமை மாடே*
*முன்னம் போட்ட சூடு என்ன மறந்ததோ உனக்கு*
*என்றும் உன்னை ஏற்கமாட்டோம் ஓடிடு வடக்கே"*

என்று தொடங்கும் ஹனீபாவின் பாடல் இதற்கொரு சான்றாக அமைகிறது.

ஹனீபாவிடம் இருந்த திராவிடச் செல்வாக்கு அரசியல் நிலைப்பட்டதாக மட்டும் அமையாமல் மொழி மற்றும் பண்பாடு நிலைபட்டதாகவும் நிலவியல் சார்ந்ததாகவும் இருந்தது. அவரின் நூற்றாண்டை ஒட்டித் தற்போது எழுதப்படும் சில கட்டுரைகளில் அவரது பாடல்களில் காணப்படும் திராவிட இசையின் செல்வாக்கு குறித்து ஆய்வாளர்கள் பேசுகிறார்கள்.

அதைவிடவும் எனக்கு முக்கியமாகப்படுவது ஹனீபாவின் அரபு மொழி உச்சரிப்பில் வெளிப்பட்ட திராவிடத்தன்மை. அரபுச் சொற்களை அவர் உச்சரிக்கும் முறை குறிப்பாக 'பாங்கு' எனப்படும். முஸ்லிம்களின் தொழுகை அழைப்பினை தன்னுடைய பாடல்களில் அவர் ஒலிக்கும் விதம் திராவிடச் செல்வாக்கை வெளிப்படுத்துகிறது.

இந்தியாவில் சொல்லப்படும் பாங்கில் தொழிற்படும் இசை ஒழுங்கினை ஆய்வு செய்யும் இசை ஆய்வாளர்கள் அது 'வகுளாபரணம்' ராகத்தில் அமைந்துள்ளது என்கிறார்கள். தமிழ்நாட்டில் பாங்கு சொல்வதில் ஒரு முன்மாதிரியை உருவாக்கியவராக இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா இருக்கிறார். அவர் பாடிய பெரியார் பிலால் குறித்த கதைப்பாடலில் இடம்பெறும் பாங்கு அத்தனைப் புகழ்மிக்கது.

ஆனால் அதற்கு முன்பே 'குலேபகாவலி' திரைப்படத்தில் ஹனீபாவின் குரலில் பாங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது. அரபு மொழியில் அமைந்த அந்தப் பாங்கு ஹனீபா உச்சரிக்கும்போது அதற்கொரு திராவிடச்சாயல் கிடைக்கிறது. தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட நிலவியலில் இந்தத் திராவிட உச்சரிப்பு செல்வாக்கினைக் காண முடியும்.

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்னும் தொடரொன்று சுந்தரமூர்த்தி நாயனாரிடம் உண்டு. ஒரு விதத்தில் நாகூர் ஹனீபாவும் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவரே. அவர் இறைவனை, இறைத்தூதரை, இறைத்தூதர் மகளை, இறைநேசர்களைப் பாடினார். இஸ்லாமிய வரலாறு பாடினார், இந்த நாட்டிற்காக முஸ்லிம்கள் செய்த தியாகத்தைப் பாடினார். தான் சார்ந்த திராவிட இயக்கம், தி.மு.க. இயக்கம் குறித்தெல்லாம் பாடினார், அவற்றின் கொள்கைகளைப் பாடினார், அதன் தலைமைகளைப் பாடினார். எதைப் பாடினாலும் அதில் தமிழ் மணந்தது, அவர் குரலின் கம்பீரத்துடன் கலந்து அது காற்றில் பரவியபோது இசை மனதுகளை அது வென்றெடுத்தது.

# உலக மக்கள் யாவருக்கும் உரிமையானவர்



ப. கவிதா குமார்
பத்திரிகையாளர்

மதுரை கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்கு அடிக்கடி செல்லும் வழக்கம் முன்பிருந்தது. அதற்குக் காரணம் அங்கிருந்த பக்கீர்கள். தப்புக்கருவியைத் தட்டி பக்கீர்கள் பாடும் பாடலைக் கேட்க அங்கு போவேன். அவர்களை நெருங்கிப் பார்க்கும் வாய்ப்பு நான் பிறந்து வளர்ந்த பகுதியான மதுரை கோ.புதூர் தீன் ஸ்டோரில்தான் வாய்த்தது. ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும் அந்தக் கடையில் பெருங்கூட்டம் கூடிவிடும். அதற்குக் காரணம், இரண்டு பக்கீர்கள் தான். இரவு நேரங்களில் பள்ளிவாசல்களில் தங்கிக் கொண்டு, பகலில் ஊர் ஊராய் நாடோடி போல சுற்றியலைந்தவாறு மக்கள் மனம் மகிழும் வகையில் இறைத்தூதரின் பாடல்களைப் பாடுவதில் புகழ்பெற்றவர்கள் அந்த பக்கீர்கள். அவர்கள் பாடிய பெரும்பாலானவை இசைமுரசு நாகூர் ஹனீபா பாடிய இஸ்லாமிய பாடல்கள் தான். சுதி தப்பாமல் தப்புட்டி அவர்கள் பாடப்பாட கூட்டம் கூடும்.

கம்பீரச் சாரீரம்

'பாவமன்னிப்பு' படத்தில் டி.எம்.சௌந்தரராஜனுடன் இணைந்து நாகூர் ஹனீபா பாடிய ‘எல்லோரும் கொண்டாடுவோம்’ பாடலை அவர்கள் இருவரும் போட்டிப்போட்டுப் பாடும் போது ரிக்சா ஓட்டுநர்களின் சீட்டி பறக்கும். தி.மு.க. பொதுக்கூட்டம் என்றால் ஹனீபா பாடிய பாடல்கள் தான் ஒலிக்கும். புதூரில் இருந்த கூடலூர் ராஜாங்கம் படிப்பகத்தில் அடிக்கடி நாகூர் ஹனீபா பாடல்கள் ஒலிக்கும். இப்படித்தான் நாகூர் ஹனீபா எனக்குள் அறிமுகமானார். அவரின் எட்டுக்கட்டை கம்பீரச் சாரீரம் பாடல் யாரைத்தான் கட்டிப்போடாது?

இஸ்மாயில் முகமது ஹனீபா என்ற இ.எம்.ஹனீபாவின் குரலுக்கு இணையான குரல் இதுவரை எவருக்கும் இல்லையென்றே சொல்லலாம். 13 வயதிலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்ட நாகூர் ஹனீபா அன்று பாடிய, 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு அஞ்சாமல் ஓடிவா' பாடல் தமிழக இளைஞர்களை வீதியில் போராட இறங்க வைத்தது. தமிழகம் முழுவதும் பற்றி எரிந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஹனீபாவின் பாடல், தீப்பந்தமாய்ப் பலருக்கு மாறி பலருக்கு வெளிச்சப்பாதையைக் காட்டியது.



*'திராவிடச் சோலையிலே*
*தீரர் வாழும் வேளையிலே*
*செந்தமிழை மேயவந்த*
*இந்தி என்ற எருமை மாடே....*
*முன்னம் போட்ட சூடு என்ன*
*மறந்ததோ உனக்கு?*
*என்றும் இந்தி ஏற்கமாட்டோம்*
*ஓடிப்போ வடக்கு...'*

என்று நாகூர் ஹனீபாவின் குரல் இந்தி திணிப்பு என்ற எருமை மாடுகள் மீது சாட்டையாய்ச் சொடுக்கியது. நீதிக்கட்சி, திராவிட இயக்கங்களின்

வளர்ச்சியில் ஹனீபா ஆற்றிய பங்கு அளப்பரியது. அதற்கு அவரது குரல் உதவி செய்தது. பட்டுக்கோட்டை அழகிரி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, காயிதே மில்லத், மு.க.ஸ்டாலின் ஆகியோரின் அன்பைப் பெற்ற நாகூர் ஹனீபா கடைசி காலம் வரை திராவிட இயக்க தொண்டனாகவே வாழ்ந்து மறைந்தார். அவர் பாடிய பாடல்களை ஒரு ஆப்பிளின் இரண்டு பாகங்கள் என பிரித்துக் கொள்ளலாம். பக்தி சுவை ஒருபுறம், திராவிடச்சுவை மற்றொரு புறம்.

*திராவிடச்சுவை*

*'உடன்பிறப்பே கழக உடன்பிறப்பே*
*அண்ணாவின் வழியில் அயராது உழைக்கும்*
*பொன்னான கலைஞர்*
*கண்ணாக மதிக்கும் உடன்பிறப்பே'*

என்ற பாடல் தான் நாகூர் ஹனீபாவின் விசிட்டிங் கார்டு. எந்தக் கூட்டத்திற்கு ஹனீபா போனாலும் ஒன்ஸ்மோர் கேட்கப்படும் பாடலிது. மூன்றே மூன்று இசைக்கருவிகளை வைத்துக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மேடைகளில் லட்சக்கணக்கான செவிகளுக்கு உணவிட்டவர்களில் ஹனீபா முக்கியமானவர். குறுகிய நேரத்தில் மெட்டமைப்பதில் வல்லவர்.

*'தமிழ் இருக்கும் திசை எல்லாம்*
*தேடுகிறேன் உன்னை*
*எங்கே சென்றாய்.. எங்கே சென்றாய்*
*எங்களை ஏங்கவிட்டு எங்கே சென்றாய்'*

என்று அறிஞர் அண்ணா மறைவின் போது நாகூர் ஹனீபா பாடிய பாடல் கோடிக்கணக்கான மக்களின் கண்களைக் குளமாக்கியது..

நாகூரில் எளிய இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்த ஹனீபா திராவிட இயக்க மேடைகளில் ஒலிபெருக்கி இல்லாமலே பாடிய காலம் உண்டு. ஒரு மாதத்திற்கு 30 நாட்கள் என்றால் 50 இடங்களில் ரத்தம் கக்கப் பாடினார். தந்தை பெரியார் குறித்துத் தூங்கிக்கிடந்த உன்னைத் தூக்கித் துடைத்தணைத்து தாங்கித் தரைமேல் இட்டார்.

‘தமிழர் தாத்தாவாம் ஈவெராவே' என்ற ஹனீபா பாடிய பாடல் முதன் முதலாக இசைத்தட்டில் பதிவு செய்யப்பட்டது. அதேபோல 1955-ஆம் ஆண்டு 'நம் நாடு' இதழில் 'அழைக்கின்றார் அண்ணா' பாடல் பிரசுரமாகியிருந்தது. அந்தப் பாடலுக்கு நாகூர் ஹனீபா மெட்டமைத்து பாடிட, பட்டிதொட்டியெங்கும் தீயாய்ப்

பரவியது. அந்தப் பாடலை ஹெச்.எம்.வி. நிறுவனம் பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டது. முதலில் இந்தப் பாடலை வெளியிட மறுத்த ஹெச்.எம்.வி., ஹனீபாவின் விடாமுயற்சியால் அந்தப் பாடலைப் பதிவிட்டு வெளியிட்டது. இந்தப் பாடல், தமிழக இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரிய எழுச்சி அலையை உருவாக்கியது. அந்த ஆண்டு அதிக இசைத்தட்டுகள் விற்றுச் சாதனையையும் படைத்தது. அப்படியான காந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் ஹனீபா.

கலைஞர் கருணாநிதி மீது மிகுந்த பற்று கொண்ட ஹனீபா, கலைஞர் குறித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என அவர் பாடும் பாடல் கேட்போரை மெய்மறக்கச் செய்தது. தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும், வக்பு வாரிய தலைவராகவும் நாகூர் ஹனீபா பணியாற்றியுள்ளார். திருமண வீடுகள், கட்சி மாநாடுகள், இஸ்லாமிய விழாக்கள் மட்டுமின்றி சில படங்களிலும் நாகூர் ஹனீபா பாடியுள்ளார். 'நட்ட நடுக்கடல் மீது', 'எங்குமுள்ள அல்லா', 'உன் மதமா என் மதமா', 'நாடோடி மன்னா', 'ஒருமுறை' போன்ற சில பாடல்களையும் பாடியுள்ளார்.

## பக்தி இசை

தமிழ் திரையிசைக்கு இம்மியளவும் குறையாதது பக்தி இசை. தமிழ் மரபின் தொடர்ச்சியாகவே பக்தி இசை வளர்ந்தது. அதில் நாகூர் ஹனீபாவின் பங்கு அளப்பரியது.

இலங்கை வானொலியில் ஒரு காலத்தில் அன்றாடம் ஒலித்த பாடல் என்ற பெருமை பெற்றது நாகூர் ஹனீபா, பி.வசந்தா இணைந்து பாடிய இந்த பாடல்,

*'ஏகன் உண்மை தூதரே*
*ஏகன் உண்மை தூதரே*
*யா நபியே யா ரலே யா ஹபிபே யா முஸ்தபா*
*எங்கள் ஸலாம் எங்களன்பின் ஸலாம்*
*எங்கள் ஸலாம் எங்களன்பின் ஸலாம்'*

மிக அற்புத மெட்டமைக்க இந்தப் பாடலின் இசையும், இருவரின் குரல்களும் மதம் சார்ந்த பாடல் என்பதை மறக்கச் செய்யும். ஹிந்தோள ராகத்தில் ஹனீபா பாடிய, 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு' பாடல் மெல்லிசையாய் மெய்மறக்கச் செய்தது. ‘இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை’ என்று ஹனீபா பாடும் போது இல்லையென்பதின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்தது. 'எங்கும் நிறைந்த

இறையோனே' என்று கஜலில் ஹனீபா பாடும் அழகில் மயில் தோகை விரிக்கும் அழகைக் காணலாம். 'தமிழகத்துத் தர்காக்களைப் பார்த்து வருவோம்' என்று அவர் உற்சாகமாகப் பாடும் போது எல்லாத் தர்காக்களும் பயணப்படுவோம். எட்டுக்கட்டை என்றாலும் ஹனீபா பாடிய சில பாடல்கள் மனதிற்குள் மழைச்சாரலாய்த் தூறல் போடும்.

'எல்லாப் புகழும் இறைவனுக்கு', 'ஆற்றல் மிகும் அல்லா', 'உம்மை ஒருபோதும் நான் மறவேன் மீரா', 'கருணைக் கடலாம் காதர் வலியின்', 'மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே', 'இருளில் நிலவாகப் பிறந்தார்', 'இறைவா உன்னைத் தேடுகிறேன்', 'அண்ணல் நபி பொன் முகத்தை', 'தீன்குலக் கண்ணு', 'தாயிஃப் நகரத்து வீதியிலே','கண்டு வரலாம் சென்று வரலாம்', 'கண்கள் குளமாகுதம்மா', 'நபி வழி நடந்தால் நரகமில்லை', 'கன்னியரே அன்னையரே', 'எந்தத் துன்பம் வந்தபோதும்', 'தீன்குலக் கண்ணு எங்கள் திருமறைப் பொண்ணு', 'மணலில் நடந்து இருளைக் கடந்து', 'கண்ணுக்கு இமைபோன்ற பெண்ணே', 'போவோம் மதினா புகழ்பாடியே', 'வானில் தவழும் வெண்ணிலவே', 'உலகத்தில் நான் உன்னருளை', 'சன்மார்க்க ஜோதியான நபி', 'வான்மறைச் சோலையில்', 'எத்தனை தொல்லைகள்', 'எங்கே இருக்கின்றான்', 'கஸ்தூரி மணங்கொடுத்த', 'அல்லாவை நாம் தொழுதால்'. 'திருமறையின் அருள் மொழியில்'. 'தீனோரே நியாயமா மாறலாமா' என நாகூர் ஹனீபா பாடிய பாடல்கள் உலகம் முழுவதும் இருக்கும் இசை ரசிகர்களால் கொண்டாடப்படுகிறது. 1940-ஆம் ஆண்டு தொடங்கி பாட ஆரம்பித்த நாகூர் ஹனீபா 2015 ஏப்ரல் 8-ஆம் தேதி காலமானார். கிட்டத்தட்ட 65 ஆண்டுகள் வரை தொடர்ந்து இசைப்பயணத்தை மேற்கொண்ட ஒரே பாடகர் நாகூர் இ.எம்.ஹனீபா மட்டும்தான்.

நாகூர் ஹனீபா பாடிய பாடல்களை நாகூர் புலவர் ஆபிதீன், புலவர் தா.காசிம், கவிமணி பேராசிரியர் அப்துல் கஃபூர், கலைமாமணி நாகூர் சலீம், சாரண பாஸ்கரன், நாகூர் சேத்தான், கிளியனூர் அப்துல் சலாம், மதிதாசன் உள்ளிட்ட பலர் எழுதியுள்ளனர். உலக மக்கள் யாவருக்கும் உரிமையானவர் என்ற பாடலுக்கேற்ப மொழி, மதம், இனம் கடந்து இசை ரசிகர்களுக்கு உரிமையானவர்.

# நாகூர் ஹனீபா: இஸ்லாமியப் பெரும் பாணன்!



நிழல் திருநாவுக்கரசு
மாற்று சினிமா ஆர்வலர்

பாணரது இயல்பு, தான் பெற்ற பொருள் வளத்தைப் பெறாதவர்களுக்கு வழி காட்டுவது!

நாகூர் ஹனீபா அவர்களோ, அவர் பெற்ற தமிழிசை வளத்தையும், அருள் வளத்தையும் மக்களுக்குத் தந்து பெருமகிழ்வு அடைந்தவர்.

நாகூர் ஹனீபா அவர்களுக்கு முன்பே ஏறக்குறைய 10க்கும் மேற்பட்ட இஸ்லாமிய இசைக் கலைஞர்கள் இருந்து, இசைத்தட்டில் தம் இசையை பதிந்துள்ளனர். அவர்களுக்கு கிடைக்காத பெரும் மக்கள் செல்வாக்கு இவருக்கு மட்டும் கிடைத்தது எப்படி?

### நாகூர் ஹனீபாவின் இசை பெருவெளி!

மலேசியாவில் இருந்து தந்தை கொண்டு வந்த இசைத் தட்டுகளும் கிராமபோனும் அவர் பயிற்சிக்கு உதவின. இசை கற்றுக்கொள்ள ஏற்ற சூழல் இல்லை, மசூதிகளில் சொல்லப்படும்

'பாங்கோசை'யே அவருக்கு ஆதார சுருதியாக இருந்தது. தொடர் பயிற்சி 'அசுர சாதகம்' ஆனது. பள்ளி இறை வணக்கத்தின் போது, ஏற்ற பொதுவான பாடலைப் பாடி நற்பேரு பெறுகிறார்.

16 வயதினிலேயே திருமண வீட்டில் பாடல் பாடி பரிசு பெறுகிறார். நாகூர் வட்டாரம் முழுவதும் இவர் புகழ் பரவுகிறது. 20 வயதினில், சண்முக தேசிகர் என்கிற பெரியவர், இவருக்கு 'இசை முரசு' என்கிற பட்டத்தை 1945ஆம் ஆண்டு கச்சேரி ஒன்றில் இவருக்கு அளிக்கிறார்.

தமிழிசை இயக்கத்தில் நாகூராரின் பங்களிப்பு!

1875 முதல் 1975 வரை தமிழையும், தமிழிசையையும் ஒருசேர அழிக்க சிறு கூட்டம் முயற்சி செய்து பெரு வெற்றியையும் பெற்றுவிட்டது. பாட்டு, நடனம் என்கிற அரங்க கூட்டங்களில் முதலில் தமிழே இல்லாமல் செய்து விட்டு, இசையையும் கபளீகரம் செய்யத் தொடங்கிவிட்டனர். இந்தக் காலகட்டத்தில் தமிழிசையின் வரலாறு, இலக்கணம் நடைமுறை போன்றவற்றை உள்ளடக்கி தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், 'கருணாமிருத சாகரம்' என்ற இசைப் பெருநூலை வெளிக் கொண்டு வந்தார். இதைத்தொடர்ந்து தமிழகத்தில், தமிழிசை பற்றிய பேரார்வம் எழுந்தது - ஏனென்றால் பகல் கொள்ளைக்காரர்கள் தமிழில் ஒன்றுமே கிடையாது என்று பரப்புரை செய்து வந்த நேரத்தில் இது வெளிவந்ததால், மௌனியாகிப் போனார்கள்.

ராஜா அண்ணாமலை செட்டியார், மீனாட்சி கல்லூரி தொடங்கி, தமிழிசை இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். தமிழகம் முழுவதும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது தமிழிசை இயக்கம்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, போன்றவற்றை யார் செய்து தருவார்களோ, அவர்களே தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோம் " என்று மகாகவி பாரதியார் இலக்கணம் சொல்கிறார். இதற்கு முழுமையான எடுத்துக்காட்டு நாகூர் ஹனீபா அவர்கள்.

1875 - 1925 காலகட்டத்தில் ஒரு தமிழ்ப் பாடலைக் கூட கச்சேரியில் பாட மாட்டார்கள், கடைசியாக 'துக்கடா' என்று ஒரு திருப்புகழை பாடுவார்கள். அதற்காக மூன்று மணி நேரம் காத்துக் கிடப்போம் என்கிறார் பேரறிஞர் அண்ணா.

தமிழகத்தில் முதன் முதலில் முழு கச்சேரியையும் தமிழில் நடத்தியவர்:

மதுரை மாரியப்ப சுவாமி, இவரைத் தொடர்ந்து பலர் வந்தனர். மாரியப்ப சாமி வந்ததற்கான காரணம், அவர் நாடகத் துறையில் இருந்து அரங்கிசைக்கு வந்தவர்! அரங்கிசையில் தமிழில் பாடாமல் இசைக் கலைஞர்கள் இருந்த காலத்தில், நாடகக் கலைஞர்களே நாடகத்தில் முழுமையாகத் தமிழில் பாடி வந்தது குறிப்பிடத்தக்கது.

இசைத்தட்டில் பாடினால், 'நல்ல காசு' கிடைக்கும் என்பதால் தெலுங்கு இசைக் கலைஞர்கள் ஓடோடி வந்தனர். திரைப்படம் வந்தவுடன் அவர்கள் இறுக்கம் முழுவதுமாகத் தளர்ந்தது. இந்த நேரத்தில் இஸ்லாமியரின் பக்கம் இருந்து, நாகூர் ஹனீபாவின் இசை வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்து வந்தது.

அதுவரை 'உச்சஸ்தாயி'யில் பாடக்கூடியவராக அறியப்பட்டவர்: செங்கோட்டை எஸ் கிட்டப்பா. அவர் இடத்தைப் பிடித்தார் நாகூர் ஹனீபா.

பாடகர்கள் எல்லோரும் குறிப்பாக, இசைப் பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கூட, மாடிப்படி ஏறுவது போல மெல்ல மெல்ல பாடி, உச்சஸ்தாயியைத் தொடுவார். ஆனால் நாகூர் ஹனீபா அவர்களோ, பாடல் எடுக்கத் தொடங்கும் போதே, மேல் மாடிக்கு போய்விடுவார். மாடியிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்து வருவார்.

விசில் அடிக்காத குரல், பாடும்போது சொல் தெளிவு, இதுபோல 'அசுர சாதகம்' செய்து, குரலை வளப்படுத்தி வந்தார். ஹெச்சு ஸ்தாயியில் பாடினால், எவ்வளவு இதம் காணுமோ அவ்வளவு லலிதம், குழைவு, காம்பீர்யம், மந்திர ஸ்தாயிலும் அவருக்கு வரும். 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு' (சிவரஞ்சனி ராகம்) பாடும்போது, இது அவர் தானா என்று வியப்போம்.

தமிழிசைப் பாடகர்கள் 'விருத்தம்' பாடும்போது தான் அவர்களின் இசை மேதமையை நாம் உணர்ந்து கொள்வோம். இது பாரம்பரியமாக நமது தமிழிசை உலகில் உள்ள வழக்கம். திருச்செந்தூர் சண்முகவடிவு, கே.பி. சுந்தராம்பாள் போன்றவர்கள், விருத்தத்தில் புலிகள்! நாகூர் ஹனீபா பாடிய விருத்தம் கேட்டவர்கள் பாக்கியசாலிகள்! 'உன்னை ஒருபோதும் நான் மறவேன் மீரா' பாடலுக்கு முன் இஸ்லாமிய சித்தர், குணங்குடி மஸ்தான் சாகிபுவின்:

*திக்குத் திகந்தமும்*
*கொண்டாடியே வந்து*
*தேன் கூறி நிற்பர் கோடி*

*சிங்காசனாதிபர்கள்*
*நதரேந்தியே வந்து*
*ஜெய ஜெயா வென்பர்கோடி*

*தக்க பெரியோனருள்*
*தங்கியே நிற்கின்ற*
*தவராஜ செம்மேருவே*

*தயை வைத் தெனையாள்*
*சற் குணங் குடி கொண்ட*
*ஷாஹீல் ஹமீதரசே*



இந்த நாலரை கட்டை உச்ச ஸ்தாயியில், குரலைக் கேட்ட காதுகள்,

*"அண்ணல் நபி*
*பொன் முகத்தைக்*
*கண்கள் தேடுதே"*

*- என்கிற பாடலை, 'தார ஸ்தாயி'யில் வியப்பாக இருக்கிறது.*

*அரேபிய இசை வடிவங்கள்:*

கவாலி, கஜல், முதலிய வடிவங்களில் பல பாடல்களை ஹனீபா பாடியிருக்கிறார்.

*கேள்வி - பதில் வடிவில் வரும் 'மசாஅலா' பாணியில்:*

*கே: திருமறையின் அருள் மொழியில் விளைந்திருப்பது என்ன?*

*ப: அறிவு*

*கே: இறைத்தூதர் நபி பொன் மொழியில் பொதிந்திருப்பதென்ன?*

*ப: அன்பு*

*கே: அறிவில் உருவாகி அன்பில் நிறைவது என்ன?*

*ப: ஞானம்*

*சர்வ சமய சமரச கீர்த்தனைகள்:*

அறிஞர் அண்ணா "ஒன்றே குலம்: ஒருவனே தேவன்" என்ற முழக்கத்தை உயர்த்திப் பிடித்த வேளையில், நாகூர் ஹனீபாவும் எல்லாச் சமயத்தாருக்கும் ஏற்ற வகையில் புனைந்த பாடல்களை பாடியதால் தான் எல்லோரும் அவருடைய பாடலை ஏற்றிப் போற்றுகிறார்கள்.

நாகூர் ஹனீபா அவர்களுக்கு முன்னோடி போல வள்ளலார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை பாடல்களும் இருந்தன. நாகூராருக்கு ஏற்ற பாடல்களைப் புனைந்து தந்தவர்கள்: புலவர் ஆபிதீன், மற்றும் அப்துல் கபூர் போன்ற கவிஞர்கள். இவரது பாடல்கள் அனைத்தும்: இசைத்தட்டு / வானொலி / திரைப்படம் வாயிலாக வெகு மக்களை அடைந்தது.

இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்லுவதில்லை என்ற

பாடல் கனடா ராகத்தில் அமைந்தது, இந்தப் பாடலை விட்டல் மகராஜ் பஜனையில் பாடி கழிப்பேற்றுவார். மதுரை சன்னிதானம் மற்றும் நகைச்சுவை நடிகர் வடிவேலு ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாடிப் பரவினார். அதற்குக் காரணம் இது சர்வ சமய சமரச கீதமாக இருப்பதால்தான்!

இவரது பாடல்களில் பெரும்பான்மையானவை அல்லாவிடம் துவ்வா கேட்பது, நபிகளின் பெருமை, தியாகிகளின் வரலாறு, மற்றும் ஒழுக்க விதிகளை பற்றி பேசுகின்றன.

புகழ்பெற்ற மெட்டுக்கள்:

நாகூர் ஹனீபா, தமது பாடல்களுக்கு வெகு ஜனங்களிடம் நிலைபெற்று இருந்த, "மெட்டை" எடுத்துக்கொண்டு பாடலைப் பாடும்போது, விரைவாகவும் எளிதாகவும், ஜன ரஞ்சகமாகவும் இருக்கிறது என்று ஒரு நேர்முகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சொர்க்கவாசல் திரைப்படத்தில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி பாடிய, "எங்கே சொர்க்கம்" என்ற பாடலை, 'யாரே தக்கு பீர் அல்லா அக்பர்' என்று பாடினார்.

இந்தி மெட்டுக்களில் இருந்து........

1. உலக மக்கள் யாவருக்கும் உரிமையானவர்
2. ஓ துனியா கே ரக்கவாலே
3. அல்லா அல்லா

முதலிய பாடலைக் குறிப்பிடலாம்.

தமிழிசை ராகங்களில் அமைந்த பாடல்கள்:

1. மாநிலம் போற்றும் நாகூரா - இந்தளப் பண்
2. தீனோரே நியாயமா மாறலாமா - இந்தளப் பண்
3. திக்குத் திகந்தமும் - சுப பந்துவராளி.
4. கண்கள் குளமாகுதம்மா - அரி காம்போதி
5. தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு- சிவரஞ்சனி

திரைத் துறையில் நாகூர் ஹனீபா:

இவரை சினிமாவுக்கு அழைத்து வந்தவர்: நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி. முற்கால திரைப்படங்களில் குழு பாடகராகவே அறிமுகமாகி இருந்தார்.

90 ஆண்டுகளில் திரை உலகம் இவரைக் குறைவாகவே பயன்படுத்திக் கொண்டது.

1. நாயகமே நபி நாயகமே - குலேபகாவலி - மாயா மாளவகௌள
2. எல்லோரும் கொண்டாடுவோம் - பாவமன்னிப்பு - நட பைரவி
3. எங்கும் உள்ள அல்லா பெயரை சொல்லு - தர்மசீலன்
4. உன் மதமா என் மதமா - ராமன் அப்துல்லா - தோடி
5. கடலின் தனிமையிலே போனாலும் - செம்பருத்தி - தன்யாசி

இந்தப் பாடலில் ஆர்.டி.பர்மன் போல, எட்டுக்கட்டை வரை போவார். இனி யாரும் அந்த உயரத்தை அடைய முடியாது.

திராவிட முரசு:

13 வயதினிலே முதல் இந்திய எதிர்ப்பு போரில் கலந்து கொண்டவர் ஹனீபா. 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்ற கழகம் தோன்றிய கூட்டத்தில் பாடத் தொடங்கினார்.

1. அழைக்கிறார் அண்ணா
2. கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே
3. தமிழுக்கு அமுதென்று பேர்

போன்ற பாடல்கள் கட்டாயம் கழக மாநாடுகளில் பங்கெடுக்கும்.

இருமுறை சட்டமன்றத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மேலவை உறுப்பினராகவும், வக்பு வாரிய தலைவராகவும் இருந்தார். அந்த கம்பீரக் குரலோன் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 18 அன்று பாடுவதை நிறுத்திக் கொண்டார்.

# நாகூர் ஹனீபா: ஓர் இசைநதியின் சலனம்



எச். பீர்முஹம்மது
எழுத்தாளர்

தமிழ் முஸ்லிம் மத அறிஞர் உலகம் இசை பற்றிய தொடர்ந்த ஒவ்வாமையுடன் பயணித்த தருணத்தில் மற்றொரு தளத்தில் அது தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றாக இருந்தது. மத அறிஞர் கூட்டத்தில் இசை பற்றிய எதிர்மறையான பார்வைக்கு அகவய மற்றும் புறவய சூழலே காரணம். இந்நிலையில் தமிழ் முஸ்லிம் உலகம் இசைக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தி வந்திருக்கிறது என்ற வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம். இன்றைய தேவையும் கூட. கர்நாடக சங்கீத மரபு கோலோச்சிய இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களிடையே அதன் தொடர்ந்த தாக்கம் காரணமாகப் பல இசை பங்களிப்பாளர்கள் உருவானார்கள். இதற்கு முந்தைய காலகட்டத்தில் இசைக் கருவிகள் அறிமுகமாகாத தருணத்தில் தமிழ் சித்த மரபின் தாக்கம் கொண்ட சூஃபிகளின் பாடல்கள் புகழ்பெற்று விளங்கின. அவ்வகையில் தக்கலை பீரப்பா, குணங்குடி மஸ்தான், குலாம் காதிரு நாவலர், செய்கு தம்பி பாவலர் போன்றோரின்

ஆன்மிகப் பாடல்கள் புகழ்பெற்றவை. இப்பாடல்கள் அவர்களின் அடக்கஸ்தலங்களான தர்காக்களில் பாடப்பட்டன. அக்கால இசைக்கருவிகளான புல்லாங்குழல், மிருதங்கம், தப், தபேலா போன்றவற்றோடும், அவை இல்லாமலும் பாடப்பட்டன.

இசைக்கருவிகளால் இசைத் தமிழ் முஸ்லிம் சமூகத்தில் இசைக்கப்பட்டிருந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானி ஆகியவற்றின் கலவையாக உருமாறியது. இதன் தொடர்ச்சியில் இசைமணி யூசுப், உசைன் பாகவதர், வாத், காரைக்கால் தாவூத், காயல் அப்துல்லா லெப்பை போன்ற பலர் கர்நாடக சங்கீத மரபில் இஸ்லாமிய இசையை உருவாக்கினார்கள். ஆரம்பகால முஸ்லிம் இசையாளர்கள் எல்லாம் கர்நாடக சங்கீதத்தில் புலமை கொண்டவர்களாக இருந்த நிலையில் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நிலையில் முன்னணி தமிழ்ப் பாடகராக உருவானவர் நாகூர் ஹனீபா. சுதந்திரத்துக்குப் பிந்தைய தமிழ் இஸ்லாமிய உலகில் மரபார்ந்த இசையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியவர் ஹனீபா எனலாம். ஒரு அர்த்தத்தில் தமிழ் முஸ்லிம் மரபின் இசை அடையாளம் நாகூர் ஹனீபா.

நாகூர் ஹனீபா 1925 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் வெளிப்பட்டணத்தில் பிறந்தவர். இவரின் தாயார் இந்த ஊரை சேர்ந்தவர். அதே நேரத்தில் தந்தை நாகூரைச் சேர்ந்தவர். ஹனீபா என்ற தன் பெயரோடு தந்தை சார்ந்த ஊரின் பெயரான நாகூரை தன் பெயருக்குப் பின்னால் சேர்த்துக்கொண்டார். பள்ளிப் படிப்புக் காலகட்டத்திலேயே இவருக்கு இசையின் மீது ஆர்வம் வந்தது. போட்டிகளில் கலந்து கொண்டு பாடினார். பின்னர் அது புதுப்பரிணாமம் அடைந்து திருமண மேடைகளில் பாடும் நிலையை எட்டியது. இவரின் முதல் மேடைக்கச்சேரி 15 வயதில் நிகழ்ந்தது. அன்றைய தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரில் ஒரு திருமண மேடை ஒன்றில் அரங்கேற்றம் நடந்தது. அப்போது நாகூர் ஹனீபா உச்சகட்ட தன்னம்பிக்கையை வரவழைத்து பாடினார். அதுவே பின்னாளில் அவருக்கு சிறந்த பாடகர் என்ற தகுதி நிலையை அடைய ஒரு வகையில் காரணமாக அமைந்தது. நாகூர் ஹனீபாவின் அரசியல் வாழ்க்கை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து தொடங்குகிறது.

ஹனீபா இஸ்லாமிய மத நம்பிக்கையாளராக இருந்தபோதும் அவருக்கு பெரியார் மீதும் அண்ணாவின் மீது இளம் வயதிலேயே ஈர்ப்பு இருந்தது. ஆரம்பகாலத்தில் நீதிக்கட்சியின் மீது பற்று கொண்டவராக ஹனீபா இருந்தார். பின்னர் அண்ணா 1949-இல் தி.மு.கவைத் தொடங்கிய போது அதில் இணைந்தார். பின்னாளில் தி.மு.க.வின் நட்சத்திரப் பாடகராக அதன் மேடைகளில் வலம் வந்தார். அதற்கு பிந்தைய கட்டத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியுடன் ஏற்பட்ட நட்பு அவரை தி.மு.க. அரசியல் மேடைகளில் அதிகம் பாட வைத்தது. திருவாரூர் ஓடம்போக்கி நதிக்கரை அன்றைய காலகட்டத்தில் நாகூர் ஹனீபாவின் இசைக் குரலால் சலனமுற்றது. அந்தச் சலனம் கணிசமான இசை ரசிகர்களை நீரோட்டமாக அவருக்கு அளித்தது..

தொடர்ந்து எல்லா தி.மு.க. மாநாடுகளிலும், மேடைகளிலும் இவரின் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. ஆரம்பகால தி.மு.க.வைத் தன் பாடல்களால் வளர்த்தவர் நாகூர் ஹனீபா. 'அழைக்கிறார் அண்ணா' 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே', 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' போன்ற பாடல்கள் அன்றைய வெகுஜன இசை உளவியலில் அதிக தாக்கம் செலுத்தின. குறிப்பாக மேற்கண்ட பாடல்கள் தி.மு.க. கூட்டங்களில் தி.மு.க. தொண்டர்களை அப்படியே கட்டிக்கொண்டது. மேலும் பேச்சாளர்களின் பேச்சுகளை கேட்கும் ஆர்வத்தை விட அதிகப்படியான உள்ளுணர்வை அக்கால ஹனீபாவின் பாடல்கள் தொண்டர்களின் மத்தியில் ஏற்படுத்தியது. ஹனீபாவின் ஆன்மிகப் பாடல்கள் மதம் என்ற எல்லையைத் தாண்டி எல்லோராலும் பாராட்டப்பட்டன. குறிப்பாக 'இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்ற பாடல் அக்காலத்தில் பகுத்தறிவாளர்களின் காதுகளில்கூட ஊடுருவின. அதன் வரிகளும் பொதுமை குணாம்சங்களும் அப்பாடலின் சமூக எல்லையை விரிவுபடுத்தின.

ஹனீபாவின் பாடல்களைப் பொறுத்தவரை அவை அனைத்தும் பாடகக் குரலின் உச்சத்தை தொட்டு பாடப்பட்டன. அவரின் உச்சபட்ச கம்பீரக் குரல் காந்தமாகி அதைக் கேட்பவர்களின் காதுகளைத் தாண்டியும், உரசியும் ஒலித்துக்கொண்டிருந்தன. மேலும் இயல்பான ரீங்காரமாகத் தொடர்ந்து பலரின் காதுகளில் ஒலித்தது. பல பாடல்கள் அவரின் குரல் இனிமை, உச்சம் காரணமாகக் கேட்பவர்களின் நினைவுகளில் பதிந்தன. அது பாடல் என்ற தகுதியைத் தாண்டி இசையுலகில் பிரதிபலித்தது. மேலும் ராகம், தாளம், சங்கதி, மற்றும் இசை ஆகியவை அவரின் பாடல்களுக்கு வலு சேர்த்தன. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் எல்லா இஸ்லாமிய மேடைகளும் இவரின் பாடல்களால் அலங்கரிக்கப்பட்டன.



திரைப்படங்களில் நாகூர் ஹனீபாவின் பங்களிப்பு குறைவாக இருந்தாலும் அவரின் ஆரம்பகால மற்றும் பிந்தைய காலத் திரைப் பாடல்கள் புகழ்பெற்றவை. 1954இல் சொர்க்கவாசல் திரைப்படத்தில் விஸ்வநாதன் இராமமூர்த்தி இசையில் முதல் பாடலைப் பாடினார். பின்னர் 1955இல் குலேபகாவலி படத்தில் 'நாயகமே நபி நாயகமே' என்ற பாடலைப் பாடினார். இதன் தொடர்ச்சியில் பாவமன்னிப்பு (1961) படத்தில் டி.எம்.சௌந்தரராஜனுடன் இணைந்து பாடிய 'எல்லோரும் கொண்டாடுவோம்' என்ற பாடல் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்றது. இது திரைத்துறையில் அவருக்கு தனிப்பெயரை உருவாக்கியது. பின்னர் சிறிது இடைவெளிக்குப் பின்னர் 1992இல் 'செம்பருத்தி' படத்தில் 'நட்ட நடுக் கடல் மீது நான் பாடும் பாட்டு', தர்மசீலன் படத்தில் 'எங்குமுள்ள அல்லா பேர சொல்லு நல்லா', ராமன் அப்துல்லா படத்தில் 'உன் மதமா என் மதமா ஆண்டவன் எந்த மதம்' வள்ளல் படத்தில் 'எட்டி உதைச்சதம்மா', 1999 என்றென்றும் காதல் படத்தில் 'நாடோடி மன்னா', 2002-இல் காமராசு படத்தில் ஒரு பாடல் போன்றவை அவருக்குத் தமிழ் திரை உலகில் பெரும் அங்கீகாரத்தை வழங்கின.

மேலும் செம்பருத்திப் பட பாடல் அவருக்குப் பெரும் அளவில் திரை இசை ரசிகர்களை உருவாக்கியது. அது அப்படத்தின் கடல் அலைமீது தன் வரிகளை எழுதிக்கொண்டே சென்றது. மேலும் பாரதிதாசன் பாடல்கள் மீது அபிமானம் கொண்டிருந்த நாகூர் ஹனீபா அவரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' மற்றும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' போன்ற பாடல்களை அதற்குரிய லயத்தோடு பாடினார். இது மதங்கடந்து பலரின் அபிமானத்தை நாகூர் ஹனீபாவிற்கு தேடித்தந்தது. மேலும் பல பொதுப் பாடல்களைப் பாடினார். இதன் தொடர்ச்சியில் உடல் நலிவுற்றிருந்த நாகூர் ஹனீபா 2015 ஏப்ரல் 8-இல் மரணமடைந்தார். அவரின் மரணத்திற்குப் பிறகு சில ஆண்டுகள் தேக்கமடைந்திருந்த முஸ்லிம் இசை மரபு அவரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இவ்வேளையில் மீண்டும் உயிர்பெற்றிருக்கிறது.

குறிப்பாக, பெண் பாடகர்களான ரமா, பரீதா போன்றவர்களின் வரவு தமிழ் முஸ்லிம் சமூகத்தில் இசையின் பரிணாம மாற்றத்திற்கான அறிகுறி. மேலும் நாகூர் சதாம், தேரழுந்தூர் தாதின், இறையன்பன் குத்தூஸ், திருச்சி கென்னடி போன்றவர்கள் தமிழ் முஸ்லிம் இசை மேடைகளை அலங்கரிக்கின்றனர். இந்த மரபு தொடர வேண்டும். தமிழ் முஸ்லிம் சமூகத்தில் இசை நீர்வீழ்ச்சி போன்று அதன் தடத்தில் பயணம் செய்து பெரும் தடாகமாக உருவெடுக்க வேண்டும். அதுவே நாகூர் ஹனீபா நூற்றாண்டு நமக்கு உணர்த்தும் செய்தி.

# திராவிடம் பாடிய இசை முரசு



மானசீகன்
பேராசிரியர்

முன்னுரை

கடந்த நூற்றாண்டில் நாகூர் ஹனீபாவின் குரல் மூன்று வெளிகளில் மூன்று விதமான அர்த்தங்களை உருவாக்குகிற ஆற்றல் படைத்ததாக இருந்தது என்பதை நுட்பமான மனம் கொண்டோர் உணர முடியும்.

"தி.மு.க. மாநாடுகளில், கட்சிக் கூட்டங்களில், தேர்தல் பரப்புரைகளில் அந்தக் கம்பீரக்குரல் இந்த மாநிலத்தில் உருவாகி வந்த புதிய உணர்வெழுச்சியின் அடையாளம்.

"மீலாது விழாக்களில், மார்க்க நிகழ்வுகளில், இஸ்லாமியத் திருமணங்களில், சமயப் பண்டிகைகளின் போது புத்தாடை அணிந்து பரபரப்பாகும் இல்லங்களில் முஸ்லிம்கள் கேட்டு உருகிய அந்த தீன் குரல் இஸ்லாமிய மார்க்க வரலாறுகள் மற்றும் விழுமியங்களுக்கான அசலான தமிழ் வடிவம்.

"எல்லாச் சமயத்தவர்களும் கலந்து வாழ்கிற பொது வெளிகளில், கச்சேரிகளில் அவருடைய குரல் ஒரே நேரத்தில்,

சமய நல்லிணக்கத்திற்கான வாசலாகவும், தமிழ் பேசும் இஸ்லாமியர்களின் பண்பாட்டு அடையாளமாகவும் திகழ்ந்தது.

அவருடைய குரல் வெறும் குரல் அன்று. குறியீட்டு அடையாளம். இந்த மூன்று மனநிலைகளையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு விடாமல் சரியாகக் கையாண்டதில்தான் அவருடைய ஆளுமை அடங்கியிருக்கிறது. அந்த கம்பீரக் குரலுக்குள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கி தொண்ணூறுகள் வரை நீடித்த அரசியல் மற்றும் பண்பாட்டு வரலாற்றின் சுவடுகள் வெளிப்படுவதையும் நாம் அவதானிக்க முடியும்.

இந்தக் கட்டுரை திராவிட இயக்கத்திற்கு ஹனீபா ஆற்றிய பங்களிப்பை ஆராய்கிறது.

## நீதிக்கட்சியில் ஹனீபா

இந்தியாவிலேயே சமூக நீதிக்கான முதல் அரசியல் குரலாய் ஓங்கி ஒலித்த பெருமை நீதிக்கட்சிக்கு உண்டு. ஹனீபாவும் நீதிக்கட்சிக்கு ஆதரவாக மேடைகளில் பாடுகிறவராகவே தன் இசை வாழ்க்கையைத் தொடங்கினார்.

நீதிக்கட்சித் தலைவர்களில் மிக முக்கியமானவர் பன்னீர் செல்வம். 1940-ல் நீதிக்கட்சித் தலைவரான அவர் இலண்டனில் இந்திய அமைச்சரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அவருக்கு நாகூரில் நடந்த வழியனுப்பு விழாவில் ஹனீபா பாடினார். இலண்டனுக்குப் போகும் வழியில் விமானம் கடலில் விழுந்து சிதறியது. அப்போது அண்ணா, கலைஞர், குருசாமிதாஸ், பாரதிதாசன் ஆகியோர் இரங்கற்பா பாடி அஞ்சலி செலுத்தினர். இரங்கல் கூட்டத்தில் ஹனீபா பாடிய,

"பறந்தாயோ எங்கள் பன்னீர் செல்வமே" என்கிற பாடல் சோககீதமாக ஒலித்து அத்தனை பேரையும் அழ வைத்ததாக கலைஞர் குறிப்பிடுகிறார்.

## பெரியார் பாராட்டிய ஹனீபா

"தந்தை பெரியாரிடம் பாராட்டுப் பெறுவதென்பது சிங்கத்தின் வாயிலிருந்து ஜிலேபி எடுத்துச் சாப்பிடுவதைப் போல் ஆச்சர்யமான ஒன்று" என்று அண்ணா நகைச்சுவையாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பெரியார் நீதிக்கட்சியில் இருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய போது ஹனீபாவும் அவரை நிழலாகப் பின்தொடர்ந்தார். அதுவே திராவிடர் கழகமாக மலர்ந்த போது ஹனீபா கழகப் பாடகராக உருவெடுத்தார். திராவிடர் கழக மேடைகளில் பாடுகிற போதெல்லாம் பெரியாரிடமிருந்து பாராட்டை மட்டுமல்ல; பணத்தையும் பெற்றவர் ஹனீபா. அண்ணா கூற்றுப்படி யோசித்தால் அவர் சிங்கத்தின் வாயையே லேபிக் கடையாக்கிக் கொண்டவர்.

பெரியார் குறித்த பாடலை முதன்முதலாக இசைத்தட்டில் பதிவு செய்த பெருமையும் ஹனீபா அவர்களுக்கே வாய்த்திருக்கிறது.

*"பேரறிவாளர் அவர்*
*பெரியார் என்னும் ஈவெரா*
*தூங்கிக் கிடந்த உன்னைத்*
*தூக்கித் துடைத்தணைத்து*
*தாங்கித் தரைமேல் இட்டார்*
*தமிழர் தாத்தாவாம் ஈவெரா"*

என்று அவர் பாடிய பாடல்தான் பெரியாரைத் தமிழர் தாத்தாவாக அடையாளம் காட்டியது.

அண்ணாவின் மீது பேரன்பு கொண்ட ஹனீபா தி.க.விலிருந்து பிரிந்து தி.மு.க. உருவானபோது அவரது இசைத்தளபதியாகத் துணை நின்றார்.

1957-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. முதன்முதலாகப் போட்டியிட்டது. ஹனீபா நாகப்பட்டினத்தில் களமிறங்கினார். அந்தத் தேர்தலில் பச்சைத் தமிழன் காமராஜருக்காக பெரியார் காங்கிரஸை ஆதரித்தார். காங்கிரஸ் வேட்பாளர் இராமலிங்கத்தை ஆதரித்துப் பரப்புரை செய்வதற்காக நாகைக்கு வருகை புரிந்தார். பிடிக்காதவர்களைத் திட்டுவதில் முனைவர் பட்டம் பெற்ற பெரியார் ஒரு இடத்தில் கூட ஹனீபாவைத் திட்டவில்லை. மாறாக "ஹனீபா என் செல்லப்பிள்ளை. நேர்மையான மனிதர்" என்று மனதாரப் பாராட்டியிருக்கிறார். மற்ற தம்பிமார்கள் அவருக்குக் கண்ணீர் துளிகளாய் தெரிந்த போதும் ஹனீபா மட்டும் பன்னீர் துளியாகத் தெரிந்திருக்கிறார்.

ஹனீபா கலைஞரால் மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்ட போது பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றிருக்கிறார்.



"என் வயது வாழுங்கள்" என்று பெரியார் உள்ளன்போடு வாழ்த்த அருகில் இருந்த மணியம்மையார்.

"அய்யா இப்படி யாரையும் வாழ்த்தியதில்லை" என்று ஆச்சர்யப்பட்டிருக்கிறார். ஆண்டவனை ஏற்காத பெரியாரின் வாக்கு பலித்ததற்கான அடையாளமாகவே ஹனீபா அவர் வயதைத் தாண்டி வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

## அண்ணாவின் அன்புத் தம்பியாய்

அண்ணா ஓர் அரசியல் அதிசயமாக எல்லோராலும் கொண்டாடப்பட்டவர்.

"தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களில் கொள்கை எனும் பாயாசத்தை அழகாகச் சமைத்தவர் அண்ணாதான். அவர் இலட்சியமென்னும் சர்க்கரையைத் தூவினாரே அன்றி சுயநலமெனும் உப்பைத் தள்ளியே வைத்திருந்தார். கவர்ச்சி எனும் ஏலக்காயை வைத்து ஊரையே திரும்பிப் பார்க்க வைத்தாலும், கூடவே

பாசமென்னும் முந்திரியைப் போட்டு இல்லங்கள் தோறும் பந்தி வைத்தவர்" என்று அண்ணாவின் அரசியலை கண்ணதாசன் பாயாசமாகவே படம் பிடித்துக் காட்டினார்.

*"அழைக்கின்றார் அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா*
*அருமைமிகு தமிழகத்தின் துயர் துடைக்க இன்றே."*

என்று தொடங்கும் ஹனீபா பாடல் கால் நூற்றாண்டு காலம் திராவிட இயக்கத்தின் தேசிய கீதமாகவே ஒலித்தது. தன் வீட்டுக்கு அண்ணா இல்லம் என்று பெயரிட்ட ஹனீபா தன் உள்ளத்தையும் அண்ணாவிற்கான நிரந்தர இல்லமாக வைத்திருந்தார்.

அண்ணாவின் மரணம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய தாக்கம் வரலாற்றின் பக்கங்களில் வாசம் மறையாமல் இன்னும் மீந்திருக்கிறது. அண்ணாவுக்காக 'இதயத்தைத் தந்திடண்ணா' என்று இரங்கற்பா பாடிய கலைஞருக்கு இயக்கமே பரிசாகக் கிடைத்து விட்டது. அவருடைய இறுதி ஊர்வலத்தில் ஹனீபா பாடிய

*"எங்கே சென்றாய்*
*எங்கே சென்றாய்*
*எங்களைத் தவிக்க விட்டு*
*எங்கே சென்றாய்?"*

என்கிற பாடல் கழகக் கண்மணிகளை உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் சிந்த வைத்தது.

*"பட்டுமனத் தொட்டிலிலே*
*பூ மணக்கும் தென்றலிலே*
*கொட்டும் பனிக்குளிரினிலே*
*மணல்வெளிக் கரையினிலே*
*உறங்குகிறாய் மன்னா*
*நாங்கள் கலங்குகிறோம் அண்ணா"*

என்று ஹனீபா அண்ணாவுக்காகப் பாடிய தாலாட்டுப் பாடல் திராவிடத் திருப்பள்ளியெழுச்சியாக தமிழர்களைத் தட்டியெழுப்பியது. அண்ணாவின் மரணம் விட்டுச் சென்ற வெற்றிடத்தை இந்தப் பாடல் மிகுந்த வலியோடு பதிவு செய்திருக்கிறது.

*"அண்ணா என்பது*
*ஒருவரைத்தான்*
*அகிலம் வழங்கும்*
*மதிப்புரைதான்."*

என்கிற பாடலில் அண்ணா எனும் பெயர்ச்சொல் உறவுச் சொல்லாகி தமிழ் பேசும் மனங்களை ஆட்சி செய்த வரலாறு கம்பீரக்குரலால் கல்வெட்டாய் நிற்கிறது.

### கலைஞரின் கைவாளாய் ஹனீபா

ஹனீபா கலைஞரின் சமகாலத்தவர். ஏழாம் வகுப்போடு பள்ளிப்படிப்பை நிறைவு செய்த ஹனீபா திருவாரூரில் வாழ்ந்த சிறிய தந்தையின் பலசரக்குக் கடையில் பணியாற்றினார்.

"ஓடம்போக்கி ஆற்றங்கரையில் நடக்கும் நீதிக்கட்சிக் கூட்டங்களில் அரைக்கால் சட்டை அணிந்த கலைஞர் தலைமை தாங்க எட்டுக்கட்டையில் பாட்டுப் பாடி ஹனீபா கூட்டத்தைக் கூட்டுவார்" என்று அ.மா. சாமி ஹனீபாவின் சிறு வயது அரசியல் பங்களிப்பைக் குறிப்பிடுகிறார்.

கலைஞரையும், பேராசிரியரையும் இரு பக்கமும் தோளில் கை போட்டு அணைத்தபடி ஹனீபா கம்பீரமாக நிற்கும் ஒரு புகைப்படம் உண்டு. கலைஞரின் இறுதிக் காலத்தில் வேறு எவரும் அப்படிச் செய்து விட முடியாது. வயதையும் தாண்டி ஹனீபாவுக்கு கலைஞர் தந்திருந்த உரிமை அது. எவரிடம் இருந்தும் எதையும் எதிர்பார்க்காத ஹனீபா கலைஞரோடு கடைசி வரை எதிர்பார்ப்பே இல்லாத இலட்சியத் தோழனாகவே துணை நின்று மடிந்தவர்.

"கலைஞரின் நெடுந்தொலைவு அரசியல் பயணத்தில் அவரை விட்டு ஒருபோதும் விலகாத இரட்டை நிழல்கள் அன்பழகனும் ஹனீபாவும்தான். ஒரு நிழலுக்காவது உட்கார நாற்காலி கிடைத்தது. அரை நூற்றாண்டு காலம் பதவியே இல்லாமல் கூடவே நின்ற அதிசய நிழல் தான் ஹனீபா" என்கிற வலம்புரி ஜானின் கூற்று ஹனீபாவின் தியாகத்தையும் கொள்கை உறுதியையும் பறை சாற்றுகிறது.

மறைவு வரை தொடர்ந்த கலைஞரின் புகழ்பாடும் கவியரங்குகளுக்கு வாப்பாவும் உம்மாவுமாகத் திகழ்ந்தது ஹனீபாவின் இசைப்பாடல்கள்தான். கருணாநிதி என்கிற பெயரை மறக்கடித்து கலைஞர் என்கிற சொல்லைத் தமிழர்களின் மனவெளியெங்கும் நிலைபெறச் செய்ததில் ஹனீபாவின் பாடல்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

*"அவர்தான் கலைஞர்*
*அஞ்சுகச் செல்வர்*
*அருந்தமிழ் இனத்தின் தலைவர்*
*இனி வருங்கால வரலாற்றுப் புலவர்."*

என்று அவர் முன்மொழிந்ததை தமிழ்நாடு நிரந்தரமாய் வழிமொழிந்தது.

இந்தி எதிர்ப்புக்காக தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த கலைஞரின் கல்லக்குடிப் போராட்டத்தைத் தன் இசையால் காவியமாக்கியவர் ஹனீபா

*"கல்லக்குடி கொண்ட*
*கருணாநிதி வாழ்கவே*
*மக்கள் உள்ளம் குடி கொண்ட*
*உண்மைத் தலைவன் வாழ்கவே."*

*- என்று தொடங்கும் அந்தப் பாடலில்*

*"அண்ணாவின் வழிசெல்லும்*
*அடி செல்லும் நெறி செல்லும்*
*கண்ணான கருணாநிதி*
*தி.மு.கழகத்தின் கருணாநிதி."*

என்று ஹனீபா ஆடிய இசைத்தாண்டவம் 'கலைஞர்தான் அடுத்த தலைவர்' என்பதற்கான பிரகடனமாகவும் அமைந்தது.

கலைஞரை விடச் சிறந்த எதிர்கட்சித் தலைவர் இந்திய வரலாற்றிலேயே இல்லை. பதிமூன்று ஆண்டுகால அரசியல் வனவாசத்திலும் இடைவிடாத போராட்டத்தால் கழகத்தை உயிர்ப்போடு வைத்திருந்தவர் கலைஞர். அவருடைய போர்க்குணத்தை

"பாளையங்கோட்டைச் சிறையினிலே
பாம்புகள் பல்லிகள் நடுவினிலே
அஞ்சாமல் இருந்தவர் யாரு ?
அந்தக் கலைஞரின் புகழைப் பாடு."

என்கிற ஹனீபாவின் பாடல் அழகாகப் பதிவு செய்திருக்கிறது.

## கழகத் தொண்டனாய் ஹனீபா

ஹனீபா பாடகர் மட்டுமில்லை கழகத்தின் உண்மைத் தொண்டன். எந்தச் சூழ்நிலையிலும் வழிமாறாத கொள்கைவாதி. முஸ்லீம் லீக் மேடைகளில் இஸ்லாமிய கீதங்கள் பாடி அனைவரையும் ஆட்கொண்ட ஹனீபாவை கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்கள் லீக்கில் சேரச் சொல்லி நேரடியாக அழைப்பு விடுத்தும் அதை அன்போடு மறுத்து விட்டார். தி.மு.க.வின் சின்னத்தை ஹனீபாவின் குரலே ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துச் சென்றது. "ஓடி வருகிறான்" என்று ஹனீபா முழங்கினால்தான் பிரச்சார மேடைகளுக்கு உயிர் வரும். வேட்பாளர்களுக்கு புத்துணர்ச்சி பிறக்கும். வீடு வீடாய் நடந்து சென்று உரிமையோடு ஓட்டுக் கேட்பவர்களின் நரம்புகள் முறுக்கேறும்.

"ஆறிலும் சாவு
நூறிலும் சாவு
அஞ்சாமல் ஓடி வா!
அண்ணாவின் தம்பி
அன்பான கலைஞர்
அழைக்கிறார்
ஓடி வா! "

என்று ஹனீபா முழங்கினாலே தி.மு.கழகத்தின் போர்ப்படை உடனே தயாராகி விடும்.

ஹனீபா முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கறுப்புக் கொடி காட்டி 11 முறை சிறை சென்றிருக்கிறார்.

அண்ணாவின் தலைமையில் நிகழ்ந்த இரண்டாவது மொழிப் போராட்டத்தில்

"திராவிடச் சோலையிலே
தீரர் வாழும் வேளையிலே
செந்தமிழை மேய வந்த
இந்தி என்ற எருமை மாடே!



முன்னம் போட்ட சூடு என்ன
மறந்ததோ உனக்கு
என்று இந்தி ஏற்க மாட்டோம்
ஓடிப் போ வடக்கு"

என்கிற ஹனீபாவின் பாடல் போர்ப்பறையாகவே ஒலித்தது. போராட்ட வேளைகளில் அண்ணா கலைஞர்களுக்கு விலக்கு தந்திருந்த போதும் ஹனீபா அதை ஏற்றுக் கொண்டதில்லை.

"அது வெறும் கலைஞர்களுக்கு. என் போன்ற கொள்கைவாதிகளுக்கு அன்று" என்று கூறி சுயமரியாதை உணர்வோடு எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார்.

## நிறைவுரை

வேறு எந்த இஸ்லாமியப் பாடகருக்கும் கிடைக்காத அங்கீகாரம் தமிழ்ச் சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைந்திருந்ததாலேயே அவருக்கு மட்டும் கிடைத்தது. அதே வேளையில் ஹனீபா தன் அடையாளங்களை மறைத்தவரல்ல. மதப்பற்று மிக்க ஹனீபா திராவிட உணர்வோடு தேச நலனிலும் அக்கறை காட்டினார்.

பாகிஸ்தானை விட்டு வங்கதேசம் பிரிந்த போது
"வெற்றி வெற்றி என்று பாடுவோம்
வீரம் மிக்க பாரதத்தின்
வீரர் தம்மை வாழ்த்துவோம்."
என்று மங்கல வாழ்த்துப் பாடி
"கலகம் செய்த பாகிஸ்தானை
கலங்க வைத்த வெற்றி"

என்று தேசப்பற்றையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பண்பாட்டு ரீதியாக தமிழ்நிலத்தின் வேரோடும், வேரடி மண்ணோடும் பிரிக்க முடியாமல் இணைந்திருக்கும் தமிழ் பேசும் இஸ்லாமியர்களுக்கான மிக முக்கியமான அடையாளம்தான் நாகூர் ஹனீபா. இப்படிப்பட்ட ஆளுமைகள் அங்கிருந்து மலர்வதற்கான சூழலை மீண்டும் உருவாக்குவதே சமகால திராவிடத்தின் முதன்மைப் பணியாக இருக்க முடியும். ஒரு நூற்றாண்டைத் தாண்டி விட்ட திராவிட அரசியல் வரலாற்றின் மகத்தான பேராளுமையாக இசைமுரசு நாகூர் ஹனீபா என்றும் போற்றப்படுவார்.

# அண்ணாவின் மனம் நிறைந்த ஹனீபா...



கவிஞர்
நாகூர் காதர்ஒலி

திராவிட இயக்கம் துவங்கப்பட்ட காலத்தில் இருந்து அதன் கொள்கையில் ஈர்ப்புக் கொண்டவர் இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள். சிறு வயதிலிருந்தே அதன் மூத்த தலைவர்களின் பாசத்தையும் நேசத்தையும் பெற்றவர், தந்தை பெரியாரின் அன்பிலும் ஆசியிலும் நனைந்தவர். அவர் கரங்களினால் பரிசுகளையும் பெற்றவர். தனது வெண்கலக் குரல் பாட்டுகளால் வீரிய மிக்க வரிகளால் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். அதைபோல் பேரறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் ஆழமான இடத்தைப் பிடித்தவர். மாணவப் பருவத்திலேயே கலைஞருக்கும் நாகூர் ஹனீபாவுக்கும் ஏற்பட்ட நட்பும் நேசமும் மிகவும் ஆழமானது. புலவர் நாகூர் ஆபிதீன் அக்காலத்தில் நாகூரில் நிறுவிய கவிஞன் குடிசைக்கு கலைஞர் அடிக்கடி வருவதுண்டு. அதுபோல் திருவாரூருக்கு தனது சித்தப்பா வீட்டிற்கு போய் தங்கும் போதெல்லாம் நாகூர் ஹனீபா கலைஞரைச் சந்திப்பதுண்டு. இருவரும் ஓடம்போக்கியாறு மணற் பரப்பில் விளையாடி

அறிவார்ந்த முறையில் பொழுதைக் கழிப்பதுண்டு. அன்று தொடங்கிய இவர்களின் நட்பு இறுதி வரை தொடர்ந்தது. எவராலும் பிரிக்க முடியாதபடி திகழ்ந்தது.

அறிஞர் அண்ணா அவர்களால் தி.மு.க. தனிப்பெரும் கட்சியாக தொடங்கப்பட்டது. அறிஞர் அண்ணா 'நம்நாடு' என்ற பத்திரிக்கைக்கு ஆசிரியராய் இருந்து தி.மு.க. பற்றிய செய்திகளை எழுதி வந்தார். அப்பத்திரிக்கையில் தி.மு.க. தொண்டர் செல்லதுரை என்பவர் எழுதிய "அழைக்கின்றார் அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா" என்ற கவிதை இடம்பெற்றது. இந்த கவிதை கலைஞரை மிகவும் கவர்ந்தது. அதே ஆண்டு கோவையில் மாபெரும் தி.மு.க. மாநாடு நடைபெறுகிறது. அதில் அண்ணா முதற் கொண்டு எல்லா முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

நாகூர் ஹனீபா அவர்களும் அதில் பங்கேற்றார், கலைஞர் அவர்கள் 'அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா' என்ற கவிதைக்கு நல்ல மெட்டுப் போட்டு ஹனீபா அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் மக்கள் குவிந்துள்ள மாநாட்டில் பாட வேண்டும். இப்பாடல் ஹனீபா அவர்களின் வெங்கலக்குரலில் கம்பீரமாய் ஒலித்தால் பேரறிஞர் அண்ணா அவர்களும் மகிழ்வார்கள், பாடலும் இறவாப் புகழுடன் மக்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும் என வேண்டுகோள் விடுக்க, நாகூர் ஹனீபா அவர்களும் உடனே மெட்டமைத்து பாட, எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அறிஞர் அண்ணா அவர்களும் மனதாரப் பாராட்டினார்கள். அண்ணா அடிக்கடி விரும்பிக் கேட்கும் பாடலாகவும் அமைந்தது. தி.மு.க.வின் கொள்கை முழக்கப் பாடலாகப் பட்டிதொட்டி எங்கும் ரீங்காரமிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் இசைமுரசு நாகூர் ஹனீபா அண்ணன் அவர்களுக்கும் மேலும் நெருக்கமான நேசத்தை ஏற்படுத்தியது.இசைமுரசு குரலில் இன்று கேட்டாலும் நரம்புகளை முறுக்கேற்றும் அருமையான பாடல். பற்பல மேடைகளில் முழங்கிய இப்பாடல், சில தடைகளையும் தகர்த்தெறிந்து இசைத்தட்டிலும் 1959 இல் இடம் பிடித்தது.

1962 தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்த நேரம், இசைமுரசு நாகூர் ஹனீபா இசையுலகின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்த காலம். அறிஞர் அண்ணாவின் இதய ஆசனத்தில் கர்ஜனை சிங்கமாய் இருந்து தனது வெண்கலக் குரலால் அனைத்து மேடைகளிலும் பிரச்சாரப் பாடல்களைப் பாடி மக்களை ஈர்க்கின்ற தருணம். அண்ணா அவர்களும் எங்கே சென்றாலும் நாகூர் ஹனீபாவை கூடவே அழைத்து செல்வார். அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஹனீபா என்றாலே தனிபட்ட பிரியம். காரணம் அவரது வெண்கலக் குரல், கொள்கைப் பிடிப்பு, மற்றும் தமிழ் உச்சரிப்பு.

ஒரு நாள் இராமநாதபுரத்தில் கட்சியின் மாபெரும் பொதுக்கூட்டம். அங்கே அறிஞர் அண்ணா பேசுகிறார். அதே நேரத்தில் இசை முரசுக்கு அந்த பகுதியில் வேறு இடத்தில் இசை நிகழ்ச்சி. அப்போதெல்லாம் கூட்டமோ, கச்சேரியோ முடிய பின்னிரவு 1 மணி, 2 மணி கூட ஆகும். அன்று ஹனீபா இராமநாதபுரத்தில் தான் இருப்பார் என்பது அண்ணாவுக்குத் தெரியும். கூட்டம் முடிந்ததும் ஹனீபாவை சந்தித்து விட்டு போகலாம் என்ற எண்ணத்தில் தனது காரை ஹனீபா வீட்டிற்கு போகும்படி டிரைவரிடம் சொல்ல



காரும் ஹனீபா வீட்டு வாசலில் போய் நிற்கிறது.. தெருவோ எவ்வித அரவமும் இன்றி அமைதி நிலவும் சூழ்நிலை. எல்லோரும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சமயம். ஹனீபா வீட்டுக் கதவுகளும் சாத்தப்பட்டு இருக்கிறது. ஹனீபா உறங்குகிறார் என்பதை உணர்ந்து கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள், அடுத்த வீட்டருகே தனது காரை நிறுத்தச் சொல்லி விட்டு காரிலேயே ஓய்வு எடுக்கிறார்.

நேரம் நகர்கிறது. அதிகாலை பொழுது நாகூர் ஹனீபா அவர்களின் மூத்த சகோதரி வீட்டு வாசல் கதவை திறந்து வெளியில் வந்து பார்க்கிறார். பக்கத்து வீட்டு வாசலில் ஒரு கார் நிற்பதை காண்கிறார். அதன் நம்பரை உற்று நோக்குகிறார். ஆஹா அண்ணாவின் கார் அல்லவா இது. இந்த நேரத்தில் ஏன் இங்கே நிற்கிறது என்ற பதட்டத்துடன் உள்ளே ஓடி சென்று ஹனீபாவை எழுப்பி ஹனீபா ஹனீபா சீக்கிரம் எழுந்திரு, அண்ணாவின் கார் போல் தெரிகிறது வாசலில் நிற்கிறது என்று சொல்ல, ஹனீபா அவர்களும் திடுதிப்பென எழுந்து ஓடி வந்து வாசலில் பார்க்கும் போது, அண்ணா அவர்கள் காரின் பின்பக்க சீட்டில் கால்களை நீட்டி படுத்து இருப்பதைக் கண்டு அவசர அவசரமாகப் பக்கத்தில் சென்று என்ன அண்ணா இது, ஒரு சத்தம் கொடுத்து இருந்தால் ஓடி வந்திருப்பேனே, எப்போ வந்தீங்க, என்ன செய்தி என கேட்க,

உங்களைப் பார்த்துப் போகலாம் என்றுதான் வந்தேன். நான் ஒரு மணிக்கே இங்கே வந்து விட்டேன். நீங்கள் நல்லா தூங்கிக் கொண்டு இருப்பதை உணர்ந்தேன். நீங்களும் விடிய விடிய கச்சேரி செய்து விட்டு களைப்புடன் உறங்கிக் கொண்டு இருக்கிறீர். உமது உறக்கத்தை கெடுக்க நான் விரும்பவில்லை. சரி இப்படியே நாமும் காரிலேயே கொஞ்ச நேரம் உறங்கி விட்டு பொழுது புலர்ந்ததும் உங்களைப் பார்த்துப் பேசி விட்டுப் போகலாம் என ஓய்வு எடுத்துக் கொண்டேன் என அண்ணா சொன்னதும், ஹனீபா அவர்கள் மெய் சிலிர்த்து உறைந்து போய் விட்டார். கோடான கோடி தமிழ் மக்களின் தலைவன் என் வீட்டு வாசலில் காத்துக் கிடப்பதா? எனக் கண்ணீர் மல்க ஆதங்கப்பட்டார். அதன்

பின் இருவரும் உள்ளே சென்று வெகுநேரம் உரையாடி காலை உணவு சாப்பிட்ட பின் அண்ணா அவர்கள் புறப்பட்டார்கள்.

இசையின் மூலம் பொருளீட்டி நாகூர் பொறையாத்தான் கடைதெருவில் 1966 இல் கட்டப்பட்ட தனது முதல் இல்லத்திற்கு அண்ணா இல்லம் என பெயர் சூட்டினார். புதுமனை புகு விழாவிற்கு அறிஞர் அண்ணா நாகூருக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்து நாகூர் நூர்ஷா தைக்கால் திடலில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நாகூர் ஹனீபாவின் அருமை பெருமை பற்றி வாழ்த்திச் சொற்பொழிவாற்றினார்.

1985ஆம் ஆண்டு நாகூர் நூர்ஷா தைக்கால் தெருவில் கட்டப்பட்ட இன்னொரு இல்லத்திற்கு 'கலைஞர் இல்லம்' என பெயர் சூட்டினார். இவ்விழாவிற்குக் கலைஞர் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்த வீட்டிற்கு 'காயிதே மில்லத்' எனப் பெயர் சூட்டினார். விழாவில் பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.

1987-இல் நாகூர் ஹனீபா லாட்ஜ் திறப்பு விழாவிற்கு பேராசிரியர் அன்பழகன் வருகை தந்து சிறப்பு சேர்த்தார்.

தனது சொந்த இல்லங்களுக்குத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டியது என்பது நாகூர் ஹனீபா தனது தலைவர்கள் மீது கொண்டிருந்த அன்பையும் அபிமானத்தையும் வெளிபடுத்திக் காட்டுகிறது.

தி.மு.க.வின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராமல் உழைத்தவர். தி.மு.க. என்ற விருட்சத்தின் ஆணிவேர்களில் நாகூர் ஹனீபா அவர்களும் ஒருவர். கட்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துத் தனது கம்பீரக் குரலால் கொள்கைகளை பாடல்களாக முழங்கி பட்டித்தொட்டியெல்லாம் சென்றடையச் செய்தவர். இசையின் மூலம் கட்சியின் வளர்ச்சியில் அசையாத உறுதியுடன் வாழ்ந்தவர்.

சிறைச்சாலை, போராட்டங்கள், சொல்லடிகள், கல்லடிகள், எதனையும் கண்டு அஞ்சியதில்லை, தனக்கென எதற்காகவும் பிறரிடம் கெஞ்சியதில்லை, உறுதியில் இரும்பு இதயம் கொண்ட இசைமுரசு நாகூர் ஹனீபா.. வாழ்க அவரது புகழ். எப்படிப்பட்ட இணக்கமான நெருக்கம்!!!!...

இதைபோல் எத்தனையோ அருமையான நெகிழ வைக்கும் சம்பவங்கள் உள்ளன. இந்த தகுதி இசைமுரசை தவிர வேறு யாருக்கும் கிடைப்பது அரிது அரிது அரிதிலும் அரிது.

தமிழ் உலகமே நேசிக்கும் இசைமுரசு நாகூர் ஹனீபாவின் நூற்றாண்டு விழா நினைவு நாளில் இதனை உங்களுடன் பகிர்வதில் எனது நெஞ்சம் நாகூர் ஹனீபா அவர்களின் மறக்க முடியாத நினைவுகளுடன் அவருக்காகப் பிரார்த்தனை செய்கிறது..

# இசைமுரசுவின் பாடல்களில் மரபிசை...



ஷேக் ஷாஹுல் ஹமீது என்ற ராஜபார்ட் ராஜா முகமது

இறை அருளால் இக்கட்டுரையை வாசிப்பவர்களுக்கு உதவியாக இசை பற்றிச் சற்றே கூறுகின்றேன். ஆதித் தமிழிசையின் ஏழு சுரங்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகும். சிலப்பதிகாரம் இதன் சுரக் குறியீடுகளே சரிகமபதநி ஆகும்.

“சரிகமபதநி எனும் ஏழு எழுத்தாற்றானம்

வரி படர்ந்த கண்ணினாய் வைத்து தெரிவறிய

ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்

சூழ் முதலாம் சுத்தத் துணை” - இசை நுணுக்கம் என்ற தமிழிசை இலக்கணம்

இந்த ஏழு சுரங்களே சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கர்நாடக சங்கீதத்திலும் ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் அழைக்கப்படுகிறது. தமிழ் இசையின்

சுரத்தானங்கள் 12 ஆகும். தாய் ராகங்கள் 32 ஆகும் கர்நாடக சங்கீதத்தின் சுரத்தானங்கள் 16 ஆகும். தாய் ராகங்கள் 72 ஆகும். ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் சுரத்தானங்கள் 12 ஆகும். தாய் ராகங்கள் 10 ஆகும்.

இவைகளை விவரித்தாலும் ஒவ்வொரு ராகத்திற்கும் ஏற்ற இறக்கம் அதாவது ஆரோகணம் அவரோகணம் குறிப்பிட்டாலும் (எடுத்துக்காட்டாக மோகன ராகத்திற்கு மட்டும் குறிப்பிட்டுள்ளேன்) கட்டுரை விரிவாகிவிடும் என்று எண்ணி இறைவனை அஞ்சி முன்னோட்டத்தை நிறைவு செய்கிறேன்.

குறிப்பு:-

த.பெ. தமிழிசைப் பெயர்

க.பெ. கர்நாடக சங்கீத பெயர்

இ.பெ. ஹிந்துஸ்தானி சங்கீத பெயர்

மோகனம்

த.பெ-முல்லைத் தீம்பாணி முல்லையந் தீங்குழல்

க.பெ-மோகனம்

இ.பெ.-பூப் பூபாளி

ஏற்றம் - சரி2 க3 ப த2 ச

இறக்கம் - சத2 பக3 பி2 ச

திருமறையின் அருள் மொழியில்

ஒரு கையில் இறை வேதம் (ஆதுமகன் எனும் விருத்தம்)

சிவரஞ்சனி

பெ. புற நீர்மைப் பண்

க.பெ. இ.பெ. சிவரஞ்சனி

தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு

எங்கே சென்றாய் எங்கே சென்றாய்

விஜயநாகரி

மலையாளக் கரைதனிலே இரத்த ஆற்று ஓட்டம்

நீ கொடுத்ததற்கே நன்றி சொல்ல முடியவில்லை.

மிசுர சிவரஞ்சனி (ஹிந்துஸ்தானி ராகம்)

(சிவரஞ்சனி ராகத்தில் மேலும் ஒரு காந்தாரம் பேசும்)

அதிகாலை நேரம் சுபுவுக்கு பின்னே

(ஹிந்துஸ்தானி இசையில் அந்நிய சுரங்கள் அதிகம் பேசும்)

### நீல மணி

மிசுரசிவரஞ்சினியின் அந்தர அசைவை கீழ் பஞ்சமத்தில் இருந்து அசைத்தால் கிடைக்கும் ராகம்

அருளாளன் அன்புடையோன் அல்லாவின் கருணையதாய்

(எனது குருநாதரும் மாமாவும் ஆகிய பத்மஸ்ரீ மதுரை சோமு அவர்கள் பாடிய என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இறங்கவில்லை என்ற பாடலின் ராகம்)

### புஷ்பலதிகா

அடியார்க்கு அருள் செய்யும் அம்மா

இருளில் நிலவாகப் பிறந்தார்

உலக மக்கள் வாழ்வதற்கு வந்தது குர்ஆன்

### கரகரப்பிரியா

த.பெ. - கோடிப்பாலை

இ.பெ. - காபிதாட்

அருள்மேவும் ஆண்டவரே

மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே

அமைதி மேவும் மதினா

### நட பைரவி

த.பெ. - படுமலைப் பாலை

இ.பெ. - அசர்வேரி தாட்

எண்பது கோடி தீனோர் நெஞ்சில்

எத்தனை தொல்லைகள் என்னென்ன துன்பங்கள்

ஞானத்தின் திறவுகோல் நாயகம்

### சிந்து பைரவி

இ.பெ. - பைரவி

நமனை வெருட்ட மருந்தொன்று

மக்கள் யாவரும் ஒன்றே குலம் எனும்

சன்மார்க்க ஜோதியான நபி

நெஞ்சமே நீ மறவாதே நபியை

### மாயா மாளவ கௌளை

இ.பெ. - பைரவ் தாட்

இரு கண்கள் நம் ஹசன் ஹுசைன்

சலுகை ஏன் காட்டவில்லை சாகுல் ஹமீதே நாகூரி

தர்பாரி கானடா

இ.பெ - தர்பாரி

இறைவனிடம் கையேந்துங்கள்

அருள் மழை பொழிவாய் ரஹ்மானே

சொன்னால் முடிந்திடுமோ

ஒ துனியா கே ரக்வாலே (இந்த பாடலின் மெட்டில் சமுதாய எழுச்சிக் கவிஞர் நாகூர் மு. காதிர் ஒலி அவர்கள், பாடல் இயற்றித் தர நான் பாடி இருக்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்)

கல்யாணி

த.பெ. - மேற்செம்பாலை

இ.பெ. - கல்யாண் தாட

இன்பத்தமிழ் எங்கள் மொழியாகும்

எல்லாம் வல்ல இறைவன் ஒருவனை

கோமானே சீமானே

ஹம்ஸாநந்தி

அண்ணல் நபிகளின் வண்ண மகள்

உயிர் இருக்கும் வரை உன்னை மறவேனே

தோடி

த.பெ. - விளரி பாலை

இ.பெ. - பைரவித்தாட்

எல்லா புகழும் இறைவனுக்கு

உலகம் தோன்றிட காரணமான உத்தம நபி

ஆபேரி

த.பெ. காந்தாரப்பண்

இ.பெ. பீம்ப்ளாஸ்

அல்லாவை நாம் தொழுதால்

விண்ணகமும் மண்ணகமும் வியந்துரைக்க

சக்கரவாகம்

இ.பெ. - ஆஹிர் பைரவ்

எல்லா உலகும் ஏகமாய் ஆளும் இணையற்ற

சுத்த தன்யாசி

த.பெ. - ஆம்பலந் தீங்குழல்

இ.பெ. - உதய ரவிச்சந்திரிகா

மணலில் நடந்து இருளைக் கடந்து

ஹிந்தோளம்

த.பெ. நெய்தல் பாணி

இ.பெ - மால்கௌன்ஸ்

நானிலம் போற்றிடும் நாகூரா

கடலோரம் வாழும் காதிர் மீரா

தீனோரே நியாயமா மாறலாமா

மால்கௌன்ஸ் (ஹிந்துஸ்தானி ராகம்)

மதினா நகருக்கு போக வேண்டும்

ஹரி காம்போதி

பெ - செம்பாலை

இ.பெ. கமாஜ் தாட்

கண்கள் குளமாகுதம்மா

தீன் குலக் கண்ணு

சாருகேசி

காணக் கண் கோடி வேண்டும் கஃபாவை

போவோம் மதினா புகழ் பாடியே

கதரம்

இ.பெ - சந்திர கௌன்ஸ்

கோமான் நபிகள் தோன்றாவிட்டால்

தேசு (ஹிந்துஸ்தானி ராகம்)

சின்ன சின்ன பாலர்களே

பந்துவராளி (காமவர்த்தனி)

இ.பெ. பூர்வி தாட்

நாயகம் சொல்வதைக் கேள்

எங்கும் நிறைந்த இறையோனே (கருவுக்குள் எனை வைத்து விருத்தம்)

சுபபந்துவராளி

இ.பெ. தோடி தாட்

உன்னை ஒருபோதும் நான் மறவேன் மீரா (திக்குத் திகந்தமும் விருத்தம்)



பாகேஸ்வரி (ஹிந்துஸ்தானி ராகம்)

நபி வழி நடந்தால் நரகமில்லை (ஒளிமயம் வாய்ந்த விருத்தம்)
யா ரசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்

சங்கராபரணம்

த.பெ.அரும்பாலை
இ.பெ. பிலாவல் தாட்
நில்லுங்கள் நிமிர்ந்து நில்லுங்கள்
நெஞ்சிலே வாழ்கின்றவர்
மாலை சூடும் மணமக்களே வாழ்க

பிருந்தாவன சாரங்கா (ஹிந்துஸ்தானி ராகம்)

பாலைவனத்தில் ஒரு ரோஜா
நினைத்தாலே அருட் கதவு திறந்து விடும்.

கௌரி மனோஹரி

இ.பெ -பட்தீப்
மங்களம் பொங்கிடும் இங்கிதம் தங்கிடும்

கானடா

இ.பெ. -பஹார்
மங்கையர்க்கரசி அன்னை பாத்திமா
அமீர் கல்யாணி (ஹிந்துஸ்தானி ராகம்)
சலா துல்லாஹ் சலா முல்லாஹ்

வகுளாபரணம்

தூதர் முஹம்மது வாழும் மதினா

யமுனா கல்யாணி

நபி மணி சொன்ன நெறிமுறை

குறிஞ்சி

கதியே தாரும் எங்கோனே

செஞ்சுருட்டி

பேரறிவாளர் அவர்
மத்தியமாவதி
த.பெ. - குறிஞ்சி பாணி
இ.பெ. - மத்மத் சாரங்
கண்டு வரலாம் சென்று வரலாம்

ராகமாலிகை ஹிந்துஸ்தானி ராகங்கள்

1. ஸொஹினி

2. யமன்

மாசில்லாத இறைத்தூதரே வாரும்

(இசையமைப்பாளர் ஆதி நாராயணரால் இசை அமைத்தது லொஹினி பஹார்ஜோன்புரி. யமன் எனும் நான்கு ஹிந்துஸ்தானி ராகங்கள் இசைமுரசு பாடியது இரண்டு ராகங்கள். சமுதாய எழுச்சிக் கவிஞர் நாகூர் மு. காதிர் ஒலி அவர்கள் இந்த நான்கு ராகங்கள் அமைந்த மெட்டில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பாடல் இயற்றித் தர இறையருளால் நான் பாடி இருக்கிறேன் அல்ஹம்துலில்லாஹ்)

ராகமாலிகை (கர்நாடக சங்கீத ராகங்கள்)

1. சண்முகப்பிரியா

2. மோகனம்

3. அடானா

4. ஹம்ஸாநந்தி

5. மத்தியமாவதி

வானம் இருண்டு கிடந்தது

(இசை அமைத்த பெருமைக்குரியவர் என் தலையில் எனது ஞானத் தந்தை நாகூர் தர்கா ஆஸ்தான வித்வான் அமரர் எஸ்.எம்.ஏ.காதிர் அவர்கள்)

இசை ஏதும் அறியாமல் இசை உலகின் உச்சத்தைத் தொட்டவர்கள் நான் அறிந்த வரையில் இருவர். ஒருவர் வட இந்தியாவில் பாவா முகமது ரஃபி சாகிப் அவர்கள், தென்னிந்தியாவில் இசை முரசு அவர்கள்

இசை முரசு பாடிய பாடல்களில் அந்நிய சுரங்கள் கலப்பு இல்லாத, சுத்தமான ராகங்களை மட்டுமே இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

இசை அறியாத இசை முரசு இந்த அளவுக்கு ராகங்களை பாடியது இறைவனின் அருட்கொடை என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது.

இசைமுரசு என்னை வாப்பா ராஜா என்று அன்போடு அழைப்பவர் என்னை செல்லமாக கோபிப்பவர் எனக்கும் அவருக்கும் உள்ள உறவு உலகம் அறியாதது.

எனது மூத்த நண்பராகிய இசை முரசு அவர்களுக்கு அவருடைய நூற்றாண்டில் இந்தக் கட்டுரையை அவருடைய பெயரிலே கலங்கிய கண்களோடு சமர்ப்பிப்பதை எனது பிறவிப் பயனாகக் கருதுகிறேன்.



# காலத்தால் அழியாத கந்தர்வ குரல்...



# அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா...

அழைக்கின்றார் அழைக்கின்றார்
அழைக்கின்றார் அண்ணா!
அருமைமிகு தமிழகத்தின்
துயர் துடைக்க இன்றே
அழைக்கின்றார் அண்ணா!

உழைப்போர்கள் நெசவாளர்
உழுதலுத்த மக்கள்
உழல்கின்ற நிலை மாற்ற
அழைக்கின்றார் அண்ணா

பிழைப்புக்கு வழியின்றி
பிறநாடு சென்றும்
பித்தர்களாய் வாழ்கின்ற
முத்தமிழர் தம்மின்
இளைப்பான உருகண்டு
ஏங்குகின்றார் அண்ணா
இதுமாற்ற அழைக்கின்றார்
பொதுமக்கள் தம்மை
அழைக்கின்றார் அண்ணா



காலமெல்லாம் வீணாகக்
கடத்தியது போதும்
கவின் தமிழர் நாம்இன்றே
களம்நோக்கிச் செல்வோம்
ஞாலமதில் தமிழ்நாடு பெரிதென்ற சரிதம்
நல்லேட்டில் பொன்னெழுத்தில்
பொறித்திட வெல்வோம்

ஓலமிடல் நன்றல்ல ஒன்றாகச் சேர்ந்து - இங்கு
உதிரத்தைச் சிந்திடவும் அஞ்சாது வாரீர்
வாலசைக்கும் வஞ்சகரை வேரோடு சாய்ப்போம்
வஞ்சகரின் சதிதன்னை மண்ணோடு மாய்ப்போம்
வந்திடுவீர் முன்னேற்றக் கழகத்தின்
உறுப்பினராய் இன்றே
அழைக்கின்றார் அழைக்கின்றார்
அழைக்கின்றார் அண்ணா!

**-பேரறிஞர் அண்ணா அவர்கள் 1953 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டபோது, இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள் பாடிய பாடல்...**



# காயிதே மில்லத் விரும்பிக்கேட்ட பாடல்...



மண்ணிலே பிறந்ததேனோ எங்கள் பெருமானே
மாநிலத்தை தாங்கிடவோ எங்கள் பெருமானே
கண்ணியத்தின் இருப்பிடமே எங்கள் பெருமானே
காசிம் முஸ்தபா நபியே எங்கள் பெருமானே

ஏந்தலாய்த் தானிருந்தும் எங்கள் பெருமானே
ஏழையாய் வாழ்ந்ததேனோ எங்கள் பெருமானே
மாந்தருள் மாணிக்கமே எங்கள் பெருமானே
மண்குடிலில் வசித்ததேனோ எங்கள் பெருமானே

மக்க நகர் மாந்தரெல்லாம் எங்கள் பெருமானே
மதியாமல் விட்டனரே எங்கள் பெருமானே
தக்கதுணை பக்கருடன் எங்கள் பெருமானே
தானடைந்தீர் மாமதீனா எங்கள் பெருமானே

பஞ்சணையில் தூங்கவில்லை எங்கள் பெருமானே
போர்முனையில் பாடுபட்டீர் எங்கள் பெருமானே
சஞ்சலங்கள் தாங்கி நின்றீர் எங்கள் பெருமானே
சன்மார்க்கம் வாழ்வதற்கோ எங்கள் பெருமானே

பல்லுடைந்த நேரத்திலும் எங்கள் பெருமானே
பின்வாங்கி ஓடவில்லை எங்கள் பெருமானே
கல்லடிகள் பட்டபோதும் எங்கள் பெருமானே
கயவர்களைச் சபிக்கவில்லை எங்கள் பெருமானே



**- இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்கள்
கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள்
பலமுறை விரும்பி கேட்டு பாடிய பாடல்...**

# கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே...

கல்லக்குடி கொண்ட
கருணாநிதி வாழ்கவே - மக்கள்
உள்ளம்குடி கொண்ட
உண்மைத் தலைவர் வாழ்கவே!

பொன்னான தமிழ்நாட்டின்
அண்ணாவின் தம்பியாய்
பொலிகின்ற கருணாநிதி வாழ்கவே!
பன்னாடும் புகழ்ப்பாடி
பணிகாட்டி அணிகாட்டி
கொண்டாடும் கருணாநிதி
கண்ணான கருணாநிதி - கழகத்தின்
கண்ணான கருணாநிதி



அரிதான எழுத்தாற்றல்
அழகான உரையாற்றல்
அமைந்திட்ட கருணாநிதி

பெரிதான கவியாற்றல்
புகழான நடையாற்றல்
நிறைந்திட்ட கருணாநிதி - புகழ்
பூக்கும் கருணாநிதி - தமிழ்
காக்கும் கருணாநிதி

ஏடெல்லாம் புகழ்கின்ற கதைதீட்டி
நாடகக் கலைவாழப் பணியாற்றினார்
கேடெல்லாம் களைகின்ற நோக்கோடு
சினிமா வசனத்தில் அணி ஏற்றினார்
ஈடில்லா கருணாநிதி எங்க
இதயத்தின் கருணாநிதி
அண்ணாவின் அடி நின்று
அழகான நெறி செல்லும்
அதி மேதை கருணாநிதி

குண்டேந்தும் பீரங்கி வந்தாலும்
கொள்கையில் மாறாத கருணாநிதி
பண்போங்கும் கருணாநிதி - கொடும்
பகைவெல்லும் கருணாநிதி
இளஞ்சிங்கம் கருணாநிதி
இமயத்தோள் கொண்ட கருணாநிதி
பார் புகழும் கருணாநிதி - என்றும்
பேர் நிலைத்த கருணாநிதி
கல்லக் குடிகொண்ட
கருணாநிதி வாழ்க வாழ்கவே!

**- 1953ஆம் ஆண்டு திருச்சி டால்மியாபுரத்தை**
**கல்லக்குடியாக பெயர் மாற்ற நடந்த**
**போராட்டத்தின் போது பாடிய பாடல்...**

# திராவிட நாட்டுப்பண்...

வாழ்க வாழ்கவே
வளமார் எமது திராவிட நாடு
வாழ்க வாழ்கவே !

சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறனும் செறிந்தநாடு

பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலை யாளம்
கண்டை நிகர்கண் டனமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்தநாடு

அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்
அறிவின் விளைவும் ஆர்த்தி நாடு
வெள்ளப் புனலும் ஊழித் தீயும்
வேகச் சீறும் மறவர்கள் நாடு

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக்காடு மணக்கும் நாடு



அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்
அடிநாள் ஈன்ற அன்னை தந்தை
தமிழர்கள் கண்டாய் அறிவையும் ஊட்டிச்
சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு

ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு

புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழுறும் நாடு

திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க
இங்குத் திராவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்ததே எங்கள் நாடு

**- தமிழர் உள்ளத்தில் - எண்ணத்தில்**
**வீரத்தை ஊட்டிய பாடல்...**

# இறைவனிடம் கையேந்துங்கள்...

இறைவனிடம் கையேந்துங்கள் - அவன்
இல்லை என்று சொல்லுவதில்லை
பொறுமையுடன் கேட்டுப்பாருங்கள் - அவன்
பொக்கிஷத்தை மூடுவதில்லை

இல்லையென்று சொல்லும் மனம் இல்லாதவன்
ஈடு இணை இல்லாத கருணை உள்ளவன்
இன்னல்பட்டு எழும் குரலைக் கேட்கின்றவன்
எண்ணங்களை இதயங்களைப் பார்க்கின்றவன்

ஆசையுடன் கேட்பவருக்கு அள்ளித் தருபவன்
அல்லல் துன்பம் துயரங்களைக் கிள்ளி எறிபவன்
பாசத்தோடு யாவரையும் பார்க்கின்றவன்
பாவங்களைப் பார்வையினால் மாய்க்கின்றவன்

அல்லல்படும் மாந்தர்களே அயராதீர்கள்
அல்லாஹ்வின் பேரருளை நம்பி நில்லுங்கள்
அவனிடத்தில் குறை அனைத்தும் சொல்லிக் காட்டுங்கள்
அருள் எனக்கு தருக வென்று அழுது கேளுங்கள்

தேடும் நேயர் நெஞ்சங்களில் குடியிருப்பவன்
தேடாத மனிதருக்கும் உணவளிப்பவன்
வாடும் இதய மக்களுக்கு வழி வகுப்பவன்
வாஞ்சையோடு யாவரையும் பார்க்கின்றவன்

அலைமுழங்கும் கடல் படைத்து அழகு பார்ப்பவன்
அலையின் மீதும் மலையின் மீதும் ஆட்சி செய்பவன்
தலைவணங்கிக் கேட்பவருக்குத் தந்து மகிழ்பவன்
தரணி எங்கும் நிறைந்து நிற்கும் மகா வல்லவன்

# பொறுமை போதித்த ஐந்து கடமை...

திருமறையின் அருள் மொழியில்
விளைந்திருப்பது என்ன? அறிவு!
இறைத்தூதர் நபி பொன்மொழியில்
குவிந்திருப்பது என்ன? -அன்பு

அறிவில் உருவாகி
அன்பில் நிறைவதென்ன? - ஞானம்
அந்த ஞானத்தை வழங்கிடும்
மூலப்பொருள் என்ன? - மௌனம்!

உருவமற்ற இறைவன்
வாழும் இடம் எதுவோ? - உள்ளம்
அந்த உள்ளத்தினில் சுடர்போல்
விளங்குவது எதுவோ? - பொறுமை!
அந்தப் பொறுமை நபிகள் நாதர்
போதித்தது என்ன?
கடமை! - ஐந்து கடமை !

ஏக இறையோனை
ஏற்றுக்கொள்வது என்ன? - கலிமா?
அந்தக் கலிமாப் பொருள் உணர்ந்து
கடைப்பிடிப்பது என்ன? - தொழுகை
தொழுகையினை மேலும்
தூய்மை செய்வதென்ன? - நோன்பு!
நோன்பிருந்த பின்பு
மாண்பளிப்பதென்ன? - ஜக்காத்து!
அந்த ஈகைவழியில் செல்லும்
இறுதிக் கடன் என்ன?

ஹஜ் ! புனிதஹஜ் !

திருமறையின் அருள் மொழியில்
விளைந்திருப்பது என்ன?
இறைத்தூதர் நபி பொன்மொழியில்
குவிந்திருப்பது என்ன?
அறிவில் உருவாகி
அன்பில் நிறைவதென்ன?

அந்த ஞானத்தை
வழங்கிடும் மூலப்பொருள் என்ன?
அறிவு
அன்பு
ஞானம்
மௌனம்!

**- இஸ்லாமியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து கடமைகளைப் பற்றி எடுத்துரைத்த பாடல்...**

# மக்கத்து மலரே...

மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே யாரசூலல்லாஹ் - உயர்
மறையாம் புருகான் வாங்கித் தந்தோரே யாரசூலல்லாஹ்
மனித வாழ்வினில் இனிமை சேர்த்தோரே யாரசூலல்லாஹ் - உங்கள்
மகிமை சொல்லினில் அடங்குவதில்லை யாரசூலல்லாஹ்
அல்அமான் யாரசூலல்லாஹ் அஷ்ஷபா அத்தே யாரசூலல்லாஹ்
அர்ராஹத்தே யாரசூலல்லாஹ் அல் இக்லாஸ் யாரசூலல்லாஹ்

அந்நியன் ஒருவன் கழித்திட்ட மலத்தை யாரசூலல்லாஹ் - உங்கள்
அழகுக்கரங்கால் கழுவிடச் செய்தீர் யாரசூலல்லாஹ்
அண்ணல் எங்கள் ஆருயிர் நபியே யாரசூலல்லாஹ்
ஆயுள் முழுவதும் அதிசயம் வாழ்வோ யாரசூலல்லாஹ்

தாயிப் நகர மக்கள் தந்தக் கொடுமையினை யாரசூலல்லாஹ் - நீங்கள்
தாங்கி நின்றவிதம் என்னென்று சொல்வேன் யாரசூலல்லாஹ்!
விண்ணும் அழுதது மண்ணும் அழுதது யாரசூலல்லாஹ் - படித்த
கண்ணும் அழுதது கண்ணீர் வடிக்குதே யாரசூலல்லாஹ்!

**- உருக்கமாகப் பாடி இசைத்தட்டில்**
**பதிவான பாடல்...**

# எல்லோரும் கொண்டாடுவோம்...

அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்
அல்லாஹூ அக்பர் அல்லாஹூ அக்பர்
அஜாஹி லாஹி இல்லல்லா
அஜாஹி லாஹி இல்லல்லா

எல்லோரும் கொண்டாடுவோம்
அல்லாவின் பெயரைச் சொல்லி
நல்லோர்கள் வாழ்வை எண்ணி

கல்லாகப் படுத்திருந்து களித்தவர் யாருமில்லை
கைகால்கள் ஓயந்த பின்னே துடிப்பதில் லாபமில்லே
வந்ததை வரவில் வைப்போம் செய்வதை செலவில் வைப்போம்
இன்றுபோல் என்றும் இங்கே ஒன்றாய்க் கூடுவோம்

நூறுவகைப் பறவை வரும் கோடி வகைப் பூ மலரும்
ஆடவரும் அத்தனையும் ஆண்டவனின் பிள்ளையடா
கறுப்பில்லே வெளுப்புமில்லே கனவுக்கு உருவமில்லே
கடலுக்குள் பிரிவுமில்லை கடவுளில் பேதமில்லை

முதலுக்கு அன்னை என்போம் முடிவுக்குத் தந்தை என்போம்
மண்ணிலே விண்ணைக் கொண்டு ஒன்றாய்க் கூடுவோம்

ஆடையின்றிப் பிறந்தோமே ஆசையின்றிப் பிறந்தோமா
ஆடி முடிக்கையில் அள்ளிச்சென்றோர் யாருமுண்டோ
படைத்தவன் சேர்த்துத் தந்தான் வளர்த்தவன் பிரித்து வைத்தான்
எடுத்தவன் மறைத்துக்கொண்டான்
கொடுத்தவன் தெருவில் நின்றான்
எடுத்தவன் கொடுக்க வைப்போம்
கொடுத்தவன் எடுக்க வைப்போம்
இன்று போல் என்றும் இங்கே ஒன்றாய்க் கூடுவோம்

- 1961ஆம் ஆண்டு வெளிவந்த பாவமன்னிப்பு
திரைப்படத்தில் பாடிய பாடல்...

# நல்லவங்க எம்மதமோ ஆண்டவன் அந்த மதம்...

ஏ...... எத்தனையோ சித்தனுங்க கத்தியாச்சு
கத்திகத்தி தொண்டைத் தண்ணி வத்தியாச்சு
சுத்தமாக சொன்னதெல்லாம் போதலியா
மொத்தமா காதுலதான் ஏறலியா

தந்தனத் தந்தனத் தந்தன்னா
தனன்னனனன
தந்தனத் தந்தனத் தந்தன்னா

உன் மதமா என் மதமா
ஆண்டவன் எந்த மதம்
நல்லவங்க எம்மதமோ
ஆண்டவன் அந்த மதம்
அட போங்கடா போங்கடா போங்கடா
பொல்லாத பூசலும் ஏசலும் ஏனடா
அடவாங்கடா வாங்கடா வாங்கடா
சொல்லாத சங்கதி சொல்லுறேன் கேளடா
அந்த ஆண்டவன்தான்
கிறிஸ்துவனா முஸ்லீமா இல்லை இந்துவா

படகுக்குள்ள நாய்களும் நரிகளும் நால்வகைப் பேய்களும்
நாட்டியம் ஆடுதடா
மனிதனின் போர்வையில் இருக்கும் பார்வையில் நடக்கும்
நான் கண்ட மிருகமடா
அட யாரும் திருந்தலையே

இதுக்காக வருந்தலையே
நீயும் நானும் ஒண்ணு
இது நிசந்தான் மனசுல எண்ணு
பொய்யையும் புரட்டையும் கொன்னு
இந்தப் பூமியில் புதுசாப் பண்ணு
சும்மா சொன்னத சொன்னத சொல்லவா
சொல்லாமல் என்வழி என்வழி செல்லவா
அட உன்னத்தான் நம்புறேன் நல்லவா
பொன்னான மாறுதல் வந்திடும் அல்லவா

கணக்குல கூட்டலும் கழித்தலும் வகுத்தலும் பெருக்கலும்
இருப்பது உண்மையடா
கூட்டல் மட்டும் வார்த்தையில் நடக்குது பாவத்தைப் பெருக்குது
இது என்ன ஜென்மமடா
இப்ப புதுசா கணக்கெழுது
இங்கு வரட்டும் நல்லபொழுது
அடியே ஞானத் தங்கம்
இங்கு நானொரு ஞானச் சிங்கம்
இதப் பார்த்தா பொய்கள் ஓடும்
ரெண்டு போட்டா உலகம் மாறும்
அட பத்திரம் பத்திரம் பத்திரம்
தீர்ப்பு நாள் பக்கத்தில் பக்கத்தில் வருது
இது சத்தியம் சத்தியம் சத்தியம்
சத்தியத்தின் சங்கதி சீக்கிரம் வருது

**-1997 ஆம் ஆண்டு வெளிவந்த**
**ராமன் அப்துல்லா திரைப்படத்தில் பாடிய பாடல்...**

# இசைமுரசு நாகூர்
# இ.எம். ஹனீபா நூற்றாண்டு
# நினைவு மலர்


சிறப்பு வெளியீடு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

**மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,**

இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு

இணைச் செயலாளர்,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை 600 009.

மலர் தயாரிப்புக் குழு

ஆளூர் ஷா நவாஸ்

இறையன்பன் குத்தூஸ்

ப. திருமாவேலன்

ஆர். கோமகன்

மு. சத்தியசீலன்

பொ. தங்கபாண்டியன்

டி. அருள் எழிலன்

அச்சிட்டோர்

**தமிழரசு அச்சகம்**

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.

தொலைபேசி : 044-22542224 / 22542221

மின்னஞ்சல்: tamilarasujournal@gmail.com

இணையதளம்: www.tndipr.gov.in

**தமிழரசு**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு



"சுயமரியாதைப் போராளியாகத் திகழ்ந்தவர் நாகூர் ஹனீபா அவர்கள்.
எண்ணற்ற இளைஞர்களுக்கு ஒரு உந்து சக்தியாக விளங்கியவர்."

-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்



**தமிழரசு**

செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு